# பாரதியின் கனவும் இன்றைய நிகழ்வும்



தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

# பாரதியின் கனவும் இன்றைய நிகழ்வும்

பதிப்பாசிரியர்கள்
டாக்டர் வி. சரசுவதி
டாக்டர் சு. வேங்கடராமன்
டாக்டர் மு. மணிவேல்
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

வெளியீடு :
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021

*பதிப்பு விவரங்கள்...*

பதிப்பாசிரியர்கள் : *டாக்டர் வி. சரசுவதி*
*டாக்டர் சு. வேங்கடராமன்*
*டாக்டர் மு. மணிவேல்*
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை — 625 021.

தலைப்பு : பாரதியின் கனவும் இன்றைய நிகழ்வும்

பொருள் : பாரதியார் பாடல்கள் குறித்த திறனாய்வு

வெளியிடுவோர் : தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை — 625 021.

முதற்பதிப்பு : டிசம்பர் 1996

பக்கங்கள் : 204

விலை : ரூ. 45/-

அச்சும் அமைப்பும் : அஜந்தா அச்சகம், வாடிப்பட்டி.

---

*கட்டுரைகளில் கூறப்படும் கருத்துக்கள் கட்டுரையாளர்களுடையவை. அவை, பதிப்பாசிரியர்களையோ தமிழியற்புலத்தையோ சாரா.*

---

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பேரா கு. ஆளுடையபிள்ளை
துணைவேந்தர்

பல்கலைநகர்
மதுரை-625 021

*தேதி : 12-12-1996*

## ''*பாரதியின் கனவும் இன்றைய நிகழ்வும்*''

## *வாழ்த்துரை*

''*பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியடா*'' என்றார் கவிமணி. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று அன்றே முழங்கியவன் பாரதி. அடிமை இந்தியாவில் வாழ்ந்தபோதே ''விடுதலை விடுதலை'' என வீர முழக்கமிட்டவன் பாரதி! இத்தகு பெருமை பெற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றிய கருத்தரங்கு ஒன்று இப்பல்கலைக்கழகத்தின் தமிழியல் துறையின் சார்பில் சென்ற ஆண்டு நிகழ்ந்தது. அதில் படிக்கப்பெற்ற 14 கட்டுரைகளின் தொகுப்பே ''*பாரதியின் கனவும் இன்றைய நிகழ்வும்*'' எனும் இந்நூல்.

> ''பாரதி என்ற கவியொளி இந்தியத் திருநாட்டில் தோன்றிய போது, இத் துணைக் கண்டத்தில் எல்லாத் திசைகளிலும் உய்வு பற்றிய எண்ணமே தோன்றாத நிலை இருந்தது என்றால் தவறில்லை!''

என்று தம் '*முதன்மையுரை*'யில் கூறும் *திருமதி. ராஜம் கிருஷ்ணன்* அவர்கள், '' மகா யோகி போல் ஒரு மா கவியாக — தீர்க்கதரிசியாக வாழ்ந்து, இத் தமிழ்த் திருநாட்டு மண்ணைப் புனிதமாக்கினார்; பெண் விடுதலையின்றேல் நாட்டு விடுதலை இல்லை'',

''சாதிபேதமற்ற சமுதாயத்தினால்தான் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற முடியும்!'', ''எங்கள் மொழி — உயிர் மூச்சு — எங்கள் தாய் என்னும் கவிஞர் கண்ட கனவு மெய்யாகியுள்ளது!'' என்பன போன்ற பல்வேறு செய்திகளைப் பாரதியின் வாழ்விலிருந்தும், கவிதைகளிலிருந்தும் எடுத்து விளக்குவது அருமை!

''மகாகவி பாரதியின் பொருளாதாரக் கனவு'' பற்றி விளக்குகிறது ஒரு கட்டுரை; பாரதி கவிதைகளில் பயன்பாட்டுக் கொள்கை எவ்வாறெல்லாம் அமைந்துள்ளது என ஒரு கட்டுரை ஆராய்கிறது; மொழி பெயர்ப்பிலும் தெளிவான சிந்தை கொண்டிருந்தார் பாரதியார் என ஆதாரத்துடன் விளக்குகிறது ஒரு கட்டுரை; ஆங்கிலக் கல்வி குறித்தும், தொழிற் கல்வி குறித்தும் பாரதி கூறியவற்றைப் பட்டியலிட்டு விளக்குகிறது ஒரு கட்டுரை; பாரதி கண்ட ஆட்சி முறை குறித்து அலசுகிறது ஒரு கட்டுரை; முறை சாராக் கல்வி மையங்களில் சிறப்பிடம் பெறும் நூலகத்தின் மூலம் அறிவொளி இயக்கம் பரவுவதைப் பற்றி எடுத்துரைக்கிறது ஒரு கட்டுரை; தொலை நோக்கு, பன்முகச் சிந்தனை என்ற எதிர்காலவியல் சார்ந்த நவீன கருத்துக்களைப் பாரதியில் காண முடிகின்றதென்பதைப் பல்வேறு அட்டவணைகள் வாயிலாகத் தெளிவுறுத்துகிறது ஒரு கட்டுரை; சக்தி அல்லது தாய்த் தெய்வ வழிபாட்டில், மற்றையோரின் ஈடுபாட்டிற்கும் பாரதியின் ஈடுபாட்டிற்கும் பெருத்த வேறுபாடு உண்டு எனக் கூறுகிறது ஒரு கட்டுரை, ''செப்புமொழி பதினெட்டுடையாள் எனில், சிந்தனை ஒன்றுடையாள்!'' எனும் பாரதி வாக்கினைக் கொண்டு, ''இந்திய இலக்கியங்கள் பல்வேறு பரிணாமங்கள் பெற்றிருந்தாலும் முழுமுதல் என்றால் வேறுபாடுகளே! இவ் வேறுபாடுகளும் கருத்தொருமை காட்டுவன'' என்கிறது ஒரு கட்டுரை. பாரதியின் புதிய தன்னுணர்ச்சிப் பாடல் வடிவங்களை நால்வகையுள் அடக்கிப் பகுத்து ஆராய்கிறது ஒரு கட்டுரை.

இவ்வகையில் பல்வேறு மலர்களின் நறுமணம் போல, மகாக்வி பாரதியின் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளின் நற்கருத்து மணம் இந்நூலில் அமைந்து நம்மை மகிழ்விக்கின்றன.

பெரும்பாலான கருத்தரங்கக் கட்டுரைகள் அச்சில் வராமற் போவதுமுண்டு. அச்சில் வெளிவந்தால் பலர்க்கும் பயன்படும். இத்தகைய அரும்பணியைத் தமிழ்த்துறை செய்துள்ளது போற்றத்-தக்கது!

இந்நூலினை வெளியிட்ட தமிழியல்துறைத் தலைவர் முனைவர் (திருமதி) சரசுவதி வேணுகோபால், மற்றும் உறுதுணை-யாக இருந்தோர் ஆகிய அனைவர்க்கும் மனம் உவந்த நல்-வாழ்த்துக்கள்; பாராட்டுக்கள்!

கு. ஆளுடையபிள்ளை
(துணை வேந்தர்)

# பதிப்பாசிரியர்கள் குரல்

மகாகவி பாரதியார் பெயரால் தமிழக அரசு நிறுவியுள்ள அறக்கட்டளை சார்பில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 'பாரதியின் கனவும் இன்றைய நிகழ்வும்' என்னும் பெயரில் 1996 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9,10,11 ஆகிய மூன்று நாட்களில் கருத்தரங்கம் நடைபெற்றது. பொருளாதாரம், கல்வியியல், அரசியல் விஞ்ஞானம், எதிர்காலவியல், சமயம், சாதியமைப்பு, சகவாழ்வு, அறிவியல், இசை, பகுத்தறிவு, மொழி, இலக்கியம் போன்ற துறைகளில் மகாகவி கண்ட கனவு இன்று எந்த அளவு மெய்ப்பட்டுள்ளது? காரியம் எந்த அளவு கைகூடி உள்ளது? என மதிப்பிடுவதைக் கருத்தரங்கின் மையப்பொருளாகக் கொண்டோம். சகல தளைகளிலிருந்தும் விடுதலை பெற்று மனிதன் மேன்மை அடையவேண்டும் என்னும் தொலைநோக்குடைய மகாகவி பாரதியார், இன்றும் என்றும் நமக்கு வழி காட்டும் சமூகக் கலைஞனாக இருப்பார் என்று அடையாளங்காட்ட விரும்பினோம். இலக்கிய, மொழித்துறைப் பேராசியர்களுடன் நின்றுவிடாமல், பிறதுறைப் பேராசிரியர்களை அழைத்துப் படிக்கவைத்து ஊர் கூடித்தேர் இழுத்தோம். பாரதி தமிழ்ச் சமுதாயம் முழுமைக்கும் உரியவன் என நிறுவினோம்.

மூன்று நாட்களில் ஆறு அமர்வுகளில் 17 கட்டுரைகள் படித்து விவாதிக்கப்பெற்றன. தொடக்கவிழாவில் படைப்பாளர் திருமதி. ராஜம் கிருஷ்ணன் பாஞ்சாலி சபதம் பாடிய பாரதியின் கனவை, மூப்பென்றும் குஞ்சென்றுமில்லாத புரட்சித் தழலை இனங்காட்டினார். மூன்றாம் நாள் நிறைவு விழாவில் ஆங்கிலப் பேராசிரியர் டாக்டர் கா. செல்லப்பன் இன்றைய சமூக வாழ்விற்கும் இலக்கிய மேன்மைக்கும் வழிகாட்டும் புதுநெறியாகப் பாரதியியத்தை முன்வைத்தார். நெஞ்சில் கனல் மணக்கும் பூக்களாக அவ்விரு பேருரைகளும் முறையே முதலும் முடிவுமாக அமைய, கருத்தரங்கக் கட்டுரைகள் நூல் வடிவமாகியுள்ளன.

நமது சமுதாய, பொருளாதார, அரசியல் அடிப்படைகளை மாற்றியாக வேண்டும்; வறுமை ஒழிக்கப்பட வேண்டும். தன்னலம் பேணி இழிதொழில் புரியாது கற்றவர்கள் அணிதிரண்டு அடிப்படையை மாற்ற வேண்டும் என்கிறார் மா. பா. குருசாமி. கவிதையும் கலையும் மக்களுக்காகவே - மனித வாழ்வை மேம்படுத்தவே என்பதாகக் கவிதையின் பயன்பாட்டுக் கொள்கையை அ. பிச்சை கூறுகிறார். பண்பாட்டு மாற்றங்களைத் தூண்டும் ஆதார சக்தியாகப் பாரதியைக் காட்டி, பாட்டுத் திறத்தால் வையத்தைப்

பாலித்திட வழிகாட்டும் மகாகவியை அவர் முன்வைக்கிறார். மொழிபெயர்ப்புக் குறித்தும் கலைச்சொல் ஆக்கம் குறித்தும் பயிற்று மொழியாகத் தமிழே இருக்க வேண்டும் என்று பாரதி கண்ட கனவை முனைவர் சு. இராசாராம் எடுத்துக்கூறி, மொழி-பெயர்ப்பின் தேவையை வலியுறுத்துகிறார். கல்விக்கான வசதிகள் பெருகி, பெண்கல்வி, தாழ்த்தப்பட்டோர் கல்வி வாய்ப்புகள் பெருகி உள்ளதைக் காட்டி, யாவரும் தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வோம் என்று காட்டுகிறார் புகழேந்தி அனைவரும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பங்கு ஏற்கவேண்டும் எனக் காட்டி, நிர்வாகப் பயிற்சிக்குப் பாரதி பாடல்கள் பாடத்திட்-டமாக அமையும் என நிறுவுகிறார் தி. கல்யாணி. மக்களை ‘அறியாமை இருளிலிருந்து வெளிக்கொணர, அறிவொளி விளக்கு ஏற்ற இது பொறுப்பதில்லை எரிதழல் கொண்டுவா’ என்று வீமவேகம் தோன்ற வேண்டும் என்று பாரதியார் வழி காட்டு-வதாக மாடசாமி கூறுகிறார். தொலை நோக்கு, விளைவு, மதிப்பீடு, பன்முகச் சிந்தனை என்ற நவீனக் கருத்துக்களையுடைய எதிர்கால-வியலாளராக மகாகவியை இனங்காட்டுகிறார் ஆனந்தவல்லி மகாதேவன். கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம் கொண்டவன் பாரதி என்பது புலனாகிறது. தன் விடுதலை என்று பாராமல் முப்பது கோடி மக்களும் ஈடேறப் பராசக்தி பூதலத்தில் தோன்ற வேண்டும் எனவும் இந்நாட்டைத் தொல்லை-களிலிருந்து விடுவித்து மேன்மைபெறச் செய்வதையே பாரதியின் தாய்த் தெய்வ வழிபாட்டு நெறியாகக் காட்டும் பேரா. சங்கரராசு-லுவின் சிந்தனை புதிய சிந்தனையாகும். ஊருக்கு உழைப்பது யோகம் என்று மனித மேன்மையை மகாகவியின் சாக்தநெறியாகக் காட்டுகிறார். இந்திய மண்ணுக்கே உரிய புராண, இதிகாச, வாய்மொழி இலக்கிய வகைகளைக் கொண்ட இந்திய இலக்கியம் கருத்தமைவை எடுத்துக் காட்டுகிறார் கி. ராசா. சிந்தனை ஒன்று உடையாள் எங்கள் தாய் என்பதுதானே பாரதி வாக்கு. பகுத்தறிவுச் சிந்தனையும் பெண் விடுதலையும் முதன்மை நோக்கங்களாகக் கொண்ட பெரியாரியத்தின் முன்னோடிச் சிந்தனை மகாகவியிடம் உள்ளது என்று டாக்டர் தொ. பரமசிவன் காட்டுகிறார். இன்று புதியதாய்ப் பிறந்தோம் என்பதாகப் புதிய இலக்கியவகைகளை டாக்டர் பா. ஆனந்தகுமார் அடையாளங் காட்டுகிறார்.

பாரதியைப் பல கோணங்களில் அவர் கண்ட கனவை இன்றைய நடப்புடன் இணைத்துக் காட்டும் இந்த முயற்சியைத் தமிழகம் வரவேற்கும் என நம்புகிறோம்.

11.12.96 பதிப்பாசிரியர்கள்

# நன்றியுரை

இந்நூல் சீரிய முறையில் உங்கள் கையில் தவழ்ந்து கொண்டிருக்கிறது என்றால் அதற்கு முழுமுதற் காரணம் நமது தமிழ்நாடு அரசேயாகும். பாரதியார் நூற்றாண்டுவிழா அறக்கட்டளையை நிறுவிய தமிழக அரசு நிதியுதவி செய்து பாரதியாரின் படைப்புகளில் கருத்தரங்குகள் நிகழ்த்தி நூலாக்கங்கள் செய்யவேண்டும் என்று அறிவித்த விதிகளுக்கேற்ப 1996 ஆம் ஆண்டு பிப்ரவரி 9, 10, 11, ஆகிய மூன்று நாட்கள் தமிழ்நாட்டின் தலைசிறந்த அறிஞர்களையும் பேராசிரியர்களையும் அழைத்துப் 'பாரதியின் கனவும் இன்றைய நிகழ்வும்' என்று அழகிய தலைப்பில் பல்வேறு கோணங்களில் தலைப்புகளைத் தந்து கட்டுரைகளை வாசித்தளிக்குமாறு நாங்கள் வேண்ட, அவர்களும் மிகச் சிறப்பான வகையில் செய்து பாரதிக்கும் தமிழியற்புலத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிறார்கள். பொருளியல், இலக்கியம், இலக்கணம், சாதி சமய ஒற்றுமை, கல்வி, அரசியல், எதிர்காலத்துவம், பிறநாட்டார் தமிழ்த்தொண்டு, பகுத்தறிவுக் கொள்கை, தாய்த்தெய்வம், இலக்கிய வகைகள், அறிவியல், தத்துவஞானம் போன்ற பல்வேறு தலைப்புகளில் பொருத்தமான அறிஞர்கள் தம் பங்களிப்பினைச் செய்து பாரதி ஆய்வு என்னும் மணிமகுடத்தில் மேலும் ஒரு வைரக்கல்லைப் பதித்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி என்றும் உரியது.

இத் தலைப்பினைத் தெரிவு செய்த முதல் நாளிலிருந்து பன்முறை எங்கள் அருமைத் துணைவேந்தரைக் கருத்தரங்கு தொடர்பாகச் சந்தித்தோம். அப்பொழுதெல்லாம் அவர்கள் பல்வேறு கோணங்களில் அமைந்த தலைப்புகள், அழைக்கக்கூடிய பொருத்தமான அறிஞர்கள், பாரதி எழுதிய சில பொருத்தமான வரிகள் போன்ற பல செய்திகளை மிக ஆர்வத்துடன் எங்களுக்கு எடுத்துக் கூறி எங்களுக்கு மகிழ்வையும் ஊக்கத்தையும் தந்து, தமிழ் பாலிருக்கும் அவர்தம் பற்றினைக் காட்டி எங்கள் மதிப்பிலும் அன்பிலும் மலையென உயர்ந்துவிட்டார். அவர் அளித்த ஊக்கத்திற்கும் காட்டிய பரிவிற்கும் இந்நூலின் பதிப்பாசிரியர் குழு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

இக்கருத்தரங்கம் நிகழ்ந்த பொழுது குழுவிலிருந்த பேரா. முனைவர். தி. சு. நடராசன் இப்பொழுது நெல்லையிலுள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக உள்ளார். கருத்தரங்கம் நிகழ்ந்தபொழுது அவர்கள் சிறப்பான பங்கேற்று, கருத்தரங்கின் வெற்றிக்கு மற்றவர்களோடு அவரும் காரணமாக இருந்தார். ஒரு கருத்தரங்கில் அளிக்கப்பெற்ற கட்டுரைகள் நூலாக்கம் செய்யப்பெற்று அடுத்து நிகழும் கருத்தரங்கில் வெளியிடப்பெற வேண்டும் என்று மேற்கொள்ளப்பெற்ற விதியினை மீறாமல் செவ்வனே நூல் வெளியீடு நிகழ்ந்திருக்கிறது என்றால் அதற்கு அன்பும், கடும் உழைப்பும் கொண்ட பேராசிரியர்கள் இருவர் பதிப்பாசிரியர் குழுவில் இருப்பதுதான் காரணம். அவ்விருவரும் முனைவர் சு. வேங்கடராமன் (இக்கால இலக்கியத்துறைத் தலைவர்), முனைவர் மு. மணிவேல் (தமிழியல் துறை) ஆகியோர்தாம். அவர்களுக்குக் குழுவின் தலைவர் என்ற முறையில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன.

நூலாக்கம் செம்மையாகவும் விரைவாகவும் அமைவதற்குக் காரணமாக இருந்தது வாடிப்பட்டி, அஜந்தா அச்சகம் ஆகும். அதன் உரிமையாளர் பா. இராஜகோபால் அவர்களுக்கும் தமிழியற் புலத்தின் நன்றி உரியது.

பாரதி அன்பர்கள் மட்டுமன்றி இலக்கியச் சுவைஞர்கள் அனைவருக்கும் இந்நூல் ஒரு நல்விருந்தாக அமையும் என நம்புகிறோம்; இத் தமிழ்கூறு நல்லுலகிற்கு இந்நூலை அளிப்பதில் மகிழ்கிறோம்.

சரசுவதி வேணுகோபால்

# உள்ளே...

1. முதன்மையுரை
— ராஜம் கிருஷ்ணன் 1

2. மகாகவி பாரதியின் பொருளாதாரக் கனவு
— டாக்டர் மா. பா. குருசாமி 30

3. கவிதையில் பயன்பாட்டுக் கொள்கை
— டாக்டர் அ. பிச்சை 43

4. மொழிப்பெயர்ப்புகள்
— டாக்டர் சு. இராசாராம் 59

5. தமிழ்நாட்டில் கல்வி வரலாறு
— டாக்டர் ஜி. புகழேந்தி 72

6. பாரதியாரின் ஆட்சிமுறை : நுண்ணோக்கு
— டாக்டர் தி. கல்யாணி 83

7. முறைசாராக் கல்வியும் அறிவொளி இயக்கமும்
— ச. மாடசாமி 93

8. எதிர்காலத்துவம்
— டாக்டர் ஆனந்தவல்லி மகாதேவன் 108

9. தாய்த் தெய்வ வழிபாடு
— கோ. சங்கரராசுலு 119

10. இந்திய இலக்கியம் என்னும் கருத்தமைவு
— டாக்டர் கி. இராசா 131

11. புதிய இலக்கிய வகைகள்
— டாக்டர் பா. ஆனந்தகுமார் 146

12. தமிழ்வழி அறிவியல் கல்வி
— டாக்டர் இராம. சுந்தரம் 159

13. பகுத்தறிவியக்கம்
— டாக்டர் தொ. பரமசிவன் 166

14. நிறைவுரை
— டாக்டர் கா. செல்லப்பன் 175

# 1

# முதன்மையுரை

★

திருமதி ராஜம்கிருஷ்ணன்

I

## தோற்றம்

புலர் வெள்ளி தோன்றுவதற்கு முந்தைய வானில் திசைகள் தெரியாத கருந்திரள் குவிந்திருக்கும். இந்த இருளில் விடிவெள்ளி உதயமாகும் என்ற நம்பிக்கையே விடிவெள்ளியாகத் திகழும்.

பாரதி என்ற கவியொளி இந்தியத் திருநாட்டில் தோன்றிய போது, இத்துணைக் கண்டத்தில் எல்லாத் திசைகளிலும் உய்வு பற்றிய எண்ணமே தோன்றாத நிலை இருந்தது என்றால் தவறில்லை.

பொருளாதாரம், அறிவியல், தத்துவஞானம், தொழில் வளம், இலக்கியம் என்ற எல்லாத் திசைகளுமே அந்நிய ஆதிக்கத்தில் பொலிவிழந்திருந்தன. மக்கள் அறியாமையில் மூழ்கிய அடிமைத்தனத்தில் வெறும் உயிர்களாக நடமாடிக் கொண்டிருந்தனர்.

இந்திய நாடு என்ற மதிப்பில்லை; தமிழர் என்ற உணர்வும் இல்லை. எல்லா உரிமைகளையும் அதற்குரிய தகுதிகளையும் தொலைத்திருந்த மனிதர்கள் தங்களை ஈன்று வளர்த்த தாய்க்குலத்தை உடமை கொண்ட சடப்பொருளைப்போல் ஆண்டார்கள். அறிவுக் கண்கள் குருடாக்கப்பட்ட வீட்டடிமையாக, உழைப்புக்கும் இனப்பெருக்க வாரிசு தரும் கருவியாகவும், ஆண் மகிழ, போகப் பொருளாகவும் அவள் தீர்ந்திருந்தாள்.

---

* எழுத்தாளர், சென்னை

பாரதி தாய்முகம் காணாத சேயாக உலகில் கண் விழித்தார். இந்தச் சேயைப் பேணி வளர்க்கப் பரிவுடன் அணைத்த தாய், மங்கலங்கள் பறிக்கப்பட்ட இளம்பெண். பெற்ற தாயின் தங்கை பருவமெய்து முன் கணவரை இழந்ததால் சநாதன (ஆண்) ஆதிக்கம் இவளை முடமாக்கி அலங்கோலத்துக்கு ஆளாக்கியிருந்தது. இந்த வடிவில்தான் பாரதி அன்னையைக் கண்டார்.

பிள்ளைப் பருவத்தில் தாய் மொழியறிவு தானாக ஊற்றுக்கண் திறந்தது. ஆனால், தந்தை சின்னசாமி ஐயர், வெள்ளையனின் ஆதிக்கத்தை, புதிய தொழிலறிவும், கணிதத் தேர்ச்சியும், வினைத்தந்திரங்களும் கற்றுத் தேர்ந்து முறியடிக்கலாம் என்று கருதினார். அதற்காக, அவர் எட்டையபுரத்துக்கருகே ஒரு பருத்தி அறவை ஆலையையும் நிறுவத் துணிந்தார். தம் மகன் தமிழைப் படித்து, 'ஜமீன்' சேவகத்தில் அழுந்திவிடக் கூடாதென்று, ஆங்கிலமும் கணக்கும் படிக்க வேண்டும்; பாட்டன் வீடு சென்று தமிழ் படிக்கலாகாது என்று ஆணையிட்டார். ஆங்கிலக் கல்வி பயில நெல்லைக்கு அனுப்பி வைத்தார்.

தாய்; தாய்மொழி இரண்டு கூறுகளும் அந்நியமாக்கப்பட்ட முதல் அனுபவங்கள்.

திருமணம் ...

தொழில் முயற்சி, அந்நிய ஆதிக்கத்தினால் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. தந்தை துவண்டு போனார்.

பன்னிரண்டு வயசுப் பிள்ளைக்கும், மூன்று வயது நிரம்பாத மகளுக்கும் ஓர் ஆதாரம் என்று, திருமணத்தை முடித்து விட்டார்.

மணமற்ற செய்கையை, நல்லதோர் மணமென நாட்டுவார் என்றும், தம் பால்மணம் மாறாச் சோதரியை, தாயை விட்டுப் பிரித்துக் கணவன் வீட்டாரிடம் ஒப்படைத்ததை, ''பாலருந்தும் மதலையர் தம்மையே பாதகக் கொடும் பாதகப் பாதகர் ...... கோலமாக மணத்திடை கூட்டு மிக் கொலையெனுஞ் செயல் என்று மனம் விண்டு வெடிக்க வெளியிட்ட துயரமாய் வருகின்றன. இக்கொடுமைக்கு இவர்கள் இன்னுமோராயிரம் ஆண்டுகள் அடிமைப்பட்டு அழியட்டும் என்ற தீச்சொல்லும் தொடர்கிறது.

இளமையின் முரணான அனுபவங்கள், பாரதியின் உள்ளத்தில் பல முனைகளில் விசுவரூபம் எடுக்க உந்து சக்தியைக் கூட்டின உடலுறுதி இல்லாத இயல்பும், அச்சம் அலைக்கழிக்கும் நோஞ்சான் என்ற தனிமையுணர்வும் உள்ளூறக் கனவுகளாகப் பரிணமிக்கும் வீறு பெற்றன.

அந்நாயை பிரபுத்துவ — அடிமைச் சூழலும், போலியான கலாச்சாரம் பாவிக்கும் குடும்ப உறவுகளும், இவருடைய சுதந்தர வீச்சுக்கு முரண்களாயின. ஜமீன் உலகில் இருந்து, பரந்த உலகில், கங்கைக் கரையில் படிந்த மாசுகளோடு சத்தியங்களையும், மோதல்களையும் எதிர் நோக்கியபோது, புதிய புதிய கிளர்ச்சிகள் அனுபவமாயின. மீசை மட்டுமா அத்தை கணவனின் கோபத்துக்குக் காரணமாயிற்று?

"ஓ, நான் கண்ணாக வளர்த்த பிள்ளை வெள்ளை ராச்சியத்தை எதிர்த்துக்கொண்டு தீவாந்தரம் போய் விடுவானோ?" என்று உறுகிக் கரைந்த அபலைச் சின்னம்மா, அவருக்கு ஜமீன் வேலை என்று வலை விரித்து, புறாப் போன்ற இளம் மனைவியையும் உடன் கூட்டி வைத்தாள். ஆனால் இந்தக் குயில் அவள் வலையில் சிக்கவேயில்லை.

> "நித்த நித்தம் துயின்றெழுந்து பொழுதனைத்தும் புத்தியில்லாப்
> புல்லருடன் போக்கி, அத்தமித்தவுடன் வெறுங்கல்லை, விழுபிணத்தைத்
> தொழுதற்கோயான் பிறந்தேன்?"

என்று கூவிவிட்டுப் பறந்து போயிற்று.

இந்தக் கவிக்குயிலுக்கு, ஆன்மானுபவ உபதேசம் அளித்த குருமணி, வழக்கமான காவியுடுத்த சந்நியாசியோ, ஆசாரியாரோ அல்ல. இதுவும் ஒரு முரண்பாடுதான. அவளே வெள்ளத் தோலுடையவள். இந்திய நாட்டில், சமண பவுத்த நெறிகளுக்குச் சவாலாகத் தோன்றிய சங்கரர் வழிவரும் துறவிகளால் மாயை என்று ஒதுக்கப்பட்ட இனமாகிய ஒரு பெண் — புரட்சித் துறவியாகிய விவேகானந்தரின் வழியில், இந்திய நாட்டுக்குத் தொண்டாற்ற வந்த துறவுச் சகோதரி, நாட்டு விடுதலை, உள்ளொளி காணும் சமுதாயம் — அதுவே ஆன்மிக உயர்வுக்கான ஏற்றம்.

''அருச்சுணனுக்குக் கண்ணன் ஆன்மானுபவ தரிசனம் காட்டினார்போல் எனக்கு அநுபூதியளித்த குருமணி'' என்று அந்தக் கணத்தை உன்னி உன்னிப் பரவசப்பட்டார் பாரதி.

அந்தப் போதிலிருந்தே அவர் கவித்திறமை புதிய மலர்ச்சி பெற்றுவிட்டது; சக்தி அனைத்தும் மகா சக்திக்கு, பாரத தேவிக்கு உரித்தாகி விட்டன. பாண்டிச்சேரி எல்லையில், அரசியல் இயக்-கங்களெல்லாம் முடக்கப்பட்ட நிலையில் கவிதைச் சிறகுகள் விரிந்து, புதிது புதிதாகத் தமிழன்னைக்கு மணி மகுடங்கள் சூட்டின. வானளாவ ஏற்றி வைத்தன. பாண்டிச்சேரியின் பத்-தாண்டுக் கால வாழ்வில் அவர் சாதித்தவை ஆயிரமாயிரம் ஆண்டு களுக்கானவை. பட்டுப்புழு குறுகிய காலத்தில் தான் உண்டு செரித்த தழையுணவை, காலமெல்லாம் பளபளக்கும் பட்டாகப் புனைந்து கொடுப்பது போல் எழுதிக் குவித்தார். சோதனை நெருப்பிடையே, வறுமை, சமுதாயப் பிடிமை ஒத்துப்போக முடி யாத உணர்வுகள் என்று போராட்டத்தினிடையே, மகாயோகி போல் ஒரு மாகவியாக. தீர்க்கதரிசியாக வாழ்ந்து இத்தமிழ்த் திருநாட்டு மண்ணைப் புனிதமாக்கினார்.

## 2

### பின்னணி

உலகம் தோன்றி மனிதர் சமுதாயமாக வளர்ச்சி கண்ட வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால் பல உண்மைகள் புலனா-கின்றன. மனிதரின் அறிவு வளர்ச்சிக்கேற்ப, பரிணாம மாறுதல் களுடன் சூழலும் ஏனைய உயிரினங்களும் கூட மாறி வந்திருக்-கின்றன மனிதர் அறிவியல் மலர்ச்சி கண்டு வாழ்க்கைச் சாதனங்களையும் வாழ்வுமுறைகளையும் வசதிகளுடன் இசைத்துக் கொண்ட காலத்தில், உழைப்பையும், உணவையும் பகிர்ந்து கொண்ட சமத்துவங்கள் மறைந்துவிட்டன. தேவைக்கு மட்டும் போராடி ஊனருந்தி இனம் பெருக்கிய விலங்கு நிலை மாற, விலங்கினங்களை வென்று, இயற்கைச் சக்திகளைப் பயன்படுத்திக் கொண்டு, ஆதிக்கம் செலுத்தத் தெரிந்துகொண்டு விட்டனர். தேவைகளும் வசதிகளும் பெருக, தனியுடைமை — சுயநலம் இரண்டும் மனித சமுதாயத்தில் பிளவுகளுக்கு அடிநிலை அமைத்துவிட்டன. முதல் உடமையாகப் பெண் ஆணுக்கு அடங்கிப் போனாள். அறிவியல் முன்னேற்றம் மனித சமுதாயம் முழுவதை

யும் இணைக்கும் சக்தியாகப் பரிணமிக்கவில்லை. மாறாக, மனித உழைப்பை அடிமை கொள்ள வாய்ப்பாகவே பயன்படுத்தப்பட்டது. தம்மைவிடப் பலம் குறைந்தவர் என்று போராடி அடிமை கொள்வதற்கும் அப்பால், 'வருணாசிரமம்' என்ற தருமம் ஒன்றும் இந்நாட்டில் நியாயப்படுத்தப்பட்டு நெறிப் படுத்தப்பட்டு நூற்றாண்டுகள் சமுதாயத்தைக் கூறு போட்டிருந்தது; போராடி வெல்லல், பயிர்த்தொழில் உழவுத்தொழில் செய்தல், ஊழியம் செய்தல் என்ற பிரிவுகளில் இருந்து பல நூறு சாதிகள் இங்கே மனிதருக்கு மனிதர் என்ற உணர்வுகளைக்கூடக் குதறிப் போட்டிருந்தன. பெண் இந்தக் கூறுகளில் ஒடுக்கப்பட்டும் முடக்கப்பட்டும் மேலும் மேலும் சாதிகளைத் தோற்றுவிக்கக் காரணியாக இருந்தாள். அத்துடன் இந்த வருணங்களுக்கு அப்பாலும் இவள் சில பரம்பரைகளை, அவருணர், தீண்டப்படாதவர் என்று ஒதுக்கப்படவும் கருவியாக இருந்தாள். இந்த அதருமங்கள், தெய்வம், சமயம் என்ற கோட்பாடுகளுக்குள், பசி, மெய் வருத்தம் அறியாத குருபீடங்கள், புரோகித வருக்கங்களால் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தன. தொழில்கள் சாதிகளைச் சார்ந்தே வகுக்கப்பட்டிருந்தன.

இந்தியத் துணைக் கண்டத்தில் வாணிபம் செய்ய வந்த மேல்நாட்டினர், பல்வேறு குறுநில மன்னராட்சிகளில் இங்கே பிளவுபட்டுக்கிடந்த சமுதாயத்தை வெல்வது எளிதாகவே இருந்த தெனலாம். ''சாதிகளும், குருதிபலி கேட்கும் சாமிகளும் காட்டு மிராண்டித்தனம்; தீண்டாமை ஓர் இழிவு என்றெல்லாம் கிறிஸ் தவம் பரப்ப வந்த பாதிரிகள் தங்கள் சமயம் அத்தகைய பிளவு களுக்கு இடம் கொடுக்காதது என்று தூக்கிக் காட்டினாலும், ஆட்சியாளராக வந்தவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவிய சாதி — மதப் பிளவுகளைச் சீர்திருத்தும் பணியை மேற் கொள்ளவில்லை. இங்கே நடைமுறையில் இருந்த அத்தனை பிளவுகளையும் அப்படியே பயன்படுத்திக் கொண்டார்கள். மேலும், ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் சென்ற பின்னர், இந்நாள் பொருளாதாரம் சார்நத சலுகைகளை முன்னிட்டு அந்தச் சமயங் களிலும் பிற்படுத்தப்பட்ட வர்க்கத்தினர் பட்டியல் நீண்டு வருவதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

## 3

### சமுதாய சமத்துவம்

இந்தப் பிளவுகளை வைத்துக்கொண்டு சமத்துவமான, ஒருங்கிணைந்த சமுதாயம் காண முடியுமா? அத்துடன், பெண்ணினம் முழுவதும் அடிமைப்பட்டுக் கிடந்தது. இந்திய சமுதாயத்தில் மனித இனம் பல்வேறு நிலைகளில் அடிமைப்பட்டுக் கிடக்கையில், அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை கோருவதற்கு நியாயமே இல்லையே? எனவேதான் பாரதி,

''வைய வாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குள்ளே
தாதரென்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக
வாழ்வோம் இந்த நாட்டிலே...''

என்று முழக்கினார்.

புதுமைப் பெண்ணை முன்னே நிறுத்தி அவள் வாயிலாகவே நியாயம் கேட்கச் செய்தார். அவள் பேசும் புதுமை உரைகள், பெண் ஒரு மனிதப்பிறவி என்ற உணர்வே இல்லாத சமுதாய மாந்தருக்கு வியப்பாக இருக்கிறதாம். அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க முயல்பவர் பித்தராம். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையந் தழைக்குமாம். அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற பொய்ம்மைகளைப் பெண்கள் அணிகலன்களாகக் கொள்ள வேண்டும் என்று நெறிப்படுத்தப் பட்டிருக்கிறதே!

நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டும். ஞானம் நல்லறம் — வீர சுதந்திரம், இவையல்லவோ பேணுநற்குடிப் பெண்டிருக்கு வேண்டிய குணங்கள?

நீசத் தொண்டிலும் மடமையிலும் உழலும் தாயொருத்தியின் புதல்வர்கள் ஒளிமிகுந்த செயல் வீரர்களாக முடியுமோ? நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர் நேர்மை கொண்டு உயர்ந்திட வேண்டுமென்றால், சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள் பொசுங்க வேண்டும்......

என்றெல்லாம் பெண் விடுதலை பெற்ற சமத்துவ சமுதாயத்தின் உயிர்நாடிகளாய்த் திகழ வேண்டும் என்று கனவு கண்டார்.

இந்நாட்களைப் போல் மக்கள் தொடர்பு சாதனங்கள் எதுவும் இல்லாமல் இருந்தும், பாரதியின் 'சர்வதேச அறிவும், நுட்பமும்' நம்மை வியக்கச் செய்கிறது. சீனத்திலே பெண் விடுதலைக்காக அரும்பணியாற்றித் தியாகம் புரிந்த சியூசினி என்ற அம்மையின் சீன மொழிப் பாடலைத் தமிழாக்கித் தந்திருக்கிறார். "திறமையாலிங்கு மேனிலை சேர்வோம்; தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்; குறைவிலாது முழுநிகர் நம்மைக் கொள்வர் ஆண்களெனிலவரோடும் சிறுமை தீரத்தாய்த் திருநாட்டைத் திரும்ப வெல்வதிற் சேர்ந்திங்குழைப்போம்......" என்று மிகப் பொருத்தமாக, பெண் விடுதலையின்றேல் நாட்டு விடுதலை இல்லை என்று பின்னர் பாரதிதாசன் அழுத்தமாக மொழிவதற்கு முன்னுரையாகத் தருகிறார்.

## 4

### வருணங்கள் : சாதிகள்

சமுதாயத்தின் அறங்காவலன் என்ற போர்வையில் போலித்தனமான சடங்காசாரங்களிலும், 'சமூகக் கடமை என்ற உணர்வே இல்லாதவராகப் பேராசையுடன் பொருள் குறியாக இயங்கும் மேற்குலத்தை — தான் பிறந்த குலத்தை அவர் எந்த நிலையிலும் இசைவாகக் கருதவில்லை.

தன் தந்தையின் வீழ்ச்சியையே,
பார்ப்பனக்குலம் கெட்டழி வெய்திய
வேர்ப்ப வேர்ப்பப் பொருள் செய்வதொன்றையே
மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்டனன்
நாசக் காசினி லாசையை நாட்டினன்
அதனாலே துன்பந்தாளாமல் மடிந்தனன்....

என்று பாடினார்.

பொருள் தேவைதான். ஆனால் தந்தை அக்காலத்தில் புதிய தொழில் 'யந்திரச்சாலை' நிறுவி, வெள்ளை முதலாளிபோல் பொருள் குவிக்க எண்ணினார் என்ற கருத்து அதில் ஒலிக்கிறது. இப்பொருள் தேட்டம், பேராசை என்ற குறிப்பில் படுகிறது. பேராசைக்காரனடா பார்ப்பான் — என்றும், இவர் ஏதுசெய்துங் காசு பெறப் பார்ப்பார் — என்றும் பாடும்போது, உயர் வருணத்தோன், பொருளாதார சமத்துவம் என்ற நெறியை மீறும் அக்கிரமத்தைக் குறிப்பதாகவே கொள்ளலாம். ஏனெனில், வருணாசிரம தருமம், அந்தணன் பொருள் பெறுவதை, சமுதாய நலனுக்

காகவே செலவிட வேண்டும் என்றும், 'நாளைக்கு' என்று கூடச் சேமிக்கலாகாது என்றும் விதிக்கிறது. இந்த அந்தணர்கள், சுயநலமே குறியாகப் போலி நெறி பாராட்டுகிறார்கள் என்ற வெறுப்பு பாரதியின் சொற்களில் பிரதிபலிக்கிறது.

எனவே, ஷெல்லிதாசனாகவே திகழ்ந்து, Wealth, the curse of man, blighted the prosperity — virtue and wisdom, truth and liberty என்ற வரிகளில் தோய்ந்தவன், தந்தை ஈட்ட முயன்ற பொருள் பற்றிக் கூறுகையில், வீடுறாவணம் யாப்பதை வீடென்பார்! மிக விழிந்த பொருளைப் பொருளென்பார்! — அதாவது, நேர்மை, சத்தியம், ஞானம் சுதந்திரம் ஆகிய பண்புகளைக் குலைக்கும் பொருள் என்று குறிப்போடு, அது உண்மைப் பொருளல்ல என்பார்.

உயர் வருணத்தான் என்ற ஆதிக்க மனப்பான்மை; அதுவே பொய்யொழுக்கம். அத்துடன் பொருள் சேர்த்துக்கொண்டு சமுதாயத்தில் இன்னும் ஆதிக்கம் செலுத்த ஏற்றம் பெறுவதன் வாயிலாக, 'சமத்துவம்' என்ற குறிக்கோளையே தூக்கி எறிந்துவிடும் கொடுமை இவரால் பொறுக்க இயலாததாகிறது. இந்த உயர்ந்த இலட்சியங்களில் மிதந்த பாரதியினால், என்றும் நடைமுறை வாழ்க்கையுடன் சமரசம் செய்துகொள்ள முடியவில்லை.

இந்த மேல்சாதி கீழ்ச்சாதி என்ற பல்வேறு சாதிகளுக்குள்ளும், பழக்க வழக்கங்கள் — பொருளாதார மலை — மடு வேற்றுமைகள் மட்டுமின்றி, கும்பிடும் சாமிகளும் கூட வெவ்வேறாக இருந்தனர். மேல்ச்சாதிக் கோயிலைவிட்டு, கீழ்ச்சாமி முத்துமாரி கோயிலில், மணி வெளுக்கச் சாணையுண்டு; மனம் வெளுக்க வழியில்லை; பிணிகளுக்கு மாற்றுண்டு; பேதைமைக்கு மாற்றில்லை — கலகத்தரக்கர் பலர் கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் என்று பாடிச் சரணடைந்தார்.

சாதி பேதங்களற்ற, ஏழை — அடிமை என்ற சிறுமைகளற்ற ஒரு சமுதாய உறுதியினாலேயே அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறமுடியும் என்று நம்பினார்.

ஒரு வகையில் பாரதி, வருண அமைப்பை மாற்றிப் புதிய தொழில் சார்ந்த இயக்கம் காண வேண்டும் என்பதில் தெளிவான சிந்தனையுடையவராகத் தெரியவில்லை. இந்த நோக்கில்,

காந்தியடிகளைப்போல், வருண அமைப்பை எதிர்க்காதவராகவே சிந்தித்திருக்கிறார் எனலாம். ஏனெனில் நால்வகைப் பாகுபாடுகள் பிறப்பினால் வருவதல்ல; நிறத்தால் வருவதல்ல. ஆன்மா, பிராம்மணனுக்கு மட்டுமல்ல, பறவை விலங்குகளுக்கும் இருக்கிறது. வேதங்களையும் சாத்திரங்களையும் கற்றதனாலும் பிராம்மணனாக முடியாது. பிறவி, குணம், தொழில் இவற்றால் மேல்வருணத்தவராக முடியாது. மேனி நிறத்தாலும் உயர்ந்தவராகக் கருதப்படுவதில்லை. மெய்ப்பொருளை உணர்ந்தவரும், காமம், குரோதம், மோகம் போன்ற தீய தன்மைகளிலிருந்து விடுதலை பெற்றவனாக, தான் என்ற அகங்காரமும், டம்பமும் மேவாத நெஞ்சத்துடையவனாக எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுபவனே அந்தணன். ''அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தன்மை பூண்டொழுக லான்'' என்பது வள்ளுவர் குறள். பவுத்த தத்துவஞானியும் கவிஞருமான அகவ கோஷரின் 'வஜ்ரஸிசி' என்ற நூலை ஆதாரமாகப் பாரதி காட்டுகிறார். இது ஒரு குறு உபநிடதமாகக் கருதப்படுகிறது. தன்னல மறுத்தவனாய், சத்தியம், தவவொழுக்கம், புலன்களை அடக்கியவன், எளிமையில் மகிழ்ந்திருப்பவன் — என்றெல்லாம் பிராம்மணனுக்கு இலக்கணம் சொல்லப்படுகிறது.

ஆங்கில ஆட்சியின் கீழ் அழுக்குப்பற்றா உடையுடன் 'குமாஸ்தா' (எழுத்தர்)வாகப் பேனா ஓட்டும் தொழிலைச் செய்பவன் க்ஷத்திரியன் ஆவானா? தேசபக்தர்களை வேவு பார்க்கும் தொழில் செய்பவன் அந்தணனா? சோம்பேறியாக இருந்து, தன் முன்னோர் தேடி வைத்த பொருளைத் தின்று அழிப்பவன் வைசியனா? ... வினைத் தந்திரங்கள் சூத்திரங்கள் அறிந்து தொழில் செய்பவரே சூத்திரர். கைத்தொழில்களை நசிக்கச் செய்துவிட்டு, சோற்றுக்கு இல்லாமல் வறுமையில் உழலுபவன் சூத்திரனுமல்ல ......'' என்று விளக்கும் பாரதி, எந்தத் தொழில் புரிந்தாலும், அத்தொழிலுக்குரிய தரும நெறி வழுவாமல் காக்க வேண்டும் என்ற கருத்தையே, சமுதாய சமத்துவம் என்ற நோக்கில் கொண்டு வருகிறார்.

''வையகம் காப்பவரேனும், சிறு வாழைப்பழக் கடை வைப்பவரேனும் பொய்யகலத் தொழில் புவி போற்றிட வாழ்வோர் மேலோர்'' என்றுரைக்கிறார்.

வழக்கறிஞராயினும், நாவிதராயினும் சமுதாய நலம் பேணும் தன்னலமற்ற நோக்குடன் தொழில் புரியும் சீர்மையிலேயே சமத்துவம் காணலாம் என்பது காந்தியடிகளின் கருத்துமாகும்,

## 5

**கல்வி...**

சாதி சமய வேறுபாடுகளைப் போக்கவல்லது கல்வி ... எல்லோருக்கும் கல்வி கொடுக்க வேண்டும். இந்த வருண சமுதாயத்தில் அந்தணன் மேன்மை என்று கொண்டாடப் பெறுவது பண்டைய வழக்கங்களுடன் ஒட்டிவந்த உபநயனம் — அறிவொளி என்ற கல்வி உரிமைதான். தீண்டப்படாத சாதியைச் சேர்ந்த கனகலிங்கம் என்ற இளைஞரை வீட்டில் அழைத்து அவருக்கு மேலாம் ஞானக் கல்விக்கு வித்திடும் சடங்காக முப்புரி நூலை அணிவித்தார்.

கல்வி ...... அது, நம்நாடு, முன்னோர் என்ற பெருமையை அறியாத வரலாறும், தாய்மொழிப் பற்றும் இல்லாத கல்வியா? இல்லை. தேசியக் கல்வி என்ற ஒரு முறையில், தாய் மொழியே முதற்பாடம். இந்தக் கல்வி வீட்டிலிருந்து, தாயிலிருந்துதான் தொடங்குகிறது. நம் நாடு, மக்கள், நம்நாட்டு வரலாறு, பூமி சாஸ்திரம், அரசியல், பொருளாதாரம் எல்லாமே நம்முடையதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நமது சொந்த மாநிலத்தில், எத்தகைய மக்கள், சமயத்தினர், தொழில் செய்வோர், விளைபொருள்கள் என்றெல்லாம் நமது தாய் மொழியில் கற்பிக்கப்பட வேண்டும். மக்களைப் பற்றிப் பேசுமிடத்து, இந்திய நாட்டில் வாழும் மகமதியர், கிறிஸ்தவர் எல்லோரும் இந்தியரே என்ற உண்மை தெளிவுபடுத்தப்படவேண்டும். சமயக் கல்வி உண்டு. ஆனால், தேசியக் கல்வியில் அவரவர் தத்தம் சமயம் தெய்வங்களிடம் பக்தி செலுத்துவதைக் கற்பிப்பதுடன் கடவுள் ஒருவரே, உயிர்க்குலம் அனைத்திலும் கடவுள் விளங்குகிறார் என்ற உண்மை தெளிவுபடுத்தப்படவேண்டும். மத சம்பந்தமான போராட்டங்கள், பழித்தல், விரோதித்தல், எதுவும் எந்தமதக் கோட்பாட்டுக்கும் உகந்ததன்று என்றார்.

தீயினைக் கும்பிடும் பார்ப்பார் — நித்தந்
திக்கை வணங்குந் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே — நின்று
கும்பிடும் ஏசு மதத்தார்,
யாரும் பணிந்திடும் தெய்வம் — பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்...
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று — இதில்
பற்பல சண்டைகள் வேண்டா.

தேசியக் கல்வியைக் கற்பிக்கும் பள்ளிக்கூடம் ஊருக்கு ஊர் இயங்க வேண்டும். இதற்காக, அந்தப் பிள்ளைகளிடம் இருந்து ஒரு காசும் வாங்கக்கூடாது. இந்தப் பள்ளிக்கூடங்களை ஒருசில மனிதரின் பிரத்தியேக உடமையாகக் கருதாமல் கோயில், மடம் ஊருணி முதலியனபோல் பொது உடமையாக நடத்தவேண்டும்.

வசதி உடையவர்கள் நன்கொடைகள் அளிக்கலாம். மேலும் மிகவும் ஏழையான பிள்ளைகளுக்கு உணவும், உடையும், புத்தகங்களும் வழங்குதல் ஒன்று.

தேசியக் கல்வியைக் கற்றுக் கொடுக்காத தேசம் தேசமாகாது. அறியாமை ஒழிப்பு — அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் அன்னயாவினும் புண்ணியங்கோடி ஆங்கோ ரேழைக்கு எழுத்தறிவித்தல்... என்று கல்வியின் அவசியம் முதன்மையாக்கப்படுகிறது. வீட்டிலிருந்து தொடங்கும் இக்கல்வி, மனைத் தலைவியாம் நாயகிக்கு மறுக்கப்படலாமா?

ஏட்டையும் பெண்கள் தொழுவது தீமை என்றெண்ணி இருந்தவர் மாய்வார். பெண்கள் பட்டம் பெறுவர்; சட்டங்கள் இயற்றுவர். எட்டும் அறிவினில் ஆணுக்கு இவர் இளைப்பில்லாதவர் என்று நிரூபிப்பார்.

ஏழை என்றும் அடிமையென்றும், ஜாதியில் இழிவு கொண்டவனென்றும் இந்நாட்டில் எவரும் ஒதுக்கப்படமாட்டார்; மனிதர் யாரும் சரி நிகர் சமானமாக வாழ, கல்வியாம் செல்வம் எய்துவர்; கல்வியினால் கூடும் அறிவுச் செல்வத்தை எய்துவர்.

இந்த நாட்டில் வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்தாலே பாரையே உயர்த்திட முடியுமே?

## 6

### தொழில்கள்: பொருளாதாரம்

பாரத நாட்டின் பரம்பரைத் தொழில்கள் மனித வாழ்வுக்கு ஆதாரமானவை சுழன்றும் ஏர்பின்னது உலகம் — என்பது வள்ளுவர் வாக்கு உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்! உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்று விடுதலை பெற்ற உழவர் பள்ளர் பள்ளுப் பாடுவதாகப் பாரதி கற்பனை செய்தார். வருங்காலத்தில் தொழில் ஆயிரம் மாண்புறச் செய்து, மக்களையும் நாட்டையும் உயர்த்துவார்களாம். கல்வி செல்வத்தின் தாய்; அந்தத் தாய்க்குத் தொழில்களாகிய அணிகலன்களைப் பூட்டும்போதுதானே செல்வம் சேரமுடியும்? உணவுக்கடுத்தது மானம் காக்கும் உடை. அதுவும் இந்நாட்டுப் பரம்பரைத் தொழில். பட்டினிலாடைக்கும், பருத்தியாடைக்கும் நமக்குக் கைவந்த தொழில். இரும்பை உருக்குவோம், ஆணிகள் முதல் ஆயுதம் வரை செய்வோம். புதிய புதிய தொழில்கள் கற்போம். உலக நாடுகள் சென்று பார்ப்போம்; உடலால் உழைக்கும் பாட்டாளிகளாயினும், அறிவால் உழைக்கும் ஆசிரியர்களாயினும் ஒரே மாதிரி மனிதர்கள் தாம். இவர்களனைவரும் ஒன்றுபடும்போது சமுதாயம் முழுமையடைகிறது.

## 7

பொருளிலார்க்கு இவ்வுலகில்லை என்பது முற்றிலும் உண்மை. ஒரு நாட்டின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது பொருளாதாரம். வெவ்வேறு தொழில்களைச் செய்யும் மாந்தர், சமுதாயத்தில் பொருளாதார சமத்துவத்தைப் பாவிப்பது என்பது கடினமே. பண்டமாற்று முறைகள் இருந்த நாட்களிலும், உழைப்பே மூலதனமாக மக்களால் பங்கிட்டுக் கொண்ட போதும், இல்லாத ஏற்றத் தாழ்வுகள் உடல் உழைப்பறியா லாப நட்ட வாணிபம், தரகுத் தொழில்களால் மிக அதிகமாகிவிட்டன.

உடல் உழைப்பினால் பெறும் ஊதியத்தை வாழ்வுக்கான இன்றியமையாத பொருளாதாரமாக வைத்துக் கொள்ளலாம். அறிவால் உழைப்பதெல்லாம் சமுதாய மேன்மைக்கே என்று காந்தியடிகள், உடலுழைப்பின் கட்டாயத்தை ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தினார்.

பகவத் கீதையின் (கர்மயோகம் — 13) மூன்றாம் அத்தியாயத்தில், பாரதி மொழி பெயர்த்த வரிகளில், ''வேள்வியின் மிச்சத்தை உண்ணும் நல்லோர் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். நம் பொருட்டென்று மாத்திரம் சமைத்து உண்பவர் பாவத்தை உண்கிறார்கள்'' என்ற கருத்து குறிப்பிடத்தக்கதாகும்.

தேசத்தில் பிறந்த மக்களனைவருக்கும் தேசத்துச் செல்வம் பொது என்பது உண்மையானால், சகல மனிதர்களும் தொழில் செய்துதான் ஜீவிக்க வேண்டும் என்ற விதி வழங்குமாயின், தேசத்துத் தொழில் மிகவும் அபிவிருத்தி அடையும். ஜனங்களின் க்ஷேமமும் சுகங்களும் மேன்மேலும் மிகுதியாகும்''.

முப்பது கோடி ஜனங்களின் ஸங்கம், முழுமைக்கும் பொது
உடமை —
ஒப்பில்லாத சமுதாயம் இந்த உலகத்துக்கொரு புதுமை'....
மனிதர் நோக மனிதர் பார்க்கும் வழக்கம் இனி உண்டோ?
தனி ஒருவனுக் குணவிலை எனில் ஜகத்தினை
அழித்திடுவோம் — ......
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் — பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்......

இந்த வரிகளில் தேசத்துச் செல்வம் பொது உடமையாக வேண்டும்; எல்லோரும் எல்லாமும் பகிர்ந்து அனுபவிக்க வேண்டும்; யாருக்கும் யாரும் அடிமையில்லை; ஆண்டையுமில்லை என்ற சமத்துவக் கொள்கையே சாரமாக இருக்கிறது.

சோவியத் நாட்டில் பொது உடமை அரசுக்கான புரட்சி நடந்த செய்தி கேட்டதுமே அதை வாழ்த்தி மாகாளி பராசக்தி உருசிய நாட்டில் கடைக்கண் வைத்தாள் என்று பாடிய பாரதி, அங்கு புரட்சிக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், மக்களின் உட்பூசல்களையும் கண்ணுற்றவரல்லவா? என்றாலும் வன்முறைகளினால் மாற்றம் கொண்டு வருவது நேரக்கூடாது, மக்கள் தலைவர்களாக இருப்பவர்கள், மனமாற்றம் கொண்டு வர வேண்டும் — ஏழைகளிடம் செல்வருக்கும், தொழிலாளிகளிடம் முதலாளிகளுக்கும் மிகுந்த மதிப்பு ஏற்பட வேண்டும். எல்லாரும் மனிதர்களே என்ற சம மதிப்பு வரவேண்டும் — என்ற கருத்தில்,

பாரத சமுதாயம் பாட்டில்,

எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்திய மக்கள்
எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் விலை —
எல்லோரும் இந்நாட்டு மன்னர் —

என்று குடியரசு நெறிகளை அப்படியே அழகாக வலியுறுத்துவார்.

பாருக்குள்ளே சமத்தன்மை — தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்குந் தீமை செய்யாது — புவி
யெங்கும் விடுதலை செய்யும்......

ருசிய நாட்டுப் புரட்சியையும், மாஜினியின் சபதத்தையும் பாடிய பாரதிக்கு ஷெல்லிதாசனாய் மனதில் ஏற்ற விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற மந்திரங்களே கற்பனை எதிர்காலத்தைப் படைத்தன.

தேசம், அரசியல், சமூகம், சமயம், மொழி, இலக்கியம், எல்லாமே அந்த உயர்நிலையை, பேதமற்ற ஒருமைப்பாட்டை மக்கள் மனங்களில் தோற்றுவிக்கும் சாதனங்களாவே கருதினார்.

வானில் பறக்கும் புள்ளெலாம் நான்; காக்கை குருவி எங்கள் ஜாதி; நீளக் கடலும் மலையும் எங்கள் கூட்டம்—நோக்க நோக்கக் களியாட்டம் ... என்றெல்லாம் அந்தப் பேதமற்ற ஒருமை உணர்வை, களிப்பைப் பாடுகிறார்.

உலகனைத்துமுள்ள நாடுகளில் பிரிவும், விரோதங்களும், வன்முறைகளும் தாண்டவமாடினாலும், இந்தியா அமட நிலை எய்தும் நன்முறையை உலகுக்களிக்கும் எனறு கனவு கண்டார்.

பாரதியின் இலட்சியங்களில் நாடு — சமுதாயம் — சமயம் — கலைகள் — மொழி இலக்கியம் எல்லாமே பனித மனங்களை உன்னதங்களுக்கு ஏற்றிச் செல்லும் என்ற வீரியம் இருந்தது.

## 8

### சுதந்திரக் குடியாட்சி

கவி வாக்கு சத்தியம்; அது தீர்க்கதரிசனமானது. எல்லோரும் உட்கொண்டு, நன்மையடையக்கூடியதாய் நாட்டின்

பெருமையையும் ஒற்றுமையையும், விடுதலைக்கான வீர எழுச்சி-யையும் அளிக்கக்கூடிய பாடல்களை எவரும் எழுதலாம் என்று மக்கள் சமூகத்துக்கு அறிக்கை விடுத்து, கடைசியில் தாமே அந்தத் தேவைகளை நிறைவேற்ற இத்துணைச் செல்வங்களை-யும் அளித்தார்.

இன்று, அரசியல் சுதந்திரக் கனவு நிறைவேறி நாற்பத்-தொன்பதாண்டுகளாகின்றன. பொன் விழாவைக் கொண்டாட விரைந்து கொண்டிருக்கிறோம்.

வயது வந்தோர் அனைவரும் வாக்குரிமை பெற்று, குடியரசாட்சி என்ற பெருமதிப்பையும் பொறுப்பையும் தாங்கி நிற்கிறோம்.

### மெய்ப்பட்ட கனவுகள்

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி — என்றென்றும் வாழியவே! எங்கள் தாய் மொழியாம் தமிழ்; தேமதுரத் தமிழோ-சை — தமிழன்னையை அரியாசனத்தில் ஏற்றுவோம்... உலகத் திருமறையாம் குறளை அளித்த வள்ளுவனை வான்புகழ்க் கொண்டாடுவோம்; நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் தந்த இளங்கோவைப் போற்றுவோம்; கம்பன் என்ற கவித்தில கத்துக்கு விழா எடுப்போம்; பாமரனும் புரிந்து கொள்ள, ஈதலறம்; தீவினை விட்டீட்டல் பொருள், எஞ்ஞான்றும் காதலிருவர் கருத்தொரு மித்து ஆதாவுபட்டதே இன்பம்; பரனை நினைந்து இம்-மூன்றும் விட்டதே வீடு — என்று நான்கே வரிகளில் அறம், பொருள், இன்பம் வீடு என்று மனித வாழ்வின் இலட்சிய நெறி-களை அடக்கி, நீதிகள் மொழிந்த அவ்வைப் பாட்டியைக் கொண்டாடுவோம்......

தமிழை மேன்மை செய்ய, மேலும் மேலும் மேன்மைக் கலைகள், சாத்திரங்களை மொழி பெயர்த்து வளம் கூட்டுவோம். எங்கள் மொழி; எங்கள் உயிர்மூச்சு; எங்கள் தாய் என்று பெருமை கொள்வோம். இவ்வறெல்லாம் கவிஞர் கண்ட கனவு மெய்யாகி இருக்கிறது.

எம் தாயின் மணிக்கொடி, உலக அவைகளில் இடம் பெற்று, நமக்கு இந்தியர் பாரதத்தாயின் மக்கள் என்ற பெருமைமிக்க உரிமையைத் தந்திருக்கிறது. வெள்ளிப் பனிமலை மீதேறி, உயர்ந்த முடிகளில் அந்த மணிக்கொடியை இந்தத் தாயின் வீரப் புதல்வர்கள் மட்டுமின்றி, புதுமைப் பெண்ணின் வடிவாய்த் தோன்றியிருக்கும் வீரகுமாரிகளும் ஏற்றி வைத்திருக்கிறார்கள். வானையளப்பதும் கடல் மீனையளப்பதும், சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவதும், நடையும் பறப்புமுணா வண்டிகளும் வான ஊர்திகளும், ஞாலம் நடுங்க வரும் கப்பல்களும் செய்வதும் இந்திய மக்களுக்குச் சாத்தியமாகி இருக்கிறது. பஞ்சினிலாடைகளும், பட்டினிலாடைகளும் பண்ணிமலைகளென வீதி குவிப்போம் என்ற அமரவாக்கு நிதரிசனமாகி இருக்கிறது. ஆயுதச் சாலைகளும், காகித ஆலைகளும் இன்னும் பல்வேறு நுண்பொறிகள் முதல், கனரக சாதனங்களும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் இந்தியத் திருநாட்டின் மக்கள் திறமைமிக்கவர்கள் என்று உலகுக்கு உணர்த்தி இருக்கின்றன.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பெண்களுக்குச் சாத்தியமாகி இருக்கிறது. மகளிர் எந்த வகையிலும் அறிவிலும் திறமையிலும் ஆண்களைவிடத் தாழ்ந்தவர் இல்லை என்று நிரூபித்து இருக்கின்றார்கள்.

ஆனால் உண்மையிலேயே இந்தப் பாரத சமுதாயம் அன்று பாரதி கண்ட கனவின் ஆதார சுருதியில் இயங்குகிறதா?

9

## வாடா வறுமையின் ஆணிவேர்

அந்நாள் அந்நியர் ஆதிக்கத்தில் கட்டுண்ட நாட்களில் வாட்டிய சிறுமைகளும் இன்று தொலைந்திருக்கின்றனவோ?

ஜாதி நூறுகள் ஒழியவில்லை. அறம் ஏதென்று புரியாமல் வாதங்கள் ஓதுவது மட்டுமே கல்வியறிவின் பயனாயிருக்கிறது. வெவ்வேறு மொழிகள் கற்கப் பாடுபடும் மக்கள், தாய்மொழியைப் புறக்கணிக்கிறார்கள். பசுமைப் புரட்சி என்றும் வெண்மைப் புரட்சி என்றும் பொருள் வளங்கள் கூடி இருந்த போதிலும் ஒட்டிய வயிறும், எண்ணெய் காணா முடியும், அரைக் கந்தல்களுமாக இலட்சமோ இலட்சம் சிறுவர் சிறுமியர், பெற்றோரின் பாதுகாப்புக்களில்

இருந்து கழற்றிவிடப்பட்டு, ஊதியத்துக்காக — அரைவயிற்றுச் சோற்றுக்காகப் பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், கம்பளத் தொழிற்சாலைகளிலும், தோல் தொழிற்சாலைகளிலும், இயந்திரத் தொழிற்சாலைகளிலும் தேய்கிறார்கள். பொது விடுதிகளிலும் நிரந்தரமில்லா கூலிப் பணிகளிலும் மாய்கிறார்கள்.

பெரும்பான்மை மக்களுக்கும் அடிப்படைத் தேவைகளான உணவு, உறையுள், நீர், சுத்தமான காற்று கிடைப்பதில்லை. சுற்றுச்சூழல் முற்றிலும் மாசடைந்த நிலையில், அன்றாட வாழ்க்கையே சாபக்கேடாக மாறியுள்ளது. புள்ளி இயல் விவரங்கள், மழையும் விளைவும் ஏராளம் என்று காட்டிய போதும் அதையும் அறியாத இளஞ்சிறாரும் வறியவர்களும், சாக்கடை ஓரங்களிலும், உணவு விடுதிகளின் எச்சில் தொட்டிகளிலும் ஒட்டிய வயிறுகளுடன் உணவு தேடும் காட்சி மனச்சாட்சி உடையவர்களின் அடிவயிற்று ஈரங்களை வற்றச் செய்வதாகும். எந்தப் பெண்ணும் இந்நாட்களில், கணவனுக்கும் குழந்தைக்கும் உணவு தயாரித்துப் போட்டபின், நிழலில் உண்டு உறங்கி சுகவாசம் செய்பவளாக இல்லை. வீட்டிலும் உழைத்து வெளியிலும் உழைக்கிறாள். எனினும் பெற்ற தாய் — தந்தையருக்கு அன்பையளித்துப் பேணுவதும்கூடப் பாரமாக இருக்கிறது. ஒருகாலத்தில் புண்ணியத்தலங்களிலும் நதிக்கரைகளிலும் பயணிகள் வந்து தங்கி நீராடி, தெய்வ வழிபாடு செய்ய வசதியாகச் செல்வர்களாலும், மன்னர்களாலும் கட்டப்பெற்ற அன்ன சத்திரங்களும் பொது விடுதிகளும், இந்நாட்களில் ஆடம்பர விடுதிகளாக மாற்றம் பெற்று, ஏராளமாகப் பொருள் — வாடகை வாங்கும் திருப்பணியைச் செய்கின்றன. கல்வி, இந்தக் குடியுரிமை நாட்டில் இன்று நாணயமுள்ளவர் எவரும் விலை கொடுத்துப் பெறமுடியாத அளவுக்கு வாணிபமாகி இருக்கிறது.

பெண்மை வாழ்க வென்று கூத்திடுவோமடா —
பெண்மை வெல்க வென்று கூத்திடுவோமடா —
வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா,
கலியழிப்பது பெண்களறமடா —
உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரினும் இந்தப் பெண்மை யினிதடா......

என்றெல்லாம் பெண்மையை உயிருக்குயிராகப் போற்றிய வரிகள் இங்கு அழிந்து போயினவா?

கருவறையையே கல்லறையாக்கிப் பெண்ணைக் கொண்டே பெண் வித்துக்களை அழிக்கும் இந்தக் கலியை எந்த அறமும் அழிக்கவில்லையே?

ஆற்றல் கொடுக்கும் சக்தியாக இருந்த பெண்மை, அழிப்பதற்குரியதென்று வீழ்ச்சியுறுவது எதனால்?

பேணுமொரு காதலினை வேண்டியன்றோ, பெண் மக்கள் பிறழ்கிறார் — என்று பெண்ணை அளப்பரிய பரிவுடன் நோக்கி, அன்பு செய்வோம், பெண்டாட்டியடிமை என்று தாய்க்குலத்தை அடிமையாக்க வேண்டாம் என்று கனிந்த பேரருளாளன் வாக்கு எப்படி அழிந்து போயிற்று?

## 10

சுருதியில்லாச் சுதந்திரம்

ஏன் பொய்த்தது? எப்படி அழிந்தது?

தராசுத்தட்டில், எத்துணை வண்மைகளை உடன் வைத்தும், பெண்ணின் எடையை அது ஏன் கூட்டவில்லை.

வாழ்வுக்கு அவள் எவ்வாறு சுமையாகிப் போனாள்?

இந்த வினாக்கள் அனைத்துக்கும் ஒரே விடைதான் கூற வேண்டியிருக்கிறது.

பாரதியின் கனவுகள் எல்லாவற்றுக்கும் அடிநாதமாக விளங்கியது ஏற்றத்தாழ்வு இல்லாத சமத்துவம். சமுதாய வளர்ச்சிக்கு அதுவே சுருதி; அதுவே இலயம். அந்தச் சுருதியும் இலயமும் இல்லாத திட்டங்களும் வளர்ச்சிகளும் வீக்கங்கள்; சமுதாயத்தின் ஆரோக்கியக் கூறுகளை அழிக்கப்புகும் நோய்கள்.

இந்த வளர்ச்சியைத்தான் நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

சுதந்திரமும் குடியரசுரிமையும் எய்திவிட்டபோது, அந்நிய ஆதிக்கத்தில் பெற்றிருக்காத ஆண் — பெண்— சம உரிமை, கல்வி உரிமை சமுதாயத் தீமைகள் ஒழிப்பு எல்லாவற்றுடன் மூச்சுக்கு மூச்சு ஆட்சியாளர்களால் சமுதாய சமத்துவம், பொருளாதார சமன்பாடு என்று கூறப்பட்டது.

காகித அளவில் எல்லாச் சீர்திருத்த ஆணைகளும் நிறைவேற்றப்பட்டன. பொருளாதார சமத்துவம் கொள்கை, இலட்சியம் என்று கூறப்பட்டாலும், எல்லோருக்கும் எல்லாம் என்ற குறிக்கோளுடன் உற்பத்தித் திட்டங்கள், உழவுத் தொழிலையும், பாரம்பரிய மரபுகளையும் உயிர் மூச்சாகக் கொண்டு இந்திய நாட்டின் மிகப் பெரும்பான்மையினராக வறிய நிலையில் வாழ்ந்த கிராம மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாக்கிப் போடப்படவில்லை. மாறாக, அன்றைய இந்தியப் பிரதமர் நேருவினால் கொண்டுவரப்பட்ட தொழில்மய வளர்ச்சித் திட்டங்கள், பெருமுதலாளித்துவத்தையே வளர்த்தன என்றால் தவறில்லை. இதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இத்தனை ஆண்டுகளின் வாழ்க்கையில், ஒவ்வொரு குடிமக்களும் நெருக்கடியை உணர்ந்து வருகிறோம்.

கிராமப்புறங்கள் சுயதேவைப் பூர்த்தி கண்டு எஞ்சியதே நகரங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற காந்தியப் பொருளாதார இலட்சியம் அலட்சியமாக்கப்பட்டதன் விளைவு, கிராமப்புறங்களைச் சுரண்டி நகரங்கள் கொழுத்தன. ஏனெனில் கனரகத் தொழில்களும் வேலைவாய்ப்புக்களும் பெரும்பான்மை எழுத்தறியாத கிராமத்து மக்களுக்குப் பயன்படக்கூடியதாக இல்லை. உற்பத்தியும், மேல்தட்டு மக்களின் தேவைகளைப் பெருக்கும் நுகர் பொருட்களைச் சந்தையில் குவித்து, மாயமான வண்மையைக் காட்டுவதாகவே ஆயிற்று. குடிக்க நீரில்லாத நகர்ப்புற கிராமங்களிலும் வெளிநாட்டுத் தயாரிப்புப் பானங்கள், மது வகைகள் கிடைக்கச் செய்த வண்மை.

அணைக்கட்டுகள்தாம் நவீன இந்திய மானுடத்துக்கான கோயில்கள், குருத்வாரங்கள் என்று அந்நாள் நேரு முழங்கினார் ஆனால் அணைக்கட்டுகளும் நீர்த்தேக்கங்களும் கனவு கண்ட சுபிட்சங்களைக் கொண்டுவராமல் அந்நியக் கடன்களையே சுமையாக்கி இருக்கின்றன. ஓடும் நதி நீருக்காக, அண்டை மாநிலங்கள் வெட்டுப்பழி குத்துப்பழியாக மானுடத்தை அழிக்கின்றன.

பணவீக்கம் ரூபாயின் மதிப்பைக் குறைத்துவிட்டதால் விலைவாசி மக்களால் எட்டிப்பிடிக்க முடியாத உயரத்துக்குத் தாவிக்

கொண்டிருக்கிறது. கல்வியும் தொழிற் திறமையும் இருப்பவருக்கே வேலை இல்லை.

சொந்த நிலங்களில் ஆணும் பெண்ணும் உழைத்து, கிடைத்ததைப் பகிர்ந்து வாழ்ந்த கிராமத்து வறிய வாழ்வும் போல், இன்று மண்ணை நம்பி வாழ்ந்தவர் கூலிக்காரர்களாக, நகரங்களுக்குப் பெயர்ந்து மானுடமே நசிக்கும் நகர்ப்புறங்களின் பாதையோரங்களில் நெருங்கும் நடைமுறை பழகிவிட்டது!

''வாழ்ந்தால் முப்பது கோடியும் வாழ்வோம், இல்லையேல் முப்பது கோடியும் வீழ்வோம்'' என்று அந்நிலை ஆதிக்கத்தின் பிடியில் இருந்த சமுதாயத்தின் உறுதியைப் பாரதி முன் மொழிந்தார்.

## II

### அபசுரங்கள்

அந்த உறுதிக்கும் இன்றைய அரசியல் ஆதிக்கத்தில் இடமில்லை. மன்னர் பரம்பரை ஒழிக்கப்பட்டது. ஆனால் இந்த ஜனநாயகத்தில் மக்களாட்சி என்ற பெயரில், பரம்பரை ஆட்சி நடக்கவே இடம் கொடுக்கப்படுகிறது.

பிரபுத்துவ ஆடம்பரங்களை இகழ்ந்து நகையாடிய பாரதி, இந்நாளில், இந்த 'மக்களாட்சி'த் தலைவர்களின் ஆடம்பரங்களை என்னவென்று சொல்வாரோ?

சமத்துவம் என்ற பெயரில், தொழிலதிபர்களுக்கு அபரிமிதமான வரி விதிப்பையும், ஏழைகள் என்ற பிரிவினருக்கு 'இலவசம்' என்ற அப்பத்துண்டை விட்டெறியும் சூழ்ச்சியும் பண முதலைகளை இன்னமும் கொழுக்க வைக்கும் கூறுகள் என்பதை உணராத மக்களே பெரும்பான்மையினர்.

இலாபத்தின் பெரும்பகுதியை அரசு வரியாகக் கொடுப்பதா? எனவே அந்த வரிப்பணம், தேசிய வருவாயில் சேராமல் தனி மனிதர்களின் நிதிகளில், பதவிகளைத் தகக வைத்துக் கொள்ளும் பேராசைகளின கட்சி நிதிகளில் சேர்ந்தது. மன்னர்கள் நாணுமளவுக்குப் பதவி ஆடம்பரங்கள் ஏற்றம் பெற்றன. இந்தக் கறுப்புப் பணம் மக்களை மேலும் மேலும் சுரண்டும் மாயசுபிட்சத்துக்கும் தேவைகளுக்கும் இடமளிக்கும் நுகர் பொருள் வாணிபததை வளர்த்தது.

ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்பும் எதிர்க்கட்சிகளின் வாயை அடைக்கவும், கடைக்கோடி மனிதனின் குடலுக்கு ஈரம் காட்டவும் இலவச அறிவிப்புக்களே போதுமாயின.

தேசியக் கட்சியாக நின்று, அந்நாள் முன்னோர் செய்த தியாகங்களைச் சொல்லி, சுதந்திரம் வாங்கிக் கொடுத்த முத்திரை போட்டுக்கொண்ட கட்சியும் கட்சிப் பாதுகாவலர்களும், காந்தி ஜயந்தி, கிராமக் கைத்தொழில், சர்வோதயம் என்ற சடங்குகளை விழாக் கொண்டாடியும் மக்களின் வாக்குரிமைகளைப் பெற முனைந்தனர். மொத்தத்தில் ஜனநாயகம் பணநாயகமான நிலையில், எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் கொள்கை இலட்சியம் செல்லுபடியாகாத நிலையே வந்தது. எல்லாக் கட்சிகளும் தேர்தல் இலாபத்தையே குறியாக்குகின்றன.

தீண்டாமை ஒழிப்பு காகிதத்தில் இருக்கிறது. தேநீர்க் கடைகளில் தனிக்குவளைகள் இன்னும் இருக்கின்றன. கிராமத் துவக்கப் பள்ளிகளிலும் இந்தச் சாபக்கேடு வாழ்கிறது.

'சமத்துவம்' பெருமுதலாளித்துவ சக்தியின் ஆட்சியில், அவ்வப்போது மக்களை நம்ப வைக்க, புதிய புதிய அறிவாளிகளின் பொருளாதார நிபுணர்களின் திறமைகளுக்கும் யுக்திகளுக்கும் அறைகூவல் விடுத்துக் கொண்டிருக்கிறது. அந்நிய மூலதனத்துக்கும் நியாயம் சொல்லி வரவேற்கும் சாதுரியங்களில் மக்களை மயங்கச் செய்ய முடிகிறது.

நடைமுறையில் பேதங்கள் ஆழ்ந்து ஆழ்ந்து மக்கள் சமுதாயத்தைக் கூறுகள் போட்டுக் குதறுகின்றன. மக்கள் சமுதாயத்தைக் கூறுபோட்டு ஆட்சி செய்வதில் நம்மவர், அந்நியனைக் காட்டிலும் பல படிகள் முன்னேறிவிட்டனர்.

நால்வருண பேதங்கள் ஏற்கெனவே பலகூறுகளாக்கி விட்ட இந்திய சமுதாயத்தை, மொழி சார்ந்தும், பிரதேசம் சார்ந்தும், பொருளாதாரம் சார்ந்தும், அரசியல் கட்சிகள் சார்ந்தும், சமயங்கள் சார்ந்தும், மேலும் மேலும் எண்ணிலடங்காப் பிளவுகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

ஓர் அரசியல் கட்சியின் கொள்கை — சாதி ஒழிப்பு — தீண்டாமை ஒழிப்பு — சமத்துவ சமுதாயம் என்று இருக்கலாம்.

''உலகத் தொழிலாளரே ஒன்று சேருங்கள்'' என்று முழக்கலாம். ஆனால் அதே கட்சியின் ஒரு கிராமத் தலைவரின் மகளோ மகனோ, வேறு அரசியல் கட்சியைச் சார்ந்த மகனையோ மகளையோ, அல்லது வேறு சாதி — சமயப் பிரிவிற்பட்டவரின் சந்ததியையோ காதலித்து மணம்புரிய முன்வந்தால், அந்தக் காதலர்களைப் பெற்றோரே வெட்டிக் கொல்வதற்கும் தயங்காத அளவுக்குப் பழைய சாதி — சமயப் பெருமைகள் மீட்கப்பட்டு வேரோடியிருக்கின்றன.

வாக்குரிமையைப் பெற, சாதி வெறியர்களுக்கு ஊக்கம் கொடுக்கவும் அரசியலார் கூசுவதில்லை. வன்முறை அடக்கு முறைக் கட்டவிழ்ப்பே காவல் — நீதி, மக்கள் பரிபாலனங்கள்.

மன்னராட்சியில்தான் சூழ்ச்சிகளும், பதவிப் போட்டிகளும், கொலைகளும் நடக்கும் என்பதில்லை. இந்தியக் குடியாட்சி அதே முறையில்தான் இயங்குகிறது. மக்கள் (தொகுதிகள்) பகடைக் காய்களாகிறார்கள்.

இந்நாளில், அரசியல், சமூகம், தனி மனித உறவுகள், கல்வி, கலை, பண்பாடு, சமயம் எல்லாவற்றுக்கும் இலாபம் குவிக்கும் வாணிப நோக்கே தலையாய இலட்சியமாக இருக்கிறது.

எல்லாவகை அறிவும் அறிவியலும், வாணிபம் செய்து பொருளீட்டக்கூடிய மூலதனங்களாகச் செயல்படுத்தப்படுகின்றன.

எல்லாத்துறை அறிவுத்திறனும் ''தொழில் — நிர்வாகம் — உழைப்போரை ஆளும் கல்வி — என்ற கடிவாளத்துக்குட்படுத்தப்படுகிறது.

'இலவசம்' என்ற அரசுப் பள்ளிக்கூடங்களில், கூரை இருந்தால் தரை இல்லை; தரை இருந்தால் சுவரில்லை என்ற நிலை. எழுத்தறிவிக்கும் ஆசிரியர், ஆர்வத்துடன் எழுத்தறிவிக்கும் மேலாம் தொழிலுக்கு வருவதில்லை. ஒரு கரும்பலகை கூட ஒழுங்காக இல்லாத பள்ளிகளில் உணவளிக்கும் திட்டம் செயல் படுத்தப்படுவதும் வாக்குரிமைச் சீட்டுகளைப் பெற சாதனைப் பட்டியலில் சேர்ப்பதற்காகத்தான். உபகரணங்கள், ஆசிரியர்கள் சீராக இருந்தாலும் பிள்ளைகள் ஆர்வமாக வருவதில்லை. இந்தப்

படிப்பைவிட, வெளியே சென்று பொது விடுதிகளிலோ கடைகளிலோ வேலை செய்து நான்கு காசுகள் சம்பாதித்துச் சுயமாக வாழலாம் என்று நகரத்துக் கூர்ச்சிகளில் புக ஓடுகிறார்கள்.

இலவசமல்லாத பயன்படும் கல்வி என்பது, பெருமுதலாளித்துவத்துக்குரிய தொழிலாகிவிட்டது. இங்கு தாய்மொழிக் கல்வி கிடையாது. இரண்டரை மூன்று வயசுப் பருவத்திலேயே கற்பிப்பவளுக்கும் கற்கும் குழந்தைக்கும் அந்நியமான ஒரு மொழியே பேசுவதற்கும் பயில்வதற்கும் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இக்கல்வி முறை மக்களின் தனித்திறனை நசிக்க வைத்து, செயற்கையான பட்டங்களைப் பெறுவதற்கு மட்டுமே உதவுகிறது. இத்தகைய பணக்கல்வி பெற்ற செல்வர் வாரிசுகளும் இந்திய மண்ணை விட்டு அந்நிய நாட்டில் பொருள் தேடிக் குவித்து, உடல்பரமான சுகவாழ்வு காணப் பெயர்ந்து செல்லும் இலட்சியத்துடன் மேற்கல்வி பெறச் செல்கின்றனர். நீங்கள் வரவேண்டாம் என்று அயல் நாட்டினர் தடுத்தாலும், அங்கேயே இரண்டாந்தர மூன்றாந்தரக் குடிமக்களாக வாழ்வது, தாய் நாட்டுத் தரித்திர வாழ்வைவிட செயல் திறனை எவருக்கோ அடகு வைத்து, வாழ்க்கையின் இனிமைகளையும் அமைதியையும் இலக்கில்லாப் பயணங்களிலும் ஓட்டங்களிலும் தேடி அலைபவர்களாக முடிகிறார்கள்.

## 12

### பண்பாடு... கலைகள்

பண்பாடு என்பது யாது?

பெண் சேலை உடுத்துவது பண்பாடா? பெண்ணின் பூவும் பொட்டும் மங்களக் கோலமும் பண்பாட்டுச் சின்னங்களா? எத்தகைய குரூரமான கணவனாலும் கொடுமைகள் பொறுத்து அவனையே தெய்வமாக வழிபட்டு நிற்பதுதான் இந்தியப் பண்பாடா? பண்பாடு என்ற ஒரு நாகரிகமே பெண்ணை மட்டுமே மையமாகக் கொண்டிருக்கிறதா?

விருந்தினர் வரும்போது கை குவித்து வணங்கி, சந்தனம் குங்குமம் அளித்து, 'இந்தியக் கலாச்சாரம்' என்று பெண்ணையே உபசரிப்பு நங்கையராக்குவதுதான் பண்பாடா?

பண்பாட்டுக்கும் ஆடவனுக்கும் சம்பந்தமே கிடையாது என்பதுபோல் இன்றைய நிகழ்ச்சிகள் அமைகின்றன.

பண்பாடு என்ற சொல்லுக்கு மிகச்சரியான விளக்கம் சரியாக அறிவுறுத்தப்படவில்லை என்றால் சரியாக இருக்கும்.

பண்பாடு என்பது, மனிதன் விலங்குத் தன்மையில் இருந்து குரூரம், முரட்டுத் தன்மை ஆகிய இயல்புகளில் இருந்து நாகரிகம் பெறுவதற்கான ஒரு முன்னேற்ற இயக்கம் என்று கொள்ளலாம்.

காந்தியடிகள், மனிதகுலம் இம்சையிலிருந்து அஹிம்சையை நோக்கி முன்னேறி வருகிறது. அஹிம்சை — அன்புவழி. எனவே மனிதகுலம் மேலும் மேலும் அன்பு வழியில் முழுப்பயனையும் அடையும் என்று நம்பிக்கை இருக்கிறது; இதற்காகப் பல தலைமுறைகள் காத்திருக்கலாம் என்றார். கல்லும் முள்ளும் முண்டும் முரண்டுமான நிலப்பகுதியை விளை நிலமாக்கச் சுத்தம் செய்வதைப் பண்படுத்துதல் என்று சொல்கிறோம். அதேபோல், பண்படுத்தப்படாத மனதில், சினம், ஆசை போன்ற எழுச்சிகளை அடக்கிக் கொள்ளும் ஆற்றல் வருவதில்லை. பசி வந்ததும் பாய்ந்து எந்த இரையையும் கொள்வதும், உடலியல் கிளர்ச்சி தோன்றும் போது அந்த அவாவை உடனே இன்னார் இனியர் என்ற தரம்பாராமல் நிறைவேற்றிக் கொள்வதும், பண்பாடற்ற செயல்கள். இதையே 'மிருகத்தனம்' என்று குறிப்பிடுகிறோம். ஆனால் அவற்றை அடக்கிக்கொண்டு ஓர் ஒழுக்கக் கட்டுப்பாட்டில் கட்டுப்படுத்திக் கொள்வது பண்பாடு. உள்ளே குரூர உணர்வுகள் எழுந்தாலும் அவற்றை அடக்கிக் கொண்டு அன்பு வழியில் மனதைப் பயிற்றுவது பண்பாடு இந்தப் பண்பாட்டு நாகரிகம் இயற்கையுடன் ஒத்துப் போவதாகும். இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்து விடல் — என்ற வள்ளுவர் வாக்கு, பண்பாட்டின் உச்ச நிலையை வெளிப்படுத்துகிறது. கள்ளம் விலக்கி கயமைக்கறை துடைத்து உள்ளத்தினுள்ளே ஒளித்திரி ஏற்றி வைக்கும் உயர் பண்பாட்டையே பாரதி, பகைவனுக்கருள்வாய் — நன்னெஞ்சே! என்று பாடினார். தின்ன வரும் புலியையும் அன்னை பராசக்தியின் வடிவம் என்று சிந்தையில் போற்றுவது பண்பாட்டின் தெய்வீக நிலை எனலாம். இந்த உள்ளொளியே நோக்குமிடமெல்லாம் யாமன்றி வேறில்லை என்ற ஒருமைத் தத்துவத்தை அவருக்கு அனுபவமாக்கியது.

இசை, ஓவியம், கூத்து, நாடகம், இலக்கியம் ஆகிய கலைகள் அனைத்தும் மனித மனங்களை இவ்வாறு பண்படுத்தி மேலாம் நிலைக்குக் கொண்டு செல்லும் சாதனங்களாகும்.

ஆனால் இன்றைய கலைகள் புலன்களைக் கிளர்த்தி மனிதரைக் கீழே கொண்டு செல்லும் கருவிகளாக இருக்கின்றன.

முக்கியமாக, பண்பாடு — கலாச்சாரம் ஆகியவற்றுக்குக் கண்களால் பார்க்கும் சினிமா, தொலைக்காட்சி ஆகிய மக்கள் தொடர்பு சாதனங்களே பயன்படுத்தப்படுகிறது.

அந்நாளைய தேவதாசி கலைகளோடு உடல் வாணிபத்திலும் தொடர்புபடுத்தப்பட்டு இழிவாகக் கருதப்பட்டாள். அதைச் சட்டபூர்வமாக ஒழித்துவிட்டார்கள். ஆனால் இந்நாட்களில் கலை, பண்பாடு என்ற போர்வையில், விளம்பரத்துறையில் பெண்ணுடல் வாணிபம் 'கவுரவமாக' அரசே ஊக்குவிக்கும் பெருமையுடன் நடைபெறுகிறது.

பெண் — சக்தி, வாணி, லட்சுமி, காளி என்ற பொய்யான போற்றுதல்கள் ஒருபுறம் இருந்தாலும், அவள் நுகர் பொருள் சாதனங்களில் ஒரு பொருளாகவே இன்று தீர்ந்திருக்கிறாள். பாரதியின் புதுமைப் பெண் கனவை இன்றைய மகளிர் அறிவு சார்ந்த ஏற்றங்களால் நிரூபித்தாலும், அவள் உடல் என்று அறிவுறுத்தப்படுவதுடன் சீர்குலைக்கப் பெறுவதும் அன்றாட நிகழ்ச்சியாகிறது.

அவளுடைய உடலுக்கும், கூடும் தங்கத்துக்காகவுமே திருமணம் என்ற ஒன்று இசைகிறது. கற்பு என்ற வளையம் பிணிக்கிறது; கைம்மை விதி இன்னமும் குட்டிக்குறுக்குகிறது. மணவிலக்கு உரிமையும் இவளைக் குப்பையில் தள்ளவே வாய்ப்பாகிறது. குடும்பக் கட்டுப்பாட்டுக்கான சகல சோதனைகளுக்கும் ஆட்பட்டு, தாய்மை இயல்பையும் குதறிக் கொள்கிறாள். கல்வி உரிமையும் ஊதிய உரிமையும் இவளை மும்முனைப் பொறுப்புக்களைச் சுமக்க வைத்திருக்கின்றன. இந்தக் 'கலை' என்ற சாதனங்கள் களிப்பூட்டுவதற்காக, மனிதரின் மிருக இயல்புகளை மீண்டும் கொண்டுவந்து வன்முறைகளையும் நியாயப்படுத்தும் காட்சிகளைத் திரும்பத் திரும்ப மக்களுக்கு அளிக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் தொழில் நுணுக்கம், அழிவுச் சக்தியை மிக 'நாகரிகமாக'ப் பயன்படுத்தும் குரூரங்களைச் சாத்தியமாக்கி இருக்கிறது. குரூரம் என்பதை அறியாத

பிஞ்சுமனங்களிலும் கொலை வெறி கூடும் அளவுக்கு இன்றைய 'நாகரிகம்' வளர்ந்திருக்கிறது; மழுங்க வைத்திருக்கிறது. என்றாலும், 'சொல்லக் கொதிக்குதே நெஞ்சம்' என்று பொங்கி எழுந்து மக்கள் கடலென வஞ்சகக் கூட்டத்தை நோக்கி ஏன் கிளம்பவில்லை?

## 13

### சமய தந்திரிகள்

இங்கே சமயங்கள் — பல தெய்வங்களையும் கோட்பாடுகளையும் கொண்ட சமய நிறுவனங்கள், மக்களை மந்தைகளாக்கிக் கோலோச்சும் குருமார்கள் எப்படி இயங்குகிறார்கள்?

அவர்களும் அரசியல் கட்சிகள் போல் மக்களைத் தங்கள் ஆளுகைக்குக் கொண்டுவரப் போட்டி போடுகிறார்கள்.

சந்நியாசிகளுக்கும் தங்கம், வெள்ளி, சொத்து சுகங்கள் பெருகி இருக்கின்றன. அரசியல்வாதிகளே அவர்களில் அடக்கமாயிருக்கின்றனர். ஒன்று பரம்பொருள் — என்று எல்லாச் சமயங்களையும் அணைத்தும், உரிமை கொடுத்தும் இந்திய சமுதாய ஒற்றுமையைக் கனவு கண்ட நிலைக்கும் இன்றைய 'ஆன்மீக' மற்ற போலிச் சமயவாதிகளுக்கும் தொடர்பே இல்லை. பஞ்சமா பாதகங்களும் துறவு உடைகளுக்குள் அடக்கமாவதும் நடக்கிறது. மக்களை ஏமாற்றுவதில், 'சமயங்களும்', அரசியலும் கூட்டுச் சேருகிறார்கள். முடியாட்சியும் அந்நிய ஆதிக்கமும் விலகினால், குடிமக்கள் தாமே அரசாளும் போது, விண்ணை மண்ணுக்குக் கொண்டுவரலாம் என்று கனவு கண்டது ஏன் நடக்கவில்லை? இப்போது இன்றைய நிலைக்கு ஏற்ற மருந்து — பரிகாரம் — எதுவும் இல்லை என்று ஓய்ந்துவிடலாமா?

முதலில் தவறு எங்கே என்று ஓர் இழையைக் கண்டோம். 'ஜனநாயகம்' சமத்துவம் என்பதை, அடிநிலையான பொருளாதாரத்தில் கொள்ளாமல் ஏக போகங்களுக்கு உரித்தாக்கப்பட்டது முதல் தவறு. அந்தத் தவறைத் திருத்திக்கொள்ளும் வகையில், ஜனநாயக நாட்டில் மக்கள் பிரதிநிதிகளின் குரல்கள் ஓங்கவேயில்லை. மேலும் மேலும் ஒன்றை மறைக்க வேறொன்று அவற்றை மறைக்க இன்னுமொன்று என்று மக்களுக்காக மக்களே ஆட்சி

என்பது மாறி, ஆட்சியாளருக்காக மக்கள் என்றாகிவிட்டது. ஒரு சில சுயநலப் பணச் சக்திகள், ஒருசில அறிவாளரைக் கையகப்படுத்திப் பெரும்பான்மை மக்களை வஞ்சகமாக உறிஞ்சும் ஏகாதிபத்தியம் நிகழ்வதாகவே கொள்ளலாம்.

இன்று கனவுகள் பொய்யாகி முன்னும் செல்ல இயலாமல், பின்னும் திரும்ப இல்லாமல் ஒரு நெருக்கடியில் இடைப்பட்டிருக்கிறோம். அறியாமை இருந்த இடத்தில், கிளர்த்திவிடப்பட்ட நுகர்பொருள் ஆசைகளும், அடிநிலை வறுமையும் இயலாமையின் உச்சத்தில் தோன்றும் வெறியும் பெரும்பான்மைச் சமுதாயத்தை ஆட்டிப் படைக்கிறது. கொலையும் கொள்ளையும் அன்றாட நிகழ்ச்சிகளாகின்றன. அந்நாளில், பொருளாதாரம் சார்ந்து முதலாளி வருக்கத்தையே கொழுக்கச் செய்திருந்தாலும், அன்றைய பேராயக் கட்சியின் மீது மக்கள் மாற்றில்லாத நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அன்றைய பிரதமருக்கு மக்கள் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. குடியுரிமை வழங்கப்பட்ட அதேநாளில், இந்த மக்களாட்சி உரிமை பெற்ற கோடானு கோடி மக்களின் அறியாமையைப் போக்கி, கல்வி என்ற வாய்ப்பை, போர்க்கால நடவடிக்கையின் தீவிரத்துடன் செயல்படுத்தி இருக்கவேண்டும். குறைந்த பட்சம் பாராளுமன்றத்துக்கு மக்கள் பிரதிநிதிகளாக வருபவருக்கும்கூட, எந்தத் தகுதியும் பயிற்சியும் அளிக்கப்படாதது மிகப் பெரிய தவறு எனலாம்.

கல்வி பயிற்றும் திட்டம் காகிதத்தில் இருந்தாலும், நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், வீரமாகச் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதே உண்மை. ஆட்சியாளர், செல்வரின் வாரிசுகள் உயர்கல்வி, புதிய தொழிற்கல்வி என்று ஏராளமான பொருட்செலவில் (அந்நியச் செலாவணி) வெளிநாடுகளுக்கு அனுப்பப் பெற்றிருக்கையில், பல இலட்சக்கணக்கான கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் கைநாட்டுக்கே பரம்பரை என்று சிறுவர் சிறுமியர் இரண்டு மூன்று தலைமுறைகளைக் கழித்துவிட்டனர்.

இந்நாட்களில், அகில உலக அளவில் இந்நாட்டின் நீங்கா வறுமையும் உலகில் இரண்டாவது இடத்திலிருந்து முதலிடத்தைப் பெற விரைந்து முன்னேறும் மக்கள் பெருக்கமும், இந்தப் பணநாயக அரசியல் தலைவர்களையும் நாணச் செய்திருக்கிறது. அறிவொளி இயக்கம் நாடெங்கிலும் பட்டி தொட்டியெல்லாம்

முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. இந்தத் தீவிரத்தை நாற்பது ஆண்டு களுக்கு முன் செலுத்தியிருந்தால் பத்தாண்டுக் காலத்தில் இச் சமுதாய அறியாமையையும் முட்டாள்தனத்தையும் போக்கிச் சிந்தித்துச் செயல்படும் சமுதாயமாக மாற்றியிருக்கலாம். எல்லா அரசியல் கட்சிகளும் தங்களுடைய அரசியல் லாபத்தையே கணிக்கவேண்டிய சூழலில்தான செயல்படுகின்றன. மாறுபட்ட கொள்கைகளுடைய கட்சிகள் அரசியல் ஆதாயத்துக்காகக் கூட்டுச் சேருவதும், கொள்கைகளை விளையாட்டுப் பிள்ளைகள் போல் மாற்றிக் கொள்வதும், மக்கள் விழிப்பெய்தினால் சாத்தியமாகாது.

இன்று தீவிரமாகச் செயல்படும் அறிவொளி இயக்கம், மக்களைச் சென்று சேர்ந்து, இந்த நெருக்கடி — அவல மக்களாட்-சியை மாற்றி ஆரோக்கியமான ஓர் அரசாட்சிக்கும், அரசியல் இயக்கங்களுக்கும் வழிவகுக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். மக்கள் சக்தியை மீண்டும் ஒன்று திரட்டி இயக்குவதற்கு, வன்முறை, அச்சம், அடிமைப்புத்தி, சிறுமைகள் ஆகிய கீழ்மைகளினின்று விடுபட்டாக வேண்டும். அடிப்படைத் தேவைகளுக்கான வறுமை தொலைய வேண்டும். அறிவியல் முன்னேற்றங்களும், இயந்திரத் தொழில் நுட்ப அறிவும், மொத்த சமுதாயத்துக்கும் ஆக்கத்துக்கும் பயன்படுத்தப்படவேண்டும். புற வளர்ச்சியுடன் ஆக்க ஒளியைத் தூண்டுவதாகவும் இசைய வேண்-டும். இயற்கையை வெல்வதாகக் கருதி அதை விட்டு விலகி, பூமியையே வாழ்வதற்குரியதாக இல்லாமல் நாசமாக்கும் பேராசை முன்னேற்றங்களில் இருந்து திரும்பிப் பார்ப்போம். இந்த மாறு தல்கள், பயன்கள், அடிநிலையிலிருந்து துவங்கி வரவேண்டும். சமத்துவமும் சகோதரத்துவமும், அடிநிலையிலிருந்து இசைந்து வரும்போதுதான் சுதந்திரம் வலிமைமிகக ஆற்றலுடன் மக்கள் சமுதாயத்தை மானுட சமுதாயமாக இணைகக முடியும்.

பொருளாதாரம் சார்ந்து சமத்துவக் கோட்பாட்டை, மேலிருந்து வலிய நெறிப்படுத்துவதனால், எதிர்பார்க்கும் முழுப்-பலனையும் எய்த இயலாது எனபதை அண்மையில் சோவியத் ஒன்றியத்தில் நிகழ்ந்த மாறுதல்கள் உலகுக்கு உணர்த்தி இருக்கின்றன.

எனவே அந்தக் கீழ்க்கோடி மக்களையும் எட்டிப் புத்துணர்வு ஊட்டும் வண்ணம், மகாகவி பாரதியின் குரலை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் செய்வோம். நம் நாடி நரம்புகளில் எல்லாம் புதிய

ஊற்றுப் பாயட்டும். நம்மைச் சூழ்ந்திருக்கும் கலி தொலையட்டும்.

ஒன்றாம் கடவுள்;
உலகிடைத் தோன்றிய மானிடரெல்லாஞ் சோதரர்—
மானுடர் சமத்துவமுடையார் — சுதந்தரஞ் சார்ந்தவர்
குலத்தினும் செயலிலு மனைத்தினு மிக்கணத்தொடு
நீர் யாவருமொன்றே; பிரிவுகள் துடைப்பீர் ! ......
வந்தே மாதரம் !

பாரதி (குருகோவிந்த விஜயம்)

## பயன்பட்ட நூல்கள்


1. பாரதியின் பாடல்கள்.
2. கட்டுரைகள் — *பாரதியர்.*
3. பாரதியும் ஷெல்லியும்
   — *தொ.மு.சி. ரகுநாதன்.*
4. பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி
   — *ராஜம் கிருஷ்ணன்*
5. பகவத் கீதை மொழிபெயர்ப்பு
   — *பாரதி.*
6. Life and Speeches of *Mahatma Gandhi.*
7. Village Swayaraj
   — *M K Gandhi.*
8. Subramania Bharathi - Patriot and Poet
   — *P. Mahadevan.*
9. Keynote Papers & Extended Abstracts, 2nd Congress on Traditional Sciences and Technologis of India.

# 2

# மகாகவி பாரதியின் பொருளாதாரக் கனவு

★
டாக்டர் மா.பா. குருசாமி

''வெறுஞ்சோற்றுக்கோ வந்ததிப் பஞ்சம்''

''இந்த வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந்'' தன்னில் பிறந்து வாழ்ந்தவர் மகாகவி பாரதியார். அன்றைய இந்தியாவில் தன்னலம் பேணி, இழிதொழில் புரிந்து, தாய்த்திருநாட்டின் நலம் மறந்து இருந்தவர்களுக்கிடையில், ''நமக்குத் தொழில் கவிதை நாட்டுக் குழைத்தல் இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்'' என்ற குறிக்கோளை வகுத்துக்கொண்டு ''சொல்லடி சிவசக்தி, எனைச் சுடர்மிகும் அறிவொடு படைத்து-விட்டாய், வல்லமை தாராயோ — இந்த மாநிலம் பயனுற வாழ்-வதற்கு'' என்று தனது வழிபடு தெய்வத்திடம் வரம் கேட்டுப் பாடுபட்டவர் மகாகவி.

அவர் வாழ்ந்தது இன்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு (1982—1921). அப்பொழுது ஆங்கிலேயர்களின் ஆட்சியில் இந்தியா அடிமைப்பட்டிருந்தது அக்காலத்தில் இருந்த புலவர்கள் போன்று மகாகவி பாரதியார் நாட்டின் நடப்புக்களிலிருந்து ஒதுங்கி, இலக்கியமே ''கதி'' என்று கற்பனை உலகில் காலந் தள்ளவில்லை. தனது வாழ்க்கை, ''பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்'' போய்விடக் கூடாதென்பதில் கவனமாக இருந்தவர். அக்கினிக் குஞ்சாய் வாழ்ந்த அவர், அன்றிருந்த நிலைகண்டு நெஞ்சு பொறுக்காமல் பொறுமினார்; குமுறினார். அவர் வெறும் நெட்டை மரமென நின்று புலம்பாமல் நாட்டின் விடுதலை இயக்கத்தில் வீறுகொண்ட சிங்கமெனப் பங்கு பெற்-றார். அதோடு, எதிர்காலத்தில் நமது தாய்த்திருநாடு எப்படித் திகழ வேண்டும் என்பதை எண்ணிப்பார்த்தார். அந்த இலக்கியக் கனவினை என்றும் உள்ள இனிய தமிழில் சிந்தனைக்கு விருந்தாக, கவிதைப் பொங்கலாகப் படைத்து வைத்தார்.

---

* முதல்வர், ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

இப்பொழுது மகாகவியின் நாட்டு நலத்தையும் வளத்தையும் பற்றிய பாடல்களைப் படிக்கின்றபொழுது மூன்று வகையான எண்ணங்கள் எழுகின்றன.

முதலாவதாக, அன்று நமது நாட்டிலிருந்த அவல நிலையை — வாட்டும் வறுமையில் மக்கள் வாடிய நிலையை — உணர்ந்து, அறிந்து உள்ளத்தைத் தொடுகின்ற வகையில் வடித்திருக்கின்ற கவிதை வரிகளைக் கண்டு வியக்கின்றோம்.

இரண்டாவதாக, ''அடிமை வாழ்வகன் றிந்நாட்டார், விடுதலையார்ந்து செல்வம், குடிமையிலுயர்வு, கல்விஞானமும் கூடியோங்கிப் படிமிசைத் தலைமையெய்த'' அவர் கண்ட கனவுகளையும், கூறிய வழிமுறைகளையும் கண்டு பெருமிதம் கொள்கின்றோம்.

மூன்றாவதாக, மகாகவி பாரதியாரின் இலக்கியக் கனவுகள் ஏன் இன்றும் நனவுகளாகாமல் இருக்கின்றனவென்ற சிந்தனை பிறக்கின்றது. இந்த சிந்தனை செயலாக மாற வேண்டுமென்ற ஆவல் துளிர்க்கின்றது.

## நெஞ்சு பொறுக்கா நிலை

பாரத நாடு பழம்பெரும் நாடு. அதில் செந்தமிழ்த் திருநாடு சீரும் சிறப்பும் பெற்ற ஒரு பகுதி. இங்கு உலகில் வேறு எங்கும் இல்லாத விண் முட்டும் மன்னும் இமயமலை. இன்னறு நீர் கங்கை போன்ற பல வற்றாத ஆறுகள் பாய்கின்ற பூமி. ''கன்னலும் தேனும் கனியும் இன்பபலாவும் கதலியும் செந்நெல்லும் நல்கும்'' நாடு இது. ''தோட்டத்திலே மரக் கூட்டத்திலே—கனி ஈட்டத்திலே பயிர் ஊட்டத்திலே, தேட்டத்திலே அடங்காத நிதியின் சிறப்பினிலே உயர்ந்திருந்த நாடு.

பாருக்குள்ளே நல்ல நாடாக இருந்த பாரதநாடு ஆங்கிலேயருக்கு ஆட்பட்டது. வாணிபம் செய்ய வந்த வெள்ளையர்கள் கோடி கோடியாக நமது செல்வத்தைக் கொள்ளை கொண்டு போனார்கள். அவர்களது கொள்ளையின் விளைவாக இங்கு வளம் பெற்றுச் செழித்திருந்த தொழில்கள் வாடிக் கருகி வீழ்ந்தன. நமது நாட்டில் உற்பத்தியான மூலப்பொருட்களும், நமது நஞ்சைகளிலும் புஞ்சைகளிலும் விளைந்த பொருட்களும் இங்கிலாந்திற்குச் சென்றன. அவர்கள் அங்கு ஆலைகளில் உற்பத்தி

செய்த பொருட்களுக்கு நமது தாய்நாடு அங்காடியாயிற்று.

நாளும் நமது செல்வம் கொள்ளை கொண்டு போனதன் விளைவாக இங்கு வாட்டும் வறுமை மக்களைக் கட்டிப் போட்டது. உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி வெற்றர்களாக வாடுகின்ற மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடியது.

நமது நாட்டுத் தொழில்கள் முடங்கியதாலும், உழவுத் தொழிலின் மூலவளம் உறிஞ்சப்பட்டதாலும் இங்கு வேலையில்-லாத் திண்டாட்டம் வேரூன்றியது. பஞ்சமும் பட்டினியும் மக்களை நிழல்களாகத் தொடர்ந்தன. உருக்குலைக்கும் நோய் மக்களின் உறவாயிற்று.

மகாகவி பாரதியார் அன்றிருந்த நிலை கண்டு நெக்குருகி நின்றார். அதனை அருமையான சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றார். அவர்,

''நெஞ்சு பொறுக்கு திலையே — இதை
  நினைந்து நினைந்திடினும் வெறுக்கு திலையே,
கஞ்சி குடிப்பதற் கிலார் — அதன்
  காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே — நிதம்
  பரிதவித்தே உயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின் றாரே — இவர்
  துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே!

எண்ணிலா நோயுடையார் — இவர்
  எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தை கள்போல் — பிறர்
  காட்டிய வழியிற்சென்று மாட்டிக் கொள்வார்,
நண்ணிய பெருங்கலைகள் — பத்து
  நாலாயிரங் கோடி நயந்துநின்ற
புண்ணிய நாட்டினிலே — இவர்
  பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்''

என்று கூறுகின்றபொழுது, பாட்டுக்கொரு புலவரின் நெஞ்ச வேதனையைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

''கஞ்சி குடிப்பதற்கிலார் — அதன் காரணங்கள் இவை யென்னும் அறிவுமிலார்'' என்னும் வரிகளில் மிகத் தெளிவாக வறுமையில் வாடுகின்ற மக்களின் நிலையை விளக்குகின்றார். இந்தக் கருத்து இன்றைக்கும் நூற்றுக்கு நூறு பொருந்துவதைக் காணலாம்.

நமது நாட்டு மக்கள் பஞ்சத்தையும் பட்டினியையும் விதியின் விளைவுகளாக ஏற்றுக் கொண்டவர்கள். ஆதலால், மதியினைப் பயன்படுத்தி பஞ்சம், பட்டினிக்கான காரண காரியங்களை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை.

''மறவன்'' பாட்டில் மகாகவி பாரதியார் உணர்ச்சி வடிவாய் நின்று,

''சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் — வெறுஞ்
சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்?''

என்று கேள்விக்கணை தொடுக்கின்றார். புதுமைப் பித்தன்,

''ஆற்றங் கரையோரம் அணிவயல்கள் மெத்தவுண்டு
சோற்றுக்குப் பஞ்சம் சொல்லி முடியாது''

என்று நடைமுறையில் கண்முன் காணும் முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுவதையும் நாம் இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

### இன்றைய நிலை

மகாகவி பாரதியார் நாட்டில் தாண்டவமாடிய வறுமையைப் பற்றிப் பாடி 75 ஆண்டுகள் ஓடிவிட்டன. அது அடிமைப்பட்டிருந்த இந்தியா. இன்று இந்தியா விடுதலை பெற்ற சுதந்திர நாடு. நாம் விடுதலை பெற்று சுமார் அரை நூற்றாண்டுக் காலம் ஆகப் போகின்றது. ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் தீட்டி, கோடி கோடியாகப் பணத்தைச் செலவிட்டு, பாலைவனமாகிவிட்ட நமது தாய்த்திரு நாட்டைச் சோலை வனமாக்க முயன்றிருக்கின்றோம். இந்த நிலையில் நாட்டு மக்களின் வாழ்வு எப்படி இருக்கின்றது?

''பசுமைப் புரட்சி'' என்று வேளாண்மையில் மாற்றத்தையும், ''வெண்மைப் புரட்சி'' என்று கால்நடையில் மேம்பாட்டையும் ''நீலப்புரட்சி'' என்று கடல் வளத்தைப் பயன்படுத்துவதில் முன்னேற்றத்தையும் கண்டுவிட்டதாக ஒரு பக்கம் அரசு முரசு

கொட்டுகின்றது. மறுபக்கம் வறுமையில் வாடும் மக்களின் ஏக்கப் பெருமூச்சு வெடித்துக் கிளம்புகின்றது.

அடிப்படைத் தேவையான உணவு போதுமான அளவில் கிடைக்காத மக்களை 'வறுமைக் கோட்டின்' (Poverty Line) கீழ் வாழ்கின்ற மக்களெனக் கணக்கிடுகின்றனர். நமது திட்டக் குழுவின் மதிப்பீட்டின்படி, 1972-73 மொத்த மக்கள் தொகையில் 51 5 சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தனர். இவர்களின் எண்ணிக்கை 1987-88இல் 29.9 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. கிராமங்களில் வாழ்பவர்களில் 33.4 சதவிகிதத்தினர் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள். ஆனால் வல்லுநர் குழுவோ மொத்த மக்களில் (1987-88) வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் 39.3 சதவிகிதமென்று கூறுகின்றது. அதாவது இன்றும் பத்துக்கு நான்கு பேருக்கு வயிறு நிறைய மூன்றுவேளை உணவு கிடைக்கவில்லை.

சோற்றுக்கு வந்த பஞ்சம் தொடர்ந்து வருவதற்கு வெளிப்படையான சான்று தமிழக அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்காகச் செயல்படுத்தும் சத்துணவுத் திட்டம்.

''அன்னதானம்'' செய்கின்ற இடங்களில் எல்லாம் முடிவற்ற மக்கள் வரிசை நிற்பதைக் காணலாம். ''இரந்தும் உயிர் வாழ்கின்ற'' இரங்கத்தக்க நிலையிலிருக்கும் மக்களை இன்றும் காண்கின்றோம். பள்ளிக்குச் செல்ல வேண்டிய சின்னஞ் சிறுவர்கள் 'உழைக்கும் பட்டாளமாக' நாடெங்கும் இருப்பதற்குக் காரணம் 'வாட்டும் வறுமை' என்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது.

பாரதி காலத்திற்கும் இன்றைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அன்று கஞ்சி குடிப்பதற்கில்லை என்பதற்கான காரணங்கள் தெரியாமலிருந்தன. இன்று தெரிகின்றன.

நமது திட்டங்களை மதிப்பீடு செய்தவர்கள், ''திட்டங்களின் விளைவாக செல்வர்கள் மேலும் செல்வர்களாகி இருக்கின்றனர். ஏழைகள் மேலும் ஏழைகளாகி இருக்கின்றனர்'' என்று கூறுகின்றனர். பலர் உழைத்து உருவாக்குகின்ற செல்வமும் வருவாயும், சிலரின் கைக்கே சென்றுவிடுவதால் நாட்டு மக்களின் வாழ்வில் எதிர்பார்த்த வளம் வரவில்லை.

பாரதியார் வாழ்ந்தபோது நமது நாட்டில் முப்பது கோடி மக்கள் இருந்தனர். பாகிஷ்தான் பிரிந்துவிட்டது. இருப்பினும் 1991இல் இந்திய மக்கள் தொகை 84 கோடி. இப்பொழுது 100 கோடியை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். எவ்வளவோ அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் எல்லா மக்களுக்கும் வேலையும் சோறும் நம்மால் கொடுக்க முடியவில்லை.

மற்றுமொரு வேறுபாட்டையும் இங்கு சுட்டிக் காட்டலாம். மகாகவியின் காலத்தில் நமது நாட்டு மக்களைச் சுரண்டியவர் பெரும்பாலும் வெள்ளையர்களும், அவர்களது கைக்கூலிகளாக இருந்த இந்திய நிலப்பிரபுக்களும் முதலாளிகளும். இப்பொழுது சுதந்திர இந்தியாவில் வெள்ளையர்கள் இருந்த இடத்தில் நமது ஆட்சியாளர்கள் இருக்கின்றனர். அடிப்படை அமைப்பு முறை மாறவில்லை. ஆதலால், முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் அரசியல் அதிகாரம் பெற்றவர்களும், ''எரிகின்ற வீட்டில் பிடுங்கியது ஆதாயம்'' என்பது போல் மக்களின் செல்வத்தை அள்ளிக் கொள்கின்றனர்.

நகரங்களை விட கிராமங்களில் வறுமை மிகுதியாக இருக்கின்றது. காரணம், அண்ணல் காந்தியடிகள் சுட்டிக் காட்டியதைப் போல, கிராமங்களை நகரங்கள் தொடர்ந்து சுரண்டிக் கொண்டிருக்கின்றன.

**இலக்கியக் கனவு**

மகாகவி பாரதியாரின் தனிச் சிறப்பு அவர் ஓர் இலக்கிய-இலட்சிய-கனவாளர். துன்பத்தைக் கண்டு சோர்ந்து போகாத, துடித்தெழுகின்ற போர்க்குணம் கொண்டவர். எதிர்காலத்தை நம்பிக்கையோடு பார்க்கின்ற தொலைநோக்குச் சிந்தனையாளர். ஆதலால் சோற்றுக்கு வந்த பஞ்சத்தைக் கண்டு துவண்டு போகாமல், அடிமை நாட்டிலேயே ''ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று'' கற்பனையில் — கனவில் ஆடி மகிழ்ந்த கவிஞர். எப்படிப்பட்ட சமுதாயத்தை இந்தியாவில் படைக்க வேண்டுமென்பதையும் பறையறைந்து கூறுகின்றார்.

மகாகவியின் இலட்சிய சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுவது ''பாரத சமுதாயம்'' என்ற தலைப்பிட்டு அவர் தந்த பாடல். எப்படிப்பட்ட பாரத சமுதாயம் அமைய வேண்டுமென்பதைச் சில சொற்களில் சித்திரித்துக் காட்டுகின்றார். அவர்,

''முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை''

என்று கூறுகின்ற பொழுது, அவரது கவியுள்ளக் கிடக்கையைக் காண்கின்றோம். இதுவரை உலகில் தோன்றாத, புதுமையான ஓர் ஒப்பற்ற உயர்வான, எல்லோரும் இன்புற்றிருக்கின்ற சமு-தாயத்தைப் படைக்க வேண்டுமென்பது கவிஞரின் இலட்சியக் கனவு.

இன்றைய சமுதாயத்தில், ''மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம்,'' ''மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை'', இருக்கின்றன. இந்த ''புலனில் வாழ்க்கை'' இருக்-கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றார். ஆதலால் அவர் ஒரே ஒரு விதிதான் செய்ய வேண்டுமென்று உரத்த குரலில் உரைக்கின்றார்.

''இனியொரு விதிசெய் வோம் — அதை
எந்த நாளும் காப்போம்;
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம்''

என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

மகாகவி பாரதியார் ஒரு 'நல சமுதாயத்திற்கு' (Welfare Society) அளவுகோலாக வைத்துக் கொண்டது உண்ண உணவு தான். உணவின் அருமையை உணர்ந்தவர் பாரதியார். இதனை மிகத் தெளிவாக, ''இவ்வுலக இன்பங்கள், பெருமைகள் எல்லா-வற்றிற்கும் அஸ்திவார பலம் உணவு. உணவு இல்லாத இடத்தில் அவை நிற்க வழியில்லை. மேலும் வெறுமே உயிர் தரித்திருப்-பதற்குக்கூட ஆகாரம் அவசியமாயிருக்கிறது. சோறில்லா-விட்டால் உயிரில்லை. இது கொண்டே, பெரும்பான்மையோருக்கு அன்றாடம் உணவு கிடைக்குமென்ற உறுதியில்லாமலும் பலருக்கு உணவே கிடையாதென்பது உறுதியாகவும் ஏற்படுத்தி வைக்கும் வறுமையை இத்தனை பெரிய கொடும் பகையாகக் கருதி மனிதர்-கள் அஞ்சுகின்றனர்'' (பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், 1977, ப. 376) என்று அவர் கூறியிருப்பதைப் பார்க்கலாம்.

மகாகவி தனது 'முரசு'ப் பாட்டில், ஊருக்கு நல்லதாக, தனக்குத் தெரிந்த உண்மையாக.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும் — இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து — இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்''

என்று கூறுகின்றார். மகாகவி பாரதியார் கனவு கண்ட உலகில் 'ஏழை என்றும் அடிமை என்றும்' எவரும் இருக்கமாட்டார்கள். அங்கு பொருளாதாரச் சமத்துவம் இருக்கும். இதனை,

''எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''

என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

## வழிமுறை

மகாகவி பாரதியார் காண விரும்பிய, கனவாகக் கண்ட பொருளாதார மேன்மையை மட்டும் சொல்லிவிட்டு நின்றுவிட-வில்லை. அதற்கான வழிமுறையையும் எண்ணிப்பார்த்துக் கூறியது அவரது தனிச் சிறப்பாகும்.

''உலகத் துன்பங்கள் அனைத்திலும் கொடிதான இந்த ஏழ்மைத் துன்பத்தைச் சமாதான நெறியாலும் மாற்றக்கூடிய உபாயமொன்றை நாம் கண்டுபிடித்து நடத்துவோமானால் அதினின்றும் நமது நாடு பயனுறுவது மட்டுமேயன்றி, உலகத்-தாரெல்லாரும் நம்முடைய வழியை அனுஷ்டித்து நன்மை அடைவார்கள்'' (ப. 386) என்று கூறியது சிந்தனைக்குரியது. இதனைத்தான் கவிதையில், ''எல்லாரும் அமரநிலை எய்தும் நன்-முறையை இந்தியா உலகிற் களிக்கும்'' என்று கூறினார போலும்.

நமது நாட்டு மக்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு,

''திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே''

என்று வழி காட்டுகின்றார். சிலர் மட்டும் 'தேர்ந்த கல்வி ஞானம்' பெற்றால், அதனை ஒட்டி ஏற்றத் தாழ்வும், சுரண்டலும் இருக்கும். எல்லோருக்கும் அறிவு கிடைக்கின்ற பொழுது ஆற்றல் பெருகும். செய்கின்ற தொழில் யாவருக்கும் தீமை விளைவிக்காத தொழிலாக இருக்கவேண்டும்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து, வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்து'' வாழ்கின்ற சமுதாயத்தில் மக்கள் அரும்பும் வியர்வை உதிர்த்து ஆயிரம் தொழில்கள் செய்வார்கள்.

மகாகவி பாரதியார் நமது தாய்த்திரு நாடு எப்படி இருக்க வேண்டுமென்று கண்ட கனவினை, 'பாரத தேசம்' பாடலில் காணலாம். நமது நாட்டில் இயற்கை தந்த வற்றாத வளநதிகளை முறையாகப் பயன்படுத்திப் பயிர் செய்தால் சோற்றுக்கும் பஞ்சம் இருக்காது. இதனை,

''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்''

என்கின்றார். இன்று, காவிரி நீரைப் பயன்படுத்தித் தமிழகத்தில் கூடப் பயிர் செய்ய இயலாமல் பாரதம் இருக்கின்ற இரங்கத்தக்க நிலையினைப் பார்க்கின்றபொழுது கவியின் கனவின் மேன்மை விளங்குகின்றது.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் ஊசியைக்கூட இறக்குமதி செய்கின்ற இழிநிலை இருந்தது. உலகம் போற்றுகின்ற வகையில் துணிகள் நெய்த நமது தாயகம், மானம் காக்கும் உடைக்கு அயல் நாட்டுத் துணியை நம்பியிருந்தது. அந்த நிலையை மாற்றாமல் அவனியில் நாம் தலைநிமிர்ந்து நிற்க இயலாதென்பதை உணர்ந்தார் பாரதியார். ஆதலால்தான,

''பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்''

என்றும்,

''ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள்வைப் போம்கல் விச் சாலைகள் வைப்போம்''

என்றும், இன்னும் பல தொழில்களைப் பட்டியலிட்டும் காட்டி, பட்டியல் நீண்டதால், ''உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்'' என்றும் கூறி முடிக்கின்றார்.

## நாலிலே இரண்டு பலித்திடல்

மகாகவி கண்ட பொருளாதாரக் கனவுகள் முற்றிலும் பொய்யாய், பழங்கனவாய், கற்பனையாய் போய்விடவில்லை. ஒன்றுக்குப் பாதி செயல்பட்டிருக்கின்றது.

பாரதியார் கனவு கண்ட வளர்ச்சி உழவிலும் தொழில்களிலும் வந்திருக்கின்றது. நாடு விடுதலை பெற்ற பிறகு ஓரளவு அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றோம். நமது நாட்டின் நீர்வளத்தையும் நிலவளத்தையும் முழுமையாக இல்லாவிட்டாலும் பெருமளவு பயன்படுத்துகின்றோம்.

உழவுத் தொழில் மேம்பட்டிருக்கின்றது. 1951 இல் நமது நாட்டின் உணவு உற்பத்தி 57.6 மில்லியன் டன். 1992—93 இல் உணவு உற்பத்தி 191.6 மில்லியன் டன். ஆனால் அந்த ஆண்டு நமது நாட்டில் இறக்குமதியான உணவுப் பொருட்களின் மதிப்பு ரூ. 39 கோடி. அதாவது உணவில் தன்னிறைவு பெறவில்லை.

வேளாண்மைப் புரட்சி நடந்துவிட்டதாக ஒரு பக்கம் பெருமைப்படுகின்றோம். ஆனால் உழுதுண்டு வாழ்பவர்களின் நிலை மாறவில்லை. பாரதியார் புரட்சிக்கு முந்திய ருஷியாவில்,

''உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை;
பிணிகள்பல வுண்டு, பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்களுண்டு''

என்று கூறியது இன்றைய இந்தியாவுக்குப் பொருத்தமாக இருக்கின்றது. எதனால்?

கிராம இந்தியாவின் அடிப்படை அமைப்பு முறை மாறவில்லை. பாரதியார் காலத்து ஜமீன்தார்கள் இன்றில்லை. ஆனால் நிலவுடைமை அமைப்பு முறையை மாறாமல் கட்டிக் காத்து வருகின்றோம். நமது நாட்டு மக்களில் 75 சதவிகிதத்தினர் இன்றும் கிராமங்களில் வாழ்கின்றனர். இவர்களின் முதன்மைத் தொழில் உழவுத் தொழில். கிராம மக்களில் மூன்றில் ஒரு பங்கின-

ருக்கு நிலம் இல்லை. நிலம் வைத்திருப்பவர்களிலும் 70 சதவிகிதம் பேரிடம் 2.47 ஏக்கருக்கும் குறைவாகவே நிலம் உள்ளது. மொத்த நிலத்தில் சுமார் 40 சதவிகித நிலம் மேல்மட்டத்தில் உள்ள நிலக்கிழார்களின் கையிலேயே இருக்கின்றது.

''உழுபவனுக்கு நிலம் சொந்தமாக இருக்க வேண்டும்'' என்பது இலட்சியம். இதற்காக நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தோம். நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றினோம். அண்ணல் காந்தியடிகளின் வழியில் அறமுனிவர் வினோபா பாவே நிலக்கொடை (பூமிதான) இயக்கம் நடத்தினார். இவை எல்லாம் நடந்தாலும், நிலமற்ற உழவர்களும், உழுது பயிர் செய்யாத நிலக்கிழார்களும் இரண்டு மரபு வழி இனங்களாக இன்றும் கிராமங்களில் உள்ளனர்.

மகாகவி பாரதியார் 'கடையம்' கிராமத்து நிலக்கிழார்கள், ''பூமி எல்லோருக்கும் பொதுவான தாய் போலாகும். அதில் நாங்கள் மாத்திரம் உரிமை கொண்டாடுதல் அநியாயம் என்று எங்களுக்கு அர்த்தமாகின்றது'' என்று உணர்ந்து, ''தொழில் நிர்வாக சங்கம்'' ஒன்றை அமைத்து, எல்லோரும் சேர்ந்து ஊருக்கு வேண்டிய உணவையும் பொருட்களையும் உற்பத்தி செய்கின்ற உழவையும் பிற தொழில்களையும் செய்து, எல்லோரும் தேவைக்கேற்பப் பெற்று வாழ்கின்ற நிலையை உருவாக்க உறுதி கொள்வதாகக் கற்பனை செய்து பார்த்தார். இதுதான் வினோபா பாவே கண்ட கனவும் என்பதைச் சுட்டிக்காட்டலாம்.

நிலவுடைமை அமைப்பு முறையை மாற்றாததால் உழைப்பின் பலன் எல்லோருக்கும் கிடைக்கவில்லை, ஆதலால் இன்றும் சோற்றுக்கு வந்த பஞ்சம் முற்றிலும் போகவில்லை.

தொழில்களின் வளர்ச்சியிலும் பெருமளவு மகாகவியின் கனவு நிறைவேறி வருகின்றது. இதுவரை நமது நாட்டில் நிறைவேற்றப் பெற்றிருக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் நாடெங்கும் மிகப்பெரிய கனரகத் தொழில்களையும், எண்ணற்ற ஆலைகளையும் அமைத்திருக்கின்றோம். கிராமங்களை விட நகரங்களில் மிகுதியாகத் தொழில்களை நிறுவியிருக்கின்றோம். நாட்டு வருவாய் 1950-51ல் ரூ 40,454 கோடியாக இருந்தது 1991-92ல் ரூ. 1,86,135 கோடியாகக் கூடியுள்ளது.

இவ்வளவு வளர்ச்சி கண்ட போதிலும் வறுமை ஒழியவில்லை. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் தொடங்கிய பொழுது (1951) நமது நாட்டில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 33 இலட்சம். நாம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடித்த பொழுது (1990) வேலை இல்லாமல் இருந்தவர்கள் 1.10 கோடிப் பேர். எதனால் இந்த நிலை?

பாரதியார் காலத்திலிருந்த முதலாளித்துவ அமைப்பு முறை இன்னும் மாறவில்லை. மூலதனம் உடையவர்களுக்குத்தான் தொழில்களினால் கிடைக்கின்ற பலன்கள் போகின்றன.

வளத்தோடு வறுமையும் வளர்ந்து வருகின்ற, சிலர் வாழ பலர் உழைக்கின்ற, வாடுகின்ற பொருளாதார முரண்பாட்டிற்கான காரணத்தை அன்றே மகாகவி பாரதியார் கூறியிருக்கின்றார், அவர்,

''வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்! — இங்கு
வாழும் மனிதரெல் லோருக்கும்;
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்! — பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்''

என்று கூறுவதை எண்ணிப்பார்த்தால் உண்மை தெரியும்.

நமது நாட்டிலிருக்கும் இயற்கை வளங்களும் மனித வளங்களும் இணைய நமக்கு வேண்டியவற்றை எல்லாம் உற்பத்தி செய்ய இயல்கின்றது. ஆனால் இல்லாமையை இல்லாமல் செய்ய இயலவில்லை. ஏனென்றால், ''பிறர் பங்கைத் திருடுவதை'' சட்டத்தின் பாதுகாப்போடு தொடர்ந்து செய்கின்றவர்கள் இருக்கின்றனர்.

இந்த இழிநிலைக்குக் காரணகர்த்தாக்கள் ''அறிவுடையவர்கள்'' என்பது பாரதியார் கருத்து. இதனை அவர், ''ஏழைகளே இல்லாமற் செய்வது உசிதம். ஒரு வயிற்று ஜீவனத்துக்கு வழியில்லாமல் யாருமே இருக்கலாகாது. அறிவுடையவர்கள் இப்போது பெரும்பாலும் அந்த அறிவை ஏழைகளை நசுக்குவதிலும் கொள்ளையிடுவதிலும் உபயோகப்படுத்துகின்றார்கள்'' (ப. 373 — 374) என்கின்றார். அவரது புதிய கோணங்கி,

''தரித்திரம் போகுது; செல்வம் வருகுது
படிப்பு வளருது; பாவம் தொலையுது
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான், ஐயோவென்று போவான்''

என்று கூறுவதுதான் இன்றைய பொருளாதார நிகழ்வுகளில் உண்மை.

புதியதோர் உலகு

இன்றுள்ள நிலை இனியும் தொடருமென்றால் எதிர்காலம் இருள்மயமானதாக இருக்கும். நாம் விடுதலை பெற்றதன் பயன் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். இது நாம் செயல்பட வேண்டிய காலம்.

நமது சமுதாய பொருளாதார, அரசியல் அடிப்படைகளை மாற்றியாக வேண்டும். வெள்ளையர்கள் இருந்த இடத்தில் நம்மவர்கள் சிலர் இருந்து கொண்டு சுரண்டி வாழும் அமைப்பு முறையை மாற்றுவது இன்றைய தலைமுறையின் பொறுப்பாகும்.

தன்னலத்தை இழக்காமல் பொதுநலத்தை வளர்க்க முடியாது. இதற்குத் தியாக மனப்பான்மை வேண்டும். கற்றவர்கள் அணிதிரண்டு முன்வந்தால் அடிப்படையை மாற்ற முடியும்.

''இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி இனி மண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்''

என்று பாரதியின் சொற்களைக் கூறி எழுவோம்; நாம் எல்லோரும் இன்புற்று வாழ்வோம்!

# 3

# கவிதையில் பயன்பாட்டுக் கொள்கை

★

டாக்டர் அ. பிச்சை

"பாட்டுத் திறத்தாலே வையத்தைப்
பாலித்திட வேண்டும்"

**முன்னுரை**

மகாகவி பாரதி நூற்றாண்டு விழாக் கண்ட யுகக்கவிஞன். சின்னக் குழந்தைகளுக்குச் சிங்காரப் பாட்டிசைத்தவன்; வயது வந்தவர்களுக்குப் பல்வேறு வர்ணமெட்டுக்களில் — நெருப்புச் சுவைக் குரலில் ஆசை ததும்பி அமுதூறப் பாடியவன். இருபதாம் நூற்றாண்டிற்கும் இனிவரும் நூற்றாண்டுக்கும் புதிய அறம்பாட வந்த மறப்புலவன். பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலிடத்திடச் செய்ய வந்த பாவலன். பாரதியின் கவிதைகளில் 'பயன் பாட்டுக் கொள்கை' பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**1. பாட்டும் கவிதையும்**

1.1 பாரதியார் பாட்டு அல்லது கவிதையின் இயல்புகளைப் பற்றித் தனியே கட்டுரை எழுதவில்லை. கவிதை, கட்டுரை ஆகியவற்றில் சிதறிக் கிடக்கும் சிந்தனைகளைத் தொகுத்து பாரதியின் கவிதைக் கொள்கையை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியுள்ளது. அவரது படைப்புக்களில் பாட்டு, பாடல், கவி, கவிதை, காவியம், வசன கவிதை, செய்யுள், கானம், கீதம் ஆகிய சொற்களைக் கையாளுகின்றார். பெரும்பாலான இடங்களில் இவை ஒரு பொருள் குறித்த சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாட்டு, கவிதை ஆகிய இரண்டு சொற்களைத்தான் அடிக்கடி கையாளுகின்றார். மற்ற சொற்களை இரண்டு அல்லது மூன்று தடவைகளுக்கு மேல் பயன்படுத்தவில்லை. செய்யுள் என்பது பாட்டு, கவிதை என்னும் இரண்டையும் குறிக்க வருகின்றது. நாடகத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'நாடகச் செய்யுள்' எனச் சுட்டுகின்றார் (சக்தி-1). கற்பனையழகும் கருத்தழகும் கொண்ட-

---

* தமிழ்த்துறை, காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகம்.

மைகின்ற 'வசன கவிதை' பாட்டுக்கு எதிர்நிலையில் அமைந்துள்ளது.

1.2. பாட்டு என்பது இசையோடு பாடப்படுவது என்பதில் பாரதியார் அழுத்தமான கருத்துடையவர். 'கவிதை என்பது அழகின் ஓசைநயப் படைப்பு' (Poetry is the rhythmical creation of beauty) என்பர் எட்கர் ஆலன் போ.

(அ) பாட்டைத் திறப்பது பண்ணாலே (அம்.கண்.பா. 1)

(ஆ) இன்னிசைப் பாட்டினிலே யானும் பரவசமாய் (கண். தாய் — 6)

(இ) பாட்டும் சுதியும் ஒன்று கலந்திடுங்கால் (கண். காதலி — 3)

(ஈ) ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ? (குயில்பாட்டு)

'இசையானது பற்பலவிதமான அளவுக்குட்பட்டு, எழுத்து, அசை, சீர், தளை, தொடை முதலிய இலக்ஷணங்கள் அமைந்துள்ள பாடல்கள் எனும் செய்யுட்களாக விளங்கி நிற்பதே' என்று விளக்கியுள்ளார். மேலும் அவர் 'பொருளிலும் ஓசையிலும் ரஸம் கலக்காத பாட்டு இனிமேல் தமிழ் நாட்டிலே வழங்கலாகாது' என்று குறிப்பிட்டுள்ளார். தாளத்திற்குப் பாட்டு எழுதக்கூடாது (1964:262) என்று எச்சரித்துள்ளார். பாட்டு என்னும் கலை வடிவத்தில் பண், பொருள், ரஸம் ஆகிய மூன்றும் பொருந்தமுற அமைய வேண்டும் என்பதே பாரதியாரின் பாட்டுக் கொள்கையாகும்.

(அ) சுவை
நண்ணும் பாட்டினோடும் தாளம் — மிக
நன்றா வுளத்தழுந்தல் வேண்டும் (யோக சித்தி)

(ஆ) குளிர்ச்சுவைப் பாட்டிசைத்தே (வேள்விப்பா—4)

(இ) பாடுமோ அமுதக்கானல் பாட்டு (வேய்ங்குழல் — 4)

(ஈ) பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பர் (குயில்பாட்டு)

பாட்டிற்குப் பாரதியார் கொடுக்கும் அடைமொழிகள் நம் கவனத்திற்குரிளவை. மோகனப் பாட்டு, சிங்காரப் பாட்டு,

பேரின்பப் பாட்டு, இன்னிசைப் பாட்டு, குளிர் சுவைப் பாட்டு, அமுதக்கனல் பாட்டு என இன்னிசைத் தீம்பாடலைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். பாட்டு மீது அவர் கொண்டிருந்த ஈடுபாட்டைப் பாடலுக்குத் தலைப்பிடுவதிலேயே அறியலாம். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, முருகன் பாட்டு, வேலன் பாட்டு, கிளிப்பாட்டு, சந்திரமதிப் பாட்டு, கோவிந்தன் பாட்டு, காளிப்பாட்டு, பண்டாரப் பாட்டு, பாப்பாப் பாட்டு, ராதைப் பாட்டு, வள்ளிப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, அம்மாக்கண்ணு பாட்டு, மறவன் பாட்டு, காதற் பாட்டு, நவராத்திரிப் பாட்டு, யாகப் பாட்டு, வேள்விப் பாட்டு போன்ற பாட்டுக்களைக் கூறலாம்.

1.3. கவிதையின் உயிர் 'ரஸம்' (சுவை/உணர்ச்சி) என்று பாரதியார் கருதுகின்றார். ரஸ உணர்ச்சியிலே உள்ளத்தை முழுவதும் ஈடுபடுத்தக்கூடிய சிலர் கவிதை, பாட்டு, சித்திரம் முதலிய தெய்வீகக் கலைகளிலே சிறப்படைகிறார்கள். (1964 : 256-7) என்று கூறுவதிலிருந்து உணரலாம். பிறர் துன்பத்தைக் காணும் போது தனது துன்பம் போல எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவராயின் முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான் என்றும், பிந்தியவன் பதங்களைப் பின்னுவான் என்றும் வேறுபடுத்திச் சொல்லி (1964 : 257) நல்ல கவிதைக்கு ஆதாரம் ரஸம் என விளக்கியுள்ளார்.

கள்ளையும் தீயையும் சேர்த்து — நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப் புலவோர்கள் — பல
தீஞ்சுவைக் காவியம் செய்துகொடுத்தார்
(தமிழ்த்தாய்-3)

இப்பாடலில் 'கள்ளும் தீயும்' என்பன சுவையைக் குறியீட்டுச் சொற்களில் (symbols) உணர்த்துகின்றன. காற்று, வானவெளி ஆகிய சொற்களும் கவிதைக்குரிய சந்தத்தையும் கற்பனையையும் குறியீட்டுச் சொற்களால் புலப்படுத்துகின்றன. ஆகவே கவிதையில் முன்னுரிமை—முதலிடம் பெறுவது சுவை அல்லது உணர்ச்சி ஆகும். 'உணர்வின் வல்லோர் செய்வன செய்யுள்' என்னும் நன்னூலாரின் கருத்தும் இவண் ஒப்புநோக்கத்தக்கது.

பாட்டைக் காட்டிலும் கவிதை ஒருபடி உயர்ந்ததாகப் பாரதியார் எண்ணுகின்றார்.

(அ) பாட்டுக் கலந்திடவே — அங்கேயொரு
பத்தினி வேணும் — எங்கள்
கூட்டுக் களியினிலே — கவிதைகள்
கொண்டு தரவேணும் (காணிநிலம்—3)

(ஆ) கவிதையில்
மெய்ப்பொருள் ஆய்வதில் மிஞ்சிய விழைவும்
(கண். சீடன்)

மெய்ப்பொருளைப் பூடகமாக வைத்துக் கற்றோர்களால் புனையப்படுவது கவிதை என்பதை அறியலாம். பாரதியாரின் குயில்பாட்டு இவ்விலக்கணத்திற்கு முற்றிலும் பொருத்தமான சான்றாகும். 'நலுங்குப் பாட்டு, கும்மி... முதலியவற்றில்கூடச் சில இடங்களில் முத்துப்போல வார்த்தைகள் அகப்படும். தொழிற் பெண்களின் பாட்டு மிகவும் ரசமானது ஒன்றுக்குப் பாதி நல்ல கவிதை' என்றும், 'கவிதை தேட்டமுடையோர் நமது பெண்களின் பாட்டைத் தேடிப் பார்த்தால் சிற்சிலவிடங்களில் நல்ல கவிதை கிடைக்கும்' என்றும் (1964:274) கூறுகின்றார். இவற்றிலிருந்து பாரதியார் பாட்டிலிருந்து கவிதையை வேறுபடுத்திக் காண்பதை உணரலாம். ஆகவே கவிதை பாட்டைவிட மேலானது.

ஜப்பானியக் கவிதைகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' கவிதைக்குரிய பண்பாக எடுத்துரைத்துள்ளார். இதனாலேயே திருக்குறளையும் ஆத்தி-சூடியையும் பாராட்டிக் கூறுகின்றார். ஆங்கிலப் புலவர்கள் செறிவைக் கவிதையின் உயிராகக் (Brevity is the soul of poetry) கருதுகிறார்கள் என்பதும் இவண் நினைக்கத்தக்கது. பாரதியார் 'தீஞ்சொற் கவிதை' எனக் கூறுவதும் கவிதையில் சொல்லாட்சி சிறப்பாக அமைய வேண்டும் என்பதைச் சுட்டிக்-காட்டுகின்னது,

பாட்டு, கவிதை ஆகிய இரண்டிற்கும் உணர்ச்சி (ரஸம்) பொதுவான கூறாகும். இரண்டும் பாமரர்க்கும் படித்தவர்க்கும் இன்பம் வழங்க வேண்டும்; அறிவூட்டல் செய்ய வேண்டும். பாட்-டிலே பண்ணின் பொலிவைக் கேட்கலாம். கவிதையிலே கற்பனை-யின் தர்சனம் காணலாம். கவிதையிலே குறியீடு சிறப்பாக இடம்

பெறுகின்றது. இதுவே பாரதியார் பாட்டு, கவிதை என்னும் இரண்டிற்கும் இடையே காணும் நுட்ப வேறுபாடு.

1.4. இசை, கற்பனை, வடிவம் ஆகியவற்றைக் காட்டிலும் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாரதியார் வசனகவிதைகள் எழுதியுள்ளார். இன்பம் (7), ஞாயிறு (13), சக்தி (8), காற்று (15), கடல் (2) ஆகிய பொருள்களில் நாற்பத்தைந்து வசன கவிதைகளைப் படைத்துள்ளார். இவை யாவும் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மனின் 'புல்லின் இதழ்கள்' என்னும் கவிதைத் தொகுப்பின் தாக்கத்தினால் எழுதப்பட்டவை எனத் திறனாய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். ''முக்கியமாக, இரண்டு கருத்துக்களை அடிநாதமாக வசனக் கவிதைகள் கொண்டுள்ளன. இரண்டுமே பராசக்தியின் வடிவங்களே. பராசக்தி என்பது பாரதிக்கு எல்லாமாய் விளங்கும் இவ்வுலகின் அழகிய ஆற்றல். இந்த ஆற்றலே தெய்வ ஆற்றல் மனோசக்தி, மனிதசக்தி'' என்று துரை. சீனிச்சாமி பாரதியாரின் வசன கவிதைகளை விளக்குகின்றார் (1982 : 156).

பாரதியார் இன்னிசைப் பாட்டிலும் தீஞ்சுவைக் கவிதைகளிலும் புதிய சோதனை முயற்சிகளை மேற்கொண்டதைப் போலவே வசன கவிதையிலும் புதுநெறி காட்டினார். புதுக்கவிதை தோன்றுவதற்கு இவரது வசன கவிதையே ஆதாரமாக அமைந்தது. பிச்சமூர்த்தி முப்பதுக்களில் புதுக்கவிதை எழுதுவதற்கு அடிப்படையாக இருந்தவை பாரதியின் வசன கவிதைகளே. பிச்சமூர்த்தியின் ஆரம்பகால வசன கவிதைகள் அறுபதுக்களில் எழுத்துவின் மூலமாகப் புதுக்கவிதைகளைப் படைக்கத் தூண்டின. எழுபதுக்களில் புதிய பரிமாணத்துடன்—சமூகப் பிரக்ஞையுடன் வானம்பாடிகள் மூலமாகப் புதுக்கவிதை புதுப் பொலிவைப் பெற்றது.

பாரதியாரின் வசன கவிதை மரபைக் கலைஞர் கருணாநிதி, கண்ணதாசன், என்.ஆர். தாசன் ஆகியோர் தனிப்பிரிவாகவே வளர்த்து வந்துள்ளனர். என்.ஆர். தாசன் 'சொற்கோலங்கள்' என்னும் பெயரில் பல தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். உரை நடையின் நெகிழ்ச்சியான போக்கை—கருத்துக்குவியல்களின் தன்மையை இத்தகைய வசன கவிதைகளில் காணலாம். ஆகவே,

பாரதியார் வசன கவிதைக்கும் புதுக் கவிதைக்கும் கால்கோளிட்டுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. பயன்பாட்டுக் கொள்கை

2.1. முப்பத்து நான்கு உறுப்புக்களால் ஆக்கப்படுவது செய்யுள் என்று எடுத்துரைத்த தொல்காப்பியர் 'பயன்' என்பதையும் ஓர் உறுப்பாகச் சேர்த்துக் கூறியுள்ளார்.

இதுநனி பயக்கும் இதனான் என்னும்
தொகைநிலைக் கிளவு பயனெப் படுமே (செய். 195)

இந்நூற்பாவை விளக்கும் பேராசிரியர், 'பயன் என்பது சொல்லிய பொருளால் பிரிதொன்று பயப்பச் செய்தல்' என்பர். தொல்காப்பியர் அன்பொடு புணர்ந்த ஐந்திணைப் பாட்டு 'இன்பம், பொருள், அறம்' ஆகியவற்றைக் கொண்டு பாடப் பெறும் என்று கூறுகின்றார் (தொல். கள. 1). தண்டியும் பவணந்தியாரும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களை நாலால் அடையும் பயன்கள் என்று வடநூல் மரபைத் தழுவிக் குறிப்பிட்டுள்ளார்கள். பாரதியார் தம் கட்டுரை ஒன்றில் (1964 : 169) நான்கு உறுதிப் பொருட்களையும் விரிவாகக் கூறியுள்ளார். ''பண்பாடு, சமயம், ஆழ்ந்த கருத்துக்களைத் தருதல், வாழ்வின் நன்மைகளை மிகுதிப்படுத்துதல் என்ற இவை எல்லாம் கவிதையின் பயன்களாம் இவை இல்லாவிடில் கவிதை என்பது பயனற்ற ஒலிக் கூட்டமாகவே நின்றுவிடும்'' என்னும் திறனாய்வாளர் ஐ.ஏ. ரிச்சர்ட்ஸின் கருத்து இங்கு ஒப்பிட்டு நினைக்கத்தக்கது (1989 : 326). பயன்வழிக் கொள்கைத் திறனாய்வாளன் இலக்கியத்தின் பயன்களை விரிவாகவும் நுணுக்கமாகவும் கவனத்திற் கொள்கின்றான் என்று க. கைலாசபதி கூறுவர் (1976 : 93).

2.2. கவிதை படிப்போருக்கு என்ன விளைவுகளை, பயன்களைத் தருகின்றது என ஆராயப்பட வேண்டிய ஒன்று. பாட்டின் கூறுகளாகிய பண்ணும் ரஸமும் இன்பத்தை வழங்குவன என்கிறார் பாரதி. கும்மிப் பாட்டு முதலிய பெண்களுடைய பாட்டெல்லாம் மிகவும் இன்பமான வர்ணமெட்டு. தமிழர்களின் தாய், அக்காள், தங்கை, காதலி முதலிய இவர்கள் பாடும் பாட்டு மறக்கக்கூடிய இன்பமா? (1964 : 262) என்று வினவுகின்றார்.

(அ) பண்ணில் இசைத்தவ வொலிகள் அனைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம் (நிலாவும் வான்மீனும்)

(ஆ) சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்
(பாரததேசம் — 5)

(இ) பண்ணுசுதி நீயெனக்கு
பாட்டினிமை நானுனக்கு (கண். காதலி-4)

எனவே, பாட்டின் இனிமையால் மகிழ்ச்சி உண்டாகிறது; லட்சுமி கடாட்சம் உண்டாகிறது; உபசாந்தி பிறக்கின்றது என்று கருத்-துரைக்கின்றார். பாட்டினால் மகிழ்ச்சியும் சாந்தமும் மட்டுமின்றிப் பேரின்பமும் கிட்டுவதாகக் கூறுகின்றார்.

(அ) பாட்டுப் பாடல் சிவக்களி எய்துதல் (யோகி-2)

(ஆ) பாட்டினிலே வந்த களியே சக்தி (சக்தி)

பாட்டினால் விளையும் இன்பமும் இறை பத்தியினால் கிட்டும் பேரின்பமும் ஒன்று என்பது பாரதியாரின் கருத்து. நான்கு புருஷார்த்தங்களை விளக்குமிடத்து. இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸ வஸ்துகளை அனுபவிப்பது. இவ்வின்பங்களை எல்லாம். தமிழா உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக (1964 : 170) என்று வாழ்த்துகின்றார்.

2.3. ‘உண்மையான கவிதை அருமையான திரவியம். அதனால் உலகம் சேமத்தை அடைகின்றது. எந்த நாட்டில் புதிய மகாகவி தோன்றுகின்றானோ அந்த நாடு மகா பாக்கியம் உடையது. தமிழ் நாட்டிலே கவிதையின் புகழ் ஏறுக’ (1964 : 239) என்று கவிதையின் சிறப்பை — பயனைச் சொல்கின்றார்.

‘சிங்க மராட்டியர் தம்கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்’

என மாநிலங்களுக்குள் மாற்றத்தக்க செல்வங்களுள் ஒன்றாகக் கவிதையைக் கருதுகின்றார். கவிதை ‘கொள்ளை இன்பத்தை’ வழங்குவது மட்டுமின்றி, ‘என்றும் நிலையான இன்பத்தை

வழங்கும்' என்று அறிந்து கொண்டவர். இவ்விடத்தில் ஜான் கீட்ஸின் 'அழகுப் பொருள் என்றும் இன்பத்தை வழங்கும்' (A Thing of beauty is a joy for ever) என்னும் கருத்து ஒப்பிட்டுக் காணத்தக்கது. கவிதையினால் மக்களுக்குப் பயம் தீரும்; மக்கள் விழிப்புணர்ச்சி பெறுவர் என்பதைக் கீழ்க்கண்ட பாரதியின் பாடல்-அடிகள் வலியுறுத்தும்.

(அ) சக்தியென்று நேரமெல்லாம் தமிழ்க்கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்தும் தீரும்
(தேசமுத்துமாரி)

(ஆ) வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
புள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
(தமிழ்)

2.4. பாட்டு என்பது சிற்றின்பத்திற்குத் துணையாக இருப்பதோடு பேரின்பத்திற்கும் வழிகாட்டுகின்றது. இன்பத்தை நல்குவதே பாட்டின் உயிர்த் துடிப்பாக இருக்கின்றது. ஆனால், கவிதை இருவகை இன்பத்தோடு எண்ணத்திலே மலர்ச்சியையும் இதயத்தில் எழுச்சியையும் வழங்குகின்றது. கவிதை மானுடரின் அச்சத்தை நீக்கி விழிப்புணர்ச்சியூட்டி அறிவுறுத்தல் வினையையும் செய்கின்றது. ஆகவே, இன்பமூட்டலும் அறிவுறுத்தலும் பாரதியின் கவிதா தேவியின் இரு கண்களாக அமைகின்றன.


செய்யுள்
பாட்டு
கவிதை
வசனகவிதை
பண்
ரஸம்
ரஸம்
கற்பனை
கற்பனை
கருத்து
கவிதையின் பயன்கள்
இன்பமூட்டல்
அறிவுறுத்தல்

## 3. கவிதை யாருக்காக

3.1. கலையின், கவிதையின் பயன்பாட்டு அடிப்படையில் கவிதை தனக்காக, கவிதை கவிஞர்க்காக, கவிதை மக்களுக்காக என்று மூன்று போக்குகள் காணப்படுகின்றன. இவ்வடிப்படையிலும் பாரதியாரின் கவிதையில் பயன்பாட்டுக் கொள்கையை ஆராயலாம்.

3.2. 'ஒருவரின் துடிப்பினிலே விளைவது கவிதையடா' என்பது கண்ணதாசனின் கருத்து. கவிஞன் தனது அனுபவத்தை வெளிப்படுத்தும் உணர்ச்சி வடிகாலாக — கருவியாகக் கவிதையைக் கருதுகின்றான். தனது ஆளுமையை வெளிப்படுத்தும் சாதனமாக முன்னிக் கவிதை வெறி மூண்டே நனவழிய கற்பனை உலகில் மிதப்பதற்கு உரிய சிறகாகக் கவிதை அமைகின்றது. டி. எச். லாரன்ஸ், புதுமைப்பித்தன் போன்றோர் 'கலை என் பொருட்டே' என்ற பொருளில் படைப்புக்களை வெளியிட்டுள்ளார்கள். பாரதியின் 'தனிமை இரக்கம்' என்னும் முதல் கவிதை, நான், மனப்பெண் என்னும் பிற்காலக் கவிதைகள் பாரதியின் சுய வெளிப்பாட்டை (self — expression) காட்டுவனவாகும்.

வானிற் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்
மண்ணிற் திரியும் விலங்கெல்லாம் நான்
கானிழல் வளரும் மரமெல்லாம் நான்
காற்றும் புனலும் கடலுமே நான்.

இலக்கியம் என்பது படைப்பாளியின் கற்பனை, மனோதர்மம், ஆளுமை ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது. பாரதியின் சில பாடல்கள் அவரது சுயத்தை (self), ஆளுமையை அப்படியே பிரதிபலிப்பவை. பாரதியின் தன் வரலாற்றுக் கூறுகளை (auto-biographical elements) மூன்று நிலைகளில் தன் பாடல்களில் பதிவு செய்துள்ளதைச் சிற்பி. பாலசுப்பிரமணியன் தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் (987:39).

(அ) தன் கூற்றாகவே தன் வரலாறு கூறுதல் (சுயசரிதை, பாரதி அறுபத்தாறு, கவிதாதேவி அருள் வேண்டல் ஆகியவை)

(ஆ) தன்னைப் பிறிதொரு பாத்திரத்தின் வாயிலாக உணர்த்துதல் (சின்னச் சங்கரன் கதை)

(இ) உணர்வு வெளிப்பாட்டில் உய்த்துணர வைத்தல்
(சீட்டுக் கவிகள்)

ஆகியவற்றில் பாரதியின் ஆளுமையையும் ஆழ்ந்திருக்கும் கவி-யுளத்தையும் காணலாம்.

தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், பல்சுவைப் பாடல்கள் என்னும் பிரிவுகளில் பல பாடல்கள் பாரதியாரின் சுயத்தை வெளியிடுபவை. கணபதி, காளி, வேலன், முருகன், கண்ணன், சக்தி, மகாலட்சுமி, சரஸ்வதி போன்ற தேவதைகளிடம் விண்ணப்பம் செய்தல் அல்லது வேண்டல் என்ற முறையில் அமையும் பாடல்களிலும்; அழகுத் தெய்வம், கவிதாதேவி, கவிதைக் காதலி ஆகியோரைப் பற்றிய பாடல்களிலும்; மது, அந்திப் பொழுது, மழை, நிலவு பற்றிய இயற்கைப் பாடல்களிலும் பாரதியின் உள்ளத்தின் சுய வெளிப்பாடு பதிவாக்கப்பட்டுள்ளது.

3.3. கவிஞன் தான் சுவீகரித்துக் கொண்ட—தேர்ந்தெடுத்-துக் கொண்ட கலைத் துறையை வளப்படுத்த வேண்டும். 'எமக்-குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல்' என்று தன் கடமைகளைக் கூறியுள்ளார் பாரதியார். பாரதிக்குக் கவிதைகளை இயற்றுதல் முதல் முக்கியமான பணி; நாட்டிற்கு உழைத்தல் அவருக்கு அடுத்துள்ள கடமையாகும். நாட்டுப்பணியையும் கவிதையின் மூலமாகச் செய்ய விரும்பினார்; வெற்றியும் அடைந்-தார்.

இறவாத தமிழ் நூல்கள் இயற்றித் தமிழ்க் கவிதைக் கரு-வூலத்தைச் செழுமை அடையச்செய்ய வேண்டும் என்று விழைந்-தார். குயில் பாட்டு. கண்ணன் பாட்டு, அக்னிக்குஞ்சு போன்ற பாட்டுக்கள் கவிதைக் கலையை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இயற்றப்பட்டவை.

மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியென்றே கண்டு
கொண்டேன்
ஆன்ற தமிழ்ப்புலவீர் கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே யிடமிருந்தாற் கூறிரோ?

என்று குயில்பாட்டை முடித்திருப்பது கவிதை கற்றோருக்காக

கவிஞர்க்காக என்னும் கருத்தை வலியுறுத்தும். அற்புதம், சினம், சிருங்காரம், நகை ஆகிய சுவைகளைக் கொண்டு குறியீட்டு உத்தியுடன் புனையப்பட்டது குயில்பாட்டு, அக்னிக் குஞ்சு என்ற குறியீட்டுக் கவிதையின் மெய்ப்பொருள் ஆய்வாளர்களின் சிந்தனைக்கு இன்னும் புலப்படாமல் ஒரு சவாலாகவே இருந்து வருகின்றது. நான்மணிமாலை, பஞ்சகம், திருப்பள்ளியெழுச்சி, அகவல், வெண்பா, நவரத்தினமாலை, வாழ்த்து என்னும் பெயரில் புதிய பொருட்களைக் கொண்டு இலக்கிய வகைகளைப் படைத்திருப்பதும் கவிதை என்னும் கலைத் துறையை வளப்படுத்த வேண்டும் என்ற முயற்சியின் விளைவுகளாகக் கருதத்தக்கவை.

3.4. கலை தனக்காக, கலை கலைக்காக என்று பேசி கலைஞன் வாழ்நாள் முழுவதும் இருந்துவிட முடியாது. கவிஞன் சமுதாயத்தின் உறுப்பினன. சமுதாயத்தின் சிக்கல்களையும் போக்குகளையும் அவன் பிரதிபலிக்க நேரிடுகின்றது. காலத்தின் குரலாக, சமுதாயத்தின் ஜெயபேரிகையாக முழக்கமிடுகின்றான். தான் வாழும் காலகட்டத்தின பிரச்சனைகளை உள்வாங்கிக் கொண்டு, அவற்றை நீக்குவதற்கு முற்படுகின்றன. எனவே, அவனது படைப்புக்கள் சமூகச் சார்புடைமை ஆகின்றன. பாரதியாரின் பெரும்பானமையான பாட்டுக்களும் கவிதைகளும் ‘கலை/கவிதை வாழ்க்கை மக்களுக்காக’ என்னும் நோக்கத்தைக் கொண்டவை.

பாரதியார் எட்டையபுரம் அரண்மனையில் வாழ்ந்து கொண்டு அரசுப் புலவராகப் பணியாற்றி அரசரை மகிழ்விக்க விரும்பவில்லை. மதுரையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வயிறறைக் கழுவவில்லை. பாமரருககும் படித்தவருக்கும் பயனபடும் பத்திரிகையில் பணியாற்றவே அவரது மனம் நாடிற்று. வெகுஜனததின் அறிவை வளாக்கும் பத்திரிகைப் பணியும இந்திய விடுதலை அரசியலில் நேரடி பங்கேற்பும் தமிழ் மக்களோடு நெருககமாக வழிவகுத்தன. ஒருபுறம் பாரதநாடு, பாரதப் பணபாடு, பாரதமாதா பறறிய பாடலகளும் இனனொருபுறம் தமிழ் நாடு, தமிழ் மொழி, தமிழ்ப் பணபாடு பற்றிய பாடல்களும இயற்றித தனனை இந்தியத தேசியத்தோடும் தமிழ்த் தேசியததோடும் பிணைத்துக் கொணடார்.

பாரதியார் தான் ஆசிரியராக இருந்து நடத்திய இந்தியா பத்திரிகையில் இந்திய விடுதலையைப் பற்றிய பாடல்கள் எழுதி

அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்தார். யாரும் எழுதவில்லை. பின்பு தானே தேசிய கீதங்களை எழுதிச் சிறு நூலாக வெளியிட்டார். ஆங்கில அரசுக்கு எதிரான 'நாட்டுப் பாடல்களை' வெள்ளையரை விரட்டும் 'ஓட்டுப் பாடல்களாக' மக்கள் பாட ஆரம்பித்தனர்; ஆங்கில அரசு தடைவிதித்தது. 1911-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆஷ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வாஞ்சிக்குப் பாரதியின் தேசியப் பாடல்கள் தூண்டுதலாக இருந்தன என்பதை நிரூபிப்பதற்காக நீதிபதி சங்கரன் நாயர் சாட்சியமாகப் பயன்படுத்தியுள்ளார். 1922-ஆம் ஆண்டு திருநெல்வேலி தாலுகா போர்டு பள்ளிகளில் பாரதியின் பாடல்களைப் பாடத் திட்டத்தில் சேர்க்க ஆங்கில அரசு அனுமதிக்கவில்லை. ஆங்கில அரசின் தடைகளை எதிர்த்து விமர்சித்து வந்து 1928-இல் பெரும்பாலான நம்பிக்கை ஓட்டின் மூலம் சத்தியமூர்த்தி பாரதியின் தேசியப் பாடல்களைப் பொதுமக்கள் மத்தியில் கொண்டுவந்தார். பாரத விடுதலை வீரர்களுக்குப் பாரதியின் பாடல்கள் உறைவாளாக—வெள்ளையர் உயிரை வாங்கும் வேலாகப் பயன்பட்டன. பாரதி பாரத நாட்டுச் சிறப்பைப் பாடினார். வ.ரா., பாரதியின் பாட்டுச் சிறப்பை மக்களுக்கு எடுத்துரைத்தார். பாரதியின் பாடல்கள் சமுதாயத்தின் பல்வேறு தளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி மாற்றத்தைத் தூண்டின.

பாரதியார் மண்ணில் காலூன்றி மனிதர்களை நேசித்து விண்ணில் பறந்து 'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா' என்று பாடிப் பறந்த குயில். மண் வாசனையுடன் பாட்டுக்களைக் கட்டி, பறையர்களுக்கும் மாதர்களுக்கும் விடுதலை வேண்டி நின்ற சிட்டுக் குருவி. பாட்டுத் திறத்தாலே பாரதத்தை மேம்படுத்தத் துடித்த பாவலன்.

(அ) பெருமை கொண்டு
வையகம் தழைக்க வைப்பேன் — அமரயுகஞ்
செய்யத் துணிந்து நிற்பேனே (தோ. பா. 23)

(ஆ) மண்ணிலார்க்குத் துயரின்றிச் செய்வேன்
வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்

(இ) வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே

(ஈ) மண் பயனுற வேண்டும்
வானமிங்கு தென்பட வேண்டும்.

பராசக்தியும் மற்ற தெய்வங்களும் பாரதியாரிடம் மானுடம் பயனுறும்படி கவிதைகள் பாடச் சொல்கின்றன (பராசக்தி 1-3). நாட்டு மக்கள் நலமுற்று வாழவும் நானிலத்தவர் மேனிலை எய்தவும் பாட்டு இயற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். பாரதியாரின் தோத்திரப் பாடல்களும் வேதாந்தப் பாடல்களும் மக்களின் தெய்வ பக்தியை வளர்த்து ஆன்ம நலம் காக்கும் அழியாப் பாடல்கள். பாரதியாரின் நாட்டுப் பாடல்களில் உள்ள 'விடுதலை உணர்வு' இந்தியச் சுதந்திரத்தைப் பேணிக் காக்கவும், சமூக, பொருளாதார விடுதலைக்குத் தூண்டும் சக்தியாகவும் என்றென்றும் பயன்படும். சமூகம் என்ற தலைப்பின் கீழ் தொகுக்கப்பட்டுள்ள பெண் விடுதலைப் பாடல்கள், தொழில், முரசு, பாப்பாப் பாட்டு, புதிய ஆத்திசூடி போன்ற பாடல்கள், புயற்காற்று மற்றும் தூமகேது பற்றிய பாடல்கள் ஆகியவை பாரதியார் சமூகத்தின் மீதும் வரலாற்று நிகழ்வின் மீதும் எவ்வளவு அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்தார் என்று அறிவிக்கின்றன.

நாட்டுப்புறச் சந்தத்திலே எளியவர்களுக்காகப் 'பாஞ்சாலி சபதம்' என்னும் தீஞ்சுவைக் காவியத்தைப் பாடிப் புதுப்பாணி காவியங்கள் தோன்ற வழிகாட்டினார். மரபு வடிவத்தில் புதிய பாடு பொருள்களையும், புதிய வடிவத்தில் பழைய பாடு பொருள்களையும் (வசன கவிதைகள்) எழுதினார். தேமதுரத் தமிழோசைப் பாடல்களின் வழித் தமிழ் மொழிப் பற்றையும் தாய்மொழிக் கல்வியையும் தமிழிசையையும் வளர்த்தார். இந்தியப் பண்பாட்டின் பெருமையையும் தமிழ் நாகரிகத்தின் அருமையையும் இளைய பாரதம் அறியும்படிச் செய்தார். இலக்கிய உலகில் மறுமலர்ச்சியையும் சமூகச் சீர்திருத்தத்தில் புத்துணர்ச்சியையும் ஊட்டினார். ஏவி மெய்யப்பச்செட்டியார் திரைப்படத்தின் மூலமாகப் பாரதியாரின் பாடல்களைப் பெரும்பாலான மக்களை அடையும்படிச் செய்தார். பாரதிராஜாவின் 'புதுமைப்பெண்' 'பாலச்சந்தரின் 'வறுமையின் நிறம் சிவப்பு', 'ஏழாவது மனிதன்' ஆகிய திரைப்படங்கள் பாரதியின் பாடல்களைத் தாங்கி, சமூக மாற்றத்தைத் தூண்டிக்கொண்டு வருகின்றன. பெண்கள் விடுதலை, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், பொருளாதார ஏற்றத்தாழ்வு நீக்கம்,

எல்லோருக்கும் கல்வி, அனைத்து மட்டங்களிலும் சமத்துவம், தேசிய ஒருமைப்பாடு, மனித நேயம், சாதி சமய நல்லிணக்கம் என்னும் கருத்துக்கள் அடுத்த நூற்றாண்டிலும் பண்பாட்டு மாற்றங்களைத் தூண்டும் ஆதாரமாக — அமுதசுரபியாகப் பாரதியாரின் பாடல்கள் பட்டொளி வீசித் திகழ்கின்றன.

## முடிவுரை

பாரதியார் இன்னிசைப் பாட்டையும் தீங் கவிதையையும் வேறுபடுத்தி உணர்ந்துள்ளார். இரண்டின் உயிர்நாடியாக இருப்பது 'உணர்ச்சி'. இக்கூறு பாட்டு/கவிதை வழியாக இன்பமூட்டலையும் அறிவூட்டலையும் செய்கின்றது. பாரதியார் தனது சுயத்தை வெளிப்படுத்தவும், கவிதைத் துறையை வளர்க்கவும், மக்களின் வாழ்வை மேம்படுத்தவும் பாட்டு/கவிதையைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் பண்டிதத் தமிழைப் பாமரருக்குக் கொண்டு வந்து, கவிதையைப் பொதுமக்களுக்கு உரியதாக்கியதாலேயே 'மக்கள் கவி' என்றும், 'மகாகவி' என்றும் சிறப்பித்துப் போற்றப்பட்டார். ஆகவே, கவிதையும் கலையும் மக்களுக் காகவே — மனிதரின் வாழ்க்கைக்காகவே என்பது பாரதியின் கவிதையில் பயன்பாட்டுக் கொள்கையாகும்.

## துணைநூற் பட்டியல்


1. அருணாசலம், ப., *கவியரசர் பாரதி*, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5, 1981 (3-ஆம் பதி.)
2. ஐசக் சாமுவேல் நாயகம், *பாரதியார் கவிதை நூல்கள் குறித்த ஆய்வுகள்-ஒரு மதிப்பீடு*, பெத்தேல் வீடு, 1992.
3. கைலாசபதி, க., *இலக்கியமும் திறனாய்வும்*, பாட்டாளிகள் வெளியீடு, சென்னை-21, 1976 (2-ஆம் பதி).
4. சீனிச்சாமி, துரை., *பாரதியாரின் வசனக் கவிதைகள்*, (பாரதி இயல்), மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1982.
5. ஞானசம்பந்தன், அ.ச., *இலக்கியக்கலை*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1989 (விரி.பதி.).
6. திருநாவுக்கரசு, க.த., *பாரதியாரின் இலக்கியக் கொள்கை*, ஆய்வுக் கோவை : 5, இ.ப.த மன்றம், அண்ணாமலை நகர். 1973, பக் ; 295-301.

7. தொல்காப்பியம், பாரிநிலையம், சென்னை-108, 1986 (7-ம் பதி.).

8. தோத்தாத்ரி, எஸ்., பாரதியின் கலை இலக்கியக் கோட்பாடு (பாரதியம்), பாரதி மண்டலம், சிவகங்கை, 1983, பக் : 53-69.

9. பாலசுப்பிரமணியன், சிற்பி., பாரதியார் படைப்புக்களில் தன் வரலாற்றுக் குறிப்புக்கள் (பாரதி ஆய்வுக் கோவை), பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் 1987, பக் : 37-47.

10. பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1982.

11. பாரதியார் கட்டுரைகள், பாரதி புத்தக நிலையம் மதுரை, 1964.

12. ராஜகோபாலன், கு.ப. & சிட்டி, கண்ணன் என் கவி, பூங்கொடிப் பதிப்பகம், சென்னை-4, 1981-(2ம்-பதி ).

13. வரதராசன், மு., இலக்கிய மரபு, பாரிநிலையம், சென்னை-,1 1979.

14. விஜயபாரதி, எஸ்., மகாகவி பாரதி : ஒரு திறனாய்வு, வானதி பதிப்பகம், சென்னை-17, 1978.

4

# மொழிபெயர்ப்புகள்

★

டாக்டர் சு. இராசாராம்

''பல்விதமாயின சாத்திரத்தின மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு''

மகாகவி பாரதியார் மொழிவளர்ச்சியில் மொழிபெயர்ப்புகளின் பங்கை நன்கு அறிந்தவர்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்

என்னும் அவரது பாடல் வரிகள் தமிழ்மொழி வளர்ச்சியில் மொழிபெயர்ப்புகளுக்கு அவர் கொடுத்த முக்கியதத்துவத்தை உணர்த்துகின்றன. பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதோடு தமிழ்க் கலைச் செல்வங்களும் பிறமொழிகளில் மொழியாக்கம் பெற வேண்டும் என்பதை,

நூறு கோடி நூல்கள் செய்து
நூறு தேய வாணர்கள்
தேறும் உண்மை கொள்ள இங்கு
தேடி வந்த நாள்...

என்னும் பாடலில் குறிப்பிடுகிறார். இதற்குப் பிற நாட்டாரை மொழிபெயர்க்கத் தூண்டவல்ல புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றப்பட வேண்டும் என்னும் பாரதியின் கருத்து இங்கு நோக்கத்தக்கது. புலமைத் திறமும் கலைநயமும் நிறைந்த நூலகளே மொழியாக்கம் பெறத் தகுதி உடையன.

மேலே காட்டிய பாடல் வரிகள் மொழிபெயர்ப்பு பற்றிய தெளிவான சிந்தனை பாரதியாருக்கு இருந்தது என்பதை உணர்த்தப் போதுமானவை. ஆனால் பாரதி வாழ்ந்த காலத்தி-

---

* பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், அயல்நாட்டுத் தமிழ்த்துறை — தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

லிருந்து இன்றுவரை பிற மொழிகளிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கையும், தமிழிலிருந்து பிற மொழிகளில் மொழிப்பெயர்ப்பாகியுள்ள நூல்களின் எண்ணிக்கையும் பாரதியின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வனவாக இல்லை என்பதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது. மேற்கே வளரும் மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை எனும் பெரும்பழி தீர்ந்து, 'புகழ் ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்' என்ற பாரதியின் தீர்க்கதரிசனம் இன்னும் முழுமை அடையவில்லை. எடுத்துக்காட்டுக்காகத் தமிழில் முதலாவது மொழிபெயர்ப்பு தொடங்கிய காலந்தொட்டு சுமார் 150 ஆண்டுகள் மொழிபெயர்ப்புகளின் வளர்ச்சியைக் காண்பது இங்குப் பயனுடையதாய் இருக்கும்.

1983 வரைத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பிறமொழி நூல்கள் 4234 ஆகும். இவை கிட்டத்தட்ட 42 உலக மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. செய்யுள், இலக்கியம், புதினம், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு, பயண இலக்கியம், கடிதம், சொற்பொழிவு, கட்டுரை, தொகுப்பு, இலக்கணம், மொழியியல், சமயம், தத்துவம், அறிவியல், மருத்துவம், உளவியல், தருக்கம், வரலாறு, அரசியல், சட்டம், பொருளியல், தொழில், விவசாயம், புள்ளியியல், சமூகவியல், கல்வி, கூட்டுறவு, கலைகள், சோதிடம், யோகம், விளையாட்டு முதலியன இம்மொழிபெயர்ப்புகளுள் அடங்கும். இதைப்போலவே தமிழிலிருந்து பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்கள் 730 ஆகும். இவை 29 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன (சிவகாமி : 1983). இவை அனைத்தும் கிட்டத்தட்ட 150 ஆண்டு படைப்புக்கள். 150 ஆண்டுகளில் 5000 மொழிபெயர்ப்புகள் தமிழைப் போன்ற ஒரு செவ்விய மொழிக்குப் பெருமை சேர்க்காது. உலக மொழிகளோடு ஒப்பிடுப் பார்க்கும்போது இவ்வெண்ணிக்கை மிகவும் குறைவாகும்.

பாரதியார் விடுதலை பெற்ற இந்தியாவைத் தம் கற்பனையில் கண்டவர். ஒரு கவிஞனுக்கே உரிய தொலைநோக்குச் சிந்தை உள்ளவர். எதிர்கால இந்தியாவின் முன்னேற்றத்திற்கேற்ற அர்த்தமுள்ள கனவுகளைக் கண்டு களித்தவர். இக்கனவுகள் நனவாகி வரும் இன்றைய சூழலில் பாரதி எதிர்நோக்கிய மொழிபெயர்ப்புகளின் வளர்ச்சி நிலையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

மொழிபெயர்ப்பு என்றவுடன் ஏதாவதொரு இலக்கியத்தின் மொழியாக்கமே நம் எண்ணத்தில் தோன்றுகிறது. மொழிபெயர்ப்பின் வரலாறு பெரும்பாலும் இலக்கிய வடிவங்களின் மொழியாக்கமாக ஆரம்ப காலத்தில் இருந்ததும் மிகக் கூடுதலாக இலக்கிய மொழிபெயர்ப்புகளே இன்றுவரை நடந்து வருவதும் இத்தகைய எண்ணம் தோன்றுவதற்குக் காரணமாகும். முதன்முதலாக லிவியஸ் அன்றோனிக்கஸ் என்னும் கிரேக்க அறிஞர் ஹோமருடைய ஒடிசியைக் கிரேக்க மொழியிலிருந்து லத்தீனுக்கு மொழிபெயர்த்தார் என்பர். இக்காலம் தொடங்கிக் கி பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உலக மொழிகள் அனைத்திலும் இலக்கியங்களே கூடுதலாக மொழியாக்கம் பெற்றுள்ளன. தமிழைப் பொறுத்தவரையில் பதினெட்டாம் நூற்றாண்டில் ஜே.பி. பெப்ரிஷியஸ் (1774) என்பவரால் முதன்முதலாகப் பைபிளும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சேக்ஸ்பியரின் நாடகங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. உலகப் போர்களுக்குப் பின்னரும் இந்திய விடுதலைக்குப் பின்னரும், தமிழில் நூல் வடிவில் தோன்றிய மொழிபெயர்ப்புகளில் இலக்கியங்களே அதிக எண்ணிக்கையில் உள்ளன. இப் பின்னணியில் பாரதியின் மொழிபெயர்ப்பு பற்றிய சிந்தனைகளை இலக்கிய மொழிபெயர்ப்புகளோடு மட்டும் வரையறுத்துக் கொள்வது பாரதியின் தொலைநோக்குப் பார்வையைக் கொச்சைப்படுத்துவதாகும். பாரதி வாழ்ந்த சமுதாயத்தின் அமைப்பையும், அதன் தேவையையும், விடுதலை பெற்ற இந்தியா குறித்த அவரது கனவையும், சமூக உணர்வையும் ஆழ்ந்து சிந்திக்கும்போது மொழிபெயர்ப்பு பற்றிய அவரது சிந்தனைகளை இலக்கியம் என்னும் எல்லைக்குள்ளே மட்டும் அடக்கிவிட முடியாது. மொழிபெயர்ப்பு பற்றிய பாரதியின் கனவு விடுதலை பெற்ற இந்தியாவின், குறிப்பாகத் தமிழகத்தின் பயிற்று மொழி மற்றும் ஆட்சிமொழிச் சிந்தனைகளோடும் தொடர்புடையது. இதற்குப் பாரதியின் படைப்புகளையும், அரசியல், சமூக அனுபவங்களையும் சான்றுகளாகக் காட்டலாம்.

சாதாரணமாக நான்கு முக்கியமான மொழிச் சூழல்களில் மொழிபெயர்ப்புகளின் தேவை அதிகமாக உணரப்படுகிறது. ஒரு மொழி செவ்விய மொழியாக இருக்கும்போதும், இலக்கிய வளர்ச்சியில் உன்னத நிலையை அடையும்போதும் ஒரு நாட்டின் மொழித் திட்டமிடுதலில் (Language planning) பயிற்று மொழியாகவோ

ஆட்சி மொழியாகவோ திட்டமிடப்படும்போதும் மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றன. இச் சூழல்களில் ஒரு மொழி அடையும் வெற்றியைப் பொறுத்து மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை அமையும். தமிழில் பாரதி எதிர்பார்த்த அளவுக்கு மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்றால் இம் மொழிச் சூழல்களில் தமிழ் எதிர்பார்த்த வெற்றியை அடைந்துள்ளதா என்பதை நாம் ஆராய வேண்டியது கட்டாயமாகி விடுகிறது.

கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம் போன்று தமிழும் ஒரு செவ்விய மொழி. இம்மொழிகளிலுள்ள பழைய இலக்கிய, இலக்கணங்கள் பிற மொழிகளில் மொழியாக்கம் பெற்றுள்ளது போல் தமிழ் இலக்கிய, இலக்கணங்களும் ஏராளமாகப் பிற மொழிகளில் மொழியாக்கம் பெற்றுள்ளன. இருப்பினும் சமஸ்கிருத மொழியோடு ஒப்பிடும்போது இம் மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை குறைவு. தமிழிலேயே 1983 வரை 727 சமஸ்கிருத மொழி நூல்கள் மொழியாக்கம் பெற்றிருப்பது இம்மொழியின் சிறப்பாகும். மனிதனின பழங்கால வரலாற்றையும் பணபாட்டையும் அறிந்துகொள்ளச் செவ்வியமொழி இலக்கியங்கள் உதவுகின்றன. எனவே, மற்றொரு செவ்விய மொழியின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ளும் நோக்கத்தில் செவ்வியமொழி இலக்கியங்கள் மொழிபெயர்ப்பில் முக்கிய இடம் பெறுகின்றன. இருப்பினும் நாம் முன்னர்க் குறிப்பிட்டதுபோல் தமிழிலிருந்து பிற மொழிகளுக்குப் பெயர்க்கப்பட்ட செவ்விய இலக்கியங்கள் குறைவு. இதற்கு எண்ணிக்கையில் சமஸ்கிருத மொழி அளவுக்குத் தமிழில் நூல்கள் இல்லை என்பதை ஒரு காரணமாகக் காட்டலாம். இரண்டாயிரமாண்டு இலக்கிய, இலக்கணங்கள் தமிழிலே உள்ளன என்றாலும் கடற்கோள்களால் நாம் இழந்துவிட்ட நூல்கள் ஏராளம். இவைபோக இன்று எஞ்சியுள்ள அனைத்துச் செவ்விய இலக்கியங்களும் இலக்கணங்களும் இன்னும் மொழியாக்கம் காணாதது பாரதியின் கனவு இன்னும் நனவாகவில்லை என்பதையே காட்டுகிறது.

விடுதலைக்குப் பின் தமிழிலிருந்து பிற மொழிகளுக்கு மொழியாக்கம் நடந்ததற்கு மேலாகப் பல உலக இலக்கியங்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டன. 1935 இலிருந்து 1950 வரையில் பல இலக்கிய மொழிபெயர்ப்புகள் தமிழில் தோன்றின. உருசியன், இந்தி, வங்காளம், மராத்தி போன்ற மொழிகளிலிருந்து புதினங்-

களும், சிறுகதைகளும், கட்டுரைகளும் மொழிபெயர்க்கப்பட்டன. 1950க்குப் பின்னர் நிறுவன நிலையில் மொழிபெயர்ப்பு ஊக்குவிக்கப்பட்டது. சோவியத் அரசும் அமெரிக்க அரசும் போட்டிபோட்டுக்கொண்டு பல மொழிபெயர்ப்புகளை வெளிக்கொணர்ந்தன. இவற்றை மாதிரியாகக் கொண்டு சாகித்ய அகாடெமி இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கியது. பிற மொழிகளிலிருந்து தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட இந்நூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழிலிருந்து பிற மொழிகளுக்குப் பெயர்க்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அறுபதுகளிலிருந்து இன்றுவரை இருவகைகளிலும் வெளிவந்துள்ள இலக்கிய மொழிபெயர்ப்புகள் இந்திய மொழிகளுள் இந்தி, மலையாளம், வங்காளம், கன்னடம் ஆகிய மொழிகளைவிடக் குறைவு என்பர். இம்மொழி இலக்கியங்கள் இலக்கிய வளர்ச்சியில் இன்று உன்னத நிலையை அடைந்துள்ளதால் பிற மொழிகளால் போற்றப்படுகின்றன. தமிழில் மலையாளத்திலிருந்து மட்டுமே கிட்டத்தட்ட 250க்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் வெளியாகியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் பார்க்கும் போது தமிழ் இம்மொழிகள் அளவுக்கு இலக்கிய வளர்ச்சியில் இன்னும் உன்னதநிலையை அடையவில்லையோ என்னும் ஐயம் இங்கு உறுதிப்படுத்தப்படுகிறது.

ஒரு மொழியின் இவ்விரு இலக்கியச் சூழல்களைத் தவிரத் தேசிய அளவில் ஒரு மொழி திட்டமிடப்படும்போதும் மொழிபெயர்ப்புகளின் தேவை அதிகமாக உணரப்படுகிறது. மொழித் திட்டமிடுதலுக்கும் மொழிபெயர்ப்புகளின் தேவைக்கும் இடையே முக்கியமான தொடர்பு உண்டு. பயிற்று மொழியாகவோ ஆட்சி மொழியாகவோ தேசிய மொழியாகவோ ஒரு மொழி அரசு இயந்திரத்தால் திட்டமிடப்படும்போது அதன் வெற்றிக்கு உறுதுணையாக அமையும் பல்வேறு கூறுகளில் மொழிபெயர்ப்பும் ஒன்று. எடுத்துக்காட்டாக, ஒருமொழி ஒரு நாட்டின் தேசிய மொழியாகத் திட்டமிடப்படும்போது பிற மொழிகளின் தேவைகளையெல்லாம் நிறைவுசெய்யும் வகையில் தேசியமொழி நூல்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும். அதைப்போலவே சிறந்த பிறமொழி நூல்களுள் தேசிய மொழியில் மொழியாக்கம் பெற வேண்டும். இந்திய நாட்டில் இந்தி மொழிக்குத் தேசிய அந்தஸ்தை வழங்குவதில்

மத்திய அரசு மொழிபெயர்ப்புகளுக்கு அளிக்கும் முக்கியத்துவம் இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனாலேயே இந்தியில் மொழிபெயர்க்கப்படும் பிறமொழி நூல்களும், பிற மொழிகளிலிருந்து இந்தி மொழிக்கு மொழியாக்கம் பெறும் நூல்களும், பிற மாநில மொழி மொழிபெயர்ப்புகளைவிட மிகக் கூடுதலாக உள்ளன. இம் மொழித்திட்டம் குறித்த பாரதியின் கனவு என்ன?

விடுதலை பெற்ற இந்தியாவில் கல்வித்துறையில் எல்லா நிலைகளிலும் தமிழைப் பயிற்று மொழியாக்கக் கனவு கண்டார் பாரதியார். இவரது வாழ்நாளின் கடைசிப் பகுதியில் பயிற்றுமொழி பற்றிய சிந்தனை அக்கால அரசுக்கு எழுந்தது. 1919-ஆம் ஆண்டில் மாண்ட்போர்டு அறிக்கையின்படி இரட்டை ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்தது. இந்தியாவில் பொறுப்புள்ள மாநில அரசுகளை ஏற்படுததுவது இதன் குறிக்கோள். மக்களாட்சி முறையின் முழுப் பயனையும் இச்சட்டத்தின் மூலம் மக்கள் அடைய வாய்ப்பு இல்லையென்றாலும் மக்களின் குரல் ஆட்சியாளர்களுக்குக் கேட்கும் ஓர் அமைப்பு உருவானது இக் காலகட்டத்தில்தான். இவ் ஆட்சிமுறையில் சென்னை மாநில சட்டமன்றத்தில் பல தமிழர்கள் இடம்பெற்றனர். ஆட்சி நிலையிலும் கல்வி நிலையிலும் தாய்மொழிப் பயன்பாடு முதன்முதலாக வலியுறுத்தப்பட்டது நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் 1921-ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலத்திற்குப் பதிலாக வட்டார மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்னும் சட்டம் கொண்டு வரப்பட்டது புதுவை வாசம் சலித்துப்போய் 1918 இலிருந்து 1920 வரை கடையத்தில் வாழ்ந்துவிட்டு சென்னைக்கு வந்து மீண்டும் சுதேசமித்திரனில் உதவியாசிரியராகப் பாரதியார் இணைந்த இக்காலச் சூழலில்தான் கல்வித்துறையில் பயிற்றுமொழி பற்றிய இவ் விவாதங்கள் சட்டமன்றத்தில் நிகழ்ந்தன.

பாரதியார் ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமல்லாது பல்கலைக்கழக நிலையிலும் தேசமொழி (வட்டார மொழி?) பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என விரும்பினார். தமிழால் இயலாது என்று கூறுபவர் இன்று மட்டுமன்று பாரதி வாழ்ந்த காலத்திலேயும் வாழ்ந்தனர்.

''புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;

மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவ தில்லை — அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்''

என்னும் கருத்துடையராய் பிறநாட்டார் சாத்திரங்களைச் 'சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை' எனக் கல்வித்துறையில் தமிழின் பங்கை எள்ளி நகையாடிய அறிஞர்களைக் கண்டு மனம் நொந்தார் பாரதியார். 'தமிழ்' என்னும் கட்டுரையில் பயிற்றுமொழி பற்றிய தமது எண்ணப்போக்கை அவர் வெளிப்படுத்துகிறார்.

''கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறதென்றும், தேச பாஷைகளிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையுமென்றும் ஸ்ரீ ஸர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலி பண்டிதர் சொல்லுகிறார் :- ''பாஷைத் தொல்லை பெருந்தொல்லையாகவே இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக்கொடுப்பதைக் காட்டிலும் தேசபாஷையில் கற்றுக்கொடுப்பது அதிகம் பயன்படுமென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப் பிழைகளும் நிறையச் செய்தபோதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷயங்களை விவரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது''

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்டையரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம்''

(பாரதி வசனத் திரட்டு, ப. 126)

புத்தம் புதிய கலைகளும் மேன்மைக் கலைகளும் தமிழுக்கு வரவேண்டும். எனவே,

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!''

என்ற பாரதியின் அறைகூவலில் பயிற்றுமொழித் திட்டத்தில் மொழிபெயர்ப்புகளின் பங்கை நம்மால் உணரமுடிகிறது. நூல்களின் மொழிபெயர்ப்பு மட்டுமின்றித் தமிழில் கலைச்சொல் மொழியாக்கம் குறித்தும் பாரதி அன்று கூறிய கருத்துகள் பயிற்றுமொழி பற்றிய அவரது முழுச் சிந்தனையை நமக்குப் புலப்படுத்துகின்றன.

நீண்டகாலமாகக் காலனி ஆட்சியின்கீழ் இருந்த ஒரு நாடு விடுதலை பெற்ற பிறகும் காலனி ஆட்சியாளரின் மொழி ஆதிக்கத்திலிருந்து எளிதாக மீண்டுவிட முடியாது. உலகத்திலுள்ள பல நாடுகள் இதற்கு இன்னும் எடுத்துக்காட்டுகளாக உள்ளன. விடுதலைப்பெற்ற பிறகு எந்தெந்த மொழிகள் எந்தெந்த மொழியாட்சிப் பகுதிகளில் (domains) பயன்படுத்தப்பட வேண்டும் என அரசின் மொழித்திட்டம் வரையறை செய்கிறது. கல்வித்துறையில் காலனி ஆட்சிமொழியிலிருந்து தேசிய மொழிக்கு அல்லது வட்டார மொழிக்கு மாறும்போது ஒரு காலகட்டம் வரை காலனி மொழி தேசிய மொழிக்கு அல்லது வட்டாரமொழிக்கு இணையாக இருந்து வரும். இக்காலத்தில் மொழிபெயர்ப்புகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

இந்தியக் கல்விமுறையில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் ஆழமாக வேரூன்றியுள்ளது. வட்டார மொழிகள் ஆங்கிலத்தின் இடத்தை மெதுவாக ஆக்கிரமித்து வருகின்றன. இருப்பினும் அறிவியல், தொழில்நுட்ப அறிவுக்குரிய அனைத்துலக மொழியாய் ஆங்கிலம் இருக்கும்வரை அதன் ஆதிக்கத்தைத் தடுக்க இயலாது. வட்டார மொழிகள் பயிற்றுமொழிகளாய் இருக்கவேண்டும்; அதே நேரத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் சிந்தனைகள் ஆங்கிலத்தில் வெளியானவுடனேயே வட்டார மொழிகளிலும் கிடைக்கவேண்டும். சப்பான், செருமனி போன்ற நாடுகளில் கல்விமொழிப் பயன்பாடு இவ்வாறே திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்வழி மருத்துவம், பொறியியல் ஆகிய பட்டப்படிப்புகளைத் திட்டமிடும்போது மொழிபெயர்ப்புகளின் தேவை முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்தப் படிப்புகளுக்கான நூல்கள் தமிழில் இல்லையே என்று நாடு விடுதலை பெற்ற நாளிலிருந்து நாம் அங்கலாய்த்து வருகிறோம். மொழிபெயர்ப்புகளுக்குப் பதிலாகத் தமிழிலேயே கலைச்சொற்களின் உதவியோடு மருத்துவ நூல்களையும் பொறியியல் நூல்களையும் எழுதிவிடலாமே என்றாலும் இவ்வளர்ச்சி நிலையில் மொழிபெயர்ப்பு ஆரம்பப் படிநிலை என்பதை எவரும் மறுக்க முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாகத் துறை வழக்குகளைக் (registers) கண்டெய்த மொழிபெயர்ப்புகள் மிகவும் தேவை. அறிவியலில் இத்துறை வழக்கைத்தான் அறிவியல் தமிழ் என்கிறோம். இதன் அடிப்படையில்தான் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் பல்வேறு பாடப்பொருள்களில் மொழிபெயர்ப்புகளை வெளிக்கொணர்ந்தது.

மலாய் மொழியைக் கல்வித்துறையின் எல்லா நிலைகளிலும் பயிற்று மொழியாக மலேசியா போற்றுகிறது. இந்நாட்டில் பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்படும் நூல்களின் எண்ணிக்கை ஏராளம். இந்தோனேஷியா டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்தபோது பல்கலைக்கழக நிலையில் டச்சுமொழி பயிற்றுமொழியாக இருந்தது. இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் இந்தோனேஷியா சப்பான் ஆதிக்கத்திற்கு உட்பட்டவுடன் ஆரம்ப வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இந்தோனிஷிய மொழி பயிற்று மொழியாக்கப்பட்டது. இந்நிலையில் அனைத்துலக மொழிகளின் மூலம் புதிய கண்டுபிடிப்புக்களையும் செய்திகளையும் பல்கலைக்கழக மாணவர்க்குக் கூறுவதில் பல பிரச்சனைகள் எழுந்தன. வகுப்பறையில் இந்தோனேஷிய மொழியில் விரிவுரைகளை வழங்க வாய்ப்பிருந்தும் ஆங்கிலம், டச்சு, செருமன் ஆகிய மொழிகளில் ஆசிரியருக்குப் பயிற்சி இல்லாதது அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தது. இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வாகப் பல மொழிப்பெயர்ப்பு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவும் இத்தகைய மொழித்திட்ட அணுகுமுறைக்குப் பின்தங்கியதன்று. இந்தி மொழியில் ஏராளமான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொல் கழகம் (Council of Scientific and Technical Terminology) இரண்டு லட்சம் கலைச்சொற்களை

1982 ஆம் ஆண்டிலேயே மொழிபெயர்த்து வழங்கியுள்ளது. இன்று இக் கலைச்சொற்களின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகி-யுள்ளது. தமிழிலோ பயிற்றுமொழி குறித்த விவாதங்களே இன்னும் முடிந்தபாடில்லை. ஆனால் பாரதியார் விடுதலை பெற்ற தமிழகத்தில் தமிழ் எல்லா நிலைகளிலும் பயிற்று மொழியாகப் பயன்படுத்தும்போது அனைத்துலக மொழிகளிலிருந்து எத்துணை அளவு மொழிபெயர்ப்புகள் தேவை இருக்கும் என்பதைத் தம் தொலைநோக்கு உணர்வால் அறிந்திருந்தார். அவரது கனவு நனவாகும்போது மொழிப்பெயர்ப்புகளின் தேவை இன்னும் அதிக-மாக உணரப்படும்.

ஒரு மொழி பயிற்றுமொழியாகத் தேசிய அளவில் திட்ட-மிடப்படும்போது மொழிபெயர்ப்புகள் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றனவோ அதைப் போலவே ஒரு மொழி ஆட்சி மொழி-யாகத் திட்டமிடப்படும்போதும் மொழிபெயர்ப்புகள் முக்கியத்-துவம் பெறுகின்றன. பாரதியார் வாழ்ந்த காலத்தில் சென்னை மாகாணத்தின் ஆட்சி மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் ஆங்கில இருந்தது. சட்டமன்றத்தில் ஆங்கிலத்தில் மட்டுமே பேச-வேண்டும் என்னும் சட்டம் இருந்தது. பெரும்பாலும் ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்களே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். எந்த உறுப்பினராவது வட்டார மொழியில் பேசி அப்பேச்சைச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் பதிய விரும்பினால் ஆங்-கில மொழிபெயர்ப்பு கொடுத்தாக வேண்டும்.

பாரதியார் வாழ்ந்த காலத்திலேயே சட்டமன்ற நடவடிக்-கைகளும் அரசு நிருவாகமும் தமிழில் நடைபெற வேண்டுமென்ற கருத்து சென்னை மாகாணச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வந்தது. அன்றைய சென்னை மாகாணத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒரியா ஆகிய மொழிகள் பேசும் வட்டாரங்-கள் அடங்கியிருந்தன. இந்தியாவை மொழிவழி மாகாணங்-களாகப் பிரிப்பது என்னும் கருத்து உருவாகிய இக்காலத்தில் ஆங்கிலத்தில் நடைபெறும் சட்டமனற நடவடிக்கைகளை வட்டார மொழிகளில மொழிபெயர்த்து உறுப்பினர்களுக்கு வழங்கப்படு-வதன் தேவை சட்டமன்ற உறுப்பினாகளால் வலியுறுத்தப்பட்டது. இந்திய நாட்டு மக்கள் ஆட்சி நடத்துவதில் பயிற்சிபெற வேண்டும் எனபது ஆங்கில அரசின் கொள்கையாக இருக்குமானால் அரசு இயந்திரத்தைப் பாமரரும் புரிந்துகொள்ள வகை செய்தல்

வேண்டும்; சட்டமன்ற நடவடிக்கைகளை அனைத்து வட்டார மொழிகளிலும் மொழிபெயர்த்து வழங்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டும் என்னும் கருத்து தீவிரமாக விவாதிக்கப்பட்டது. 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரதியார் இறக்கும்வரை ஆட்சிமொழித் தொடர்பாகச் சட்டமன்றத்தில் எழுந்த விவாதங்கள் ஏராளம். இவ் விவாதங்களில் ஆங்கிலச் சட்ட நூல்களையும் சட்டமன்ற நடவடிக்கைகளையும் வட்டார மொழிகளில் மொழிபெயர்ப்பது மொழிக் குழப்பங்களுக்குச் சரியான தீர்வாக அமையும் என்னும் கருத்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இக்காலத்தில் பாரதியார் இந்தியாவின் மொழிச் சூழமைவையும் அரசியலமைப்பையும் நன்றாகப் புரிந்திருந்தார். விடுதலை பெற்ற இந்தியாவில் ஆங்கிலமும் பிற இந்திய மொழிகளும் தொடர்ந்திருக்கும் என்பதை அவர் உணராதவர் அன்று. இவ் ஆட்சிமுறையில் ஒவ்வொரு இந்திய மொழியின் வளர்ச்சியிலும் மொழிபெயர்ப்பிற்கு ஏற்படவிருக்கும் முக்கியத்துவத்தை அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

பாரதியின் எண்ணப்படியே இன்று வட்டார மொழிகள் ஆட்சி மொழிகளாகிவிட்டன. இருப்பினும் வட்டார மொழியைத் தவிர ஒரு மாநிலத்தில் பிறமொழி பேசுபவரும் வாழ்வதால் ஆட்சித் துறையிலும் கல்வித் துறையிலும் பொதுவான ஒரு மொழியின் தேவை வற்புறுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இத்தேவையை ஆங்கிலம் நிறைவு செய்கிறது. அத்துடன் ஆட்சித்துறையிலும் நீதித்துறையிலும் ஆங்கிலத்தின் பயன்பாடு இன்னும் முழுவதுமாகத் தவிர்க்கப்படவில்லை. இவ்விரு துறைகளிலும் விடுதலை பெற்ற காலத்திலிருந்தே மொழிபெயர்ப்பு தொடர்ந்து சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்குமானால் தமிழிலே தன்னிறைவு பெற்ற ஆட்சிமுறையையும் நீதிமன்ற நடைமுறைகளையும் நாம் வகுத்திருக்க முடியும். இவற்றைப் பாமரரும் அறிந்து சிறந்த குடிமக்களாக விளங்கியிருக்க முடியும். தமிழை ஆட்சி மொழியாகத் திட்டமிடுவதில் நேர்ந்துள்ள குறைபாடாகவே இதனைக் கருத வேண்டும். நடுவண் அரசோடும் பிற மாநிலங்களோடும் உள்ள தொடர்பில் ஆங்கிலத்தின் இவ்விடத்தை நாளை இந்திமொழி முழுவதுமாக ஆக்கிரமிக்குமானால் மொழிபெயர்ப்பின் பரப்பை

இன்னும் அகலப்படுத்த வேண்டியிருக்கும் நல்லதொரு மொழித் திட்டம் ஆட்சிமொழியில் மொழிபெயர்ப்பின் பங்கைப் புறக்கணிக்க முடியாது. ஆங்கிலமும் பிரஞ்சு மொழியும் ஆட்சி மொழிகளாக வழங்கும் கனடா நாட்டில் எல்லா ஆட்சிமுறை ஆவணங்களும் பிற செய்திகளும் இருமொழிகளில் ஏககாலத்தில் மக்களுக்குத் தரப்பட்டு வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மொழிபெயர்ப்புத் துறைகள் மூலம் இப்பணியை மேற்கொள்ள கனடா அரசு ஏராள-மான பொருட்செலவை ஆண்டுதோறும் மேற்கொண்டு வருகிறது.

பாரதியை ஒரு மகா கவியாகவும், தேசியத் தொலை-நோக்குச் சிந்தனையாளராகவும் தாய்மொழிப் பற்றாளராகவும், சிறந்த அரசியல் ஞானியாகவும் பல்வேறு கோணங்களில் பார்க்கும் போது மொழிபெயர்ப்பு பற்றிய அவரது கனவு அர்த்தமுள்ளது என்பதை உணரமுடிகிறது. பாரதியின் தொலைநோக்கிற்கிணங்-கத் தமிழ் செவ்விய மொழியின் உன்னதத்தையும், இலக்கிய மேம்-பாட்டையும், கல்வித்துறையில் முழுப் பயிற்றுமொழி அந்தஸ்தை-யும், ஆட்சிமுறையில் முழு அளவுப் பயன்பாட்டையும் பெற்றி-ருக்குமேயானால் தமிழிலிருந்து பிற மொழிக்கும், பிற மொழிகளி-லிருந்து தமிழுக்குமாக எண்ணிலடங்கா மொழிபெயர்ப்புகள் குவிந்திருக்க வேண்டும். ஆனால் இன்றைய நிகழ்வுகள் பாரதியின் கனவை நனவாக்கவில்லை.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்; திறமான புலமை நிறைந்த தமிழ்நூல்கள் உலக மொழிகளில் மொழிபெயர்க்க வகைசெய்தல் வேண்டும் எனக் கனவு கண்டான் பாரதி. அவர் கனவு நாளைய வளர்ச்சிக்கான தீர்க்க தரிசனம் என்பதை நாம் இன்னும் உணரவில்லை. மொழி-பெயர்ப்பு இன்றைய செய்தித்துறை விஞ்ஞானத்தின் அடிப்படைக் கருவியாகக் கருதப்படுகிறது. மொழிபெயர்ப்பிற்கான உலகச் சந்தை இன்று ஆண்டொன்றுக்கு 15 கோடி பக்கங்களாகும். கிட்டத்தட்ட 1,75,000 மொழிபெயர்ப்பாளர்களின் முழுநேரப்பணி இவ்வேள்வியில் ஈடுபடுத்தப்படுகிறது. இதற்காகச் செலவிடப்படும் தொகை ஆண்டொன்றுக்கு 300 கோடி டாலர்கள். ஆண்டுக்கு ஒன்பதிலிருந்து பத்து விழுக்காட்டு அளவுக்கு இவ்வுலகச் சந்தை விரிவடைந்து வருகிறது 1983 ஆம் ஆண்டு மார்ஷல் என்பவரால் ஐரோப்பிய சமூகக் குழுவுக்காக மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வி-லிருந்து இத்தகவலை நாம் பெறுகிறோம். இக் கள ஆய்வு முடிந்து

பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இக் காலகட்டத்தில் மொழி-பெயர்ப்பில் கணிப்பொறி மற்றும் பிற தகவல் சாதனங்கள் ஏற்-படுத்தியுள்ள மாற்றங்கள் வியக்கத்தக்கவை. உலகச் சந்தையில் மொழிபெயர்ப்பிற்கான தேவைகளும் பன்மடங்காக இன்று அதிகரித்துள்ளன.

தமிழைப் பொறுத்தவரையில் தமிழறிஞர்க்குப் பிறநாட்டு நல்லறிஞர்களின் சாத்திரங்கள் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. அதைப் போலவே பிறநாட்டு நல்லறிஞர்க்குத் தமிழ்ச்சாத்திரங்கள் அவர்தம் மொழிகளில் தேவைப்படுகின்றன. இத்தேவைகள் உடனடியாக நிறைவு செய்யப்படாவிட்டால் உலக மொழி-பெயர்ப்புச் சந்தையில் கொள்வாரிருந்தும் பொருள் வழங்க இயலாத அவலநிலை தமிழனுக்கு நேரும். பாரதியின் கனவு பகற்கனவாகி விடும்.

## உதவிய நூல்கள்


1 தூரன், பெ. (தொகு). (1978) *பாரதி தமிழ் வசனத்திரட்டு*, புதுதில்லி : நேஷனல் புக் டிரஸ்ட்.

2. சுந்தரேசன், துரை. (1986). *தமிழ் ஆட்சிமொழி-ஒரு வரலாற்று நோக்கு*. தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.

3. சுப்பிரமணிய பாரதி, சி., (1968), *பாரதியார் கவிதைகள்*, சென்னை : வானதி பதிப்பகம்.

4. நந்தகுமார், பிரேமா., (1968). *பாரதியார்* கவிதைகள், சென்னை : வானதி பதிப்பகம்.

5. Marcel van Dijita, (1983), Better Translation for Better Communication-A Survey of the translation market, present and future, prepared for the European communities.

6. Sivakami, S., (1983). Bibliography on Translations, Madras: International Institute of Tamil Studies.

# 5

# தமிழ்நாட்டில் கல்வி வரலாறு

★

டாக்டர் ஜி. புகழேந்தி

''குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுற குடிமைவிதி''

மகாகவி பாரதி, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மகாகவி, தேசியக்கவி, விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட வேட்கையை உருவாக்கிய கவி, சமூகக்கவி. அவன் தமிழை ஓர் வலிமைமிக்க ஆயுதமாக்கி விடுதலைப் போராட்டத்தில் பயன்படுத்திப் பலன் கண்ட மாவீரன். சமூகக் கொடுமைகளைச் சாடியவன், சமூக மறுமலர்ச்சியை உருவாக்கக் கல்வியால் மட்டுமே முடியும் என்பதால் கல்வியை அனைவரும் பெறவேண்டும் என விரும்பியவன். எனவேதான்,

''வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி;
தேடு கல்வி யிலாத தோரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியவை கண்டீர்.

ஊனம் ஒன்று பெரிதிழைக் கின்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ''

என்று பாடினான்.

---

* முதல்வர், தியாகராசர் கல்வியியல் கல்லூரி, மதுரை.

கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழியை ஒப்ப, பள்ளியில்லா ஊரில் வாழ வேண்டாமென்பதோடல்லாமல் அத்தகு ஊரைக் கொளுத்தித் தீக்கிரையாக்கென வெகுண்ட பாரதியாரின் கனவு ஊர்தோரும் பலப்பல பள்ளிகளை உருவாக்கியது. மாணவர்களின் ஆர்வம், தேவை, உள்ளார்ந்த திறன் அனைத்துக்குமேற்பப் பல்வேறு பள்ளிகள் வேண்டுமென்று கனவு கண்டான். அதற்குரிய வழிமுறையாக மக்களிடம் வேண்டுகோளை வைக்கிறான். பள்ளிகள் கட்டுங்கள்; வேறு எதிலும் கிட்டாத புண்ணியம் மிக அதிகமாகக் கிட்டுமென்று அவன் பாடல் மூலம் ஆர்வமூட்டுகிறான்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்;
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.

கல்லாதார் இல்லாத நிலை வேண்டும்; எல்லோரும் கல்வி பெற வேண்டும், கல்விச் சாலைகள் பல்கிப் பெருகிட வேண்டும் என்பது பாரதியார் கனவு. அவன் கனவு நிகழ்வாகியதைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்குகிறது:

### பட்டியல்—1 கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி 1951 முதல்

| ஆண்டு | 1950-51 | 1960-61 | 1970-71 | 1980-81 | 1990-91 | 1991-92 | 1992-93 |
|---|---|---|---|---|---|---|---|
| துவக்க கல்வி | 209671 | 330399 | 408378 | 494503 | 558392 | 565786 | 572541 |
| உயர்துவக்ககல்வி | 13596 | 49663 | 90621 | 118555 | 146636 | 152077 | 153921 |
| உயர்நிலை/ மேல்நிலைக் கல்வி | 7416 | 17329 | 37051 | 51624 | 78619 | 81747 | 84086 |
| பொதுக்கல்விக் கல்லூரிகள் | 370 | 967 | 2285 | 3421 | 4862 | 5058 | 5334 |
| தொழிற்கல்விக் கல்லூரிகள் | 208 | 852 | 992 | 1317 | 886 | 950 | 989 |
| பல்கலைக்கழகக் கல்லூரிகள் | 27 | 45 | 82 | 110 | 184 | 196 | 207 |

கல்வி நிலையங்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியதோடல்லாமல் மக்களின் எழுத்தறிவுச் சதவீதமும் உயர்ந்துள்ளதைப் பட்டியல் 2 காட்டுகிறது.

### பட்டியல்—2 மொத்த மக்கட்தொகையில் கற்றோரின் சதவீதம்

| தமிழ்நாடு | 1981 | | | 1991 | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் |
| சதவீதம் | 54.39 | 68.05 | 40.43 | 62.66 | 73.75 | 51.33 |

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அவனது கனவை நோக்கி நடைபோட்ட தமிழகம் தடுமாறிக் கீழே விழுந்துவிட்டது. தற்போது ஊரெங்கும், தெருவெங்கும் பள்ளிகள், கல்விநிலையங்கள் என்கிற வணிக நிறுவனங்கள் (Commercial Institutions), பகற்கொள்ளையடிக்கின்ற பள்ளிகள், கண்கட்டி வித்தை காட்டும் கூடங்களாகப் பல்கிப் பெருகியுள்ளன. நம்மவர்கள் புண்ணியத்திற்காகக் கல்விப் பணியாற்ற வேண்டுமெனக் கனவு கண்டான் பாரதி. ஆனால் இன்றைய நிகழ்வு கல்வி கடைச் சரக்காகிவிட்டது.

பழந்தமிழ் மக்கள் வாழ்வோடு இயைந்த கல்விக்கு முக்கியத்துவம் தந்தனர். அரசியல், வாணிபம் போன்ற கல்வியினைப் பாரம்பரியமாக வழி வழியாய்க் கற்றுத் தேர்ந்தனர். வாழ்க்கைக்கு உதவுகின்ற கல்வியாகக் கலை, இலக்கியம், போர்ப் பயிற்சி, வானியல், கணிதம் போன்றவைகள் பாடப்பொருளாய் விளங்கின. எப்.இ.கே என்பவர், ''பழங்காலத் தென்னகத்தில் தமிழ்ப் பண்பாட்டோடு தொடர்புடைய ஒரு கல்வி முறை சிறந்து விளங்கியது'' என்றுரைக்கிறார். தமிழ்க்கல்வி என்பது இலக்கியப் படைப்புகள், இலக்கிய அறிவு பெறுதல் என்றே அமைந்திருந்தது. குருகுலக்கல்வி கல்வித்திட்டத்தில் வேதங்கள், உபநிடதங்கள், மருத்துவம், சோதிடம், கணிதம், வானஇயல், தர்க்கம், தத்துவம் போன்றவைகள் இடம் பெற்றன.

**கலைத்திட்டம் (curriculum)**

பாரதி கலைத்திட்டத்திலே (curriculum) உள்ளடக்கப்பட வேண்டியதாகக் கருதுவது நமது இலக்கியங்கள், நம்மைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல்கள். சுருக்கமாகக் கூறப்போனால் கல்வி வாழ்வோடு தொடர்புடையதாக இருக்கவேண்டும் எனக் கருதினான்.

கணிதம் பன்னிரண்டாண்டு பயில்வர், பின்
　　கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்;
அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
　　ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்;
வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்;
　　வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
　　சொல்லு வாரெட்டு ணைப்பயனுங் கண்டிலார்.

கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளி தாசன் கவிதை புனைந்ததும்,
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந் தளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்
நம்பருந் திறலோ டொரு பாணினி
ஞால மீதில் இலக்கணங் கண்டதும்,
இம்பர் வாழ்வின் இறுதிகண் டுண்மையின்
இயல் புணர்த்திய சங்கரன் ஏற்றமும்
சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும் தர்மம் வளர்த்ததும்,
பேர ருட்சுடர் வாள்கொண்ட சோகனார்,
பிழை படாது புவித்தலங் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்
அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்;
எனக் கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே

என உள்ளம் நொந்து, கல்வி எதை எதையெல்லாம் உள்ளடக்க வேண்டும் எனக் கனவு கண்டானோ அது இன்று வரை நடை பெறவில்லை.

தமிழகக் கல்வி வரலாற்றில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்கு மகத்தானது. கி. பி. 1600 ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் பொறுப்பேற்றபோது இந்துக் கல்விக்கான பாட சாலைகளும், ஆரம்பக்கல்வி மற்றும் உயர்கல்விக்கென இஸ்லாமியப் பள்ளிகளும் இயங்கி வந்தன. 1913 ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டம் இந்தியர்க்குக் கல்வி புகட்டுவதைக் கட்டாயமாக்கியது. 1835 மெக்காலே கல்விக்

கொள்கையடிப்படையில் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கிலம் பயிற்று மொழியாகி அனைத்துப் பள்ளிகளும் ஆங்கிலேயப் பாணியில மாறியவுடன் தமிழ்ப் பண்பாட்டு வழி அமைந்த பள்ளிக்கூடங்கள் நசிந்து போயின. இந்தியாவில் ஆங்கிலேய இயக்குநர் குழுவின் தலைவரான சார்லஸ் உட் என்பாரது அறிக்கை 1854-ல் வெளியிடப்பட்டது. உட் அறிக்கையின் அடிப்படையில் சென்னையில் பொதுக்கல்வி இயக்குநரகம் உருவாக்கப்பட்டது (DPI). சென்னைப் பல்கலைக்கழகம், இலண்டன் பல்கலைக்கழகத்தை மாதிரியாகக் கொண்டு நிறுவப்பட்டது. உயர்நிலைப்பள்ளி நிலையிலும், இந்திய மொழிகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்றும் இந்தியப் பண்பாட்டு வழி அமைந்த பள்ளிகள் தேசியக் கல்விமுறைக்கு அடித்தளமாக அமையவேண்டும் எனவும் உட் அறிக்கை பரிந்துரை செய்தது. ஒரு சிலருக்கென இருந்த கல்வி அனைவருக்குமென பரிணாம வளர்ச்சி பெற்றது. மதமாற்றத்திற்காகவும், விசுவாசத்தோடு பணியாற்றத் தேவையான கற்றவர்களை உருவாக்குகிற கல்வியாகவும் கல்வி ஏற்பாடு அமைந்திருந்தது. இந்த ஆங்கிலக் கல்வியைப் பற்றி பாரதி தன் சுய சரிதையில் கடுமையாகச் சாடுகிறான் :

நெல்லையூர் சென்றவ் வூனர் கலைத்திறன்
நேரு மாறெனை எந்தை பணித்தனன்;
புல்லை யுண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும், ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை
நாடு விப்பது போலவும், எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
ஆரியர்க்கிங் கருவருப் பாவதை,
நரியு யிர்ச்சிறு சேவகர், தாதர்கள்
நாயெ னத்திரி யொற்றர், உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்
பேடியர், பிறர்க் கிச்சகம் பேசுவோர்,
கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடுங்
கலைப யில்கென என்னை விடுத்தனன்
அருமை மிக்க மயிலைப் பிரித்துமிவ்
அற்பர் கல்வியின் நெஞ்சுபொ ருந்துமோ?

என்று அடிமை ஆங்கிலக் கல்வியைச் சாடியவன் நம் பராம்பரியத்தை, பண்பாட்டை, வரலாற்றை, இலக்கியத்தை அறியாத கல்வியால் எந்தப் பயனும் இல்லை என்பதையும் எடுத்துரைக்கிறான்.

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது;
தீதெனக்குப் பல்லாயிரஞ் சேர்ந்தன
நலமொரெட்டுணையுங் கண்டிலேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்.

வேறோர் இடத்திலே பாரதி வேறு வேறு மொழிகள் கற்பாய் நீ. வீட்டு வார்த்தை கற்கிலாய் போ, போ, போ என்கிறான். இன்றையச் சூழலும் தமிழ் மாணவன், தமிழகத்தில் பயிலும் மாணவன் தமிழே பயிலாமல், பட்டங்கள் பெற இயலும் என்ற அளவிலேயே உள்ளது.

பயிற்றுமொழி

பயிற்றுமொழி குறித்து பாரதி கண்ட கனவு-தமிழால் முடியும் என்பதுதான்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனின் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்
பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

என்று கனவு கண்டான். நிகழ்ந்ததென்ன? நாம் தவழ்ந்து முன்னேற முயல்கிறோம்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் — இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து — இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

பாரதியின் இக்கனவு நிறைவாகி வருவதைப் பட்டியல் எண் 3 விளக்குகிறது. அரசு உலக வங்கியின் கடனுதவியோடு கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் (DPEP) மாவட்ட ஆரம்பக் கல்வித் திட்டம் போன்றவைகளைச் செயல்படுத்தி வருகிறது.

**பட்டியல் - 3**

மனிதவள மேம்பாட்டிற்கான மொத்தச் செலவு
(மூலதனம் & நடைமுறைக்கு) 1980-81 நிலையான விலையில்
தமிழ்நாடு—ரூபாய் கோடியில்

| ஆண்டு | 88-89 | 89-90 | 90-91 | 91-92 | 92-93 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவு | 631-51 | 1023-00 | 1139-92 | 1103-59 | 1097-95 |
| வளர்ச்சி வீதம் | 1-19 | 22-88 | 11-43 | -3-19 | -0-51 |

## பெண் கல்வி

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
    பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
    இளைப் பில்லை காணென்று கும்மியடி
வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
    வேண்டி வந்தோ மென்று கும்மியடி

என்ற பாரதியின் இக்கனவு நிகழ்வாகி வருகிறது. இதே கருத்தைப் புதுமைப்பெண் என்ற பாடலில்,

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுதலார் தங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்
சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுகரியங்கள் பலபல செய்வராம்.

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே' என்ற பாரதியின் கனவு நனவாகி வருகிறது.

### தொழிற் கல்வி

ஆங்கிலேயரால் பரவலாக்கப்பட்ட கல்வியைச் சுதந்திரத்திற்குப் பின்னால் நாட்டின் வளர்ச்சித் திட்டத்திற்கேற்ப மேம்படுத்தத் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே
இழையை நூற்று நல்லாடை செய்வீரே

என்ற அவன் எண்ணம், தொழிற்கல்வி மூலம் ஈடேறியுள்ளது. இரும்பு எஃகுத் தொழிற்சாலை, சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் ஏற்றுமதி வகையில் பெரும்பங்கை ஈட்டியிருக்கின்றன.

மத்தியக் கல்வி ஆலோசனை வாரியம் (Central Board of Secondary Education) 1952 ஆம் ஆண்டு லட்சுமணசாமி முதலியார் தலைமையில் இடைநிலைக் கல்வியை ஆராய்வதற்காக இடைநிலைக் கல்விக் குழுவை நியமனம் செய்தது. இக்குழுவின் பரிந்துரைப்படி உயர்நிலைப் பள்ளிகளில் 11+1+3 முறையில் விவசாயம் தொடர்பான, தட்டச்சு போன்ற பலநோக்குப் பாடங்கள் (Diversified course) இடம்பெற்றிருந்தன. இந்தியக் கல்விக்குழு 1964-66 பேராசிரியர் கோத்தரியின் தலைமையில் அளித்த அறிக்கையின் அடிப்படையில் 1978ஆம் ஆண்டு முதல் 10+2+3 முறை இன்றளவு பின்பற்றப்பட்டு வருகிறது. தேசியத் தொழிற் கல்வி புனரமைக்குழு (1978) டாக்டர் ஆதிசேஷயாவைத் தலைவராகக் கொண்டது. தொழிற்கல்வியின் கல்வி அமைப்புக்கான தேசியக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டு தொழிற்கல்வி மேம்பாட்டுக்கு முயற்சி எடுக்கப்பட்டது. இன்று பல்கலைக்கழக மான்யக் குழு பல்கலைக்கழக அளவில் முதல் பட்டப்படிப்பில் தொழிற்கல்வி (vocationalisation at the first degree level) என்பதைக் கடந்த 1993-94 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது.

### தாழ்த்தப்பட்டோர் கல்வி

பாரதி தாழ்த்தப்பட்டோர் கல்வி பெற்று மேம்பாடு அடைய வேண்டும் என விரும்பினார்.

திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே

வாழி கல்வி செல்வம் எய்தி
மன மகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் சரிநிகர்
சமானமாக வாழ்வமே

என்றார். அவன் கனவு நிகழ்வாகி வருவதைப் பின்வரும் பட்டியல் விளக்குகிறது.

பட்டியல் — 4

தமிழகத்தின் பல்வேறு கல்வி நிலையில் S.C. மாணவர்களின் சேர்க்கை — 1992-93.

| கல்விநிலை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆரம்பக்கல்வி | 8,62,307 | 7,14,119 | 15,76,426 |
| நடுநிலைக் கல்வி | 3,57,036 | 2,61,421 | 6,18,457 |
| உயர்/மேல்நிலைக்கல்வி | 1,81,966 | 98,714 | 2,80,680 |
| உயர்கல்வி | 26,546 | 13,137 | 39,683 |

### முடிவுரை

தமிழகக் கல்வி வரலாற்றைப் பாரதியின் கனவு அடிப்படையில் ஆழ்ந்து நோக்குங்கால் கல்விக்கான வசதி வள வாய்ப்புகள் பல்கிப் பெருகி வந்துள்ளன. தற்போதைய அரசியல் கொள்கைகள் கல்வியைக் கை கழுவி விட்டதால் ஏற்கனவே ஏற்பட்ட வளர்ச்சி தொடருமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. பயிற்று

மொழி, தமிழ் மொழி குறித்துப் பாரதி கண்ட கனவு பகற்கனவாயிற்று. பெண்கல்வி, தாழ்த்தப்பட்டோர் கல்வி குறித்த கனவுகள் நனவாகி வருகின்றன.

## துணை நூல்கள்

ஜெயா கோதை பிள்ளை : பழந்தமிழர் கல்வி, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்—624 102.

மனித வள மேம்பாட்டு அமைச்சகம் } ஆண்டறிக்கை—1993-94, University News September 19, 1994.

மகாகவி பாரதியார் கவிதைகள்; மகாகவி பாரதியார் கட்டுரைகள்.

# 6

# பாரதியாரின் ஆட்சிமுறை : நுண்ணோக்கு

டாக்டர் தி. கல்யாணி ★

"குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை விதி"

மக்களின் எண்ணங்கள், நம்பிக்கைகள் மற்றும் நெறிகள் ஆகியன அரசியல் முறைமையோடு எங்ஙனம் தொடர்பு கொண்டுள்ளன என்பதுதான் அரசியல் கலாச்சாரம். இந்திய மக்கள் அறநெறி தழுவிய தருமக்கோட்பாட்டு நம்பிக்கையுடையவர்கள். இவை மதத்தின் மையக் கருத்தாக அமைந்ததால், அரசியலும் சமயமும் இணைந்து செல்லக்கூடிய நிலை ஏற்பட்டது. எனவே, பாரதியார் பாடல்கள் இறைவனை வணங்கி, வேண்டுகோள் விடுவதாக அமைந்துள்ளன. இறைவன்தான் எல்லாவற்றிற்கும் நல்வழி காட்டக்கூடியவன், இறைவனால்தான் முடியும் என்ற நிலையில் பல பாடல்கள் அமைந்துள்ளன. சுதந்திர வேட்கையோடு விம்மி, சிவந்து அனல்கனக்கும் பாடல்களைப் பாடியதோடின்றி, அரசியல் பங்கேற்பாகச் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தவர் இவர்.

ஆட்சிமுறை அர்த்தசாத்திரக் காலத்திலிருந்து இன்றுவரை மக்களின் பொருளாதார மேம்பாட்டையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தக்கூடிய பொருளாதாரக் கண்ணோட்டமுறை செயல்பட்டு வருவதைப் பாரதியார் கண்ணுற்றார். இதனால் மக்கள் எப்படிப்பட்ட தொழில்களை நடத்தி வாழ்க்கைத் தரத்தையும் நாட்டின் மேம்பாட்டையும் அடையலாம் என்ற பொருளாதாரக் கொள்கைகளையும் பல இடங்களில் கூறியுள்ளார்.

பாரதியார் அரசியல் மரபு, அரசியல் பங்கேற்பு மற்றும் அரசியல் கலாச்சாரம் பற்றித் தனது பாடல்களில் பல இடங்களில்

---

★ இணைப் பேராசிரியை, அரசியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

சுட்டிக் காட்டுகின்றார். மாறுகின்ற அறிவியல் முன்னேற்றத்திற்கிணங்க, தொழில்நுட்ப முறைகள் நேரத்திற்கு நேரம் நவீனமாகிக் கொண்டே வருகின்றன என்பது அனைவருக்கும் தெரிந்ததே. தொழில்நுட்பத்தால் மனிதனின் வாழ்க்கை முறையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் இந்திய அரசியலில் பங்கேற்பின் அளவு அதிகரித்து இந்திய அரசாங்கத்தை நடத்தும் முறை வளர்ந்து வந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. இலஞ்சம் வளராத சமுதாயத்தில் சிறப்புரிமை; வளர்ந்த சமுதாயத்தில் புற்றுநோய்; ஆனால் வளர்ந்து வருகின்ற சமுதாயத்தில் சிறப்புரிமையாக உயர்பதவியில் அங்கம் வகிப்போர் நினைக்க எத்தனிக்கின்றனர்; பின்னர் தவறு என்று வளர்ந்த சமூகக் கண்ணோட்டத்திற்குச் செல்ல நினைக்கின்றனர். ஆனால் நிலவுகின்ற சமூக, பொருளாதார, சமய மற்றும் பல காரணிகளால் மீள முடியாது தவிக்கின்றனர். இதேபோல்தான் பாரதியார் பாடல்கள் அனைத்தும் வளர்ந்த சமூகத்திற்கு முழுக்க உரித்தானவையாக, வளர்ந்த சமூகம் ஏற்படுவதற்காகப் பாடிய பாடல்கள் ஆகும். ஆங்கிலேய ஆட்சியில் தனியுரிமை மறுக்கப்பட்டால் அடிமைத்தளையில் உள்ளோம் என நொந்து கொள்ளலாம். நம்முடைய ஆட்சியில் தனியுரிமை மறுக்கப்படுகின்ற சூழ்நிலை வந்தால் எப்படி நொந்துகொள்ள முடியும்? ஏனெனில் இது நம்முடைய ஆட்சி அல்லவா? நமக்காக நாமே நடத்துவது அல்லவா? எவ்வாறு நல்லமுறையில் நடத்தவேண்டும் எனபதைச் சிந்தித்து, சிந்தித்த பின் தொகுப்பாக நம்முடைய ஆட்சியின் கொள்கைகள் உருவாக வேண்டும்.

அவ்வாறு உருவாகும் கொள்கைகள் மக்களின் குறைகளைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாகவும அமையும். மக்கள் எதிர்பார்க்கும் நோக்கங்களை அடையவும், நாட்டின் நலன் கருதி நாட்டை உலக நாடுகளின முன்வரிசையில் கொணடுவரவும உதவும். இந்தியாவை ஒருமைப்படுததிப் பாடிய பாரதி, உலகததின சவால்களைச் சநதிககவும, உலக விவகாரஙகளில் இந்தியாவின் பங்கு கணிசமாக இருகக வேணடுமென்பதும் பாரதியாரின கனவு. அக்கனவை நினைவாக்க வேண்டும்.

> தணணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா இப்பயிரைக்
> கண்ணீரால் காத்தோம்!

சுதந்திரம் பெற அரும்பாடுபட்ட நமது போராட்ட வீரர்களின் வீரத்தாலும், தியாகத்தாலும், தங்களையே தியாகம் செய்த இதயங்களால் கிடைத்ததே நம்முடைய சுதந்திரம். இதனை 1919 ஆம் ஆண்டே பாடியுள்ளார் பாரதியார். ஏனெனில் ஜெயமுண்டு பயமில்லை மனமே என்ற உறுதிப்பாடு கொண்டவர் பாரதியார்.

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்-இனி அஞ்சிடோம்
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ?-தெய்வம் பார்க்குமோ?

நம்முடைய சொந்த நாட்டில் அடிமையாக இருப்பதென்பது எண்ணிப்பார்க்க முடியாதது என்கிறார் பாரதியார். சொந்த நாட்டில் சுதந்திரம் பெறாது சமூகச் சீர்திருத்தங்களை ஆங்கிலேயர்கள் மூலம் செய்துகொண்டு பின்னர் அரசியல் சுதந்திரம் பெறலாமென்ற மிதவாதிகளைக் கடுமையாகச் சாடியவர் இவர். இவர் தீவிரவாத இயக்கக் கருத்துடையவர். ஆங்கிலேயரைக் காட்டிலும் இந்தியர்கள் அறிவுடையவர்கள், பண்பாடு மிக்கவர்கள், வளர்ந்த நாகரிகத்தில் வாழ்ந்தவர்கள் என்பதை நமது வேத இலக்கியங்கள் நமக்கு சான்று பகர்கின்றன. எனவே, இவற்றை ஆதாரமாகக் கொண்டு நாம் நமது ஆட்சியை நடத்த வேண்டுமென்ற கருத்துக் கொண்டவர் பாரதியார்.

நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாளெங்கள் தாய்—அவர்
அல்லவ ராயினவரை விழுங்கிப் பின்
ஆனந்தக் கூத்திடுவாள்

என ஆட்சி செய்யும் இயல்பைக் கூறுகின்றார். இதே கருத்தை திருவள்ளுவர்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு

என அரசாட்சியின் மாண்பையும் தீமைகளையும் கூறுகின்றார். எனவே ஆட்சியானது செம்மையாகப் பலரும் போற்றும் வண்ணம் இருக்க வேண்டுமென்கிறார். 'குருகோவிந்தர்' பாடலில் இதனையே

மறுபடியும் 'அரசன் இல்லாது தெய்வமே அரசர்' என்கிறார். இந்திய அரசியலில் மதத்தின் பங்கு அளவிட முடியாதது. இரண்டும் இணைந்தே காணப்பட்டு, மதக் கோட்பாடுகள் அறநெறி முறைகளாக, ஆட்சிக்கு மையக் கருத்தாக அமைந்தன. தருமம் என்ற சொல் அனைத்து நன்னெறிகளின் விளக்கம். வாழ்விற்குத் தேவையான அனைத்து நற்பண்புகளின் உறைவிடமாகத் திகழ்வது தருமம். இத்தருமத்தைக் காப்பதே அரசனின் கடமையாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதுவே பண்டைய இந்திய அரசியல் சிந்தனை. இதனையே நாம் பாரதியார் பாடலிலும் காண்கிறோம்:

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி

அரசாங்கம் என்பது குடிமக்களின் எண்ணங்களுக்கேற்ப அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், குடிமை நீதி என்பதை வரையறுத்து அதன்படிதான் அரசு ஆட்சி செய்ய வேண்டும் என்கிறார். நாம் இன்று சொல்லக்கூடிய மக்களாட்சியை இவ்வாறு கூறுகின்றார் என வைத்துக் கொள்ளலாம். மக்கள் அரசாங்கம்,

குனிந்தால் வரி, நிமிர்ந்தால் வரி, நின்றால் வரி,
உட்கார்ந்தால் வரி, நில வரி, நீர் வரி, பாசி வரி,
ரோட்டு வரி, காட்டு வரி, வீட்டு வரி, மோட்டு வரி,
கொடுக்கல் வரி, வாங்கல் வரி, வருமான வரி,
தொழில் வரி, டோல் கேட்டு வரி, ரயில் வரி, சாக்கடை வரி,
சாராயக்கடை வரி, மாட்டு வரி, ஆட்டு வரி, நாய் வரி,
பூனை வரி, இறக்குமதி வரி, ஏற்றுமதி வரி

என்று எண்ணற்ற வரிகளை விதிக்கக் கூடாதென்பதுடன், இவ் வரிகளைச் செலுத்தாதோரின் வீடு, வாசல், நிலம், தரை, ஆடு, மாடு, சட்டி, பெட்டி இவைகளை ஜப்தி செய்து ஏலங்கூறிக் கொள்ளையடித்துப் போகும் சர்க்கார் பணத்தை நாம் ஏன் திரும்பக் கொள்ளையடிக்கக் கூடாது என்று அரசாங்கத்தையே எதிர்த்து முழக்கமிடுகின்றார். ஆனால் நடைமுறையில் ஒருசில வரிகள் தவிர, பிற வரிகள் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றன என்பதை நினைவில் நிறுத்துக.

அரசாங்கத்திற்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்தால் தனி நபர் உரிமை பாதிக்கப்படுமென்பதை,

தந்த பொருளைக் கொண்டே ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை — இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அமர்வார்.

என்கிறார். நம்முடைய வரிப்பணத்தால் இயங்கும் அரசாங்கம் அதிகமான அதிகாரம் பெற்றுவிட்டால் அதனை எதிர்க்கவல்ல தனிநபர் சக்தி மட்டுப்படுத்தப்படுவதால் அரசாங்கத்தை எதிர்க்க இயலாது; அஞ்சுதற் பொருட்டாகி விடுமென்கிறார். மகாத்மா காந்தி அடிகளும் இக்கருத்தைத்தான் வெளியிடுகின்றார். அரசாங்கம் மிதமிஞ்சிய அதிகாரம் பெற்றுவிட்டால் தனிநபர் முழுச் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது என்கிறார். தனிநபர் முழுச் சுதந்திரத்துடன் வாழ அதிகாரங்கள் அரசாங்கத்தில் குவிந்து இருக்கக் கூடாது என்கிறார்.

எல்லோரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

என்று ஆணித்தரமாகக் குடியரசு முறை அரசாங்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றார். மன்னராட்சியை ஆதரிக்க வல்லவராயினும், பல சமயங்களில் மன்னராட்சி பயனளிக்கவல்லதாக இல்லையென்பதை, ''இன்றைய நாள் வரையிலும், அறமிலா மறவர் குற்றமே தமது மகுடமாகக் கொண்டோர் மற்றை மனிதரை அடிமைப்படுத்தலே முற்றிய அறிவின் முறையென்று எண்ணுவார்'' எனக் கண்டனம் தெரிவிக்கின்றார். மேலும் இங்கிலாந்தில் ஜார்ஜ் மன்னன் கொடுங்கோன்மையையும் சுட்டிக் காட்டுகிறார்.

உழுது விதைத்து அறுப்பவருக்கு உணவில்லை
பிணிகள் பலவுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்கள்
உண்டு; உண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு;
தூக்குண்டே இறப்பதுண்டு

எனச் சாடுகின்றார். ஆகவே மன்னராட்சியில் அடிமைப்படுத்துதல், உழைப்பாருக்குரிய ஊதியம், பொய்யர் செல்வம் சேர்ப்பர், உண்மை சொல்வார்க்குச் சிறைத் தண்டனையும், தூக்குத் தண்டனையும் உண்டு. ஆகவே மன்னராட்சியில்லாது மக்களாட்சி ஏற்பட

வேண்டுமென்றும், இதில் அடிமைக்குத் தளையில்லை; யாருமிப்-போது அடிமையில்லை அறிக என ருஷ்யப்புரட்சி ஆட்சி மாற்றத்-தைக் கூறுகின்றார். ஒட்டு மொத்தத்தில் மக்களாட்சி சிறந்த ஆட்சி என்பதை அறிந்து கூறுகின்றார்.

மக்களாட்சியைப் பாரதியார் வலியுறுத்தும் வேளையில், மக்கள் எப்படியிருக்க வேண்டுமென்பதையும் உணர்த்துகின்றார்:

கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மையென்றும் வேண்டுவாய் போ போ போ
நன்று கூறி லஞ்சுவாய் போ போ போ
நாணிலாது கெஞ்சுவாய் போ போ போ
வென்று நிற்கும் மெய்யெலாம் பொய்யாக
விழிமயங்கி நோக்குவாய் போ போ போ
ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தருமமொன் றியற்றிலாய் போ போ போ
நீதிநூறு சொல்லுவாய் கா சொன்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ

இப்பாடலில் மக்கள் பயமின்றி, பிரச்சனைகளைத் தெளி-வாக ஆட்சியாளரிடம் தெரிவிக்கக்கூடியவர்களாக, பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக, அடிமைத்தனம் இல்லாத-வர்களாக இருக்கவேண்டும் என்கிறார். நல்லதைக் கூறக்-கூடியவர்களாக, வெட்க உணர்வு கொண்டவர்களாக, அதாவது தவறு செய்வதற்கு அஞ்சுபவர்களாக இருக்கவேண்டும். எது நீதி என்பதையறியாத மயக்க நிலையில்லாது, அறநெறியைத் தெளிவாக வகுக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். ஜாதி, பிரிவினை இல்லாது, தருமத்தை கடைப்பிடிக்க வல்லவர்களாக, காசுக்கு அடிமையாகாது செயல்படக் கூடியவர்களாக மக்கள் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். ஏனெனில் இவையெல்லாம் ஆங்கில ஆட்சியில் இருந்தது. இவையெல்லாம் சுதந்திர ஆட்சியில் இருக்கக்கூடாது என்று எச்சரிக்கின்றார். ஏனெனில் இப்பேர்ப்பட்ட தன்மை கொண்ட மக்களிடம் அரசாங்-கத்தை அமைக்க அனுமதித்தால் எப்படிப்பட்ட அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பர் என்பதை நினைத்துப்பார்க்கவே பயமாக உள்ளது. ஏனெனில் அந்த ஆட்சி, பணமுள்ளோர் ஆதிக்க

ஆட்சியாகவே, நெறி தவறியவர்களின் அதர்ம ஆட்சியாகவே, சாதிச் சுரண்டலின் வெறியாகவே, நல்லது யாதெனத் தெரியாது மக்களை அடிமைப்படுத்தும் அடிவருடிகளின் ஆட்சியாகவே இருக்கும். எனவே, அது வரக்கூடாது என 1991-ல் கூறியுள்ளார்.

முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை — வாழ்க

எனவும்,

ஜாதி மதங்களைப் பாரோம்

எனவும்,

முப்பது கோடியும் வாழ்வோம் — வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்

எனவும் ஒன்றுபட்ட சமுதாயத்தை, அனைவரும் பங்கேற்றுப் பயன்பெறும் மக்களாட்சியைக் கூறுகின்றார் இவர்.

ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ?
வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்தில் போக்கியே
பொன்னை அவள் அந்தப்புரத்தினிலே போக்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்!

எனப் பாஞ்சாலிக்குத் துச்சாதனன் செய்த கொடுமையைப் பார்த்து வேடிக்கை பார்த்த மக்களைக் கடுமையாக விமரிசிக்கின்றார். எந்த அரசியலுக்கும் வன்முறை இலக்கு ஆகாது. அவ்வாறு வன்முறையைப் பார்த்து ஏதும் செய்யாது வாளா இருந்துவிட்டால் வன்முறை நீங்கா இடம் பெற்றுவிடும். பின்னர் அரசாங்கம் வோரா (Vohra Committee) குழுவை அமைக்க வேண்டும். அதன் பரிந்துரைகள்தான் என்னவெனப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் கேட்கவேண்டும். அரசாங்கம் அறிக்கையை முழுவதும் கொடுக்க Attorney General ஆலோசனையைப் பெற வேண்டுமென்ற சூழ்நிலைகளெல்லாம் ஏற்படுமென்பதை முன்கூட்டியே உணர்ந்ததால்தான் மக்களை நெட்டை மரங்கள்

வீரமிலா நாய்கள் எனக் கடுஞ்சொற்களால் கூறுகின்றார். எனவே வன்முறை எங்கெங்கு தோன்றினாலும் அதனை அகற்றி, ஆரோக்கியமான மக்களாட்சிக்கு வழிவகுக்க வேண்டுமென்கிறார் பாரதியார்.

பாரதியார் கலியுகம் மாறி, கிருதயுகம் தோன்றுமெனக் கூறியுள்ளார். கிருதயுகமென்பதற்குப் பலர் பலவிதமாகப் பொருள் கூறினாலும், நடைமுறையில் உள்ள இன்றைய ஆட்சி-யைத்தான் கிருதயுகமென எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் சுதந்திர மண்ணில் சுதந்திரக் காற்றை அனுபவித்துச் சுதந்திரமாக ஆட்சி செய்யும் நிலைதான் கிருதயுகம். கலி போல் வீழ்ந்தான் ஸார் மன்னன் என்றும், கிருதயுகம் அங்கு வந்துவிட்டதென்றும் கூறுவதிலிருந்து இவ்வாறு பொருள் கொள்ளலாம்.

மண்ணில் யார்க்கும் துயரின்றிச் செய்வேன்!
வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்!

எனக் 'காளி தருவாள்' பாடலில் கூறக் காண்கின்றோம். தவிர ஆட்சி எவ்வாறு விளங்க வேண்டுமென்பதை,

பூமண்டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக, துன்பமும், மிடிமையும், நோவும்
சாவும நீங்கிச் சார்ந்த பல்லுயி ரெல்லாம்
இன்புற்று வாழ்க! என்பேன், இதனை நீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி
'அங்ஙனே ஆகுக! என்பாய் ஐயனே!

என்பதிலிருந்து ஆட்சியின் இயல்பும், ஆட்சியின் பொறுப்பும் இத்துணை சிறப்பானதென்பதை அறிய முடிகின்றது.

பூமியில் எவர்க்கும் இனிஅடிமை செய்யோம் பரி
பூரனனுக்கே அடிமை செய்து வாழ்வோம்

என்று அடிமைத்தளை என்பது கிடையவே கிடையாதென்-றும், யாருக்கும் யார் சளைத்தவரல்ல என்றும் உலக மகா-சக்தியான தெய்வப்பக்திக்கு எப்போதும் பணிசெய்து கொண்டே இருப்போம் எனனும் தெள்ளத் தெளிவாகப் பல இடங்களில் காட்டு கின்றார் பாரதியார்.

பாரதியார் எதையும் அறிந்து, அதன் பின்னர்தான் யதார்த்த நிலையில் உண்மைகளை வெளியிடக்கூடியவர். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' என்றால் உலக மொழிகள் பல கற்று உணர்ந்து, அதன் பின்னர் தமிழ் மொழியோடு ஒப்பிட்டு, பின்னர்தான் அவ்வாறு கூறு-கின்றாரே தவிரத் தமிழ் மொழியை மட்டுமே பயின்று, பழகிப் பின்னர் இதுபோல் எந்தவொரு மொழியுமில்லை என்று கூறும் குறுகிய உணர்வு அரசியல் வாதியல்ல. பல மொழிகளோடு ஒப்பிட்டுத் தமிழ் மொழியின் சிறப்பை வர்ணிக்கின்றார்.

இதுபோல் சுதந்திரப் போராட்டக் காலத்திலும் வங்காள தேசபக்தர் பிபின் சந்தராபால் அவர்களை அழைத்து சென்னையில் கூட்டங்கள் போட்டு அரசியல் விழிப்புணர்வை உருவாக்கியவ-ரென்றால் மிகையல்ல. ஏனெனில் இவரை வைத்துக் கூட்டங்கள் நடத்தக்கூடாதென்ற ஆங்கிலேய அரசாங்கம் அச்சுறுத்தியனத-யெல்லாம் மிகவும் அற்பமாக நினைத்துக் கூட்டங்களை நடத்-தினார். பிபின் சந்திராபால் அவர்கள்பால் மக்கள் மிகுந்த பாசமும் பற்றும் வைத்திருந்ததையும், இந்தியச் சுதந்திரத்திற்குப் பேரா-தரவு கொடுத்ததையும் ஆங்கிலேய அரசால் ஜீரணிக்க முடிய-வில்லை. தேசபக்தர்கள் மீது தண்டனைக் கணைகள் பல பாய்ந்-தன. பாரதியார் இவற்றையெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக்-கொள்ளவில்லை என்பதை அறிக.

பாரதியார் தொழில்மயமான இந்திய நாட்டைக் கண்ணுறு-கின்றார். அவரின் கற்பனை வளத்தாலும் நாட்டுப் பற்றினாலும் உதித்த நல்முத்துத்தான் இப்பாடல்:

வெட்டுக் கனிகள்செய்து தங்கம் முதலாம்
வேறுபல பொருளும் குடைந் தெடுப்போம்
காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்
பட்டினில் ஆடையும், பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்
வானை அளப்போம், கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்

காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம், கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்

இவ்வாறு சுரங்கம் தோண்டி தங்கம் எடுப்பது முதல், வளர்ந்த தொழில் நுட்பத்துடன் உலகப் பொருளாதாரம் முழுவதையும் சொல்லி, தொழில் மயமாக வேண்டுமென்பதுடன், உண்டு களிப்போரை நிந்தனை செய்வோமெனச் சோம்பேறிகளைச் சமூகப் பகிஷ்காரம் செய்வோமெனக் கூறுகின்றார். அனைவரும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பங்கேற்க வேண்டுமென்ற அவசியத்தை உணர்த்துகின்றார் பாரதியார். பாரதியாரின் கருத்துக்கள் காலந்தோறும் பயன்படும். காலத்தால் மாறாத வண்ணம் நிலையான கருத்துக்கள். இவற்றை ஆட்சியாளர்கள் நேரத்திற்கு நேரம் தெரிந்துகொள்ளும் வண்ணம் பயிற்சி வகுப்புக்களுக்கு ஏற்பாடு செய்வது நன்று. கோப்பின் தவறை உயர் அதிகாரி சுட்டிக்காட்டிப் பணியாளர்களைப் பண்படுத்துவதைக் காட்டிலும், பண்பட்ட பணியாளர்கள் பொறுப்புணர்ந்து செயல்பட அறநெறிப் பயிற்சி வகுப்புக்கள் அவசியம். இதுதான் இன்றைய நாளில் உள்ள நிர்வாகக் கேடுகளைத் தீர்க்கும். பாரதியார் பாடல்கள் இப் பயிற்சி வகுப்பிற்குச் சிறந்த பாடத்திட்டம்.

**பார்வை நூல்**

டி.வி.எஸ்.மணி; சீனி. விசுவநாதன், பாரதியார் கவிதைகள், வானவில் வெளியீடு, சென்னை, 1981 (மறுபதிப்பு).

# 7

# முறைசாராக் கல்வியும் அறிவொளி இயக்கமும்

★
ச. மாடசாமி

''வீடுதோறும் கலையின் விளக்கம் - வீதி
தோறும் இரண்டொரு பள்ளி''

**புதிய துவக்கம்**

மகாகவிகள் கனவு காண்கிறார்கள். மக்கள் இயக்கங்கள் அந்தக் கனவுகளை நனவாக்குகின்றன. கனவுகள் இல்லாத இயக்கங்கள் லட்சியங்களைச் சரியவிடுகின்றன. இயக்கமாகாத கனவுகள் நீர்க்குமிழிகளாய் உடைகின்றன. நிறைவேறாத கனவு-கள் எல்லாக் காலங்களிலும் இருக்கின்றன. இன்றும்கூட, 'நேருவின் ரோஜாக்கள்' சிரிப்பும் விளையாட்டும் மறந்து ஓட்டல்-களில் பெஞ்சு துடைக்கின்றன. இன்றும்கூட 'பாரதியின் சிட்டுக்-கள்' பள்ளிக்கூட ஆசை விட்டு, தீப்பெட்டி ஆபீஸ் பஸ்ஸுக்குள் அதிகாலையில் அடைபடுகின்றன. இன்னும்கூட, பிஞ்சுக் கைகள் முறிபடுகிற ஓசை கேட்டபடி இருக்கிறது. தேசத்தின் போக்கு 'ஏன் பிறந்தனன் இத்துயர் நாட்டினிலே' என்று மகாகவிகளையும் கண் கலங்க வைக்கிறது.

மனிதநேயமும், கூட்டு முயற்சியும், சலிப்படையாத நம்பிக்-கையும் மானுடத்தின் அடித்தளம். எனவேதான், சோர்வுகளை எல்லாம் தாண்டித் தன்னலமற்ற முயற்சிகள் மீண்டும் மீண்டும் பிறக்கின்றன; தழைக்கின்றன; வாழ்கின்றன. சமூக உணர்வு உள்ள இயக்கங்களின் சக்கரங்கள் நினறுபோகாமல் சுழல்-கின்றன. ஒவ்வோர் இயக்கமும் ஒரு கவிதை போல! பிரெஞ்சுப் புரட்சியை 'மகோன்னதமான அழகு' (A terrible beauty) என்று அழைத்தார் கவிஞர் யீட்ஸ். 1991-இல் தமிழகத்தில் அறிவொளி பிறந்தது. அறிவொளியும் ஓர் அழகுதான். ''தூங்காதே எழுந்-தென்னைப் பார்'' என்று தட்டி எழுப்பிய பேரழகு. ஏழை உழைப்-பாளி மக்களின் வீடு தேடி வந்த அழகு.

---

* தமிழ்த்துறை, சைவபானு க்ஷத்திரிய கல்லூரி, அருப்புக்-கோட்டை.

காலங்காலமாய் வகுப்பறைகள் உருவாக்காத கல்விச்-சூழலை அறிவொளி உருவாக்கியது. அறிவொளி மையம் என்பது ஒரு கல்வி கலாச்சார மையம். வகுப்பறையின் நிழல் அங்கே விழவில்லை. அறிவொளி மையத்தில் கற்பனையும், சுதந்திரமும் கைகோர்த்தன. வார்த்தைகள் அங்கே உயிர் பெற்றன. பாடலும் நாடகமுமாய் கல்வி புதிய வடிவம் பெற்றது. முக்கியமாய் கல்வி ஒருவழிப் பாதையாக இல்லை. கற்போரும் கற்பிப்பவரும் சேர்ந்து கற்றார்கள்.

தொண்டர் 'நிலா' என்று எழுதியபோது, 'ஒரு கரண்டி மாவில ஊரெல்லாந் தோசை' என்ற விடுகதை அவர்கள் ஞாப-கத்துக்கு வந்தது. 'வெங்காயம்' என்றால், 'குட்டப் புள்ளைக்குக் குருணி நகை' என்பார்கள். வெள்ளைப்பூண்டு என்றால், 'ஒம்பது பேருக்கு ஒரே குடுமி' என்பார்கள். தொண்டர் செய்தித்தாள் வாசித்து நாட்டு நடப்புகளைச் சொல்லும்போது, 'திங்கிறவன் தின்னுட்டுப்போக, திருப்பத்தூரான் தெண்டம் கட்டினானாம்' என்று அபிப்பிராயம் தெரிவிப்பார்கள். 'நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச் சுமை போகாது' என்று முடி-வெடுப்பார்கள். 'அக்கப்போர் புடிச்ச நாய், வைக்கப்போர்ல படுத்-துக்கிட்டு தானும் திங்காதாம்; திங்கிற கழுதையவும் திங்கவிடா-தாம்' என்று தங்கள் ஊர்ப் பிரச்சினையை விமர்சிப்பார்கள். அனு-பவம் தோய்ந்த வார்த்தைகளால் அவர்கள் மொழிக்கு உயிரூட்டி-னார்கள்.

அறிவொளி மையங்களில் மக்கள் சிரித்தார்கள்; பேசினார்-கள்; விவாதித்தார்கள்; கேள்வி கேட்டார்கள். அடடே! அறிவொளி திறந்துவிட்ட கதவுகள் எத்தனை? உடைத்தெறிந்த பூட்டுகள் எத்தனை? நூற்றாண்டு கால இருட்டைக் கலைத்து, வெளிச்சம் மெல்ல பிரவேசிக்கிறது. இறுகிப்போன மௌனத்தை உடைத்து, பேச்சுச்சத்தம் கேட்கிறது. நிச்சயமாய், அறிவொளி ஒரு புதிய துவக்கம்.

### கனவுகளும் இயக்கங்களும் வளர்ந்த வரலாறு

1901ஆம் ஆண்டு. இந்தியாவில் நூற்றுக்கு 5 பேருக்கு மட்டும் எழுதப் படிக்கத் தெரியும். பெண்களின் நிலை படுமோசம். இருநூறு பெண்களில் ஒரு பெண்ணுக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும். கல்விக்கூடங்கள் மிகக் குறைவு. கல்வி பற்றிய விழிப்-

புணர்வும் குறைவு. கிறித்தவ மத நண்பர்கள் 19 ஆம் நூற்றாண்டில் 'இரவுப் பள்ளிகளை'த் (Night School) துவக்கி நடத்தினர். இவைதாம் ஆரம்பகால 'முறைசாராக் கல்வி மையங்கள்'. இரவுப் பள்ளிகள் எழுத்தறிவு நிலைமைகளில் சத்தமில்லாத மாற்றங்களை ஏற்படுத்தியது உண்மை. அதன் விளைவாக 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 'பெண்கல்வி'யில் தமிழகத்தில் நெல்லை மாவட்டம் முதலிடத்தில் நின்றது.

1905 ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினை நிகழ்ந்தது. இதன் பிறகு சுதந்திரப் போராட்டத்தின் உள்ளடக்கத்தில் வெப்பம் அதிகரித்தது. அந்த வெப்பத்தில் 'எல்லோருக்கும் எழுத்தறிவு' என்ற லட்சியம் பிறந்தது. எழுத்தறிவு நிலை உயர்ந்தால் மக்களின் விழிப்புணர்வு நிலை உயரும் என்று சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் உறுதியாக நம்பினார்கள். லாலா லஜபதிராய், இரவுப் பள்ளிகளை உருவாக்கி சுதந்திரப் போராட்டக் கல்வி வழங்க முயன்றார். இருப்பினும் 1930 வரை பெரிய மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. 1930 இல் 100க்கு 19பேர் எழுதப்படிக்க அறிந்திருந்தார்கள். பெண்களைப் பொறுத்தவரை 100க்கு 3 பேருச்கு எழுத்து வாசனை கிடைத்துவிட்டது.

1937 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் பங்கேற்று, காங்கிரஸ் வெற்றி பெற்றது. சிறிய அதிகாரங்களுடன் மாநிலங்களில் ஆட்சி அமைத்தது. இரண்டு ஆண்டுகள் இந்த ஆட்சி நீடித்தது. இந்தக் காலகட்டத்தில் சில மாநிலங்களில் எழுத்தறிவு நிலையை உயர்த்துவதில் புதிய அக்கறை பிறந்தது. பீகாரில் மட்டும் இந்தக் காலகட்டத்தில் 2000 நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1939 இல் இரண்டாம் உலகப் போர் தோன்றியபோது இந்தியாவின் எழுத்தறிவு முயற்சிகள் சோதனைக்குள்ளாகித் தடுமாறின. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது 100க்கு 16 இந்தியர்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தது. அரசியலமைப்புச் சட்டத்தில் 'ஆரம்பக் கல்வி'க்கு முக்கியத்துவம் தரப்பட்டது உண்மை. ஆனால் ஆண்டுதோறும் லட்சக்கணக்கில் குழந்தைகள் பள்ளியை விட்டு விலகித் தீப்பெட்டி ஆபீசுக்கும், பீடித் தொழிற்சாலைக்கும், செங்கல் சூளைக்கும், இன்னும் பல வேலைகளுக்கும் ஓடுகிற யதார்த்தம் நீடிப்பதும் கசப்பான உண்மை. மக்கள் இயக்-

கப் பண்புகளுடன் முறைசாராக் கல்வி இயக்கம் முதலில் உருவெடுத்தது மகாராஷ்டிர மாநிலத்தில். உருவெடுத்த ஆண்டு 1958. அப்போது அந்த இயக்கத்தின் பெயர் கிராமக் கல்வி இயக்கம் (Gram Shikshan Mohim). முதலில் சதாரா மாவட்டத்தில் துவங்கப்பட்டு பிறகு மாநிலம் முழுவதும் இந்த இயக்கம் விரிவுபடுத்தப்பட்டது. இந்த இயக்கத்தின் மூலம் ஆயிரக்கணக்கானோர் எழுத்தறிவு பெற்றனர். ஆயினும் பாடத்திட்டம், தொண்டர் பயிற்சி ஆகியவற்றில் உள்ள குறைபாடுகள் காரணமாக இந்த இயக்கம் நீடிக்கவில்லை. விவசாயக் கல்வி, தொழிலாளர் கல்வி என்று இடையிடையே சிறு சிறு முயற்சிகள் அரும்பி, உதிர்ந்தன. இவற்றில் எதுவும் மக்களை ஈர்க்கவில்லை.

1978 இல் தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம் உருவானது. 10 கோடிப் பேருக்கு ஐந்து ஆண்டுகளில் எழுத்தறிவு தருவது அதன் நோக்கம். நோக்கத்தை எட்டவில்லையாயினும், இலக்கை நோக்கிச் சில எட்டுகளை எடுத்து வைக்க இத்திட்டம் தவறவில்லை. 1988 இல் தோன்றிய தேசிய எழுத்தறிவு முனையமும் (National Literacy Mission) 1989 இல் தோன்றிய அகில இந்திய கல்வி அறிவியல் கூட்டமைப்பும் (Bharat Gyan Vigyan Samithi), கேரளாவில் அறிவியல் பரப்பி வந்த 'கேரள சாஸ்திர சாகித்ய பரிசத்தும்' எழுத்தறிவு முயற்சிகளில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய அமைப்புகளாகும்.

1989 இல் கல்வி கலாச்சார எழுச்சியாக எழுத்தறிவு இயக்கம் புது ரத்தம் ஊறிப் புறப்பட்டது. ''தானானே தானே னன்னே தன்னன்னா'' என்று பாடிக்கொண்டு, காவி வேட்டி துண்டுகளோடு கலைப்படை கிராமம் கிராமமாக நடந்தது. 'புத்தகம் கையில் எடுத்துவிடு—அதுவே உன் போர்வாள்' என்று மக்களைக் கூவி அழைத்தது. முதல் முயற்சி எர்ணாகுளத்தில் துவங்கியது. முதல் முயற்சியே மகத்தான வெற்றி பெற்றது. இதயத்துக்கு அருகே நின்று கூப்பிட்டால் மக்கள் இழந்த கல்வியைப் பெறத் திரண்டு வருவார்கள் என்பது உறுதியாயிற்று. 1990, பிப்ரவரி 4, எர்ணாகுளம் முழு எழுத்தறிவு பெற்ற செய்தி, பத்திரிகைகளின் தலைப்புச் செய்தி ஆயிற்று. பூரண எழுத்தறிவு பெறும் இந்தியாவைக் கனவு கண்டவர்களின் நரம்புகளில் புதிய உற்சாகம் பரவியது.

இன்று இந்தியாவில் ஏறத்தாழ 300 மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் (பல்வேறு பெயர்களில்) செயல்பட்டு வருகிறது. இதுவரை ஆறு கோடிப் பேருக்கு மேல் அறிவொளி மையங்களுக்குப் படிக்க வந்துள்ளனர். இவர்களில் ஒரு நாள் மட்டும் படிக்க வந்தவர்கள் உண்டு. கையெழுத்துப் போடமட்டும் கற்றுக் கொண்டவர்கள் உண்டு தட்டுத் தடுமாறி எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டவர்கள் உண்டு. சொந்தக் காலில் நிற்கும் அளவு கற்றவரும் உண்டு. ஆனால் களையெடுக்கும் கைகள், விறகு பொறுக்கும் கைகள், மண்வெட்டி பிடிக்கும் கைகள் புத்தகங்களைக் கையிலெடுத்த காட்சியை மறக்க முடியாது. சிலேட்டும் குச்சியும் எடுத்து, குழந்தைகளாக மாறி, ஒவ்வொரு எழுத்தையும் நிறுத்தி நிதானித்து ஓவியம் போல் அவர்கள் எழுதிய காட்சியை மறக்க முடியாது.

இந்த ஆறு கோடிப் பேரில் ஐந்து கோடிப்பேர் பெண்கள். இவர்களில் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்ட மக்கள்; விவசாயக் கூலிகள். எனவேதான் 'பட்டா' என்ற வார்த்தையோடு தமிழில் அறிவொளிக் கல்வி ஆரம்பமானது. பட்டா என்பது தமிழ்ச் சொல் இல்லையே என்று வருத்தப்பட்டவர்கள் உண்டு. அவர்களுக்குத் தெரியுமா, பட்டா என்பது கையகலச் சொந்த நிலம்கூட இல்லாத கோடான கோடி விவசாயக் கூலிகளின் நெஞ்சுக்குள் துடிக்கிற கனவு என்பது! இந்த ஆறு கோடிப் பேருக்குக் கற்றுத்தர எவ்விதப் பிரதிபலனும் எதிர்பாராமல் 50 லட்சம் தொண்டர்கள் முன்வந்தனர். இவர்கள் காசு தேடும் உலகினில் கருணையோடு வந்தவர்கள்; படிப்பறிவில்லா மக்கள் மீது பாசம் கொண்டு வந்தவர்கள். இவர்களிலும் பெரும்பாலானோர் பெண்கள்; கிராமப்புற இளம் பெண்கள். ஏழாவதோ எட்டாவதோ படித்ததும் வீட்டுக்குள் பூட்டப்பட்டவர்கள்; அல்லது ஊதியம் தரும் வேலைகளுக்குத் துரத்தப்பட்டவர்கள். ஒரு கணக்கெடுப்பில் கிடைத்த தகவல் அதிர்ச்சி தந்தது. திருமணமான அறிவொளிப் பெண் தொண்டர்களில் பலர் கணவனால் கைவிடப்பட்டவர்கள்! நிராகரிக்கப்பட்டவர்கள்-அங்கீகாரம் அற்றவர்கள்-இதுவரை யாரிடமும் ஒரு பாராட்டு வார்த்தை கூடக் கேட்காதவர்கள்-சிறப்பான திறமைகள் ஏதுமற்ற எளிய மனிதர்கள்-அறிவொளியை இயக்கும் எஞ்சின் ஆனார்கள். அறிவொளியின் பலமே இதுதான்.

அறிவொளியின் நோக்கம் என்ன?

* எழுத்தறிவு தந்து மக்களை அமைப்பாகத் திரட்டுவது.
* தொடர்ந்து கூடிக் கற்பதற்கான கல்வித் தாகத்தை மக்களிடம் மூட்டுவது.
* வார்த்தையிலிருந்து உலகத்துக்கு (From word to world) அழைத்துச் செல்வது.
* தங்களின் வாழ்வுக்கும், தாழ்வுக்குமான காரணங்களை மக்களை அறிந்துகொள்ளச் செய்வது.
* மக்களை அதிகாரம் உள்ளவர்களாக (empowering the people) ஆக்குவது.

அறிவொளியில் கல்விக்கான அர்த்தமும் விரிவானது; தளமும் விரிவானது. உலகம் பூராவும் பல கட்டங்களில் எழுத்தறிவு இயக்கம் நடந்து முடிந்துள்ளது. எல்லா தேசங்களிலும் எழுத்-தறிவு இயக்கத்தின் இலக்குகள் மேலே சொன்னவைதான்.

டான்சானியா நாட்டு அதிபர் ஜூலியஸ் நைரேரே தாமே எழுத்தறிவு வகுப்புகள் எடுத்தவர் (இந்த ஆண்டிற்கான காந்தி சமாதானப் பரிசைப் பெற்றுள்ளார்). எழுத்தறிவு தருவதன் மூலம் உடனடி மாற்றங்களை எதிர்பார்க்கிறீர்களா? என்று கேட்ட போது நைரேரே சொன்னார், ''திடீர் மாற்றங்களை உடனே எதிர்பார்க்கவில்லை. ஆனால் சமூக, கலாச்சார, பொருளாதார, அரசியல் மாற்றங்களை உருவாக்கக்கூடிய அடிப்படையான விமர்சன விழிப்புணர்வை (Critical Consciousness) மக்களிடத்-தில் எழுத்தறிவு ஏற்படுத்தும்'' என்றார்.

எழுத்தறிவு தருவதன் மூலம் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியாது. ஆனால் எழுத்தறிவு இல்லாமல் ஒன்றையும் சாதிக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு கேள்வி பாக்கி இருக்கிறது. அப்படியானால் படித்தவர்கள் எல்லாம் விழிப்புணர்வு பெற்றுவிட்டார்களா? அதற்கும் நைரேரே சொன்ன பதில் போதுமானது. ''காயம்பட்ட உழைப்பாளி ஏழை மக்கள் கல்வி பெறுவதற்கும், நகரத்து மனிதர்கள் கல்வி பெறுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டும் ஒன்றல்ல'' என்றார். சந்தேகம் என்ன? ஒரு ஸ்டவ் பற்றிக்கொள்வதற்கும், காடு பற்றிக்கொள்வதற்கும் வித்தியாசம் இல்லையா?

''படிப்பாளி வச்சிருந்த காயித மெல்லாம்
உழைப்பாளி தொட்ட பின்னே ஆயுதமாச்சு!''

என்று அறிவொளிக் கலைஞர்கள் பாடுவது உண்மைதானே! உழைப்பாளி மக்கள் கல்வி பெறும்போது தேசம் அளப்பறிய ஆற்றல் பெறுகிறது. இந்த நம்பிக்கையில்தான் — நிகரகுவாவில் எரிமலை வெடித்துச் சிதறிய துயர காலத்தில்கூட எழுத்தறிவுப் பணி நிற்கவில்லை. வியட்நாமில் வெள்ளம் கரைபுரண்டு நாட்டைச் சிதைத்த காலத்திலும் எழுத்தறிவுப் பணி நிற்கவில்லை. வியட்நாமில் துப்பாக்கி எடுத்துப் போர் முனையில் நின்றவர்கள் போர் முடிந்ததும் புத்தகம் எடுத்து மக்களிடம் போனதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

## நூலக இயக்கம்

முறைசாராக் கல்வி மையங்களில் முக்கியமானது நூலகம். நூலகம்—ஓசையற்ற கடல். சிறிய அறைக்குள் அமைக்கப்பட்ட பெரிய உலகம் அது. நூலகம் என்பது கட்டடம், அலமாரி சம்பந்தப் பட்ட பொருளா? இல்லை. அது மனிதர்களும் சிந்தனைகளும் கைகுலுக்கும் இடம். மனிதர்களும் மனித உறவுகளும் காலூன்றி வளரும் இடம். புத்தகம் என்பது அச்சுப்பதிந்த தாளா? இல்லை. ஒவ்வொரு புத்தகத்துக்குள்ளும் மனிதர்கள் வசிக்கிறார்கள். ஒவ்வொரு புத்தகத்தைத் தொடும்போதும் மனிதர்களைத் தொடுகிறோம்.

நூலகம் என்பது நவீன காலக் கண்டுபிடிப்பல்ல. இதற்கு வரலாறு உண்டு. அதற்காக உழைத்தவர்கள் உண்டு. கனவு கண்டவர்கள் உண்டு. வாழ்நாள் பூராவும் செலவளித்தவர்கள் உண்டு. நூலகத்தின் ஆரம்ப வேர்களைச் சமணர்களின் 'ஞானபண்டாரங்களிலும்', புத்தர்களின் 'செழுங்கலை நியமங்களிலும்', சைவர்களின் 'சரஸ்வதி பண்டாரங்களிலும்' காணமுடிகிறது. மொகலாய மன்னர்களும் நூலக வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்றியிருக்கிறார்கள். பாபர் மொகலாய அரசாங்க நூலகத்தை உருவாக்கினார். அக்பர் நூலக நிர்வாகத்தில் கவனம் செலுத்தியவர். நூல் எழுதுபவர், மொழி பெயர்ப்பவர், அடுக்கி வைப்பவர் என்று 16 வகையான பணியாளர்களை நூலகங்களில் அமர்த்திய மன்னர் அக்பர். ஜஹாங்கீரும், அவருடைய மனைவி நூர்ஜஹானும் தமக்கென்று தனித்தனியே நூலகங்களை வைத்திருந்த-

வர்கள். ஆங்கிலேயர்களின் வருகை நூலக இயக்க வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது. இந்தியாவில் உள்ள மிகப்பெரிய பொது நூலகங்களில் ஒன்று 'கன்னிமாரா நூலகம்'. இது சென்னையில் உள்ளது 1886-இல் சென்னையின் கவர்னராக இருந்த கன்னிமாரா பிரபு அடிக்கல் நாட்டி உருவாக்கிய நூலகம் இது.

பரோடா (குஜராத்) மன்னர் சாயாஜிராவ் நூலக இயக்கத்தின் ஒரு முன்னோடி ஆவார். இவருடைய காலத்தில் பரோடா சமஸ்தானத்தில் நூலகத்துறை அமைக்கப்பட்டது. மிகப்பெரிய மைய நூல் நிலையம் ஏற்படுத்தப்பட்டது. மாநில மைய நூலகம் போக, தாலுகா அளவிலும், கிராம அளவிலும் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை போக நடமாடும் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. புத்தகங்கள் தனித்தனிப் பெட்டிகளில் அடுக்கிவைக்கப்பட்டன. மக்கள் படிப்பதற்கென்று இந்நூலகங்கள் சமஸ்தானம் முழுவதும் அனுப்பப்பட்டன. வங்காளத்தில் முனீந்திரர், பஞ்சாபில் காலிபா முகமது அசதுல்லா, ஆந்திராவில் அய்யங்கி வெங்கடரமணய்யா ஆகியோர் நூலக இயக்கத்தைக் கட்டிக் காத்ததில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர்கள். வெங்கடரமணய்யா 1934 ஆம் ஆண்டில் மேற்குக் கோதாவரி மாவட்டத்தில் 45 கிராமங்களில் கால்நடையாக நூலகப் பயணம் மேற்கொண்டார். தொடர்ந்து 1936, 1937, 1940, 1941, 1947, 1948, 1951 ஆம் ஆண்டுகளில் இத்தகைய நூலகப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். நூலகப் பயணத்தின் போது கிராமங்களில் ஏராளமான கிராம நூலகங்களை ஏற்படுத்தி இருக்கிறார்.

சுதந்திரப் போராட்டத்தின் போது மக்களின் எழுச்சியைப் பேணிக் காக்கும் பொருட்டு, தேசியவாதிகளால் பல கிராமங்களில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. பல சமயங்களில் இவை 'ரகசிய நூலகங்களாக' இயங்கி வந்தன. மரத்தடிகளிலும் கண்மாய்களிலும் இப்படிப் பல இடங்களிலும் நூலகங்கள் இயங்கி வந்தன. சென்னை மாகாண நூலகச் சங்கம் 1928 இல் உருவாக்கப்பட்டது. அந்தக் காலத்தில் அச்சங்கம் சென்னை மாநகராட்சிக்கு ஒரு ஆலோசனையை வழங்கியது. ''சென்னை நகரத்தில் உள்ள உழைப்பாளி மக்களின் வீடுகளைத் தேடிச் சென்று புத்தகங்களைப் படிப்பதற்குத் தருவதற்குச் சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்பதுதான் அந்த ஆலோசனை.

1930 ஆம் ஆண்டு சென்னை நூலகச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒரு சொற்பொழிவின் தலைப்பு நம் கவனத்தைக் கவர்கிறது. ''நூலக இயக்கமும் பெண் கல்வியும்''. உரையாற்றியவர்— செல்வி மாக்டோனல், முதல்வர், சென்னை பெண்கள் கிருத்துவக் கல்லூரி. டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதனை 'நூலகத் தந்தை' என்று தமிழகம் பாராட்டுகிறது. 1891 இல் சீர்காழியில் பிறந்தவர்.

1927 ஆம் ஆண்டில் ஓர் ஆண்டு விழாவில் 'கிராம நூலக சேவை' என்ற தலைப்பில் பேசும்போது ரங்கநாதன் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''ஒரு கிராம நூலகம். அதனைச் சார்ந்த பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் எல்லையற்ற சக்தி படைத்ததாக இருக்கும்''. நடமாடும் கிராம நூலகங்களை உருவாக்கிய பெரியோர்களும் உண்டு. இரட்டை மாட்டு வண்டியில் கிராமம் கிராமமாகப் புத்தக உலா ஒரு சமயம் நடந்தது. தஞ்சை மாவட்டத்தில் இந்த முயற்சி நடந்தது. புத்தகங்களோடு சினிமாப் படப்பெட்டியையும், மருந்துப் பொருள்களையும் ஏற்றிக்கொண்டு நடமாடும் நூலகங்களாக வேன்கள் கிராமங்களுக்குச் சென்ற காலமும் உண்டு. ஒரு சினிமாப் படம் போட்டு மக்களைக் கூட்டி, பின்னர் புத்தகங்களைக் கொடுத்து வாசிக்க வைத்துள்ளனர். இறுதியில் மருந்துப் பொருள்கள் விநியோகம். மக்களோடு புத்தகங்களை இணைப்பதற்கு இப்படி ஓயாத முயற்சிகள் காலந்தோறும் முகிழ்த்திருக்கின்றன.

அறிவொளியின் மையமான பணி நூலகம். தமிழகத்தில் தொடர் அறிவொளி நடைபெற்று வரும் 12 மாவட்டங்களில் இது வரை 10,000க்கும் மேற்பட்ட சிறிய கிராம நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அரசு நிதி மூலம் கிடைத்த புத்தகங்களும், தொண்டர்கள் தேடிச் சேகரித்த புத்தகங்களும் இந்த நூலகத்தில் இருக்கின்றன. குருவிக் கூடுகளைப் போல இவை எளிமையானவை; அழகானவை; ஆனால் வலுவானவை அல்ல. அறிவொளியில் 'நூலகம்' என்று சொல்வதில்லை. நூலக இயக்கம் என்றுதான் சொல்கிறோம். எங்கே மக்களுக்கும் புத்தகங்களுக்கும் இடையே உயிரோட்டமான சந்திப்பு நிகழ்கிறதோ அந்த இடந்தான் அறிவொளி நூலகம். அது மரத்தடியாக இருக்கலாம்; தெருவிளக்கடியாக இருக்கலாம்.

வீதியாக இருக்கலாம். அறிவொளி நூலகத்தை அறைக்குள் கட்டுப் படுத்த முடியாது. கட்டுப்படுத்தினால் முயற்சி விரயமாகும். இங்கே நூலகம் என்பது இயக்கம். சதா இயங்கும் ஒரு சக்தி. மக்கள் புத்தகத்தைத் தேடி வருமுன், புத்தகங்கள் மக்களைத் தேடிப் போகும்.

புத்தகங்களை அறிமுகப்படுத்துவதையும் ஒரு கலையாக மாற்றி இருக்கிறது அறிவொளி. புத்தகத்தின் செய்திகள் வெறு-மனே மக்களிடம் விவரிக்கப்படுவதில்லை. ஒரு புத்தகத்தின் சாராம்சம் மட்டும் சொல்லப்படுகிறது; ஒரு புத்தகம் வாசிக்கப்படு-கிறது; ஒரு புத்தகம் நாடகமாக்கப்படுகிறது; ஒரு புத்தகம் கதா-காலட்சேப வடிவம் பெறுகிறது. புத்தகத்தையும் மக்களையும் இணைக்கும் பாலங்களாகப் பல புதிய முயற்சிகள் தோன்றி-யுள்ளன. சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். காமராசர், பசும்பொன் மாவட்டங்களில் நூலக நடைப் பயணங்கள் 1995இல் நடந்து முடிந்துள்ளன. ஆயிரக்கணக்கான தொண்டர்கள் இந்த நடைப் பயணங்களில் பங்கு பெற்றிருக்கிறார்கள். நடைப் பயணத்தின் போது, கட்டுக் கட்டாகப் புத்தகங்களைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு இவர்கள் மக்களைச் சந்திக்கப் புறப்பட்-டார்கள். வேகாத வெயிலிலும், மழை இரவுகளிலும் இவர்கள் விடாமல் நடந்தார்கள். இவர்களில் பலர் பெண்கள்.

இராமநாதபுரத்தில் புத்தகங்களை நாடக வடிவமாக்கி நூலகக் கலைப்பயணம் நடத்தினர். வடஆற்காடு அம்பேத்காரில் எழுதப் படிக்கத் தெரியாத சிறைக் கைதிகளிடம் சென்று புத்தகங்களை வாசித்துக் காட்டினர். அறிவொளி உருவாக்கியுள்ள கிராமப்புற நூலகங்கள் உறுதியுடன் காலூன்றிவிட்டால், அவை எதிர்காலத்-தில் கிராமங்களின் தகவல் தொடர்பு மையங்களாக (Information Centre) வளர்ச்சி அடைய வாய்ப்புண்டு. தகவல்களை வைத்-திருப்போரே இன்று பலம் உள்ளவர்கள். எளிய மக்களைச் சக்தி உள்ளவர்கள் ஆக்கும் முயற்சியில் நூலகங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இருப்பினும் இந்தக் கனவு மெய்ப்படக் காத்திருக்க வேண்-டும். எத்தனையோ நல்ல முயற்சிகள் வெட்ட வெளியில் வைத்த விளக்குப் போல இருக்கின்றன. ஒரு சிறு காற்று விளக்கை அணைத்துவிடும். ஒரு சிறிய சாதிச் சண்டை கிராமத்தை மீண்டும் இருளில் மூழ்கடித்து விடும். பெரியோர்கள் கண்ணீர் விட்டு வளர்த்த பயிர்கள் பல அவர்கள் கண்ணெதிரிலேயே கருகிப் போயி-

ருக்கின்றன: அறிவொளி உருவாக்கி வரும் நூலகமும் அத்தகைய ஆபத்தைச் சந்திக்க வாய்ப்புண்டு. புத்தகங்களின் மீதும் மக்கள் மீதும் காதல் கொண்ட ஒரு இளைஞர் படை கிராமங்களில் உருவாக வேண்டும். அதுதான் நூலக இயக்கத்துக்கும் பாதுகாப்பு. அறிவொளியின் தொடர் முயற்சிக்கும் பாதுகாப்பு.

**அறிவொளி சாதித்தது என்ன?**

தொடர்ந்து கற்கும் சமூகத்தை (Learning Society) உருவாக்குவது அறிவொளியின் அடிப்படை லட்சியம். இந்த லட்சியம் பகற்கனவல்ல. பல கிராமங்களில் கூடிப் படிக்கும் மக்கள் சமூகத்தை அறிவொளி உருவாக்கி இருக்கிறது. அறிவொளியின் இந்த உயிரோட்டமான பணியைப் புரிந்து கொள்ளாதவர்கள் 'உங்கள் மாவட்டத்தில் எத்தனை பேர் கையெழுத்துப் போடத் தெரிந்து கொண்டார்கள்?' என்ற புள்ளி விவரக் கேள்விகளையே கிளிப் பிள்ளைகளைப் போலக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவரவர் கையிலிருக்கும் தராசுகளை வைத்து இயக்கங்களை எடைபோட முடியாது. கிராமங்களில் போய்ப் பார்த்தால் தெரியும். ஒரு சிறிய கிராமம். இரவு 7 மணி இருக்கும். களைத்துப் போன மக்கள் அறிவொளிக்காரர்கள் கூப்பிட்டதுக்காக வந்து கூடி இருக்கிறார்கள். ஒரு பெண்-பெண் என்று சொல்ல முடியாது-ஓர் அரும்பு—ஏழாங்கிளாஸ் படிக்கும் ஓர் அரும்பு—மெல்லிய வெளிச்சத்தில் 'நல்லதங்காள் கதை'யை வரி வரியாக வாசிக்கிறது.

நகரத்து இரைச்சல்களால் பழுதாகாத காதுகளால் மக்கள் அந்தப் புத்தகத்தை நுகர்கிறார்கள். 300 பேராவது அங்குக் கூடியிருப்பார்கள். ஆனால் ஒரு சின்னப் பேச்சுச் சத்தம்கூட இல்லை. ஊர் மொத்தமாக அந்த அரும்புக்குக் கட்டுப்பட்டு நிற்கிறது. கதை நகர நகர, பெண்களின் கண்களில் பனித்திரை விழுகிறது. கதை முடியும்போது சிலர் கட்டுப்படுத்த முடியாமல் கேவி அழுதுவிடுகின்றனர். 'நல்லதங்காள் கதை' அவர்களின் சொந்தக் காயங்களைத் தாக்கி ரணமுண்டாக்கி விட்டது. அந்த அரும்பு கதை வாசித்ததோடு நிற்கவில்லை. 'நல்லதங்காள் குழந்தைகளைக் கிணற்றில் போட்டது சரியா? தப்பா?' என்று கூடியிருக்கும் மக்களைப் பார்த்து கையாட்டிக் கேள்வி கேட்கிறது. கூட்டம் இரு கட்சியாகப் பிரிந்து பதில் சொல்லுகிறது. கூட்டத்தில் சிலர் 'எனக்கொரு புஸ்தகம்' 'எனக்கொரு புஸ்தகம்' என்று கேட்கின்றனர். அவர்களில் சிலருக்குத் தட்டுத் தடுமாறித்தான் வாசிக்-

கத் தெரியும்; சிலருக்கு அதுவும் தெரியாது. இருந்தாலும் புத்தகம் கேட்கிறார்கள். இவர்கள் எல்லோருக்காகவும்தான் அறிவொளி இயக்கம். இவர்கள் எல்லோரையும் உள்ளடக்கியதுதான் அறிவொளியின் 'கற்கும் சமூகம்' (Learning Society). கூடிப் படிக்கும் பழக்கத்தின் தொடர்ச்சியாகக் கூடி விவாதிக்கும் பழக்கமும், கூடி முடிவெடுக்கும் பழக்கமும் மக்களிடம் உருவாகி வருகின்றன! மக்கள் கூடிப் படிக்கும் இடத்திற்குப் பெயர் வட்டம். இது கிராமத்தின் பல்கலைக் கழகம். இங்கே பாடுவார்கள்; விடுகதை போடுவார்கள்; நாட்டு நடப்புகளை அலசுவார்கள்; நாடகம் போடுவார்கள். இப்படிப் பல நிகழ்ச்சிகள் இருப்பினும் 'புத்தக வாசிப்பு'தான் வட்டத்தின் இதயத் துடிப்பாக இருக்கிறது.

இவர்கள் படிப்பதற்கென்று அற்புதமான புத்தகங்களையும் அறிவொளி படைத்திருக்கிறது. சொல்லப்போனால் அது ஒரு புதிய இலக்கிய வகை! கதை, வரலாறு, அறிவியல் என்று பல துறைகளிலும் புத்தகங்கள்! சின்னச் சின்ன வாக்கியங்களில் எளிய புத்தகங்கள்! வாக்கியம் ஒவ்வொன்றும் மாம்பழத்தைச் சீவித் தட்டில் வைத்துக் கொடுத்தது மாதிரி இருக்கிறது. அந்த வாக்கியங்களுக்கு உள்ளே அடர்த்தியான உள்ளடக்கமும் இருக்கிறது.

இதுவரை 100 புத்தகங்களுக்கு மேல் வந்துள்ளன. கிராமப்புறக் கதைகள் முதல், 'கடலும் கிழவனும்' போன்ற உலகப் பிரசித்தி பெற்ற புதினம் வரை அவர்களுக்காகப் புத்தகங்கள் ஆக்கப்பட்டுள்ளன. 'வாசல்' என்ற பெயரில் 'சாரல்' என்ற பெயரில் 'தென்றல்' என்ற பெயரில் அவர்கள் படிப்பதற்கென்று பத்திரிகைகளும் வந்துள்ளன. சில பயிற்சிப் புத்தகங்கள் பற்றியும் குறிப்பிட வேண்டும். பயிற்சிப் புத்தகங்களின் பெயர்களைப் பாருங்கள்.

*ஒரு முடிவு எடுப்போம்

*அச்சத்தில் இருந்து விடுதலை

பிரச்சினைகளைச் சொல்லிச் சொல்லி மக்களை முடிவெடுக்கத் தூண்டுகிறது 'ஒரு முடிவு எடுப்போம்'. ஒரு பயந்த பெண்ணின் வாழ்க்கையை ஒவ்வொரு கட்டமாகச் சொல்லி அவளை அச்சத்தில் இருந்து விடுதலை பெறத் தூண்டுகிறது 'அச்சத்தில் இருந்து விடுதலை'. இந்தப் புத்தகங்களை விவாதத்துக்கு எடுத்துக் கொண்டால் கிராமங்களில் நேரம் போவது தெரியாது.

மக்களின் பாரம்பரிய இலக்கியத்தைப் பாதுகாப்பதிலும் அறிவொளி உரிய முறையில் தன் கடமையைச் செய்திருக்கிறது. கதைகள், பாட்டுக்கள், விடுகதைகள், சொலவடைகள், மருத்துவக் குறிப்புகள், ஆயிரக்கணக்கில் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டவற்றைப் புத்தகங்களாக்கி அவர்களுக்கே திரும்பப் படிப்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ளன — அவர்களின் சொந்தப் பிள்ளைகளைச் சீவிச் சிங்காரித்து அவர்களிடமே கொடுப்பது போல! 'கல்வி என்பது விரிந்த களம்' என்பதையும் அறிவொளி நிரூபித்தது. மக்கள் கையில் மக்கள் சுகாதாரம், சுதந்திரப் போராட்ட வரலாறு, மக்கள் ஒற்றுமை, பெண்களும் சட்டங்களும், பெண்களும் பஞ்சாயத்து அமைப்பும், பெண்களும் நூலகங்களும், மதுவிலக்கு — போன்ற கனமான செய்திகளைக் கூட பிரச்சாரக் கல்வியாகக் கலை வடிவில் மக்கள் மத்தியில் அறிவொளி எடுத்துச் சென்றது.

## முறைசாராக் கல்விக்கு முடிவு எப்போது?

அறிவொளி மீது இன்னும் சிலருக்குச் சந்தேகம் தீரவில்லை. இன்னும் எங்கள் தெருவில் சிலருக்குக் கையெழுத்துப் போடத் தெரியவில்லை என்று வருத்தப்படுகிறார்கள். வருத்தம் நியாயமானதுதான். ஆனால் இன்றும்கூட அறிவொளியை ஒரு சிறிய சக்திதான் இழுத்துப் போகிறது என்பதை மறந்துவிட முடியாது. நிகரகுவாவில், கியூபாவில், வியட்நாமில் நடந்ததைப்போலச் சமூகம் முழுவதும் இங்குப் பங்கேற்கவில்லை. நம் மனத்தில் இன்னும் சில கேள்விகள் எழுகின்றன. 6 லட்சத்துக்கு மேல் ஆரம்பப் பள்ளிகள் இருந்த போதும் இன்னும் இந்தியாவில் பாதிப் பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாமல் இருப்பது எதனால்? வகுப்பறைகள் பிள்ளைகளைக் காந்தமாக இழுக்கவில்லையே! ஏன்? பிள்ளைகள் ஆஸ்பத்திரிக்குப் போவதைப் போலப் பயத்தோடு பள்ளிக்குச் செல்வதாக ஜான் ஹோல்ட் என்ற ஆங்கிலக் கல்வியியல் அறிஞர் குறிப்பிடுவார். குழந்தைகள் பள்ளியை விட்டு இடை விலகுவதற்குப் பள்ளிச் சூழல் மிக முக்கியமான காரணம் என்று நவீன ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆரம்பக் கல்விக்கான பாடத் திட்டத்தைப் பார்த்தால் பிள்ளைகளின் அச்சம் புரிகிறது.

முதல் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில், ஞாலம், அகவை, யாழ், நன்னூல், நெய்தல் போலப் பல வார்த்தைகள் உள்ளன.

ஒரு கிராமப் பள்ளிக்கூடத்தில் 'ஞாலம்' என்ற சொல்லுக்கு 'அறிவு' என்று ஆசிரியர் பொருள் சொல்லிக் கொண்டிருந்ததைக் கண்கூடாகப் பார்த்தேன். யார் யார் ஆசைப்பட்டதை எல்லாம் திணிப்பதற்கா குழந்தைகளின் மூளைகள் இருக்கின்றன? இரண்டாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் முதல் பாடம் 'என் கடமைகள்' என்பது. நாம் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் மறந்துவிட்டுப் பிஞ்சுப் பிள்ளைகளுக்குக் கடமைகளைச் சொல்லித் தருவது எத்தனை பெரிய முரண்பாடு!

இரண்டாம் வகுப்புப் புத்தகத்தின் ஐந்தாம் பாடம் 'மனுநீதிச் சோழன்'. அந்தப் பாடத்தில் 'அப்பொழுது சிவபெருமான் தோன்றினார்' என்று ஒரு வரி. சிவபெருமான் தோன்றுவது குறித்துப் பிஞ்சுப் பிள்ளைகளுக்குக் கேள்வி எழாதா? வகுப்பறைகள் அவர்கள் சந்தேகங்களைத் தீர்த்திருக்கின்றனவா? வகுப்பறைகளைக் கண்டு மிரண்டு ஓடிவரும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறையவே இல்லை. முறைசாராக் கல்விக்கு முடிவு எப்போது? இது தொடர்கதை போலத் தெரிகிறது. 'ஆண்டவன் புண்ணியத்தில வியாதியும் நீடித்து உத்தியோகமும் நீடிக்கிற' ஏற்பாடாகத் தெரிகிறதே ஏன்? கேள்விகளுக்கான விடையைப் பரீட்சைத் தாளில் எழுதுவது போல எழுதிவிட முடியாது. ஆனால் ஒன்று உறுதி, குழாயை அடைக்காமல் தண்ணீரைத் தள்ளித் தள்ளி விட்டுப் பயனில்லை.

அது சரி! நாம் செய்ய வேண்டியதைப் பார்ப்போம். 'இது பொறுப்பதில்லை' என்ற வீமவேகம் நம்மிடம் தோன்ற வேண்டும். படித்தவர்கள் வேகம்பெறாமல் தேசம் செழுமையுறாது. மக்கள் காத்திருக்கிறார்கள். தாங்கள் இழந்த கல்வியை மீண்டும் கொடுக்க கல்விமான்கள் வருவார்கள் என்று காத்திருக்கிறார்கள். ஏராளமானோர் புறப்படுங்கள்; அறிவொளி அழைக்கிறது...

## துணை நூல்கள்


i) *Evaluation of Literacy Campaign in India* — National Literacy mission.

ii) *The Turning point* — National Literacy Mission.

iii) *Statistical Data base for Literacy* — National Institute of Adult Education.

iv) *Education for All* — Dept. of Education, Govt. of India.

v) *The Long March to Literacy* — Directorate of Adult Education.

vi) *Meeting Basic Learning Needs : A vision for the 1990s* — UNICEF.

vii) *Indian Adult Education — A Historical perspective* — Directorate of Adult Education.

viii) *The Anguish of the Deprived* — L. Mishra IAS.

ix) *நாம் ஏன் வட்டமிடுகிறோம்?* — பி.ஜி.வி.எஸ் கருத்துக் கூடம்.

x) நூலக இயக்க வரலாறு (அச்சில்) — பி.ஜி.வி.எஸ். கருத்துக்கூடம்.

# 8

# எதிர்காலத்துவம்

★

டாக்டர் ஆனந்தவல்லி மகாதேவன்

''கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்''

**பாரதி ஒரு பேரங்காடி**

பாரதி ஒரு பேரங்காடி. 'Super Market'. அதில் இன்னது-தான் வேண்டும் என்ற தெளிவோடு நுழைந்தோமென்றால் வேண்டிய கருத்துக்கள் மலிந்திருப்பதைக் காணலாம். எதிர்கால-வியல் என்ற கலை, அறிவியல் அண்மையில் தோன்றிய ஒன்று என்னும் எதிர்காலவியலார் பண்டு தொட்டு இருந்து வருகின்றனர். அவர்களின் கனவுகள் (தொலைநோக்குச் சிந்தனைகள்) நனவாகி வருவதைக் கண்கூடாகக் கண்டுவருகிறோம். ஆயினும் பாரதி மூலம் எதிர்காலத்துவம் பயிலும் வண்ணம் எதிர்காலவியலின் வகைகளும் அதன் கோட்பாடுகளும் கூறுகளும் அவரது படைப்-பில் குவிந்திருப்பதைக் காணலாம்.

**எதிர்காலவியல் பரிணாமங்கள்**

வல்லுனர்கள் எதிர்காலவியலைப் பல பரிணாமங்களில் படைக்கின்றனர். அவை அனைத்திற்கான எடுத்துக்காட்டுகளும் பாரதியில் காண்கிறோம்.

**பிரபல எதிரியல் (Pop. Futurisum)**

நிலவும் தொடர்புகளின் பின்னணியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் உதவியுடன் எளிய முறையில் அமைக்கப்-படுவது பிரபல எதிரியல்: விடுதலைக்கான பெருமுயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கும் ஒரு கலைகட்டத்தில் 'விடுதலை அடைவது திண்ணம்' எனக் கூறுவது இதுமாதிரியான எதிரியல்.

---

* பேராசிரியை, எதிர்காலவியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

**பிரச்சினை அடிப்படையிலான எதிர்காலவியல்** (Problem Focussed Futurisum)

பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றிற்கான தீர்வுகளை மேலோட்டமாகக் கூறுவது இத்தகைய எதிர்காலவியல் ஆகும். அத்தீர்வுகள் உண்மையான தீர்வுகளாக அமையாது. ஆயினும் நம் ஆதங்கத்தை அவை வெளிப்படுத்தும்.

ஏழ்மையும் பசியும் அடிப்படைப் பிரச்சினைகள் அவற்றைத் தீர்க்கப் பல்வேறு நிலையியல் அடிப்படை மாற்றங்கள் தேவை. அப்படியிருக்க

''தனியொருவனுக்கு உணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்''

என்று பாரதி முழக்கமிடுவது உணர்வுபூர்வமான தீர்வு. ஆனால் உண்மையான தீர்வாகாது.

**திறனாய்வு எதிர்காலவியல்**

இது நமது அடிப்படைக் கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் ஒப்புநோக்கித் திறனாய்வின் அடிப்படையில் உருவாவது:

''ஆணெல்லாம் கற்பைவிட்டுத் தவறு செய்தால்
......................... வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தான் எரிந்திடாதோ''

சமூக அளவில் இம்மாதிரித் தவறுகளால் பெருந்தீங்கு விளையும் என்பது நாம் இன்று கண்கூடாகக் காண்பது. நேரடி எடுத்துக்காட்டு எய்ட்ஸ் (AIDS) எனும் நோய்.

**அறிவார்ந்த எதிரியல்** (Epistemolosical Futurism)

இது பிரச்சினைகளின் வேரை உணர்ந்து ஆழ்ந்த அடிப்படை மாற்றங்களை அறிவுறுத்தும் எதிரியல் .

''மடமை கொண்ட தாய்
மாண்புடை மக்களைப் பெற்றிடல் அரிது''

என ஆராய்ந்து கூறுவது இதுதான்.

**எதிர்காலங்கள்**

''விதி வலியது, நடப்பது நடந்தேதீரும்''
எனில் எதிர்காலம் ஒன்றே ஒன்றாக, மாறாததாக இருக்கும்.

அதனை அறிய எதிர்காலவியல் என்றொரு துறை தேவை-யில்லை. எதிர்காலவியலார் கருத்துப்படி பல்வேறு வகையான எதிர்காலங்கள் நம்முன் விரிந்திருக்கின்றன, அங்கு நிகழப்போகும் மாற்றங்கள் என்னென்ன என ஊகித்துக் கணித்து அவற்றிற்-கேற்றவாறு நம்மைத் தயார்படுத்திக் கொள்ள உதவக்கூடிய உரு-வாகும் எதிர்காலமும், நாம் விரும்பக்கூடிய நமக்குகந்த எதிர்-காலம் எது எனக் கண்டு தெரிந்து நாம் உருவாக்கும் எதிர்காலமும் என இருவகைப்படும்.

### உருவாகும் எதிர்காலம் (Exploratory Futures)

முந்தைய நிகழ்வுகளையும் இன்றைய மாற்றங்களையும் இணைத்துப் பார்த்து நம்மை எதிர்நோக்கியுள்ள நிகழ்வுகள் இவைதான் எனக் கணிப்பது உருவாகும் எதிர்காலம்.

"ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று" உரைப்பது இவ்வகை.

### உருவாக்கும் எதிர்காலம் (Normative Futures)

எத்துறையிலும் நமக்கு உகந்த எதிர்காலம் இதுதான் எனக் கண்டுகொண்டு அதன் சாத்தியக் கூறுகளைச் சீர்தூக்கிப் பார்த்து சிறந்ததைத் தேர்வுசெய்து அதனை இலக்காக்கி அதனை அடையத் திட்டம் தீட்டிச் செயல்படுவது நாம் உருவாக்கும் எதிர்-காலம். முந்தையது சூழலால் விளைவது, பிந்தையது நமது முயற்சியால் உருவாக்கப்படுவது

"கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம் கொண்டனன்"

எனக் கூறும்போது கிருதயுகத்தினை இலக்காக்கி, அதனை அடைய வேண்டிய எதிர்காலக் காலகட்டத்திலிருந்து இன்றுவரை பல்வேறு துறைகளில் நாம் கொணரவேண்டிய மாற்றங்கள் எவை என உணர்ந்து செயல்படுவது என்ற உறுதியோடு இருப்பதைக் காட்டுகிறது.

### எதிர்கால முன்னறிவிப்பும் மதிப்பீடுகளும்

எதிர்காலவியல் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படு-கிறது. அதன் விளைவாக நாம் எதிர்கால முன்னறிவிப்புகளை அறிந்து அதற்கு ஏற்றவாறு நம்மைத் தயார் செய்து கொள்ளலாம்.

அல்லது சில மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகளை நாம் மதிப்பீடு செய்து அறிந்துகொண்டு உகந்த மாற்றங்களைத் தேர்வு செய்து உருவாக்க முயற்சிக்கலாம். இத்தகைய முன்னறிவிப்பு-களும் மதிப்பீடுகளும் எதிர்காலவியலின் கூறுகள்.

## தொழில்நுட்ப முன்னறிவிப்பு (Technology Forcasting)

எதிர்காலப் பயன்பாடுகளில் முன்னணியில் இருப்பது தொழில்நுட்ப முன்னறிவிப்புகள். ஒரு தொழில்நுட்பத்தில் இதுவரை ஏற்பட்ட வளர்ச்சி என்ன, அது பற்றிய இன்றைய ஆராய்ச்சியின் வேகம் என்ன, அந்தத் தொழில் நுட்பத்தைப் பொறுத்தவரையில் நமது தேவைகளும் தகுதிகளும் என்னென்ன என அறிந்து எதிர்-காலத்தில் அத்தொழில்நுட்பம் எவ்வாறு பரிணமிக்கும் என அறிவியல் பூர்வமாகவும் கணிப்பது தொழில்நுட்ப முன்னறிவிப்பு. பாரதியார் தொலைத் தொடர்பு, கட்டுமானம், விண்வெளி, மரபணு மாற்றம் ஆகிய பல்வேறு துறைகளில் கணித்துள்ள முன்னறி-விப்புகள் இன்றைய நிகழ்வுகளாகியுள்ளன அல்லது நாளைய நிகழ்வுகளாகக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அட்ட-வணை 1-ல் அவை பட்டியலிடப்பட்டிருக்கின்றன. மின் மற்றும் மின்னணுக் கருவிகள் பற்றிய அவரது தொலைநோக்கு நிகழ்வு-களாகிவிட்டன. ஆறுகளை இணைக்க வேண்டும், வீணாகும் நீரைப் பயன்படுத்த வேண்டும் என்ற அவரது அறிவார்ந்த ஆதங்கம் இன்று அறிவியலாரும் அரசியல்வாதிகளும் பரிசீலித்து வருகின்றனர். வினோதமாகத் தோன்றும் சிலக் கருத்துக்களில் கூட அறிவியல் அடிப்படையில் சாத்தியக் கூறுகள் உள்ளன. நெல், கோதுமை போன்ற தானியங்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த அதன் இனத்தைச் சார்ந்த காட்டுப் புல்லிலிருந்து நோய் எதிர்ப்பு மரபணுவைக் கொணர்ந்து இதனுள் புகுத்தலாம் என்கிறார் மரபியலார்.

## அட்டவணை — 1

### பாரதியின் தொழில்நுட்ப முன்னறிவிப்புகளும் நிகழ்வுகளும்

| | |
|---|---|
| 1. காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம். | அவர் காலத்திலேயே நனவானது. |
| 2. சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம். | 1969-ல் முதல் மனிதன் நிலவில் கால் பதித்தான். |
| 3. கள்வரால் வீட்டினுட்புகுத்திடவே காணபதிலா வகை செய்திடுவோம். | அதற்கான மின் / மின்னனு சாதனங்கள் வந்துவிட்டன. |
| 4. அட்டையுந் தாளையுங் கொண்டங்கு மனை கட்டுவோம். | பூகம்ப இடங்களில் குறுகிய காலவசிக்கும் இடங்கள் இப்படிக் கட்டுப்படுத்துவதைக் காண்கிறோம். |
| 5. சிங்களத் தீவினிக்கோர் பாலமைப்போம். | சாத்தியக் கூறு அதிகம். |
| 6. வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்திடுவோம். | திட்ட மதிப்பீடும் விவாதங்களும் நடந்து வருகின்றன. |
| 7. வெறும் புல்லை நெல்லெனப் புரிதல். | புல்லின் மரபணுக்களை நெல்லினுள் புகுத்தி மாற்றம் செய்யலாம்என்கிறது மரபணுப் பொறியியல். |
| 8. பன்றிப் போத்தினைச் சிங்க வேறாக்கல். | சற்றே மிகைப்படுத்தப்பட்ட மரபணு மாற்றம். |

## அட்டவணை — 2

### பாரதியின் சமூக முன்னறிவிப்புகளும் தற்கால நிகழ்வுகளும்

| | கனவும் | நனவும் |
|---|---|---|
| பெண் விடுதலை | சரிநிகர் சமானமாய் வாழ்வமிந்த நாட்டிலே | விழிப்புணர்வு |
| கல்வி | வாழி கல்வி செல்வம் எய்தி | அடைவோமா? |
| சமூக பேதங்கள் | ஜாதி நூறு சொல்வாய் (போக வேண்டிய பாரதம்) | சாதிசங்கங்கள் புதிய சாதிகள் அதிகம் தோன்றியுள்ளன |
| வறுமை | ஏழையென்று எவனுமில்லை | அடைவோமா? |
| தளரா வளர்ச்சி | ஞாயிறு, வீட்டுச்சுவர், ஈ, மலையருவி ஒன்றே — புழுவெலாம் நான் | உலகலாவிய விழிப்புணர்வு சட்டமும் உள்ளது. |
| தமிழ் | கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்-திங்கு சேர்ப்பீர் | ஆரம்ப நிலையில் உள்ளோம் |
| ஆய்வும் அனுஷ்டானமும் | ஆய்வு செய்தால் மட்டும் போதாது செயலாக்கத்தை மேம்படுத்து | GATT வழிப்புணர்வு அடைந்-துள்ளோம் |
| உண்மை விடுதலை | அச்சமில்லை அச்சமில்லை | |
| விழுமியம் | அருளிலே உயர்நாடு | உலகுக்கு எடுத்துக்காட்டாய் திகழவல்லோம் எனக் கூறுகிறார் |

## சமூக முன்னறிவிப்புகள்

தொழில்நுட்ப முன்னறிவிப்புகள் போன்று அப்போதைய நிகழ்வுகளைக் கணக்கில் கொண்டு மாற்றங்களைக் கருத்தில் கொண்டு சமூக மாற்றங்களை முன்னறிவிப்பது ஒரு வகைப் பயன்பாடு. அல்லது நாம் விரும்பும் அல்லது நமக்கு உகந்த சமூக மாற்றங்களை விரும்பி அதற்கான சூழலை உருவாக்குவதற்காக முன்னறிவிப்பது ஒரு பயன்பாடு. பாரதி இருவகை சமுதாய முன்னறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளார். அட்டவணை 2-ல் அவை பட்டியிலிடப்பட்டுள்ளன. பெண் விடுதலை, கல்வி மேம்பாடு, சமூகபேதங்கள், வறுமை ஆகிய பலவற்றிலும் கூறியிருப்பதைப் பற்றிய விழிப்புணர்வு வந்துள்ளது. இன்று பேசப்படும் தளரா வளர்ச்சிக்கு (Sustainable Development) அடிப்படைக் கருத்தை முன்மொழிந்துள்ளார். தமிழ் வளர தமிழன் வளம்பெற "கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்பதின் ஆரம்ப நிலையைக்கூட நாம் எய்தவில்லை. ஆய்வுகள் நடத்தினால் மட்டும் போதாது. ஆனால் செயலாக்கத்தை மேம்படுத்த வேண்டும் என்ற அவரது கூற்றையே இன்றைய உலகலாவிய வணிக ஒப்பந்தம் நமக்கு அறிவுறுத்துகிறது.

## எதிர்காலவியல் செயல்முறைகள்

பாரதி எதிர்காலவியல் செயல்முறைகள் பலவற்றைக் கையாளுகிறார்.

சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்குவதற்குச் சமூக விளைவுகளை மதிப்பீடு செய்வதிலும் அனைத்துக் காரணிகளையும் அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்றவகையில் வரிசைப் படுத்தி அதற்கேற்றவாறு சமூகத்தை மேம்படுத்த வேண்டியது அவசியம். முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்து பொதுவாக மட்டும் கூறாமல் அளந்து வரிசைப்படுத்தியிருக்கிறார்.

கனிச் சோலைகள் சில
நீர்ச்சுனைகள் பல
அன்னச் சத்திரம் ஆயிரம்
ஆலயம் பதினாயிரம்
அதனையும் தாண்டிப் புனிதமானது
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

ஆலயம் பதினாயிரம் < அன்னச்சத்திரம் ஆயிரம் < நீர்ச்சுனைகள் பல < கனிச்சோலைகள் பல < ஓர்ஏழைக்கு எழுத்தறிவித்தல்

பாரதியின் கணிப்பில் ஆலயம் பதினாயிரம்கூட மிகக் குறைவான முக்கியத்துவத்தையும் அன்னச்சத்திரம் நீர்ச்சுனை-கள் கனிச்சோலைகள் எனப் படிப்படியாக உயர்ந்து ஏழைக்கு எழுத்தறிவு மிக அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

நமது எதிர்காலத் தேவையைத் துல்லியமாகக் கணித்துக் கூறுகிறார். வீதிதோறும் இரண்டொரு பள்ளித் என்று கூறுகிறார். எதிர்காலவியலார் ஒருவர் 1975 ஆம் ஆண்டு நமது பள்ளித் தேவை-யைக் கணித்தார். 2000 ஆண்டிற்குள் 5-14 வயதுவரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்பக்கல்வி அளிக்கவேண்டு-மெனில் 250 குழந்தைகள் படிக்கக்கூடிய கல்விக்கூடங்களை 10 நிமிடத்திற்கொன்று எனச் சளைக்காமல் 1975 இலிருந்து கட்டி-னால்தான் முடியும் எனக் குறிப்பிட்டார்.

### பள்ளிக் கல்வி மேம்பாடு

எதிர்காலத் தேவைகளை உணர்ந்து நமது திறமைகளையும் பலவீனங்களையும் உணர்ந்து செயல்திட்டம் அமைப்பது எதிர்-காலவியலின் பயன்பாடு ஆகும். கல்வியைப் பற்றிய அவரது விரிவான செயல்திட்டத்தில் வெளிப்படும் அவரது முழுமையான, பன்முக சிந்தனை (Systems approach) நம்மை வியப்படைய வைப்பதோடு அல்லாமல் நாம் ஏன் அதனைச் செயல்படுத்த-வில்லை என்ற வினாவினையும் எழுப்புகிறது.

கல்வியின் முக்கியத்துவத்தை அவர் உணர்த்திய பாங்கினை முன்பே கண்டோம்.

(பள்ளி தேவை)

11% தான் எழுத்தறிவு இருக்கிறது. ஆகவே
கிராமம் தோறும் பள்ளி தேவை என்கிறார்.

↓

(ஆசிரியர் தகுதி)

அதற்கு ஆசிரியர்கள் பெரிய பட்டதாரிகளாக இருக்க
வேண்டியதில்லை. ஆயினும் நல்ல விழுமியங்களை
உருவாக்குபவர்களாக இருத்தல் வேண்டும்
என்கிறார்.

↓

(பாடத்திட்டம்)

விரிவான பாடத்திட்டத்தை அமைத்துத்
தந்துள்ளார்.

↓

(பொருளாதாரத் திட்டம்)

அதற்கான நிதி ஆதாரங்கள் என்ன, பள்ளி
வரவு செலவுத் திட்டம் எப்படி அமைத்தல் வேண்டும்
எனக் கூறுகிறார்.

↓

(நிலையான கல்வி வளர்ச்சி)

இந்த செயல்திட்டத்தின் மூலம் நிலையான கல்வி வளர்ச்சி
எப்படி அமையும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

**கிருதயுகம் சமைப்போம்**

நமக்கு உகந்த எதிர்காலம் கிருதயுகம். அறிவிலோங்கி இவ்வையம் தழைக்கச் செய்யும் கிருதயுகம், எதிர்காலத்தில் அமைய அன்றிலிருந்து இன்று வரை நாம் ஆற்ற வேண்டுவது என்ன என்று பின்னோக்கிக் கணித்துக் கூறுகிறார் (Backcasting).

கிருதயுகம் அமைய கலி அழிய வேண்டும். கலியழிப்பது பெண்கள்; ஏனெனில் செம்மைமாதர் திறம்புவதில்லை. அதற்குப் பெண்கள் செயல்பட வேணடும். பட்டஙகள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் பெண்கள் முன்வரவேண்டும் அப்படிச் செயல்படப் பெண்கள் சமநிலை எய்த வேண்டும். அந்தச் சமநிலைக்குச் சமூகம் ஆற்றவேண்டிய பங்கும், பெண் ஆற்றவேண்டிய பங்கும் உண்டு. தருமனே ஆனாலும் பெண்ணுக்குத் தீங்கிழைப்பானானால் சமூகம் தண்டனை தரவேண்டும். சமநிலை எய்த பெண் விடுதலை வேண்டும். அதற்குப் பெண் கல்வி மேம்படவேண்டும். பெண் கல்வி மேம்பட பெண் கல்வியைப் பெண்களே திட்டமிடல் வேண்டும். அதற்குப் பல்கலை ஆட்சிக்குழுவில் 10 பெண்களாவது இடம்பெற வேண்டும்.

## அட்டவணை — 3

### கிருதயுகம் சமைப்பின் கணிப்பு
### (Backcasting)

அறிவிலோங்கி
இவ்வையம் தழைக்கு
மாம் (நடந்தால்)

கிருதயுகம்

மாண்புயர் மக்களைப்
பெற்றலரிது.
(இல்லையெனில்)

↑

கலியழிப்பது பெண்களறம்

(செம்மை மாதர் திறம்புவதில்லையாம்)

↑

பெண்கள் செயல்பட வேண்டும்

(பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்)

↑

பெண்கள் சமநிலை

(சரிநிகர் சமானமாய் வாழ்வமிந்த நாட்டிலே)

↑ ↑ ↑

சமூகச் செயல்பாடு | பெண் விடுதலை | பெண் செயல்பாடு

தருமனே ஆனாலும்
கதிரை வைத்திழந்தான்
அண்ணன் கையை
எரிந்திடுவோம்.

↑

பெண் கல்வி

(சாத்திரங்கள் பல கற்பராம்)

↑

பெண்கல்வி பெண்திட்டமிடல் வேண்டும்

(ஆட்சிக்குழுவில் 10 பெண்கள்)

முடிவுரை

எதிர்காலவியலின் கோட்பாடுகளும் அடிப்படைச் சித்தாந்தங்களும் பாரதியில் காண்கிறோம். அவசரத் தேவைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்வதற்கு மாறாக எதிர்கால அவசியத் தேவைகளைக் கணித்து அவற்றிற்குத் திட்டமிடல் வேண்டும். பின் விளைவுகளைக் கருத்தில் கொண்டே நமது முடிவுகள் திகழ வேண்டுமேயல்லாது முன்னோடிகளை மட்டும் கணக்கில் கொண்டு அல்ல. வருவன எதிர்கொள்வோம் என அமைதி கொள்ளாமல் உகந்தவற்றை வடிவமைப்போம் என எதிர்காலச் சிந்தனை தேவை என்ற தெளிவை ஏற்படுத்துகிறார். தொலைநோக்கு, விளைவு மதிப்பீடு, பன்முகச் சிந்தனை (Holistic / systems thinking) என்ற எதிர்காலவியல் சார்ந்த நவீனக் கருத்துக்களையும் பாரதியில் காண்கிறோம்.

## துணைநூல்கள்


1. மகாகவி சி. சுப்பிரமணியபாரதி (1994), *பாரதியார் கவிதைகள்*, வானதி பதிப்பகம்.

2. மகாகவி சி. சுப்ரமண்யபாரதியார் (1986), *பாரதியார் கட்டுரைகள்* வானதி பதிப்பகம்.

3. Eleonora Barbieri Masini (1993), *Why Future Studies*, financial assistant of UNESCO.

4. Slaughter Richard A. (1991), *Futures Concepts and Powerful Ideas*, Australia by the Future studies Centre.

5. Slaughter Richard A. (199ↄ), *Futures Tools & Techniques*, Future Studies Centre.

9

# தாய்த் தெய்வ வழிபாடு

★

கோ. சங்கரராசுலு

''புல்வினில் வயிரப்படை தோன்றுங்கால்
பூதலத்தில் பராசக்தி தோன்றும்''

தாய்த் தெய்வ வழிபாடு உலகம் முழுவதும் ஒரு காலத்தில் ஓங்கி இருந்தது. மனித குலத்தின் தொடக்க நாட்களில் தந்தையர் இன்னார் என அறிய இயலாத காலம் ஒன்று இருந்தது என்று மானுட நூல் வல்லார் கருதுகின்றனர். ஆனால் தாய் இன்னார் என அறியப்படாத காலம் என்றும் இருந்ததில்லை. எனவே தொடக்கநிலைக் குடும்பத்தில் தாயே தலைவியாகவும், மதிக்கத் தக்கவளாகவும், ஆட்சி பெற்றவளாகவும் வணங்கப்பட்டவளாகவும் விளங்கினாள் என்றும் இவர்கள் கருதுகின்றனர்.

மனித நாகரீக வளர்ச்சியில் வேட்டையாடும் நிலையில் இருந்து வேளாண்மை செய்யும் நிலைக்கு மாறிய நிலை பலவகைகளில் மனிதனை மேம்பாடு அடையச் செய்தது. நாடோடியாகத் திரிந்த மனித இனம் வேளாண்மை காரணமாக ஓர் இடத்தில் நிலைத்து வாழத் தொடங்கியது. பழைய கூடாரங்கள் நிலையான இருப்பிடங்களாகவும் கட்டடங்களாகவும் மாறின. உபரியாகக் கிடைத்த உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்க மட்கலங்களும் பாண்டங்களும் உருவாயின. நிலையான வாழ்க்கை பெற்ற மக்களிடையே மொழி வளர்ச்சி பெற்றது. பண்டமாற்று வளர்ந்தது. மற்றும் பற்பல மாற்றங்களும் ஏற்பட்டன. இவ்வளவுக்கும் காரணம் யார்? வேட்டையாடச் சென்ற ஆண்மக்கள் பல நாட்களுக்குத் தொடர்ந்து வேட்டையாடித் திரும்பும் வரை, ஓரிடத்தில் தங்கியிருந்த பெண்ணின் கூரிய மதி, சிந்திச் சிதறிய தானிய மணிகள் மண்ணோடும் ஈரத்தோடும் கலந்தபொழுது மீண்டும்

---

* முன்னாள் பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

மூளைத்து ஒன்று பலவாகப் பல்கியதைக் கண்டது. சிறிய அள-வில் களைக்கொட்டுகளைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தி விதை விதைத்துப் பயிர் விளைக்கத் தொடங்கியது பெண் இனமே. எனவே மனித இனத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு வித்திட்டவர் தாய்மார்களே. இத்தகைய சமூகத்தில் பெண்மையின் மதிப்பு உயர்ந்திருந்தமை இயல்பானதே. இத்தகைய தாய்மையின் மதிப்பு உயரவே தாய்மையின் வடிவில் தெய்வங்கள் தோன்றின. மழை பொழியவும், நிலம் வளம் பெற்றுப் பயிர்வகைகள் பல்கி வளரவும் தாய்த் தெய்வங்களே காரணம் என மனித இனம் கருதத் தொடங்கியது; தாய்மை வழிபடப்பட்டது. தாய்த் தெய்வங்கள் தோன்றின. இன்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பழங்குடி இனத்தவரிடையே தாய்த் தெய்வ வழிபாடும், தாய்வழிப் பாரம்பரியமும் (Matriling), தாய்முறை ஆட்சியும் (Matriarchy) ஓங்கியிருப்பது காணத்தக்கது.

முற்காலத்தில் களைக்கொட்டு வேளாண் முறையிலிருந்து கலப்பை வேளாண்மை முறை தோன்றியது. வேளாண்மைக்குத் தேவையான கடின உழைப்புக்கு ஆண்களே பொருத்தம் எனக் கருதப்பட்டது. ஆண் மக்களின் ஆதிக்கம் வளர்ந்தது. ஆண்வழிப் பாரம்பரியமும் (Patriling), ஆண்முறை ஆட்சியும் (Patriarchy) வளர்ந்தன படிப்படியாகப் பெண்மையின் சிறப்புக் குன்றியது.

எனினும் மனித மனத்தின் நினைவிலிருந்து தாய்மையின் சிறப்பு வேரோடு அழிந்துவிடவில்லை. தெய்வ வழிபாட்டில் 'தாய்த் தெய்வ வழிபாடு' அன்று முதல் இன்று வரை பல முறை-களில் இடம் பெறுகின்றது.

பாரத நாடும், தமிழகமும் இவ்விதிக்கு விலக்காக முடியுமா? தமிழகத்தில் தொன்றுதொட்டுத் தாய்த் தெய்வ வழிபாடு ஓங்கி இருந்தது என்பதற்குப் புதைபொருட் சான்றுகளும் எழுத்து வடிவச் சான்றுகளும் காணப்படுகின்றன. தமிழிலக்கியங்களில் காணப்படும் தாய்த் தெய்வ வழிபாட்டுக் குறிப்புக்களை ஒருவாறு தொகுத்துக் காண்பதும், மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கவிதைகளில் இவ் வணக்க முறை தலைதூக்கி நிற்பதையும் காண்-பதே கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## கொற்றவை வழிபாடு

தமிழகத்தில் கொற்றவை வழிபாடு மிகத் தொன்மை வாய்ந்தது. போரில் வெற்றியைக் குறிக்கும் கொற்றம் என்னும் சொல்லிலிருந்து கொற்றவையின் பெயர் பெறப்பட்டது. கொற்றம் அல்லது வெற்றியை விரும்புவோர் கொற்றவையை வழிபட்டனர். பழந்தமிழ் இலக்கியத்தில் இக் கொற்றவை, 'கொற்றி', 'காடமர் செல்வி', 'ஐயை' என்னும் பெயர்களாலும் வழங்கப்பட்டனள்.

## தொல்காப்பியம்

பொருளதிகாரப் புறத்திணை இயல் 4-ஆம் சூத்திரத்தில் கொற்றவை வழிபாடு குறிக்கப்படுகின்றது. இளம்பூரணர் இச் சூத்திரத்திற்கு எழுதிய உரையில் முருக பக்தர்களாகிய குறிஞ்சி நிலமக்கள், இத்தெய்வத்தை வழிபட்டதாகக் குறிக்கின்றார். இக்கருத்துக்குப் பெரும்பாணாற்றுப்படை வலிமை சேர்க்கின்றது. கொற்றவை முருகனைப் பயந்த பெரும் தாய்த் தெய்வமாக இந்நூலில் குறிக்கப்படுகின்றார்.[1] "வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ" என நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலும் முருகனைக் கொற்றவையின் மைந்தனாகக் குறிப்பிடுகின்றார்.[2] இக்கொற்றவை நக்கீரரால் "இழையணி சிறப்பிற் பழையோள்" எனவும் குறிப்பிடப்படுகின்றாள். மேற்காட்டப்பட்ட தொல்காப்பியச் சூத்திரம் குறிஞ்சிக்குப் புறமாகிய வெட்சித் திணையில் இடம் பெறுகின்றது. இச்சூத்திரத்துக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், தமது உரையிலும், நெடுநல்வாடை உரையிலும், கொற்றவை வழிபாட்டினை வஞ்சித் திணைக்கும் விரிவுபடுத்துகின்றார்.

பிற்காலத்து அகப்பொருள் விளக்க ஆசிரியர் நாற்கவிராச நம்பி கொற்றவையைக் 'கன்னி' எனும் பெயரால் குறிப்பிட்டுப் பாலை நிலத்துக்குத் தெய்வமாகக் கூறுகின்றார். குறுந்தொகை, அகநானூறு, சிலப்பதிகாரம் ஆகியவற்றுள் காணப்படும் கொற்றவையைப் பற்றிய குறிப்புகள் அவளைப் பாலை நிலத் தெய்வமாகவே குறிப்பிடுகின்றன.

அகநானூற்றில் 'கானமர் செல்வியாக' இத் தாய்த் தெய்வமாம் கொற்றவை, பெண்டிரால் வணங்கப்படுவதாகக் குறிப்பிடப்-

படுகின்றது.[3] குறுந்தொகையும் இத்தகைய வழிபாட்டினைக் குறிப்பிட்டு வழிபடுவோர் தம் கைகளில் செந்நூலினைக் காப்பாகக் கட்டுவதையும் குறிப்பிடுகின்றது.[4] நெடுநல்வாடையில் அரண்மனைப் பெண்டிர் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வெற்றி விளைவிக்குமாறு கொற்றவைக்கு வழிபாடு இயற்றும் சடங்கு குறிப்பிடப்படுகின்றது.[5]

கலித்தொகை கொற்றவையைப் 'பெருங்காட்டுக் கொற்றி' எனவும் பேய் மகளிரின் வழிபடு தெய்வமாகவும் கூறுகின்றது.[6] இதுபோன்ற குறிப்பு பெரும்பாணாற்றுப்படையிலும் உண்டு.[7] மணிமேகலையில் வறியோர்க்கு உணவூட்டும் மணிமேகலையைப் பட்டினியால் வாடும் பேய்களுக்கு உணவூட்டிய 'காடமர் செல்விக்கு' உவமிக்கிறார் சாத்தனார்.[8] சிறுபாணாற்றுப்படையின் உரையில் நச்சினார்க்கினியர் பாரி, அதியமான் ஆகியோரின் 'வேல்' படையில் கொற்றவை உறைந்ததாகக் குறிப்பிடுகின்றார்.[9]

## கொற்றவைக்குக் கோவில்

மதுரையில் மேலை வாயிலில் கொற்றவைக்குக் கோவில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.[10] இக்கோவிலில் கண்ணகி கணவனை இழந்தபின் தன் கைவளைகளை உடைத்ததாகச் சிலம்பு குறிப்பிடுகின்றது. கொற்றவை அல்லது ஐயையின் கோட்டத்தைக் குறித்த மற்றொரு குறிப்புச் சிலப்பதிகாரத்தில் விரிவாகப் பேசப் படுகின்றது. வார்த்திகன் எனும் அந்தணன் மீது தவறாகக் குற்றம் சுமத்திப் பாண்டிய மன்னனின் அரசு அலுவலர்கள் அவனைச் சிறையில் அடைத்துவிட்டபொழுது, இக் கொற்றவையின் கோவில் கதவுகள் திறக்க இயலாதபடி அடைத்துக் கொண்டனவாம். இதனை அறிந்த பாண்டியன் தன் அலுவலர்களை அழைத்து விசாரிக்கின்றான். குற்றமற்ற அந்தணனைச் சிறையில் அடைத்தமை அறிந்து உடனே அவனை விடுதலை செய்யப் பணிக்கின்றான். அவ்வந்தணனைத் (தானே சென்று) காலில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கோரி, அவனுக்கு நிலங்களை இறையிலியாக வழங்குகிறான். அரசனின் இச் செயலை ஒப்பிப் பாராட்டுவது போல 'ஐயை' கோட்டக் கதவுகள் பெருத்த ஓசையுடன் தாமாகவே திறக்கின்றனவாம்.[11] இதன் வாயிலாக 'ஐயை' அல்லது கொற்றவை என்னும் தாய்த் தெய்வம் நீதி

தேவதையாக விளங்கியமையும் அறியப்படுகின்றது. இக் கொற்றவையை வணங்கித் துணங்கைக் கூத்தும், வேட்டுவ வரியும் ஆடப்பட்டன எனவும் அறிகிறோம்.

மணிமேகலைக் காப்பியத்தில் சக்கரவாளக் கோட்டத்தில் காபாலிகர்கள் தாந்திரீக முறைப்படி 'பைரவர்களாக உடைபூண்டு' வழிபாடு இயற்றியதாகக் கூறப்படுகின்றது. இச்சமயம் தமிழ் நாட்டில் ஊடுருவிய காலத்தில் கொற்றவை 'பைரவி'யுடன் ஒன்றாக வைத்தெண்ணப்பட்டாள்.[12]

## வேட்டுவ வரி

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் வேட்டுவ வரியில் எயினர் கொற்றவையை வழிபட்ட முறை விரிவாகப் பேசப்படுகின்றது.[13] 'சாலினி' என்னும் முதிய பெண்மணி கொற்றவைத் தெய்வம் வந்தேறியதால் ஆவேசமுற்று வருங்காலத்தை உரைப்பதும் இங்குக் கூறப்படுகின்றது. எனவே கொற்றவை வழிபாட்டில் முதன்மையும் தெய்வத்தைப் பூசை புரியும் உரிமையும் முதிய பெண்களுக்கு வழங்கப்பட்டமை அறியப்படுகின்றது.

வேட்டுவ வரியில் ஓர் இளம் பெண்ணைக் கொற்றவையாக ஒப்பனை செய்த முறை விரிவாகக் கூறப்படுகின்றது. இவ்வழிபாட்டில் பங்கேற்றவர்களில் பெண்களே சிறப்பிடம் பெற்றமையும் கருதத்தக்கது. சிவபெருமானின் பெண் அம்சமே இக்கொற்றவை எனக் கூறப்படுவது போன்று இவ்விளம் பெண்ணின் ஒப்பனை அமைந்திருந்தது. அவள் அர்த்த நாரீசுவரனின் வடிவிலேயே ஒப்பனை செய்யப்பட்டிருந்தாள்; மகிஷாசுரனை வென்றவளும் இவளே. இவள் அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, திருமாலுக்கு இளையவள் (துர்க்கை), ஐயை, இலக்குமி எனப் போற்றப்படுகின்றாள். மும்மூர்த்திகளின் சக்தி அமிசங்களாகவும் இவளே கூறப்படுகின்றாள்.

சங்கரி, அந்தரி என்னும் பெயர்களாலும் அவள் இங்குக் குறிப்பிடப்படுகின்றாள். கண்ணன் புரிந்த திருவிளையாடல்களைக் கொற்றவையாகிய இவளே புரிந்ததாகவும், வேட்டுவ வரி கூறுகின்றது. இவ்வாறு பண்டை நாள் முதல் தமது காலம் வரை சக்தி அல்லது தாய்த் தெய்வ வழிபாடு தோன்றி வளர்ந்த நிலை இளங்கோவடிகளால் விரித்துணர்த்தப்படுகின்றது.

இவளுக்குப் பூம்புகாரிலும் கோவில் அமைந்திருந்தது. பிற்காலக் கிராம தேவதைகளில் ஏழு தாய்மார்களும் (சப்தமாதாக்கள்), ஏழு கன்னிகைகளும் (சப்த கன்னியர்) சிறப்பான இடம் பெறுவதும் நோக்கத்தக்கது.

பௌத்த சமயத்திலும், யக்ஷி (பிற்கால இசக்கி), ஹாரிதி, மணிமேகலை முதலிய பெண் தெய்வங்களின் வழிபாடு வழக்கில் இருந்தது. 'ஒரு காலத்தில் பெண் தெய்வங்களே, கிராமம், நகரம் முதலிய எல்லா இடங்களிலும் முதலிடம் பெற்றிருந்தன' என்பர் திரு பி. ஆர். சீனிவாசன்.[14]

இலங்கைக் கோட்டையைக் காத்து வந்தவள் இலங்கினி எனும் பெண் தெய்வம். உஜ்ஜயினியின் மூல தெய்வம் மகாகாளி. இவள் இன்றும் தமிழகக் கிராமங்களில், 'உச்சினி மாகாளி' என வணங்கப்படுகின்றாள். இக்கால கல்கத்தா காளியும் தில்லையம்பதியின் பண்டைத் தெய்வமும் 'சாமுண்டி'யே. காளிதாசரும், காளமேகமும் (ஒரு வகையில்) கம்பரும் காளியை வழிபட்டவர்களே. இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் காளியை வழிபட்டே மேன்மை அடைந்தார்.

ஆதிசங்கரர் ஷண்மதக் கோட்பாட்டை வகைப்படுத்திய பொழுது சக்தி வழிபாட்டினைச் 'சாக்தம்' என வகுத்தனர்.

அஸ்ஸாம் மாநிலத் தாந்திரீக வழிபாட்டு முறைகளில் சக்தி வழிபாடே மேலோங்கியிருந்தது. காமருபம் என்னுமிடத்தில் அமைந்த 'காமாக்யா' தெய்வம் சக்தியே. இவளே தமிழில் காமாட்சி எனப் போற்றப்பட்டு காஞ்சி மாநகரில் உறையும் தெய்வம் ஆனாள்.

இச்சக்தி உருவமாகவும், 'இயந்திர' வடிவிலும் வழிபடப்படுவாள். சக்திக்கு உரிய இயந்திரம் 'ஸ்ரீ சக்கரம்' எனப்படும். இன்றும் குற்றாலம், காஞ்சி முதலிய தலங்களில் சக்தி பீடம் (மேரு) அமைந்துள்ளது.

திருமூலரின் திருமந்திரத்தில் சக்தி வழிபாடு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்தியம்பப்படுகிறது.[15] லலிதா சகஸ்ர நாமம் சக்தி வழிபாட்டின் உச்ச நிலையைக் காட்டுகின்றது.

**பாரதியும் தாய்த் தெய்வ வழிபாடும்**

தமிழ் நாட்டிலும், பாரத தேசத்திலும் இவ்வாறு நீண்ட நெடிய காலமாக வழக்கத்திலிருந்த தாய்த் தெய்வ வழிபாடு (19, 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த) பாரதியிடம் ஒரு புதிய வேகத்-தையும் பரிமாணத்தையும் பெறுகின்றமை ஊன்றிக் கவனிக்கப்-படத்தக்கது.

பாரதியின் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தையும், கண்-ணோட்டத்தில் புதிய போக்கினையும் ஏற்படுத்தியவர் விவேகா-நந்தரின் சுவீகாரப் புத்திரியாகிய 'சகோதரி நிவேதிதா' என்பது பாரதியின் தேசீயப் பாடல்களை அன்னாருக்கு அவர் சமர்ப்பணம் செய்ததிலிருந்தும், அச்சமர்ப்பண உரையில் அவர் கூறியதி-லிருந்தும் காணப்படும்.

பாரதியின் சக்தி வழிபாட்டில் பாரம்பரியமான பௌராணிக மரபுகளைக் கடந்ததும் (ஆனாலும்) அம்மரபுகளின் அடிப்படையில் அவர் கண்டதுமான புதிய விளக்கங்கள் பலவற்றை நாம் காணலாம்.

சக்தி என்ற சொல்லுக்கு வழக்கமாகக் கொடுக்கப்படும் தெய்வீகமான விளக்கங்களோடு ENERGY எனப்படும் சொற்-பொருளையும் அவர் இணைக்கின்றார். உண்மையில் சமயங்களின் அடிப்படைத் தத்துவ விளக்கங்களிலும், சித்தாந்த சைவத்தி-லும் கூறப்படும் விளக்கங்களும் பாரதியின் கண்ணோட்டத்தை ஒத்தனவே. சுத்த அறிவு நிலையில் விளங்கும் சிவத்தில் செயல்-பாடு நிகழ்வதில்லை. சிவம் சக்தியோடு கூடிய நிலையிலேயே நாதம், விந்து, கலை ஆகிய தத்துவங்கள் தோன்றிச் செயல்படு-கின்றன. எனவே புலன்களுக்கு எட்டும் நிலையில் உள்ள யாவும் சக்தியின் தொழிற்பாடுகளேயாகும் எனும் கருத்தினைப் பாரதி விரிவாக்கம் செய்கிறார்.

**சிவசக்தி**

இக்கவிதையில் சக்தியைக் குறித்துப் பிறர் கூறும் விளக்கங்-களையெல்லாம் பாரதி முதலிற் கூறுகின்றார். 1. இயற்கை, 2. ஐம்பூதங்கள், 3 செயற்கையின் சக்தி, 4. உயிர்த்தீ, 5. அறிவு, 6. ஈசன, 7. அன்புறுதோழி, 8 ஆர்இருட்காளி, 9. இன்பம், 10. துன்பம் முதலியவை.

பாரதியோ பராசக்தியை 1. உயிர்ச்சுடர், 2. ஒண்மை, 3. ஊக்கம், 4. திருவருட்சுனை முதலியனவாகக் காண்பார்.

*பராசக்தி*

மழையும் காற்றும் பராசக்தி செய்கைதான் என்பார் பாரதி.

> ''அல்லினுக்குட் பெருஞ்சுடர் காண்பவர் அன்னை சக்தியின்
> மேனி நலங்கண்டார்''

என்பார் பாரதி. மேலும்,

> ''கல்லினுக்குள் அறிவொளி காணுங்கால்
> கால் வெள்ளத்திலே நிலை காணுங்கால்
> புல்லினில் வயிரப்படை காணுங்கால்
> பூதலத்தில் பராசக்தி தோன்றும்''

என்பார். எனவே புலன்களால் காணப்படும் காட்சிகளின் உட்பொருளை, அவ்வவற்றின் தத்துவத்தை, உண்மை நிலையை உணர்தலே பராசக்தி காட்சியாகும் என்பது அவர்தம் கொள்கை.

*சக்திக் கூத்து*

இத்தகைய சக்தி ''அகத் தகத் தகத்தினிலே உள் நின்றாள்'' என்பார் பாரதி. எனவே மேலோட்டமாகப் பார்ப்பதை விட்டு உள்ளே, உள்ளே, மேலும் உள்ளே கருதிக் காணும் காட்சியாலேயே பராசக்தியை உணர முடியும் என்பது பாரதியின் கருத்து.

இதனால்தான் 'புகப் புகப் புக' இன்பமடா என மும்முறை புகும்படியாகப் புகட்டுகின்றார்.

*சக்தி*

1. துன்பமில்லாத நிலை, 2. தூக்கமிலாக் கண்விழிப்பு, 3. அன்பு கனிந்த கனிவு, 4. ஆண்மை நிறைந்த நிறைவு, 5. இன்பம் முதிர்ந்த முதிர்வு, 6. எண்ணத்து இருக்கும் எரி, 7. முன்பு நிற்கின்ற தொழில், 8. முக்தி நிலையின் முடிவு, 9. சோம்பர் கெடுக்கும் துணிவு, 10. சொல்லில் விளங்கும் சுடர், 11. பழத்தில் சுவை, 12. தெய்வத்தை எண்ணும் நினைவு, 13. பாம்பை அடிக்கும் படை, 14. பாட்டினில் வந்த களி, 15. வாழ்வு பெருகும் மதி, 16. தாழ்வு தடுக்கும் சதிர், 17. சஞ்சலம் நீக்கும் தவம், 18. வீழ்வு தடுக்கும் வீறல், 19. விண்ணையளிக்கும் விரிவு, 20. ஊழ்வினை நீக்கும் உயர்வு, 21 உள்ளத்தொளிக்கும் விளக்கு எனச் சக்தி என்னும் தொன்மைப் பொருளுக்குவிளக்கம் தருகிறார் பாரதி.

**சக்தி விளக்கம்**

1. ஆதிப் பழம்பொருளின் ஊக்கம், 2. மூலப் பழம்பொருளின் நாட்டம், 3. காலப் பெருங்களத்தின் மீதே காளி புரியும் நடம்தான் உலகக் கூட்டம் என்பன சக்தியின் விளக்கங்களாகப் பாரதியார் கருதுபவை.

மேலும் 'மகா காளியின் புகழ்' என்றும் காவடிச் சிந்தில்,

''கால மரம் வனத்தில் அண்டகோலமா மரத்தின் மீது
காளிசக்தி என்ற பெயர் கொண்டு — ரீங்
காரமிட்டுலவும் ஒரு வண்டு — தழல்
காலும் விழிநீல வன்ன மூல அதிதுவாக்கள் எனும்
கால்கள் ஆறுடைய தெனக் கண்டு — மறை
காணும் முனிவோர் உரைத்தார் பண்டு.''

என்னும் பகுதியில் காலத்தை ஒரு வனமாக உருவகம் செய்து அதில் உள்ள அண்டம் என்னும் அழகிய மரத்தில் ரீங்காரம் இட்டு உலவும் வண்டாகக் காளியைக் காட்டுவதில் தத்துவ ரீதியாகப் பராசக்தியைக் காணவேண்டும் என்னும் கருத்தைப் பாரதி வலியுறுத்துவதைக் காணலாம். இத்தகைய காளி பாரதியின் உள்ளத்தை எல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டு, ''கவிதை யாவும் தனக்கெனக் கேட்கிறாள்'' என்கிறார் பாரதி.

''புதியதிற் புதுமையாய், முதியதில் முதுமையாய்'', ''செய்கையாய், ஊக்கமாய்ச் சித்தமாய் அறிவாய்'' நிற்பவள் சக்தி எனப் போற்றுகிறார் பாரதி.

கலிங்கத்துப் பரணியில் இத்தாய் வெற்றித் தெய்வமாகிய கொற்றவையாகவும், துணையாகவும் சிறப்பித்துப் பேசப்படுகின்றாள். நாட்டில் எங்கும் போர்களே நடைபெறாமல் அமைதி நிலவியதால் பேய்களுக்கு உணவே கிடைக்கவில்லையாம். போர்கள் நடைபெற்றால் பேய்களுக்குக் கொண்டாட்டம். பரணிக் கூழ் சமைக்கலாம். போரில் மடிந்தவர்களின் உதிரத்திலே குளிக்கலாம். ஆனால் போர்களே நடைபெறாமல் எங்கும் அமைதி நிலவிவிட்டால் பேய்களின் நிலைமை என்ன ஆகும்? பேய்கள் பட்டினி கிடந்து மெலிந்து நொந்து போகுமாம்.

'காலக் கடலுக்கோர் பாலமிட்டவளாகிய' அன்னை பராசக்தியின் கடைக்கண் வீச்சுப் பட்டால் எங்கும் அமைதியே

நிலவும். மக்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைப்பார்கள். ஆனால் பேய்களின் நிலை என்னவாகும்?

ருஷ்யப் புரட்சியைப் பராசக்தியின் கடைக்கண் பார்வையால் நிகழ்ந்ததாகக் குறிப்பிடும் மகாகவி பாரதியார் சங்க காலம் தொட்டு அண்மைக் காலம் வரை நிலவி வந்த ஓர் ஐயத்துக்குத் தக்க விடையும் விளக்கமும் அளிக்கின்றார்.

''மாகாளி பராசக்தி ருஷ்ய நாட்டில் கடைக்கண் வைத்தாள்
ஆகா என்று எழுந்தது பார் யுகப்புரட்சி கொடுங்காலன்
அலறி வீழ்ந்தான்
வாகான தோள் புடைத்தார் வான் அமரர் பேய்கள் எல்லாம்
வருந்திக் கண்ணீர்
போகாமல் கண்புகைந்து மடிந்தனவாம்''

என்கின்றார் பாரதியார். மக்களுக்கு நல்லது நடந்தால் வான் அமரர் தோள் பூரித்து நிற்பர்; ஆனால் பேய்களோ வருந்தும், வருந்தியும் கண்ணீர் வடிக்க முடியாமல் கண்புகைந்து மடிந்தனவாம்.

மக்கள் மகிழ்ந்தால் பேய்களுக்கு வருத்தம்;
மக்கள் மடிந்தால் பேய்களுக்கு மகிழ்ச்சி.

இதுவே பாரதி வழங்கும் புதிய விளக்கம்.

புறநானூற்றுக் காலம் முதல் கலிங்கத்துப்பரணிக் காலம் வரை போர்களையும் அவற்றால் விளைந்த அழிவுகளையும் விரித்தும் வருணித்தும் புலவர்கள் புனைந்த பாடல்கள் மனிதாபிமானம் அற்றவையாக, மேல் தோற்றத்தில் மட்டுமே காணப்படுகின்றன. ஆழ்ந்து காணப்புகுவோமாயின், கற்றறிந்த சான்றோர்களாகிய தமிழ்ப் புலவர்கள், கண்மூடித்தனமாகப் போர்களை நிகழ்த்தி அழிவு புரிந்த மன்னர்களின் கண்கள் திறக்கும்படி; தங்கள் பாடல்களின் வாயிலாக அறிவுறுத்தும் பாங்குடையோர் என்பது புலனாகும்.

தமது வசன கவிதைகளில் பாரதி, சக்தியைப் பற்றிக் கூறுவன மேலும் சில விளக்கங்களைத் தருகின்றன.

சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ஒரு குமிழியாம். சக்தி. அடிப்பது, துரத்துவது, கூட்டுவது, பிணைப்பது, கலப்பது,

உதறுவது, புடைப்பது, வீசுவது, சுழற்றுவது, கட்டுவது, சிதறடிப்பது, தூற்றுவது, ஊதிவிடுவது, நிறுத்துவது, ஒட்டுவது, ஒன்றாக்குவது, பலவாக்குவது ...

மற்றும் ஒரு கோணத்தில் பராசக்தியே பாரதமாதா எனக்கொண்டு அவளுக்குத் திருப்பள்ளி எழுச்சி, நவரத்னமாலை, திருத்தசாங்கம் ஆகியவை பாடி மகிழுகின்றான் பாரதி. மற்றும் 'ஜய பாரத' 'பாரத மாதா' முதலிய தேசீயப் பாடல்களிலும் பராசக்தியே பாரத மாதாவாகக் காணப்படுகின்றாள்.

சக்தி அல்லது தாய்த் தெய்வ வழிபாட்டில் மற்றையோரின் ஈடுபாட்டிற்கும் பாரதியின் ஈடுபாட்டிற்கும் பெருத்த வேறுபாடு உண்டு தமது தனித்த விடுதலை, முன்னேற்றம் முதலியவற்றுக்-காகப் பிறர் சக்தி வழிபாட்டை மேற்கொள்வதுண்டு. ஆனால் பாரதியோ 'பூதலத்தில் பராசக்தி' தோன்ற வேண்டும் எனக், கருதுவான். பராசக்தியின் அருளால் 'கல்லை வயிர மணியாக்கல் முதலிய யோக சித்திகளால், இந்நாட்டை ''தொல்லை தீர்த்-துயர்வு, கல்வி வெற்றி சூழும் வீரம் அறிவாண்மை'' பெற்று இந்த நாட்டார் கீர்த்தி எங்கும் ஓங்கச் செய்யவேண்டுமாம். இந்த நாடு மட்டுமென்ன உலகை நலிந்து வரும் 'கலி'யைச் சாடி அழித்துப் பின் 'கிருத யுகத்தைக்' கேடின்று நிறுத்த விரதம் கொண்டதாகக் கூறி முடிக்கின்றான் பாரதி. கிருத யுகத்தை நிறுவி,

''மண்ணிலார்க்கும் துயரின்றிச் செய்வேன்
வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்''
''தானம் வேள்வி தவம் கல்வி யாவும்
தரணி மீதில் நிலை பெறச் செய்வேன்''

எனக் கூறுகின்றான் பாரதி.

இந்தப் போக்கினுக்கு நம்மாழ்வார் பாரதிக்கு அடி எடுத்துக் கொடுக்கின்றார், ''பொலிக பொலிக'' என்னும் பாசுரத்தில். திருமங்கை ஆழ்வாருக்குக் கலிகன்றி என்பதொரு திருநாமம் உண்டு.

## குறிப்புகள்

1. பெரும்பாண். 57-59.
2. முருகு 259-260.

3. அகம். 370.
4. குறுந். 218.
5. நெடுநல். 166-168.
6. கலி. 89.
7. பெரும்பாண். 457-459.
8. மணிமேகலை, 18:115-116.
9. சிறுபாண். 95-102 வரை.
10. சிலம்பு. 23:181.
11. மேலது, 23:88-125.
12. மணிமேகலை, 6:50-53;8:89.
13. சிலம்பு. 11:196-197.
14. நாம் வணங்கும் தெய்வங்கள், ப. 15.
15. திருமந்திரம்:மந்திரம் 1045 முதல் 1154 வரை; 1038-1418.

# 10

# இந்திய இலக்கியம் என்னும் கருத்தமைவு

★

டாக்டர் கி. இராசா

''செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்''

'இந்திய இலக்கிய'த்தின் கருத்தொருமை பற்றி நீண்ட காலமாகப் பேசியும் எழுதியும் வருகின்றனர். 'இந்திய இலக்கியம்' என்றால் என்ன? பல்வேறு வட்டார வேறுபாடுகளைக் கொண்ட இந்தியாவில் உண்மையிலேயே 'இந்திய இலக்கியம்' என்ற கருத்தமைவு உள்ளதா? அப்படி ஏதேனும் ஒரு கருத்தமைவு உளதாயின் அது எவ்வாறு எதிரொலிக்கிறது? என்பதைப் பற்றியெல்லாம் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே — அதாவது 1852லிருந்தே — சிந்தித்து வந்திருக்கின்றனர். இதன் பரிமாணத்தை அறிவது, இந்திய இலக்கியம் பற்றிய கருத்தொருமையைக் காண்பதற்கு ஏதுவாக அமையும். 'இந்திய இலக்கிய வரலாறு' (History of Indian Literature) என்ற நூலில் இடம்பெற்றுள்ள 'இந்திய இலக்கியம் எனும் பெயர்' (The Name Indian Literature) என்ற உரைக் கோவையைச் சான்று காட்டலாம்.[1] வீபரின் இவ்வுரைக் கோவையைப் போன்றே வின்டர்னிஸ், கால்டுவெல், கிரீசன் போன்ற மேலை நாட்டறிஞர்களும் இந்திய இலக்கியம் பற்றிய கருத்துரைகளைத் தந்துள்ளனர்.[2] இவர்களைத் தொடர்ந்து சுனித்குமார் சட்டர்ஜி[3], வி.கே. கோகக்[4], நாகேந்திரா[5], சிசிர்குமார் தாஸ்[6] ஆகிய இந்திய இலக்கியத் திறனாய்வாளர்கள், இந்திய இலக்கியம், இந்திய இலக்கிய ஒருமை பற்றிய எண்ணங்களை வளர்த்து வந்துள்ளனர்.

இவ்வாறு தனிப்பட்டவர்களது முயற்சிகளைத் தவிர, இந்தியாவில் அரசு ஆதரவிலான சாகித்ய அகாதெமி போன்ற இலக்கிய அமைப்புகளும், தேசிய புத்தக நிறுவனமும் இந்திய

---

* தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

இலக்கியம் என்ற கருத்துருவை வளர்த்து வருகின்றன. ஆண்டு-தோறும் இந்தியாவின் ஒவ்வொரு மொழியிலும் எழுதப்பட்ட சிறந்த இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் நல்கியும், 'இந்திய இலக்கியம்' (Indian Literature) என்ற இதழை வெளி-யிட்டும், தற்கால இந்திய இலக்கியத் தொகுதிகளை வெளியிட்டும் சாகித்ய அகாதெமி பணியாற்றி வருகிறது. தேசியப் புத்தக நிறுவனம், ஒவ்வொரு மொழியிலும் வெளியான சிறந்த சிறுகதை-களைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பிற மொழிகளில் மொழி-பெயர்த்துத் தொகுதி தொகுதியாக வெளியிட்டு வருகிறது. இவற்றுள் சிம்லாவிலுள்ள இந்திய உயராய்வு நிறுவனம் (Indian Institute of Advanced Studies) ஆற்றும் பணியும் குறிப்பிடத்-தக்கதாகும். இந்நிறுவனம் 1972இல் வெளியிட்ட 'Indian Literature' என்ற கருத்தரங்கத் தொகுதி[7] சிறப்பான கவனத்-திற்குரியது. இவற்றோடு, மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் மையநிறுவனம் (CIIL) 1981இல் வெளியிட்ட 'இந்திய இலக்கியம் எனும் கருத்துருவம்' (The Idea of Indian Literature) எனும் கட்டுரைத் தொகுப்பு நூல்[8] இந்திய இலக்கியம் எனும் கருத்துரு-வின் பரிமாணத்தை விளக்குவதாக அமைந்தது.

இவ்வாறு படைப்பாளர்களும், திறனாய்வாளர்களும், அறிஞர்களும், நிறுவனங்களும் இந்திய இலக்கியம் என்ற கருத்துருவை வளர்ப்பதற்கு ஆர்வத்துடன் முயன்று வருகின்றனர். இந்திய இலக்கிய ஒருமையைப் பற்றிக் குறிப்பிடுபவர்கள் அனைவரும் 1954இல் சாகித்ய அகாதெமி அமைப்பைத் தொடங்கி-வைத்துப் பேசிய டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின், "Indian Literature, though written in many languages is one" என்ற கூற்றை நினைவூட்டத் தவறுவதில்லை. ஆனால் இவர்கள், "What is Indian Literature?" என்ற வினாவைத் தமக்குள் எழுப்பிக்கொண்டு, அதற்கு விளக்கம் தரும் வகையில் தம் கருத்துக்களைக் கூறிவருகின்றனர். சான்றாக, உமாசங்கர் ஜோஷி என்பார், தம்முடைய நூலின் முதற்பக்கத்திலேயே "இந்திய இலக்கியம் என்ற கருத்துருவத்தில் எல்லோருக்கும் கருத்து வேறுபாடு இல்லையென்று கூறிவிடமுடியாது ... தமிழ் மொழி, இந்தி மொழி, பஞ்சாபி மொழி என்று பல மொழிகள் உள்ளன எனவே தமிழ் இலக்கியம், இந்திய இலக்கியம், பஞ்சாபி இலக்கியம் என்று பல இலக்கியங்களும் உள்ளன. இந்நிலையில்

'இந்திய மொழி' என்று சுட்டத்தக்க வகையில் ஒரு மொழி இல்லாதபோது இந்திய இலக்கியம் என்று ஒன்றைச் சுட்ட முடியுமா?''[9] என்ற வினாவைத் தொடுக்கின்றார். இந்த வினாவுக்கு விளக்கம் தரும் வகையில் அவரே அந்நூலின் பிறிதோரிடத்தில், ''நான் ஒரு இந்திய எழுத்தாளன் என்று சொல்லிக் கொள்ளவே விரும்புகின்றேன். நான் குஜராத்தி மொழியில் எழுதும் இந்திய எழுத்தாளன்; சுபீந்திர நாத் தத்தா, வங்காள மொழியில் எழுதும் இந்திய எழுத்தாளர்; ஜெய்னேந்திரகுமார், இந்தி மொழியில் எழுதும் இந்திய எழுத்தாளர். வைக்கம் முகம்மது பஷீர், மலையாள மொழியில் எழுதும் இந்திய எழுத்தாளர்''[10] என்று குறிப்பிடுகின்றார்.

1970 ஆம் ஆண்டு மே மாதத்தில் சிம்லாவில் உள்ள இந்திய உயராய்வு நிறுவனம் கூட்டிய இந்திய இலக்கியக் கருத்தரங்கில் வரவேற்புரையாற்றிய நிகாரஞ்சன் ரே என்பார், ''இந்தியாவில் பல இந்திய மொழிகள் உள்ளதைப் போன்றே, பல இந்திய இலக்கியங்கள் உளளன. இவற்றுள் ஒரே தன்மை கொண்ட ஒரு இந்திய இலக்கியம் என்ற ஒருமை இல்லை''[11] என்று குறிப்பிட்டார். இச்சிக்கலைக் களைந்து, ஒவ்வொரு வட்டாரத்திலும் வழங்கும் இலக்கியங்களின் (Regional Literature) தனித்தன்மைகளைக் கண்டு, அவற்றை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஏதேனும் பொதுத் தனமை நிலவுகிறதா? அந்தப் பொதுத் தனமையை இந்திய இலக்கியப் பொதுமை என்றழைக்கலாமா? என்பதை அறிந்துகொள்ளவும் இக் கருத்தரங்கம் கூட்டப்பட்டது எனும் கருததமைய, ''இந்தியாவின் பல்வேறுபட்ட வட்டாரங்களின் வாழ்க்கை இயல்புகளைப் பிரதிபலிக்குமாறு எழுதப்படுகின்ற இலககியங்களிலிருந்து சில பொதுத் தன்மைகளைக் காண்பதற்காகவும், வேறுபாடு தன்மைகளிலிருந்து வட்டார இலக்கியப் பணபைப் பிரித்தறிவதற்காகவும் இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது எனலாம்''[12] என்று கருத்துரைத்துள்ளார். இங்கு இந்திய இலக்கியத் தன்மை என்பது இருகூறுகளாகச் சுட்டப்பட்டிருப்பதை அறியலாம். அவை வருமாறு :

(1) வட்டார இலக்கியங்களின் தன்மைகளைக் கண்டறிவது.

(2) அவற்றுள் காணப்படுகின்ற இந்திய இலக்கியத் தன்மையை வெளிப்படுத்துவது.

இவ்விரண்டனுள், வட்டார இலக்கியப் பண்புகள் எவை-யெனக் காண்போம். இந்தியா, பல மொழிகள் பேசும் பல மாநிலங்கள் ஒருங்கிணைந்த ஒரு நாடு. இங்குப் பேசப்படுகின்ற மொழிகள் பல குடும்பங்களைச் சார்ந்தவைகளாகக் கண்டறியப்-பட்டுள்ளன. இந்தக் குடும்ப மொழிகளுக்கிடையேயும் பண்பாட்டி-லும் படைப்பாக்கத்திலும் பரவல் தன்மையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அசாம், வங்காளம், ஒரியா ஆகிய மொழிகள் கிழக்கிந்திய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. இவற்றுள் வங்காள மொழி-யின் செல்வாக்கு அளவிடற்கரியது. ராஜாராம் மோகன்ராய், ரவீந்திரநாத் தாகூர், ஸ்ரீ அரவிந்தர், சரத் சந்திர சட்டர்ஜி, பக்கிம் சந்திரர், புத்ததேவ போஸ் ஆகியோர் வங்காள இலக்கியத்தை உலக அளவிற்கு உயர்த்தினர். தமிழர்களைப் போன்றே வங்காளி-களும் தங்களது பாரம்பரியப் பெருமையைப் போற்றுவதில் சளைக்-காதவர்கள். பிற பண்பாடுகளும் பழக்கவழக்கங்களும் தங்களிடம் புகுந்துவிடாமல் கண்ணும் கருத்துமாக மரபைக் காப்பாற்று-பவர்கள்; தங்களை இந்தியாவின் அறிவு ஜீவிகள் எனக் கருதிக் கொள்பவர்கள்.

வங்க மொழியோடு ஒற்றுமை கொண்டுள்ள அசாமிய மொழியில் இலக்கிய ஆக்கங்கள் மிகக் குறைவு. ஆனால் கல்வி-யறிவு பெற்றோர் தொகை, வங்காள தேசத்தோடு ஒப்பிடக் கூடியது. விவசாயத்தில் ஈடுபடுவர்கள் 77 விழுக்காட்டிற்கும் மேல். மலையும் காடுமாகவும் அசாமிய நிலப்பரப்பு உள்ளதால், அங்கு ஏட்டிலக்கியத்தைக் காட்டிலும் நாட்டிலக்கியம் செல்-வாக்குப் பெற்றுள்ளது என்பர். வங்காளத்தைப் போன்றே வரி-வடிவம் கொண்டது அசாமிய மொழி. எனவே இவர்களது எழுத்துக்களில் தனித்துவப் போராட்டத்தைக் காணவியலும். அசாமிய இலக்கியத்தை வெளிஉலகிற்கு அறிமுகப்படுத்தியவர்-களுள், நவகாந்த் பருவா (Navakanth Baruva), ஹேம் பருவா (Hem Baruva), மஹேந்திர போரா (Mahendra Bora), பீரேந்திர குமார் பட்டாச்சார்யா (Birendrakumar Battacharya) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இருந்தாலும் மாநிலத்தின் நில-வமைப்பு மற்றும் விவசாயத் தொழில்முனைப்பு காரணமாகவும், அண்டை மாநிலத்தில் வழங்கும் வங்காள மொழியின் செல்வாக்குக்

காரணமாகவும் அசாமிய இலக்கியம், இந்திய இலக்கிய ஆய்வாளர்களின் சிந்தனையில் ஆழப்பதிய இயலவில்லை.

வங்காளம், அசாம் ஆகிய மொழிகளோடு ஒப்புமைத்தன்மை கொண்ட ஒரிய மொழி, பக்தி இலக்கியத்தில் திளைத்த மொழி. இறையனுபவத்தில் ஈடுபட்ட அருளாளர்களின் பனுவல்களால் வளமாக்கப்பட்ட மொழி. ஃபக்கீர் மோகன் சேனாபதி, கே.சி. பானிக்ரகி போன்ற நாவலாசிரியர்களும், சுசி ரந்த்ராய், மாயாதர், மான்சிங் போன்ற கவிஞர்களும், கோபிநாத் மொகந்தி, ராஜ் கிஷோர் ராய் போன்ற சிறுகதையாசிரியர்களும் ஒரிய மொழிக்கு நவீன இலக்கிய வேகத்தைக் கொடுத்தாலும், கிராமியப் பின்னணியிலிருந்தும், இறையனுபவத்திலிருந்தும் ஒரிய இலக்கியத்தைப் பிரிக்க முடியவில்லை.

இவை போன்றே மராத்தி, குஜராத்தி, சிந்தி, இந்தி ஆகிய வடஇந்திய மொழிகளுக்குள்ளும், பஞ்சாபி, காஷ்மீரி, டோக்ரி ஆகிய வடமேற்கிந்திய மொழிகளுக்குள்ளும் வட்டார ஒற்றுமைகளும் தனித்தன்மைகளும் காணப்படுகின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னிந்திய மொழிகளுக்குள் உள்ள வட்டார ஒற்றுமை போன்றும் தனித்தன்மைகள் போன்றும் இவை காணப்படுகின்றன. ஒவ்வொரு மொழி இலக்கியத்தின் தனித்தன்மைகளையும், பிறவற்றிலிருந்து வேறுபடும் பண்புகளையும் அவ்வம் மொழி இலக்கிய வரலாற்று நூல்களின் வழியாக நாம் அறியலாம்.

இந்நிலையில்தான் இந்திய இலக்கியத்தின் கருத்தொருமை பற்றிப் பேசிவருகின்றனர். இதனால் இந்திய இலக்கியத்தில் கருத்தொருமையைக் காணவியலாது என்பது பொருளன்று. பொதுவாகவே, இந்தக் கசப்பான உண்மையை இந்திய இலக்கிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசும் அறிஞர்கள் வெளிப்படையாகவே கூறிவந்துள்ளனர். எனவே மாறிவரும் சூழ்நிலையில் இவற்றை மீறிய பொதுத்தன்மை அல்லது கருத்தொருமையைக் காணவியலுமா என்பதே இப்பொழுதய சிக்கல்.

'அவிபாக்தம் விபக்தேஹு' (Avibhaktam vibhaktehu) என்று உபநிடதத்தில் ஒரு தொடர் உள்ளது. 'பிரிந்திருந்தாலும் ஒன்றாக இருக்கிறது' என்பது இதன் பொருள். இந்திய மக்களின் மொழி, இலக்கியம், பண்பாடு-இவையும் இதே நிலையில்தான் உள்ளன.

இது இந்திய நிலையில் தவிர்க்க இயலாத ஒன்று. 'வேற்றுமையில் ஒற்றுமை' என்றுதான் நமக்கு ஆரம்பக் கல்வி முதல் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இதை நேரு ஆதரித்தார். பிரபல இந்தி எழுத்தாளரும் நேருவின் நெருங்கிய நண்பராகவும் விளங்கிய பிரபாகர் மாச்வே இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்.[13]

மேலெழுந்தவாரியாகப் பார்ப்போமெனில் இந்திய இலக்கியங்களில் நாட்டுப்பற்று, மரபைப் போற்றுதல், மனிதாபிமானம், பழமையை வணங்குதல், இயற்கையைப் போற்றுதல் ஆகிய கருத்துருவங்கள் இந்தியத் தன்மையின் வெளிப்பாடு போலத் தோன்றுகின்றன. ஆனால் இவை இந்திய எழுத்துக்களுக்கு மட்டுமே உரியனவல்ல என்ற உண்மையை உணர்தல் வேண்டும். அமெரிக்க இலக்கியம், ஐரோப்பிய இலக்கியம் ஆகியவை இப்பண்புகளிலிருந்து வெகுதூரம் விலகிச்சென்று எதிர்மறை இலக்கியங்களைப் படைத்துவருகின்றன. ஆயின் ஆசிய நாடுகளில் ஜப்பானிய இலக்கியமும், ஆப்பிரிக்க நாடுகளின் இலக்கியமும், இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இலக்கியமும், மேற்கிந்தியத் தீவுகள் எனப்படும் கரீபியன் நாட்டு இலக்கியமும், சொல்லப் போனால் கனடா நாட்டு இலக்கியத்தின் ஒரு பகுதியும்கூட 'இந்தியப் பண்புகள்' என்று நாம் சொல்லிக்கொள்கின்ற, மரபைப் போற்றுதல், மனிதாபிமானம், பழமையை வணங்குதல், இயற்கையைப் போற்றுதல் ஆகிய கருத்துருவங்களுக்குச் சொந்தமான இலக்கியங்கள் என்று கருதப்படுகின்றன. இந்நிலையில் இவை 'பன்னாட்டுக் கருத்துருவங்கள்' என்ற தகுதியை எய்துகின்றன. அப்படியானால் இந்தியக் கருத்துருவம் எது?

'இந்திய இலக்கியங்களில் ஒருமை' என்பது பற்றிப் பேசுவோரும் எழுதுவோரும் இந்திய நாட்டின் பரம்பரை இலக்கியங்களான வாய்மொழி இலக்கியங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இது ஒரு குறையே. அப்படியே இந்திய இலக்கியக் கருத்தரங்குகளில் வாய்மொழி இலக்கியங்களைப் பற்றிய ஆய்வுக்கு வழிவிட்டாலும், அவை அவ்வாய்மொழி இலக்கியங்களின் தனித்தன்மையையும் மரபுச் சார்புகளையும் போற்றும் அளவிற்குத்தான் உள்ளனவே தவிர, இந்திய இலக்கியப் பொதுமைக்கும் ஒருமைக்கும் அவற்றின் பங்களிப்பு என்ன என்பதைப் பற்றி அழுத்தமாகக் கூறுவதில்லை. இது பற்றி, புகழ்பெற்ற

இந்திய இலக்கியத் திறனாய்வாளரான கிருஷ்ண கிருபாளினியின் கூற்றை இங்குச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்:

''சாந்தல்கள், கோண்டு மக்கள், முண்டா மக்கள் போன்ற இந்தியப் பழங்குடி மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் சடங்குகளிலும், திருவிழாக்களிலும் பல நாட்டுப்புறப் பாடல்களும் கதைகளும் வளம் சேர்க்கின்றன. வேதப்பாசுரங்கள் போலவும், சமஸ்கிருதப் பெருங்காப்பியங்கள் போலவும் இவையும் இந்திய இலக்கியங்கள் என்று அழைக்கப்படுவதற்குரிய பெருமை படைத்தவையே. ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமல் தனித்தனிக் குழுக்களாக வாழும் இவர்களது இலக்கியமே உண்மையில் நமது பண்பாட்டின் குறிப்பிடத்தக்க திணைப் பண்புகளைக் கொண்டுள்ளன என்று கூறலாம்''[14]

திரு. கிருஷ்ண கிருபாளினி இவ்வாறு கூறுவதற்கு இன்னொரு உறுதியான காரணமும் உண்டு. வாய்மொழி இலக்கியங்களான நாட்டுப்புறக் கதைகளும் கதைப்பாடல்களும் ஏராளமான எண்ணங்களின் தொன்மங்களைக் காலங்காலமாகக் காத்து வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, விஷ்ணு சன்மரின் பஞ்சதந்திரக் கதைகள், குணாதயரின் பிருகத்கதா, புத்த சமயத்தினரின் ஜாதகக் கதைகள், சமண சமயத்தவரின் தம்ம கதைகள், சோமசேகரரின் கதாசரித் சாகரம், தண்டியின் தசகுமார காவியம், கீதோபதேசக் கதைகள் ஆகியவற்றைக் கூறலாம். இவைதவிர, இராமாயண மகாபாரதக் கிளைக் கதைகளும், பதினெண் புராணச் செய்திகளும், பிற உபபுராணச் செய்திகளும் தொன்மங்களாக இவற்றில் இடம் பெற்றுள்ளன. இந்த இதிகாசங்களும் புராணங்களும் மக்கள் மனதில் எந்த அளவுக்கு ஆட்சி கொண்டிருந்தன என்பதற்கு இந்திய மொழிகள் அனைத்திலும் இவை தோற்றம் பெற்ற மாட்சியே சான்றாகும்.

இராமாயணக் கதையைத் தமிழில் இராமகாதை என்ற பெயரில் கம்பரும், அசாமிய மொழியில் மாதவ கந்தலியும் (Madhava Kandali), மராத்திய மொழியில் பர்வத ராமாயணம் என்ற பெயரில் ஏக்நாத்தும் (Eknath), வங்காள மொழியில் ஸ்ரீராம பஞ்சரி என்ற பெயரில் கீர்த்தி வாசரும் (Kirttivasa), மலையாள மொழியில் எழுத்தச்சனும் (Tunchattu Eluttachan), தெலுங்கில் நிரச்சனோதர

ராமாயணம் என்ற பெயரில் திக்கனாவும், இந்தியில் ராமசரித மனஸ் என்ற பெயரில் துளசிதாசரும் இராமாயணக் கதையைத் தத்தம் மக்களுக்குத் தந்தனர். இது போன்றே பாரதக் கதையை, கன்னடத்தில் ஆதிகவி என்று போற்றப்படும் பம்பாவும், விக்ர-மார்ஜுன விஜயம் என்ற பெயரில் பிறிதொருவரும், தெலுங்கில் ஆதிபருவம், சபாபருவம், ஆரண்ய பருவங்களை நன்னயாவும், ஒரிய மொழியில் சரளாதாசரும், குஜராத்தியில் பிரேமானந்தாவும் பாடினர்.

பாகவதக் கதையை மராத்திய மொழியில் ஏக்நாத்தும், (Eknath Bhagavatha), தெலுங்கில் போதனரும், குஜராத்தியில் பிரேமானந்தாவும் பாடியுள்ளனர். எளிய மக்களிடமும் அருளாளர்-களிடமும் செல்வாக்குப் பெற்றிருந்த இந்தப் புராண, இதிகாசக் கதைகள் கால மாற்றத்தாலும், மரபு மாற்றத்தாலும் அழியாது, மக்கள் வாழ்க்கையில் தம்முடைய ஆட்சியை நிலைநாட்டி வந்-திருக்கின்றன. இந்திய வம்சாவளியினருக்கே உரிய மனித மாண்புகள், உறவுகள், செயல்பாடுகள் ஆகியவை இவற்றில் சுட்டப்படுகின்றன. இராமன், சீதை, பரதன், அனுமன், துரியோ-தனன், கர்ணன், பீமன், திருதராட்டிரன் ஆகிய இதிகாசப் பாத்-திரப் பண்புகள் இந்தியப் புனைகதைகளில் இன்றும் இடம்பெற்று வருகின்றன. மரபைப் போற்றுபவர்கள் இவர்களை நேர்முகப் பாத்திரங்களாகவும், மரபை எதிர்ப்பவர்கள் இவர்களை எதிர்-மறைப் பாத்திரங்களாகவும் காட்டுகின்றனர்.

இவர்கள் மட்டுமல்ல, இதிகாசக் கிளைக் கதைகளிலும், பாகவதக் கதைகளிலும், புராணக் கதைகளிலும் இடம்பெறும் அபிமன்யு, அகலிகை, அனுசுயா, அஷ்டாவக்கிரன், மகாவலி, ப்ருஹஸ்பதி, சாருவாஹணன், தட்சன், தேவயானை, நளன், அரிச்சந்திரன், மார்க்கண்டேயன், துரோணர், அரவான், சாவித்திரி, தேனுகா, ரேணுகாதேவி, த்ரௌபதி, காந்தாரி, இக்வுவாகு போன்ற எண்ணற்ற கதைமாந்தர்கள் இந்திய இலக்-கியத்தின் வற்றாத ஊற்றுக்கண்களாகத் திகழ்கின்றனர்.

இன்றைய புனைகதை இலக்கியத்தில் இவர்களின் ஆளு-மையைக் கன்னட இலக்கியத் திறனாய்வாளரான பேராசிரியர் ஜி. எஸ். அமுர் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார். இராமா-யணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும், உபநிடதக் கதை-

களும், தசகுமார சரிதம், காதாம்பரி போன்ற பழங்காதற் கதை-களும், விக்ரமார்ஜுன விஜயம், தாராதானே போன்ற கன்னடக் காவியங்களும் கதாகோசம் போன்ற பழங்கதைகளின் தொகுப்பும் இன்றைய கன்னடக் கதாசிரியர்களுக்குக் கருக்களையும், உருக்-களையும் தொடர்ந்து தந்து வருகின்றன என்று அவர் குறிப்பிடு-கிறார்.[15] மணவாழ்க்கைக்குப் பின்னர் வரும் இன்பங்களையும் இடையூறுகளையும் எதிர்கொள்ளும் தம்பதியர்களுக்கான எடுத்-துக்காட்டுக்களுக்கு இந்திய இதிகாசங்களிலும் பழங்கதைகளிலும் குறைவில்லை. சான்றாக, சத்தியவான் — சாவித்திரி, நளன் — தமயந்தி, துஷ்யந்தன் — சகுந்தலை, இராமன் — சீதை, இலட்சு மணன் — ஊர்மிளை, கண்ணன் — ராதை, சிவன் — பார்வதி, அரிச்சந்திரன் — சந்திரமதி போன்ற பாத்திர இணைகளைக் காட்டலாம்.

நம் இந்திய இதிகாச, புராண, பழமரபுக் கதைநிகழ்ச்சிகள் பின்னப்பட்ட முறையிலும், அக்கதை நிகழ்ச்சிகளை இயக்குகின்ற கதை மாந்தர்களின் செயல்பாடுகளுக்கிடையேயும் நுண்ணிதின் விளங்கித் தோன்றும் அடிப்படைத் தத்துவத்தையே நாம் இந்தியத் தன்மை என்று கருதலாம். மரபைப் போற்றுபவர்கள் இந்த இந்தி-யத் தன்மையில் மாற்றம் காட்ட விரும்புவதில்லை; மரபை மாற்ற நினைப்பவர்கள் இந்தக் கதைமாந்தர்கள் காட்டும் இந்தியத் தன்மையில் காலத்திற்கேற்ற மாற்றத்தைக் காட்ட முயலுகின்-றனர். சான்றாக, தேசிய புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ள ‘கதா பாரதி’ என்ற தெலுங்குச் சிறுகதைத் தொகுப்பிலுள்ள ‘பார்வதி கல்யாணம்’ எனும் கதையை எழுதிய ஸ்ரீகொடவட்டிகண்ட்டி குடும்பசாவு தந்துள்ள முன்னுரை குறிப்பிடத்தக்கது. அம்முன்-னுரையில் அவர்,

> “தட்ச பிரஜாதிபதி மகள்கள்ளே ஒத்தியான உமா, அப்பாக்கு இஷ்டமில்லாம சிவனைக் கல்யாணம் பண்ணி-கிட்டா. சிவன் தன் அந்தஸ்துக்கேத்த மருமகன் இல்லைங்-கற உதாசீனப் போக்கோட தட்சன் தான் தொடங்கிய யாகத்துக்கு உமாவையும் சிவனையும் அழைக்கலை. சிவன் பேச்சைக் கேக்காம பார்வதி அழையா விருந்தாளியா யாகத்துக்குப் போயி அவமானத்துக்கு ஆளாயி நெருப்புக்-குழியிலே குதிச்சி எரிஞ்சி போயிட்டா.

இதைவிட இயற்கையான கதை அன்றாட வாழ்க்கையிலே கூட இருக்காது. அநேக தேசங்களிலே, அநேக காலங்களிலே அநேக உமாக்கள் அநேக சிவன்களைக் கல்யாணம் பண்ணிப் பிரச்சனைகளை, அவமானங்களைக் கொண்டு வந்துகிட்டாங்க.

இருந்தாலும் எனக்கு இந்தப் புராணக் கதையைப்பத்தி அண்மையிலே அநேக சந்தேகங்க வந்தது. உண்மையிலே உமாசிவன் மேலே காதலும் மதிப்பும் இருந்தே கல்யாணம் பண்ணிக்கிட்டாளா? இல்லே சம்சார சூன்யங்களான சிவகணங்க மேலேயும் நாகரிகம் தெரியாத சிவன் மேலேயும் அதிகாரம் செலுத்தலாம்னு கல்யாணம் பண்ணிக்கிட்டாளா? சிவன் பேச்சைக் கேக்காம அப்பா வீட்டுக்குப் புறப்பட்டதிலே உமா அப்பாவித்தனமா நடந்துக்கிட்டாளா? இல்ல அறிவு பூர்வமா நடந்துகிட்டாளா?... என் நம்பிக்கை மட்டும் எங்கே உமா சங்கரங்க கல்யாணம் பண்ணினாலும் அநியாயம் நடக்கறது தட்சனுக்கில்லே உமாவுக்குமில்லே, சங்கரனுக்குத்தான்னு''[16]

என்று பழைய சம்பவங்களுக்குத் தற்காலச் சூழ்நிலையில் புதிய காரணங்களைக் காட்ட முயல்கிறார் ஆசிரியர். கதை இதுதான்:

ராமகோடியர் சீர்திருத்தவாதி. பார்வதி அவருடைய மகள். ''பதிமூணு பதினாலு வயசு இருக்கறப்பவே அவளுக்கொரு கெட்ட வழக்கம் வந்துட்டுது. அதென்னானா, ஆம்பளைங்களக் கவர்கிற சக்தி தன்கிட்ட எவ்வளவு தூரம் இருக்குதுன்னு சோதிச்சுப் பாக்கறது''. சங்கரம் ஓர் அரிஜன். தன்னைப் பற்றி அளவுக்கதிகமான தாழ்வு மனப்பான்மை கொண்டவன். திருமணத்திற்குச் சங்கரத்தை வற்புறுத்துகிறாள் பார்வதி. மகளின் பிடிவாதத்தை ராமகோடியராலும் எதிர்க்க முடியவில்லை. திருமணம் நடந்தது. பார்வதியின் பிடிவாதப் போக்கினால் சங்கரத்துக்கு வாழ்க்கை நரகமாகிறது. ''நாலு கோடுங்க கிழிச்சி எந்தக் கோட்டிலேயிருந்தும் அவன் காலை வெளியே வைக்க முயற்சி பண்ணினாலும் சண்டைபிடிக்க ஆரம்பிச்சா. இந்த மாதிரி அடிமைப் பொழைப்பு சங்கரம் என்னிக்கும் வாழ்ந்திருக்க

மாட்டான்... பார்வதியோட பண்பாடு தன் பண்பாட்டை விடச் சிறந்ததுன்னு தன்னைத்தானே நம்ப வைக்கிறதுக்கு பகீரதப் பிரயத்தனம் பண்ணினான்''. கடைசியில் தன்னுடைய தனித்தன்மையையும் சுதந்திரத்தையும் இழந்து பார்வதியின் வீட்டிலேயே அடைக்கலமாகிவிட்டான். இப்போது அவனுக்குச் "சொந்த வாழ்க்கை இல்லே. அவனுக்கு இப்போ ஒரு ஜாதியில்லே, குலம் இல்லே. அவன் ஆத்மா பாலைவனத்திலே திக்குத் தெரியாம திரிஞ்சிகிட்டிருந்தது. அவன் செத்தாலொழிய அந்த ஆத்மாவுக்கு அமைதி கிடையாது'' என்று ஆசிரியர் கதையை முடிக்கிறார்.

இதே போன்றதொரு கதைக் கருவை உடையது, கன்னடப் புனைகதை உலகில் மிகச்சிறந்தவர் என்று போற்றப்படுகின்ற ஸ்ரீநிவாசாவின் 'வெங்கடிகாவின் மனைவி' என்ற கதை.[17] இக்கதை ஸ்ரீநிவாசாவின் படைப்புகளுள் மிக உன்னதமானது என்று சிறப்பிக்கப்படுகிறது. தேசிய புத்தக நிறுவனத்தின் வெளியீடான சமீபத்திய மலையாளச் சிறுகதைகள் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரு சிறுகதையின் பெயர், 'நசிகேதன் யமதர்மனிடம் கேட்டது' என்பதாகும். அந்தக் கதை இப்படி முடிகிறது :

''நான் விடைபெற வேண்டிய காரியமில்லை. அறிவைத் தேடவேண்டிய நேரம் வந்துவிட்டது. நான் இறங்கித் திரும்பிப் போகிறேன். நசிகேதன் யமனிடம் கேட்டதைத்தான் எனக்கும் கேட்கவும் படிக்கவும் வேண்டும்; தவற்றுக்கும் சரிக்கும் அப்பால் என்ன? குறிக்கோளுக்கும் பலனுக்குப் பிறகு? கடந்த காலத்திற்கும் எதிர்காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் அப்பறம் என்ன?''[18]

புதுமைப்பித்தனின் 'சாபவிமோசனம்,' ஸ்ரீ அரவிந்தரின் 'சாவித்திரி' காப்பியம் என்பனவும் இவ்வரிசையில் வைத்தெண்ணப்படுவதற்குரிய இலக்கியங்களாகும்.

இந்தியப் புராண இதிகாசப் பழமரபுக் கதைகளில் நவீன எழுத்தாளர்கள்தாம் மாறுபாடுகளையும் வேறுபாடுகளையும் காட்டுகிறார்கள் என்பதன்று. இவை ஒவ்வொரு மொழியிலும் அவ்வம்மொழி பேசும் மக்களுக்காக எழுதப்படும்போது பல்வேறு மாறுதல்களை ஏற்கின்றன. எனவே அந்தந்த வட்டார மக்களின் கருத்திற்கும் இயல்புக்கும் பண்புக்கும் விருப்புக்கும் ஏற்பப் பழ-

மரபுக் கதைகள் காலந்தோறும் மாறுதல்களை அடைந்து வந்துள்ளன. இதைத்தான் நாம் 'இந்தியத் தொன்மங்களை, மாறிவருகின்ற இந்தியச் சூழ்நிலைக்கேற்பப் புதிய நோக்கில் அணுகுதல்'' (reinterpretation of the old myths in terms of the new and changing situation in India) என்று சொல்கிறோம்.

தொன்மங்களின் புதிய நோக்கினால் வட்டார, மொழி வேறுபாடுகள் அகன்றுவிடும் என்று நம்பலாம். ஏனென்றால் இத்தகைய தொன்மங்கள் ஒவ்வொரு வட்டாரத்திற்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ உரியனவன்று. இவை நமக்கே-இந்தியர்க்கே-உரியவை. அவற்றின் பழமையைப் போற்றுவதும், புதிய நோக்கில் அணுகுவதும் நம்முடைய உரிமைகள். இக்கதைக் கருத்துக்களை நாம் 'இன்னாரிடமிருந்து கடன் பெற்றோம்' என்று நம்மில் யாரும் குறை கூறமுடியாது. தொழிலாளர் பிரச்சனையோ, ஏழை-பணக்காரன் வேற்றுமையோ, மெலியாரை வலியார் வருத்துதலோ, பஞ்சமோ, பசியோ, வறுமையோ-இவை எல்லா நாட்டு இலக்கியங்களுக்கும் உள்ள பொதுவான கருத்துக்கள். இக்கருத்துக்களை, முற்சொன்ன இந்திய இதிகாச, புராண, பழமரபுத் தொன்மங்களின் வண்ணம் சேர்த்து குழைத்துத் தருவதில்தான நாம் இந்தியத் தன்மையைக் காணவியலும். அதுதான் இந்திய இலக்கியம் என்று அடையாளம் காட்டப்பெறும். இத்தகு புராண, இதிகாசப் பழமரபுத் தொன்மங்களே இந்திய இலக்கியத்தைப் பிறநாட்டு இலககியங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் ஆற்றலுடையனவாகத் திகழவல்லன. இவை காலமாற்றங்களாலும், அரசியல் மாற்றங்களாலும், சமூக மாற்றங்களாலும், அறிவியல் வளர்ச்சியாலும், பாதிப்படையாத அடிப்படை பனித உணர்வுகளுக்கு எடுத்துக்காட்டுக்களாக விளங்குபவை.

எனவே இந்திய மண்ணுக்குரிய புராண இதிகாசப் பழமரபுக் கதைகளும், வாய்மொழி இலக்கியமாக வழங்கும் அவற்றின் பல்வேறு வடிவங்களும், நவீன இலக்கியத்தில் காணப்படும் அவற்றின் செல்வாக்கும்—ஆகிய இவைகளே 'இந்திய இலக்கியம்' என்ற தகுதியைப் பெறுகின்றன. இந்தியாவின் பல்வேறு மொழி இலக்கியங்களிலும் இவை பல்வேறு பரிமாணங்களைப் பெற்றாலும் இவையனைத்தும் முழுமுதல் ஒன்றின் வேறுபாடுகளாகக்

காணப்படுபவையே. இந்த வகையில் இவை வேறுபாடுகளிலும் கருத்தொருமையைக் காட்டிநிற்கின்றன என்பது தெளிவு.

''செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்''

(எங்கள் தாய் : 3)

எனும் பாரதியின் வாக்கும் இக்கருத்தினையே சாரமாகக் கொண்டிலங்குகிறது எனலாம்.

## குறிப்புகள்

1. Weber, A., (The Name of 'Indian Literature'), The History of Indian Literature, 1852.
2. Winternitz, M., (History of Indian Literature), History of Indian Literature, 1907.

   Caldwell, R., (Behaviour of Literary Dialects), A Comparative Grammer of the Dravidian Languages, 1913.

   Grierson, G.A., (Popular Speech into Literary Language), Linguistic survey of India, vol. I, Part 1 : Section XII, 1927.
3. Sunitikumar chatterji, (The Literary Unity of India) Language and Literatures of Modern India, 1963.
4. Gokak., V.K., (Development of Indian Literature), Literatures in the Modern Indian Languages, 1957.
5. Nagendra, (Tne unity of Indian Literature), Indian Literature 1959.
6. Sisirkumar Das (The Idea of an Indian Literature), Vaartha Vol. I, April 1973.
7. Poddar, A., (Ed.), Indian Literature, Indian Institute of Advanced Study, Simla, 19/2.
8. Sujit Mukerjie (Ed.), The Idea of Indian Literature, CIIC, Mysore, 1981.
9. "Not there is no disagreement voiced regarding the idea of Indian Literature... There is the Tamil language, there is the

Hindi language, there is the Punjabi language. So we have Tamil literature, Hindi literature, Punjabi literature. But if there is no particular language like "Indian" how can there be "Indian literature"? — Umashankar Joshi, Indian Literature : Personal Encounters Papyrus, Calcutta, 1988, p. 1.

10. "I should prefer to say, I am an Indian writer, writing in Gujarati, Subhindranath Dutta is an Indian writer who wrote in Bengali, Jainendra Kumar is an Indian Writer who writes in Hindi, Vaikam Muhammed Basheer is an Indian writer writing in Malayalam" — Ibid, p. 2.

11. "What we have in India is as many Indian literatures as there are languages and not one Indian literature" —Nihrranjai Ray, Ibid, p. 7.

12. Ibid, p. 9.

13. "Nehru appreciated the diversity of our languages and literatures. He was never for a mechanical, dead uniformity. He welcomed and encouraged this diversity-in-unity and unity in diversity of our culture" — Prabhakar Machwe, Four Decades of Indian Literature: A critical Evaluation, 1970, p. 19.

14. If we disabuse our minds of the artificially generated notion that there is a mystic virtue in homogeneity we need not shy from admitting that Indian literature is, infact, less homogenous than even the literatures of Europe as a whole... for only this one may confidently call Indian is the many sidedness, the myrid — facedness of our multifold, multiform civilizations — Krishna Kripalani, Indian Literature, p. 19.

15. "The songs, poems and tales cherished in the daily life, ritual and festivity of the Santhals, Gonds, Mundas and other tribes are as rightly Indian literature as the vedic hymns or the great sanskrit epics, with the adivasis and other lowly and forgotton folks coming into their own, it will be

increasingly evident that their seemingly isolated patches of cultural heritage are a significantly indegenous and authontic base of our civilisation" — Krishna Kripalani, Indian Literature, p. 19.

16. Amur, G S., (Introduction), Selected kannada short stories sahitya Akademi, 1993. p. viii.

17. புராணம் சுப்பிரமணிய சர்மா, வாக்காட்டி பாண்டுரங்க ராவு (தொகுப்.), கதாபாரதி தெலுங்குச் சிறுகதைகள், நேஷனல் புக் டிரஸ்ட், 1990, (பார்வதி கல்யாணம், ஸ்ரீ கொடவட்டி கண்ட்டி குடும்ப ராவு), ப. 59.

18. Amur, G.S., Op. cit, p. xi.

19. முகுந்தன், எம்., (தொகுப்)' சமீபத்திய மலையாளச் சிறுகதைகள், நேஷனல் புக் டிரஸ்ட், 1990, (நசிகேதன் யமதர்மனிடம் கேட்பது, பட்டத்து விள கருணாகரன்), பக். 13—17.

# 11

# புதிய இலக்கிய வகைகள்

★

டாக்டர் பா. ஆனந்தகுமார்

'இன்று புதிதாய்ப் பிறந்தோம்'

0. 1. இலக்கிய வரலாறு, இலக்கியக் கொள்கை பற்றிய ஆய்வுகளில் இலக்கிய வகைத் திறனாய்வும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. பாடுபொருள், வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் இலக்கியங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. இலக்கியத்தின் ''புற வடிவத்தையும் (குறிப்பிட்ட யாப்பு அல்லது அமைப்பு), அக வடிவத்தையும் (பாடுபொருள், வாசகத்தன்மை) கொள்கையளவில் அடிப்படையாகக் கொண்டு, இலக்கியப் படைப்புக்களை வகை செய்வதையே இலக்கிய வகை'' என்று நாம் கருதுவதாக ரெனிவெல்லக் குறிப்பிடுவார் (1980 : ப 231). இலக்கிய வகை பற்றிய சிந்தனை மேலைநாடுகளில் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் காலத்திலிருந்தே காணப்படுவதைப் போலத் தமிழிலும் தொல்காப்பியர் காலத்திலிருந்தே தொடர்ந்து வருவதை அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் வகைப்படுத்திய,

1. தன்னுணர்ச்சிப் பா
2. காப்பியம்
3. நாடகம்

என்ற மூன்றையும் அடிப்படைக் கவிதை இலக்கிய வகைகளாக உலக அளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர். உரைநடையில் நவீன இலக்கிய வகைகளான நாவலும் சிறுகதையும் உலகப் பொதுவான இலக்கிய வகைகளாக அமைந்துள்ளன. இவை தவிர, அந்தந்த நாட்டு அவ்வம் மொழி மரபுகளுக்கேற்ற சிறப்பான இலக்கிய வகைகளும் உண்டு.

---

* தமிழ்த்துறை, காந்திகிராம கிராமியப் பல்லைக்கழகம், காந்திகிராமம்.

0. 2. இலக்கிய வகைகள் எல்லாக் காலத்திற்கும் பொதுவானவை அல்ல.

> ''காலத்திற்கேற்ற வகைகள் — அவ்வக்
> காலத்திற்கேற்ற ஒழுக்கம் நூலும்''

என்று பாரதி கூறியதைப் போல அவை காலந்தோறும் மாறக்கூடியவை. புதிதாகப் பிறப்பெடுக்கக்கூடியவை. இந்திய தேசிய மறுமலர்ச்சிக் கவிஞனான பாரதி தமது புதிய ஜனநாயக யுகத்திற்கேற்ற புதிய இலக்கிய வடிவங்களைப் படைத்துள்ளார். சொல்லிலும் பொருளிலும் சுவையிலும் புதிதாக அமைந்துள்ள அப்புதிய இலக்கிய வடிவங்களை இனங்காணும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

## 1. பாரதியார் காலத்திற்கு முந்திய இலக்கிய வகைகள்

பாரதி வாழ்ந்த காலத்திலும், அதற்குச் சற்று முந்திய ஓரிரு நூற்றாண்டு கால அளவிலும் தமிழில் சிற்றிலக்கியம் என்று அழைக்கப்படும் 96 வகைப் பிரபந்த இலக்கியங்களே மேலோங்கி இருந்திருந்தன. இவை உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, நான்மணி மாலை முதலியன. இப்பிரபந்த இலக்கிய வகைகளுக்கு இலக்கியக் கொள்கை நூல்களாகப் பாட்டியல் நூல்கள் விளங்கின. இப்பாட்டியல் நூல்கள்,

1. மரபை ஆழமாக வலியுறுத்தியவை.

2. 30, 40, 100 எனத் தீர்மானிக்கப்பட்ட பாடல்களின் எண்ணிக்கையையும், ஒரு வகைக்குள் முதற்பாடல் வெண்பா, இரண்டாம் பாடல் கலிப்பா, மூன்றாம் பாடல் ஆசிரியப்பா, நான்காம் பாடல் ஆசிரிய விருத்தம், ஐந்தாம் பாடல் திரும்ப வரிசைப்படி முதற்பாடலின் யாப்பான வெண்பா (நான்மணி மாலை) என ஒரு குறிப்பிட்ட இயந்திரத்தனமான திட்டப் பாங்கையும் வாய்ப்பாட்டுத்தனமாக வலியுறுத்தியுள்ளன.

3. பிள்ளையார் அச்சுப் போன்ற தீர்மானிக்கப்பட்ட மாதிரி வடிவங்களைப் புலவர்களுக்குத் தந்து கவிதை உருவாக்கத்தில் வாய்பாட்டுத் தன்மையை ஏற்படுத்தியுள்ளன.

4. செவ்வியல் இலக்கிய மரபுகளை மீட்டுருவாக்கம் செய்கின்ற முறையில் சில இலக்கிய வடிவங்களை நகலெடுத்துள்ளன (அகப்பொருட் கோவை).

இங்கு விளக்கிய பாட்டியல் நூல்களில் காணப்படும் மரபு பிறழாமை, செவ்விலக்கிய மரபுகளின் மீட்டுருவாக்கம், விதிகளின் வாய்பாட்டுத் தன்மை, இயந்திரத்தனமான உறுப்பியல் பண்பு என்பன புதுச்செவ்வியல் நெறியின் (Neo-Classicism) அடிப்படைத் தனமைகளாகும். சிற்றிலக்கியப் புலவர்கள் இந்தப் பாட்டியல் நூல்கள் கூறிய விதிகளாகிய வாய்பாடுகள் மூலம் இலக்கியங்கள் என்ற கணககுகளைச் செய்தனர்.

''அந்தாதி பார்த்தோர் அந்தாதி தனையும்
மாலை பார்தொரு மாலை தன்னையும்
காவியம் பாத்தொரு காவியந் தன்னையும்
வரைந்து சாற்றுக்கவி திரிந்து பெற்று''

— (புதுநெறி காட்டிய புலவன்)

என்று பாரதிதாசன் பாடியது போல இவை ஒரு போலச்செய்தல் புலமையையும் அறிவுத்திறம் சார்ந்த சட்டாமபிள்ளைத் தனத்தையும் வளாத்தவை. புலவனின் சொந்த உணர்ச்சி வெளிப்பாடடுத் தன்மைக்கு வாய்ப்படளிக்காதவை. பின் இடைக்காலத்தில் குமரகுருபரர், அதிவீரராம பாண்டியர், இந்த நூற்றாண்டில தொடககததில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை போனறோரை இபபோககின பிரதிநிதிகளாகக குறிப்பிடலாம்.

## 2. பாரதியின் புதுநெறி

பாரதி எட்டையபுரம் அரண்மனையிலிருந்தபோது உலா, மடல், கோவை முதலிய சிற்றிலக்கிய வகைகளும், சித்திர கவிதைகளுமே செலவாககுப் பெற்றிருந்தன. இதனைப் பாரதியின் சினனசசஙகரன கதை தெளிவாக உணர்ததும். இதறகேற்ப பாரதியும் தம சிறுவதில உலாககளும் மடல்களும் பாடியதாகவும் அவையனைததும் மறைந்து போய்விட்டதாகவும் வ.ரா. குறிப்பிடுகிறார (1983 : ப. 12). ஆனால் பாரதி பத்திரிகை தொடர்பு கொண்டு, தேசிய இயக்கததில் ஈடுபட்ட பிறகு இந்நெறியிலிருந்து முற்றிலும் மாறிப புதிய படைப்பு நெறியில ஈடுபட்டுளளார்.

எட்டையபுர சமஸ்தான பண்டிதர் வாழ்வை மீண்டும் டரிசீலனை செய்யும்போது பன்றியாய் வாழ்ந்த முனியின் வாழ்வோடு (கவிதா தேவியின் அருள் வேண்டல்) ஒப்பிட்டுப் பேசுவார். பாரதியின் புதுநெறி புனைவியல் தன்மை கொண்டதாக, மக்கள் இலக்கிய மரபு சார்ந்ததாக அமைந்துள்ளது.

## 3. புதிய இலக்கிய வடிவங்கள்-தன்னுணர்ச்சிப் பாடல்கள்

பாரதியின் கவிதைகள் பிரபந்த இலக்கிய வகைகளின் கதை அமைப்புடைய வருணனைத் (narrative) தன்மையிலிருந்து மாறுபட்டு, பெரிதும் தனிப்பாடல்களாக—தன்னுணர்ச்சிப் பாக்களாக அமைந்துள்ளன. தன்னுணர்ச்சிப் பா ஓர் அகவய கவிதை வடிவமாகும். ''ஓர் உணர்ச்சி அல்லது ஓர் உள்ளக்கிளர்வின (expression of single emotion or feeling) வெளிப்பாடாக அமைவது. இசைத்தன்மை பெற்றிருத்தல்'' என்பதே தன்னுணர்ச்சிப் பாவுக்குரிய அடிப்படைப் பண்புகளாகும் (1965 : ப. 5). பாரதியின் புதிய தன்னுணர்ச்சிப் பாடல் வடிவங்கள்,

1. ஆங்கில இலக்கிய வடிவங்கள்
2. கீர்த்தனை இசை வடிவங்கள்
3. மக்கள் இலககிய வடிவங்கள்
4. மரபு ரீதியான யாப்பு வடிவங்கள்

என்னும் நான்கு பிரிவினதாகப் பகுத்துப் பார்ப்பதற்குரியன.

### 3.1. ஆங்கில இலக்கிய வடிவங்கள்

பாரதி பழைய இலக்கிய வடிவங்களிலிருந்து விடுபட்டு, புதிய கவிதைத் தேடலை ஆங்கில இலக்கிய வடிவத்தின் மூலமாகத் தொடங்கியிருக்கிறார்.

''குயிலனாய்! நின்னொடு குலவியின் கலவி
பயில்வதிற் கழிந்த பன்னாள் நினைந்துபின்''

எனத் தொடங்கும் பாரதியின் முதற் கவிதையான 'தனிமையிரக்கம்' (விவேகபானு, 1904) 'சானெட்' (Sonnet) எனும் ஆங்கில யாப்பு வடிவததில் அமைந்ததாகும்.

'சானெட்' அடியிறுதி எதுகை பெற்று 14 அடிகளில் அமையும். தற்கால இந்திய இலக்கியத்தில் புதிய கவிதை பரிசோதனை முயற்சிகளைத் தொடங்கிய கவிஞாகள் பலரும் முதலில் சானெட்

வடிவத்திலேயே கவிதை புனைந்துள்ளனர். இவ்வகையில் வங்காளத்தில் மைக்கேல் மதுசூதன தத்தரும், மராத்தியில் கேசவசுதரும் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழில் பாரதியின் 'தனிமையிரக்கம்' கவிதை வெளிவருவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே 'தனிப்பாசுரத் தொகை' என்னும் பெயரில் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி 'சானெட்' யாப்பில் அமைந்த ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கிறார். 'தனிமையிரக்கம்' என்னும் கவிதையைத் தவிர யான், சந்திரிகை (1906) என்னும் இரண்டு கவிதைகளையும் பாரதி சானெட் வடிவத்திலேயே எழுதியிருக்கிறார்.

சானெட்டைத் தொடர்ந்து பாரதி ஆங்கில இலக்கிய முறையைப் பின்பற்றி பரிசோதனை முறையில் புதிதாகப் படைத்திருப்பது 'ஸ்வசரிதை' ஆகும். கவிஞன் தன் வரலாற்றை, தற்கூற்றுக் கவிதை நடையில் கூறும் இம்முறையில் புதுமையைப் பாரதி அதன் முன்னுரைப் பகுதியில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''இச் சிறிய செய்யுள் — நூல் விநோதார்த்தமாக எழுதப்பட்டது. ... இதன் இயல்பு தன் கூற்றெனப்படும். அதாவது, கதாநாயகன் தன் சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடை. இக்காவிய முறை நவீனமானது. இஃது தமிழறிந்த நூலோர்கள் அங்கீகரிக்கத்தக்கதுதானா என்று பார்த்திடும் பொருட்டுச் சிறிய நூலொன்றை முதலில் பதிப்பிடுகிறேன்''. பாரதியின் இப்புது முயற்சி அமெரிக்கக் கவிஞன் வால்ட் விட்மனின் 'என்னைப் பற்றிய பாடலின்' (Song of myself) தாக்கத்தால் விளைந்தது என்று கைலாசபதி திறனாய்ந்துள்ளார் (1984 : ப. 89).

## 3.2. கீர்த்தனை இசை வடிவங்கள்

பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்னும் அமைப்பில் அமைந்த இசைப்பாடல் கீர்த்தனை ஆகும். தமிழ்நாட்டில் நாயக்கர் மன்னர் ஆட்சியிலும், மராட்டிய மன்னர் ஆட்சியிலும் இது செல்வாக்குப் பெற்றது. பக்தி உணர்வை வெளிப்படுத்துவதற்குரிய இவ்வடிவத்தை, பக்தி உணர்வை வெளிப்படுத்துவதற்கு மட்டுமின்றி சமூகப் பிரச்சினைகளைப் பாடுவதற்கும் பாரதி பயன்படுத்தியுள்ளார். பாரதியின் கவிதைகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்குக் கவிதைகள் இந்த இசை வடிவத்திலேயே அமைந்தன. நந்தலாலா, சக்திக் கூத்து, பகைவனுக்கு அருள்வாய், ஜயபேரிகை.

பாரத தேசம், பாரத சமுதாயம் முதலிய புகழ்பெற்ற பாரதியின் கவிதைகள் எல்லாம் கீர்த்தனைகளாகவே அமைந்துள்ளன. இங்குப் பாரதியின் இலக்கிய வகை அல்லது வடிவம் பற்றிய கொள்கை என்னவாக இருந்தது என்பதைக் குறிப்பிடுதல் அவசியம். இலக்கிய வகைமை பற்றிய சிந்தனையில்,

1. செவ்வியல் கொள்கை (Classical Theory),
2. நவீனக் கொள்கை (Modern Theory)

எனும் இரண்டு கொள்கைகள் இருப்பதாக ரெனிவெல்லக் குறிப்பிடுவார். செவ்வியல் கொள்கையினர் ஓர் இலக்கிய வகை மற்றொரு இலக்கிய வகையிலிருந்து மாறுபட்டது. இலக்கிய வகைகள் தம்முள் கலத்தல்கூடாது என்று இலக்கிய வகைமைத் தூய்மையை (purity of genre) வலியுறுத்தக்கூடியவர்கள். அது மட்டுமின்றி இலக்கிய வகைகள் சமூகரீதியிலான வேறுபாடு கொண்டவை என்றும் கருதிபவர்கள். இவர்கள் இந்த வடிவம் இந்தச் சமூகப் பிரிவினரை பாடுதற்குரியது என்ற வரையறையும் வைத்திருந்தனர். காட்டாக, காப்பியமும் துன்பியல் நாடகமும் (Epic & Tragedy) அரசர்களையும் பிரபுக்களையும் பாடுதற்குரியன. இன்பியல் நாடகம் (Comedy) நகரத்திலிருக்கக்கூடிய நடுத்தர வர்க்கத்தினரை-பூர்ஷ்வாக்களைப் பாடுதற்குரியது. அங்கதம் (Satire) பொதுமக்களைப் பாடுதற்குரிய வடிவம் என்று கட்டுப்பாடுகளை வைத்திருந்தனர். ஆனால், நவீனக் கொள்கையினர், இந்த இலக்கிய வகைத் தூய்மைக்கு எதிரானவர்கள். அவர்கள் இலக்கிய வடிவங்கள் கலப்பதை அனுமதித்தார்கள். கவிஞனின் 'சுய மேதைமைக்கு' (Original genius) அழுத்தம் கொடுத்தனர். மேலைநாடுகளில் புனைவியல் படைப்பாளிகளை இவ்வகை சிந்தனையினராக ரெனிவெல்லக் குறிப்பிடுகிறார் (1980 : பக். 234-235). பாரதியும் இந்த இரண்டாவது கொள்கை சார்ந்தவராக இருக்கிறார். இலக்கிய வகைத் தூய்மை என்ற கருத்து அவருக்கு உடன்பாடானது அல்ல. எனவேதான், இறைவனைப் பாடக்கூடிய கீர்த்தனை வடிவத்தைச் சமூகப் பிரச்சினையைப் பாடுவதற்கும் பயன்படுத்தியுள்ளார். அது மட்டுமல்லாது ஒரு வடிவத்தை இன்னொரு வடிவத்தோடு கலந்தும் பாடியிருக்கின்றார். கர்நாடக இசை மரபு சார்ந்த கீர்த்தனை வடிவமும் மக்கள் இலக்கிய வடிவமான சிந்து மெட்டும் இணைந்து பாரதியின் சில பாடல்கள் அமைந்துள்ளன. சான்றாக, 'காலமாம் வனத்தில் அண்டக் கோலமா மரத்தின் மீது காளி சக்தியென்ற பெயர் கொண்டு'

எனத் தொடங்கும் 'மகாகாளியின் புகழ்' என்னும் கவிதை 'காவடிச் சிந்து' நடையிலும், 'ஆனந்த பைரவி' ராகத்திலும் அமைந்து 'சிந்து பைரவியாக' விளங்குகிறது. இதேபோல் 'வந்தே மாதரம் என்போம்' எனத் தொடங்கும் கவிதை தாயுமானவரின் ஆனந்தக் களிப்பு மெட்டில் 'நாதநாமக் கிரியை' ராகத்தில் அமைந்துள்ளது. 'மாதாவின் துவஜம்' (தாயின் மணிக்கொடி) என்னும் கவிதையில் ஆனந்தக் களிப்பு மெட்டைக் கீர்த்தனை வடிவத்தில் அமைத்திருக்கிறார்.

ஆகவே, பாரதி பக்திப் பொருளுக்குரியதாக விளங்கிய கீர்த்தனை வடிவத்தைச் சமூகப் பொருளுக்கும் உரியதாக மாற்றியிருக்கிறார். தூய கர்நாடக இசை மரபுக்கு உரியதாகக் கருதப்படும் கீர்த்தனையை மக்கள் இலக்கிய வடிவமான சிந்து இசை வடிவத்தோடு இணைத்துப் புதுமை செய்திருக்கிறார். எனவே, இங்குப் பாரதி பழைய வடிவத்தில் புதுப் பொருளைப் பாடியுள்ளார், முரண்பட்டதாகக் கருதப்பட்ட உயர்ந்தோர் இசை மரபையும், நாட்டார் இசை மரபையும், ஒன்றிணைத்துப் புதுமை படைத்திருக்கிறார்.

## 3 3. மக்கள் இசை வடிவங்கள்

கர்நாடக இசை வடிவத்திற்கு இணையாகச் சிந்து, கும்மி போன்ற மக்கள் இசை வடிவங்களையும் பாரதி தன் கவிதைகளில் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். 'சிந்துக்குத் தந்தை' எனப் பாரதிதாசனால் சிறப்பிக்கப்பட்ட பாரதி காவடிச் சிந்து, நொண்டிச்சிந்து, தங்கச்சிந்து எனச் சிந்தின் பல வடிவங்களையும், சிந்தின் வடிவத்தில் உள் உறுப்பில் அமையும் கண்ணியையும் (கிளிக் கண்ணி) பாரதி தமது கவிதைகளில் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார். சிந்து வடிவத்தில், குறிப்பாகத் தாயுமானவரின் 'ஆனந்தக் களிப்பு' மெட்டைப் பல பாடல்களில் பயன்படுத்தியிருக்கிறார். தாயுமானவர், அண்ணாமலை ரெட்டியார் போன்ற கவிஞர்கள் இலக்கியத்தில் கையாண்டுள்ள மெட்டுகளைப் பயன்படுத்தியதோடு மட்டுமல்லாமல் வடிவங்களையும், தெருவில் ஊசி பாசி மணிகள் விற்கின்ற குறவன் குறத்தியரின் பாடல் வடிவங்களையும் தமது கவிதையில் கையாண்டுள்ளார். பாஞ்சாலி சபதத்தில் 183 முதல் 195 முடிய அமைந்துள்ள பாடலடிகளைக் குறத்தியர் தெருவில் பாடும், மாயக்காரனம்மா கிருஷ்ணன் மகுடிக்காரனம்மா

என்று பாடும் நடையை அமைத்துள்ளார். தவிர 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற பாடல் இரயிலில் பிச்சைக்காரி ஒருத்தி பாடிய ஹிந்துஸ்தானி மெட்டில் பாடியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (கைலாசபதி, 1984 : 32). இவ்வாறு பாரதி சமூகத்தின் பல்வேறு பிரிவினராய் உள்ள உழைக்கும் மக்களுடன் தம்மை ஒன்றுபடுத்திக் காட்ட நாட்டார் பாடல் வடிவங்களை தமது கவிதைகளில் கையாண்டுள்ளார். இதனைப் பற்றிய விரிவான ஆய்வினை, 'சிந்துக்குத் தந்தை' என்ற கட்டுரையில் கைலாசபதி நிகழ்த்தியுள்ளார்.

தொல் இலக்கிய வகைகளாக (Primitive genres) கருதப்படும் நாட்டார் பாடல் வடிவங்களை உயர் இலக்கியத்தில் (serious literature) கையாளுகின்ற தன்மை உலகப் புனைவியல் கவிஞர்கள் பலரிடமும் காணப்படுகின்றது. காட்டாக, ருஷியப் புனைவியல் கவிஞர் பூஷ்கின் தனது கவிதைகளில் நாடோடிப் பாடல் வடிவங்களைக் (Gypsy songs) கையாண்டுள்ளதைக் குறிப்பிடலாம். அதேபோல், இந்தியாவில் தாகூர் தெருவில் பாடும் வைணப் பவுல் பாடகர்களின் பாடல் மெட்டுக்களைத் தனது கவிதைகளில் கையாண்டுள்ளார். மக்கள் பாடல் வடிவங்களை உயர் இலக்கியத்திற்கு உருமாற்றுகிற இச்செயலை 'rebarbarization' என்று குறிப்பிடும் மாக்ஸ் லேர்னர் இலக்கியம் தன்னைப் புதுப்பித்து நிலைகொள்வதற்கு இது தேவைப்படுகின்றது என்று விளக்குகிறார் (மேற்கோள் : வெல்லக், 1980 : ப. 236). தமிழில் பக்தி இயக்கக் காலக்கட்டத்திலும், சித்தர் இலக்கியப் படைப்புக்களிலும் இத்தகைய புதுப்பித்தல்கள் நடந்திருக்கின்றன.

## 3.4. மரபு ரீதியான யாப்பு வடிவங்கள்

பாரதியின் சில கவிதைகள் வெண்பா, விருத்தம், ஆசிரியப்பா போன்ற மரபு ரீதியான யாப்பு வடிவங்களிலும், நான்மணிமாலை, திருத்தசாங்கம், பஞ்சகம், நவரத்னமாலை போன்ற பிரபந்த இலக்கிய வகைகளிலும் அமைந்துள்ளன. இவை புதுச் செவ்வியல் நெறியிலிருந்து பாரதியாரால் பாடப்பட்டவை என்று சில விமர்சகர்கள் திறனாய்ந்துள்ளனர் (சி. கனகசபாபதி, 1979 : ப. 169). ஆனால் இவை பழைய இலக்கிய வடிவங்கள் என்றாலும் புதிய கருத்து நிலையை உள்ளடக்கியவை. மேலும், இதற்கு

முன்பு இல்லாத இசைத்தன்மையை இவற்றில் பாரதி புகுத்தியுள்ளார். இதற்குச் சான்றாக 'பாரத தேவியின் திருத்தசாங்கம்' என்ற கவிதையைக் குறிப்பிடலாம். இதில் அரசனுக்குப் பதில் பாரத தேசம் பாடுபொருளாகியுள்ளது. மேலும் நாமம், நாடு, நகர், ஆறு, மலை என வரும் பத்து செய்யுள் உறுப்புக்களைக் காம்போதி, வஸந்தம், மணிரங்கு, கானடா முதலான பத்து இசை ராகங்களில் அமைத்துள்ளார். பழைய தசாங்க இலக்கியங்களில் இத்தகைய இசைத் தன்மையைக் காணமுடியாது. இதைவிட முக்கியமான ஒன்று பாரத மாதா திருத்தசாங்கத்திலுள்ள பத்து கர்நாடக இசைப் பாடல்களும் நேரிசை வெண்பா யாப்பில் அமைந்தவை. இங்கு வெண்பா யாப்பும் கர்நாடக இசை ராகமும் கைகோர்த்து நிற்கின்றன. இது அக்காலத்தில் நினைத்துப் பார்க்க முடியாத அற்புதக் கலவை; ரசவாதம்.

எனவே, பாரதி பழைய சிற்றிலக்கிய வடிவங்களைப் புதிய பாடுபொருள். சொல்வளம், உணர்ச்சி, இசை முறைகளினால் தன்னுணர்ச்சி மயமாக்கம் செய்துள்ளார் என்று கூறுவதே பொருத்தமானதாகும். ஆங்கில இலக்கியத்தில் ஷெல்லி போன்ற புனைவியல் கவிஞர்கள் 'ஓட்' (Ode) போன்ற யாப்பு வடிவங்களைத் தன்னுணர்ச்சி மயமாக்கம் (lyrizized) செய்திருப்பதாகக் கூறப்படுவதும் (ஆபிராம்ஸ், 1979 : ப. 98) இங்குக் குறிப்பிடத்தக்கது.

## 3.5. அடிப்படை வடிவ மாற்றம்

பாரதியின் கவிதைகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அவருக்கு முந்தைய பெரும்பான்மை கவிஞர்கள் வெண்பா, விருத்தம், ஆசிரியப்பா முதலிய பழைய யாப்பு வடிவங்களைக் கையாள, பாரதி இசைப்பாடல் வடிவங்களை மிகுதியாகக் கையாண்டுள்ளார். பழைய யாப்பு வடிவங்கள் வாய்பாட்டு அடிப்படையில் அசை, சீர் என்னும் இறுக்கமான அளவை முறையில் அமைந்தவை; அறிவுத் திறத்தை அடிப்படையாகக் கொண்டவை. பாரதி கையாண்ட இசைப்பாக்களோ நெகிழ்ச்சியான மாத்திரை அளவை முறையை (மெட்டுக்களை) அடிப்படையாகக் கொண்டவை. இவை பெரிதும் உணர்ச்சித் திறத்தை அடிப்படையாகக் கொண்டன. 'அசையால் கட்டுண்ட யாப்பு முறை நிலவுடைமைச் சமூகத்திற்குரியது. மாத்திரை அளவை முறைப் பாடல் வடிவங்கள் புதிய பொதுவுடைமை யுகத்திற்குரியது என்ற தெலுங்குக் கவிஞர்'

மகாகவி ஸ்ரீஸ்ரீயின் திறனாய்வுக் கருத்து (1988 : ப. 61) இங்குக் குறிப்பிடத்தக்கது.

## 4.0. பிற புதிய வடிவங்கள்

### 4.1. குறுங்காப்பியம்

இந்திய மறுமலர்ச்சிக் கவிதையில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பல புதிய மரபுகளைத் தோற்றுவித்ததைப் போல, கதைமைப் பண்பும் வருணனைப் பாங்கும் (narrative) கொண்ட குறுங்காப்பியமும் பல புதிய மரபுகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. பழைய பிரபந்த இலக்கிய வடிவங்களுக்கும், பெருங்காப்பியத்திற்கும் எதிராகப் புதிய குறுங்காப்பிய வடிவத்தைப் பல இந்தியப் புனைவியல் கவிஞர்கள் கையாண்டுள்ளனர். வங்காளத்தில், மதுசூதனத்தரின் 'மேகநாத் பத்' (மேகநாதனின் வதை) என்னும் குறுங்காப்பியம் யாப்பு, பொருள் அடிப்படையில் பல புதுமைகள் படைத்தது. மலையாளத்தில், பிற்கால மஹாகாவ்யங்களுக்கு எதிராகப் புதிய புனைவியல் போக்கிற்குக் கட்டியங்கூறும் வகையில் குறுங்காப்பியங்கள் படைக்கப்பட்டன. இக்குறுங்காப்பிய வகை ஆங்கில இலக்கியத்தில் உள்ள நீண்ட வருணனைக் கவிதைகளின் வழி (long narrative poems) விளைந்தவை. தமிழில் இவ் வகையில் பாரதியின் பாஞ்சாலி சபதமும், குயில் பாட்டும் அமைந்துள்ளன. பாஞ்சாலி சபதம், பழைய இதிகாசத்திற்கு சமகால சமூகப் பின்னணியில் புதுப்பொருள் கொடுக்கும் முறையில் அமைந்துள்ளது. இது ஷெல்லியின் 'கட்டறுந்த புரம்மதீயஸ்' எனும் படைப்பை (Promethus Unbound) நினைவுகூரத்தக்கது. குயில் பாட்டு பாரதியின் கவிதைத் தேடலையும் ஆன்மீகத் தேடலையும் விவரிக்கின்றது.

### 4.2. வசன கவிதை

காப்பியம் போன்ற பெரிய இலக்கிய வடிவங்களிலிருந்து குறுங்காப்பியம், எளிய தன்னுணர்ச்சிப்பா என்று கவிதை வடிவங்களில் முயற்சித்த பாரதி, கவிதையை இன்னும் எளிமைப்படுத்தி வசன கவிதை முயற்சி செய்துள்ளார்.

### 4.3. அற்புதப் புனைவு

கவிதை வடிவங்களில் பாரதி பல புதுமைகளைப் படைத்துள்ளதைப் போல் உரைநடை வடிவங்களிலும் சில புதுமைகள் செய்துள்ளார். இவ்வகையில் பாரதியின் ஞான ரதம் குறிப்பிடத்-

தக்கது. இது இவ்வுலக யதார்த்தத்தையும், மனித நிலையையும் கடந்து செல்லும் கற்பனையைக் கொண்ட மேலைநாட்டு இலக்கிய வகையான அற்புதப் புனைவில் (Fantasy) அடங்குவது. பாரதி ஞான ரதம் என்ற கற்பனைத் தேரில் ஏறி கந்தர்வலோகம், சத்தியலோகம் எனப் பல உலகங்களுக்குச் சஞ்சரிக்கும் இந்த உரை-நடைப் படைப்பு தமிழில் ஒரு புதிய உரைநடையின வகையின் தொடக்கம் ஆகும். இது ஆங்கிலத்தில் கோல்ரிட்ஜின் 'தொல் மாலுமி'(Ancient Mariner) என்ற கவிதைப் படைப்புடனும், இந்திய இலக்கியங்களுக்குள் வங்காளத்தில் துவிஜேநதிரநாத் தாகூர் எழுதிய 'ஸ்வப்ன ப்ரயாண்' என்ற கவிதைப் படைப்புடனும் ஒப்பு நோக்கத் தக்கது.

## 5. முடிவுரை

5.1. பாரதியின் கவிதைகள் பிரபந்த இலக்கிய வகைகளின் கதை அமைப்புடைய வருணனைத் தன்மையிலிருந்து மாறு-பட்டுப் பெரிதும் தன்னுணச்சிப் பாடல்களாக அமைந்-துள்ளன.

5.2. பாரதியின் புதிய தன்னுணர்ச்சிப்பா முயற்சிகள் மற்ற இந்தியக் கவிஞர்களைப் போலவே சானெட் முதலான ஆங்கில யாப்பு வடிவங்களில் இருந்தே தொடங்கியிருக்-கின்றன.

5.3. பாரதியின் இலக்கிய வகைமைச் சிந்தனை செவ்வியல் மரபு சார்ந்த இலக்கியவகைக் கலப்பை மறுக்கும் தூய்மை வாதச் சிந்தனைககு எதிரானது. பாரதி இலககிய வடிவங்களை ஒன்றோடொன்று கலந்து புதிய வடிவங்களை உருவாக்கி-யுள்ளார். பழைய வடிவங்களில் புதிய பொருளைப் பாடியுள்ளார்.

5.4. பாரதியின் கவிதைகளில்,

அ. மரபுரீதியான வெண்பா, விருத்தம் போன்ற உயர் தமிழ் இலக்கிய யாப்பு வடிவங்கள்

ஆ. கர்நாடக சங்கீத மரபு சார்ந்த கீர்த்தனை வடிவங்கள்

இ. சிந்து முதலான மக்கள் இசைப்பாடல் வடிவங்கள் ஆகிய மூன்று வடிவங்களையும் காணலாம். இவை

தமக்குள் சில முரண்பட்ட தன்மைகள் கொண்டன. இருப்பினும் பாரதி முரண்பட்ட இவற்றை ஒன்றோடொன்று இணைத்துப் புதுமை செய்துள்ளார். முதலில் உயர் தமிழ் இலக்கிய மரபு சார்ந்த வெண்பா, விருத்தம் போன்ற வடிவங்களைக் கர்நாடக இசை மரபிற்கேற்பப் பலவேறு ராகங்களில் பாடத்தக்கதாக மாற்றியுள்ளார்; தன்னுணர்ச்சி மயமாக்கம் செய்துள்ளார். இது முதலாவது புதுமை. அடுத்தது மக்கள் இசை சார்ந்த பாடல் வடிவங்களையும் உயர்ந்தோர் இசை மரபு சார்ந்த கர்நாடக ராகங்களையும் இணைத்துள்ளார். (சிந்து பைரவி) இது இரண்டாவது புதுமை.

5.5. சேரி மொழியையும் செந்தமிழையும், வேதத்தையும் சித்தர் தத்துவத்தையும் இணைத்த பாரதியின் ரசவாதக் கலை அவரது இலக்கிய வடிவ வெளிப்பாட்டிலும் தென்படுகிறது. அசை வாய்பாட்டு முறையிலமைந்த யாப்பு வடிவங்களுக்குள் இருந்த தமிழ்க் கவிதையை மாத்திரை வாய்பாட்டு (மெட்டு) முறையிலமைந்த இசை வடிவங்களை நோக்கிப் பாரதி இழுத்துச் சென்றுள்ளார்.

5.6. எந்தக் கவிதை வடிவமாக இருந்தாலும் அது உணர்ச்சியுடன் இசையாகப் பாடத்தக்கதாக இருக்கவேண்டும். மக்கள் விரும்பத்தக்கதாக இருக்கவேண்டும் என்பதே பாரதியின் கவிதை இலக்கிய வடிவம் பற்றிய அடிப்படைக் கொள்கையாக இருந்திருக்கிறது. உணர்ச்சி கவிதையின் வெளிப்பாட்டில் முக்கியம் என்று பாரதி கருதியதால்தான் கண்ணன் பாட்டில் இடம்பெற்றுள்ள பாடல்களுக்கு வத்ஸலம், அத்புதம் என ரசக் குறிப்புகள் கொடுத்துள்ளார்.

5.7. பாரதி, கவிதையில் புதிய தன்னுணர்ச்சிப் பாடல் வடிவங்களைப் பயன்படுத்தியது மட்டுமின்றிக் குறுங்காப்பியம், வசனகவிதை போன்ற வடிவங்களையும் கையாண்டுள்ளார். உரைநடையில் அவரது ஞானரதம் மேலைநாட்டு இலக்கிய வகையான அற்புதப் புனைவுப் பாணியில் அமைந்துள்ளது.

## துணைநூல்கள்

1. கனகசபாபதி, சி., *பாரதி-பாரதிதாசன் கவிதை மதிப்பீடு*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1979.

2. கைலாசபதி, க., *பாரதி ஆய்வுகள்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1984.

3. பாரதியார், *பாரதியார் கவிதைகள்*, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1987.

4. பாரதியார், *பாரதியார் கதைகள்*, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1983.

5. வ.ரா., *மகாகவி பாரதியார்*, பழனியப்பா பிரதர்ஸ், மதுரை, 1983.

6. ஸ்ரீஸ்ரீ, மன குரஜாட, வீரஸம்ப்ரசுரண, சென்னை, 1988. (தெலுங்கு)

7. Abrams, M.H., *The mirror and Lamp : Romantic Theory* and Critical Tradition, Oxford University Press, Oxford, 1979.

8. Rene Wellek & Austinwarren, *Theory of Literature*, Penguin, Newyork, 1980.

9. B. Prasad, *A Background to the Study of English Literature*, Macmillan, Madras, 1965.

12

# தமிழ்வழி அறிவியல் கல்வி

★

டாக்டர் இராம. சுந்தரம்

'மந்திரம் கற்போம் வினைத்
தந்திரம் கற்போம்'

''மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்கள் அல்லவோ? ... மனித அறிவு வளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்து கொண்டு வரவர, அந்நாட்டின் பாஷையும் விசாலமடைந்து வரு-கிறது. அன்னிய நாகரிகம், தரித்திரியம், சரீர பலக்குறைவு, நோய், உற்சாகமின்மை முதலிய காரணங்களால் இப்போது இழிவு கொண்டு போயிருக்கும் தமிழ்நாட்டு ஜனங்கள், ஆங்கிலேயர் முதலிய சுதந்திர நாட்டினரைப் போல் விருத்தியடைந்து வருதல் அசாத்தியமாக இருக்கிறது என்பது ஒருவாறு மெய்யாக இருக்க-லாம். அதற்குப் பாஷையைக் குற்றம் சொல்வதிலே என்ன பிர-யோசனமிருக்கிறது! ஆடத் தெரியாத தாசி கூடம் போதாதென்பது போலக் கதை சொல்லுகிறாயே?'' — இது பாரதி. 'தமிழா, பயப்-படாதே ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்கள் எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்' — பாரதியின் வேண்டுகோள்.

இவ்வகைக் கல்வி சிறக்கத் தேவையான நூல்கள் தேவை. இதற்கு வேண்டிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும். ''இதற்கெல்லாம் முன்னதாகவே பண்டிதர் செய்துவைக்க வேண்-டிய அடிப்படைக் காரியம் ஒன்றுண்டு. கூடியவரை சாஸ்த்ர பரி-பாஷையை நிச்சயப்படுத்தி வைத்தால், பிறகு மொழிபெயர்ப்பு தொடங்குவோர்க்கு அதிக சிரமமிராது'' என விளக்குகிறான்.

---

* பேராசிரியர் & துறைத்தலைவர், அறிவியல் தமிழ் & தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

மேலைநாட்டு அறிவியலைத் தமிழில் கற்பிக்க நூல்கள் வேண்டும். அவை மொழிபெயர்ப்பு நூல்களாகக் கூட இருக்கலாம். அவ்வகை நூல்கள் எழுதுவதற்குத் தேவையான கலைச்சொற்களை முன்கூட்டியே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

கலைச்சொல் எது? பாரதியைக் கேட்போம்.

''பரிபாஷை, சங்கேதம், குழுவுக்குறி என்ற மூன்று சொல்லும் ஒரே பொருளைப் பல வகையிலே குறிப்பன; அதாவது ஒரு கூட்டத்தார் அல்லது ஒரு சாஸ்திரக்காரர் விசேஷார்த்தம் தோன்றும்படி உடன்பட்டு வழங்கும் பொது வழக்கமில்லாத சொல்'' கலைச்சொல்லும் நூலும் உருவானபின் அவற்றைக் கற்றுத்தர ஆசிரியர்களும் பள்ளிக்கூடங்களும் தேவை. அதை முன்பே கூறிவிட்டான். "ஊர்தோறும் பள்ளிக்கூடம் வைத்து ஐரோப்பிய சாஸ்திரங்களை எளிய தமிழ் நடையில் கற்றுத்தர'' என்று கலைச் சொல்லாக்கம் குறித்துப் பாரதி கருத்துரைக்கிறான்:

''இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும். திருஷ்டாந்தமாக ''ஆக்ஸிஜன்'', ''ஹைட்ரஜன்'' முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கனவே தமிழ் நாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பிராணவாயு, ஜலவாயு என்ற நாமங்களையே வழங்கவேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் சமஸ்கிருதப் பதங்களை வழங்கலாம். பதார்த்தங்களுக்கு மட்டுமேயன்றி கிரியைகளுக்கும் அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) தமிழ் சமஸ்கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலிஷ் பதங்களையே உபயோகப்படுத்தலாம். ஆனால், குணங்கள், செயல்கள், நிலைமைகள் இவற்றோடு இங்கிலிஷ் பதங்களை ஒருபோதும் வழங்கக்கூடாது. பதார்த்தங்களின் பெயர்களை மாத்திரமே இங்கிலிசில் சொல்லலாம் வேறுவகையில் உயர்த்த இயலாவிடின்.''

துறைப்பெயர்கள், நீர்மங்கள், வேதிப்பெயர்கள் முதலியவற்றை இங்கிலிசில் கூறத்தேவைப்பட்டால், அவ்வாறே கூறலாம். ஆனால், அவற்றின் தன்மை, வினை — எதிர்வினை இவற்றை இங்கிலிசில் சொல்லக்கூடாது. அவற்றைத் தமிழில் சொல்லவேண்டும். பாரதி கருத்துப்படி, பெயர்களாக உள்ள-

வற்றுக்குப் பிறமொழிச் சொல்லைக் கையாளலாம். ஆனால் மற்றவற்றிற்கு இல்லை.

பாரதி கூறும் மும்மொழிக் கலைச்சொல் பயன்பாட்டின் படிநிலைகள் கவனிக்கத்தக்கன. தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம்—இதுதான் முறை. இதையே, பாரதிக்கு 30, 35 ஆண்டுகளுக்கு முன் சாமுவேல் ஃபிஷ்கிறீன் தமது நூல்களில் குறிப்பிடுகிறார். தமிழகத்தில் தொடக்கத்தில் இந்நிலையே இருந்தது. அதில் சமஸ்கிருதம் கொஞ்சம் தூக்கலாக இருந்தது; தமிழ் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தது. தனித்தமிழ் இயக்கம் தொடங்கியதை ஒட்டித் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் என்கிற நிலை ஏற்பட்டு, இன்று தமிழ், ஆங்கிலம் என்கிற அளவில் நிற்கிறது.

எழுதப்படும் நூல்களும் எளிய நடையில் புரியும் வண்ணம் இருக்கவேண்டும் என்பது பாரதி கொள்கை. இது மொழியின் புலப்பாட்டுத் திறன் — புரிதிறன் பற்றிய கோட்பாட்டைக் கூறு-கிறது. புரியாத மொழியில் எழுதுவதில் பயனில்லை என்பது பாரதியின் கருத்து.

மேலைநாட்டுக் கலைகளை, சாத்திரங்களைத் தமிழில் சொல்ல முடியாது என ஒரு பேதை உரைத்ததை மேற்கோள் காட்டி வருத்தப்படும் பாரதி, தமிழில் அவற்றைச் சொல்லவேண்டும் என்பான். அவனே ஒரு பாடத்திட்டத்தையும் வகுப்பான்.

'மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்' என்னும் போது, அறிவியல் கோட்பாடுகளையும், தொழில்நுட்பத் திறனை-யும் கற்றுக்கொள்ளச் சொல்லுவதாகக் கருதலாம். வானை அளத்-தல், கடல்மீனை அளத்தல், சந்திரஇயல் கற்றல், ஆலைகள் அமைத்தல், ஆணிகளும் ஊசிகளும் செய்தல், கப்பல் கட்டுதல் முதலிய தொழில்நுட்பம் கற்றவனாகத் தமிழன் இருந்தால் அவன் வாழ்வு வளப்படும் என்பது பாரதியின் கருத்து.

இக்கருத்துக்கள்-கனவுகள் இன்று எந்த நிலையில் உள்ளன?

அறிவியல் கல்வி வளர நூல்கள், கலைச்சொல் அகராதிகள், நோக்கு நூல்கள், இதழ்கள் முதலியன தேவை. இவை இன்று தமிழில் எந்த நிலையில் உள்ளன?

**நூல்கள்**

கடந்த 150 ஆண்டுகளாக அறிவியலின் பலதுறை சார்ந்த நூல்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள் பாடநூல்களும், பொதுமக்களுக்கான நூல்களும் அடங்கும். இவை மூலநூல்களாகவோ மொழிபெயர்ப்பு நூல்களாகவோ இருக்கலாம். 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தமிழ்வழி மருத்துவம் கற்பிக்கப்பட்டது. *மனுஷ அங்காதிபாதி, கெமிஸ்தம், வைத்தியாகரம்*, இரணவைத்தியம் முதலிய நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன; கலைச்சொற்களும் உருவாக்கப்பட்டன. இம்மரபு இன்றும் தொடர்கிறது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பல பாடநூல்களை வெளியிட்டுள்ளது. கழகம், வானதி, பழனியப்பா, என்.சி பி எச் முதலிய பதிப்பகங்களும் பொது மக்களுக்கான நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகம் பொறியியல், மருத்துவப் பாடநூல்களை வெளியிட்டு வருகிறது. பாரதிதாசன் பல்கலைக்கழகம் இளம் அறிவியல் மாணவர்களுக்கான பாடநூல்களை வெளியிட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் பொறியியல் நூல்களை வெளியிட முற்பட்டுள்ளது. இவை வரவேற்கத்தக்க செய்திகள்.

**கலைச்சொற்கள்**

பலதுறை சார்ந்த கலைச்சொற்களுக்குத் தமிழில் பஞ்சம் இல்லை. ஏறத்தாழ 1½ இலட்சம் கலைச்சொற்கள் இருக்கின்றன. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, தமிழகம் ஆகிய பகுதிகளில் இக் கலைச்சொற்கள் உருவாக்கப்படுகின்றன. கணினி, மென்பொருள், வன்பொருள், மதியுரைஞர் (advisor) முதலிய சொற்கள் மலேசியா, சிங்கப்பூர்த் தமிழர்களின் கொடை. இந்த நூற்றாண்டிலும் சென்ற நூற்றாண்டிலும் உருவாக்கப்பட்ட சொற்களேயன்றி, பல நூற்றாண்டுகளாக வழங்கிவரும் சொற்களில் சிலவும் கலைச்சொற்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. பொறி, ஊர்தி, வலவன், மருந்து, மருத்துவர், துறை, வாரியம், கோட்டம், கூற்றம், அலகு, எரு, உரம், பாசனம், அணை எனப் பல பழஞ்சொற்கள் இன்னும் கையாளப்படுகின்றன.

இன்றைய தேவை கருதிச் சில கலைச் சொல்லகராதிகளும் வெளியாகியுள்ளன. 'அறிவியல் அகராதி' — அ.கி. மூர்த்தி தயாரித்தது. இதில் ஆங்கில — தமிழ்க் கலைச்சொற்கள் விளக்கப்படுகின்றன. 'கணிப்பொறி அகராதி' — இராம்குமார். கணிப்பொறி

தொடர்பான கலைச்சொற்கள் இரு மொழிகளில் (தமிழ் — ஆங்கிலம்) விளக்கப்படுகின்றன.

"அறிவியல் கலைச்சொற் களஞ்சியம்" என மணவை முஸ்தபா இரு தொகுதிகளில் விளக்கமான முறையில் கலைச்சொற்களைத் தொகுத்தளித்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகம் 'சட்டத்தமிழ் அகராதி'யைச் சென்ற ஆண்டு 1000 படிகள் வெளியிட்டது. அனைத்தும் விற்றுத் தீர்ந்தன. 'சித்த மருத்துவ பரிபாஷை' என்ற நூல் சித்த மருத்துவம் தொடர்பான கலைச்சொற்களை விளக்குகிறது. கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் அழகிய முறையில் 'கலைச்சொற் களஞ்சியம்' (கால்நடை வளம் — மீன் வளம்) என்ற தலைப்பில் கால்நடை மருத்துவ அறிவியல் கலைச்சொல் பட்டியலை வெளியிட்டுள்ளது. கலைக்கதிரும், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமும், இலங்கைத் தன்மொழி அலுவலகமும் பல கலைச்சொல் பட்டியல்கள் வெளிவரக் காரணமாக உள்ளது.

### நோக்கு நூல்கள்

இந்தியா விடுதலை அடைந்தபின் தமிழில் கலைக்களஞ்சியப் பணி தொடங்கப் பெற்று சில ஆண்டு காலத்திற்குள் 10 தொகுதிகள் வெளியாயின. தற்போது தமிழ்ப் பல்கலைக்கழகம் 14 தொகுதிகளில் வாழ்வியல் களஞ்சியத்தை வெளியிட்டதோடு 10 அறிவியல் களஞ்சியத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளது. இன்னும் 10 அறிவியல் தொகுதிகள் வெளிவர உள்ளன. இவற்றுள் நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் ஆயிரக்கணக்கில் கலைச்சொற்களும் இடம் பெறுகின்றன. அறிவியல் ஆயிரம், அறிவியல் கண்டுபிடிப்புகள் என்ற தலைப்பில் சில தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவை ஆசிரியர் — மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

### இதழ்கள்

அறிவியலை மாணவர்கள், பொதுமக்கள் அறியும் வண்ணம் பல இதழ்கள் வெளிவருகின்றன. கலைக்கதிர் 45 ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவருகிறது. விஞ்ஞானச்சுடர், அறிக அறிவியல், களஞ்சியம், இளம்விஞ்ஞானி, ஆரோக்கியம், தமிழ்க் கம்ப்யூட்டர், ஹெல்த், உங்கள் உடல்நலம், சித்தமருத்துவம், மூலிகைமணி,

அறிவியல்துளி, மருத்துவ அறிவியல் மலர், ஹோமியோ நண்பன் எனச் சில அறிவியல் இதழ்கள் குறிப்பிட்ட துறை சார்ந்த அறிவியல் அறிவைப் பரப்புகின்றன. 'துளிர்' என்ற இதழ் மாணவர்கள்—குழந்தைகளை இலக்காகக் கொண்டு வெளிவருகிறது. தினமலர், தினமணி, தினகரன் முதலிய நாளிதழ்களும் பலதுறை சார்ந்த அறிவியல் கட்டுரைகளை வெளியிடுகின்றன.

இவை மட்டுமல்லாது, பல அறிவியல் இயக்கங்கள் அறிவியல் கல்வியைத் தமிழ்வழிப் புகட்டுவதில் ஆர்வம் காட்டுகின்றன. அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம், தமிழக அறிவியல் பேரவை என்பன குறிப்பிடத்தக்கன. இவை ஆண்டுதோறும் நடத்தும் கருத்தரங்குகள் வழிப் பல கட்டுரைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அனைத்திந்திய அறிவியல் தமிழச் கழகம் 'வளர்தமிழில் அறிவியல்' என்ற பொதுத் தலைப்பில் 5 தொகுதிகள் வெளியிட்டுள்ளது. ஏறத்தாழ 300 கட்டுரைகள் உள்ளன. கடந்த 150 ஆண்டுகளாகத் தமிழில் வெளி-வருகின்ற அறிவியல் கட்டுரைகளைத் தொகுத்தால் 10,000,க்கு குறையாது எனலாம். செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், கலைமகள், மஞ்சரி போன்ற இலக்கிய இதழ்களும் சிறப்பான அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன.

**ஆசிரியர்—மாணவர்**

தரமான முறையில் அறிவியல் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் உள்ளனர். அண்ணா பல்கலைக்கழகத்திலும், ஸ்டான்லி மருத்-துவக் கல்லூரியிலும் 1993-இல் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இதற்கு எடுத்துக்காட்டு. தமிழில் படிக்க ஆர்வம் காட்டும் மாணவர்களும் உள்ளனர். ஆனாலும், தமிழ்வழி அறிவியல் கல்வி வெற்றிபெறவில்லை. என்ன காரணம்?

1) தமிழ் வழிப் படிப்பதால் வேலை வாய்ப்புக்காக மற்ற பகுதிகளுக்குச் செல்ல இயலாது என்கிற அச்சம்.

இது சரியன்று. ஆங்கிலம் வழி அறிவியல் கற்கிற எல்-லோரும் வேலை தேடிப் பிற இடங்களுக்குச் செல்வதில்லை. ஆங்கிலம் வழி கற்றும்கூட ஆயிரக்கணக்கில் வேலையின்றி இருப்போர் உள்ளனர். மேலும், தமிழ்வழிப் படிப்பதில் ஆங்கிலம்

படிக்கவேண்டாம் என்கிற தடை இல்லை. பிற நாடுகளில் போல ஆங்கிலம் இரண்டாவது மொழியாக இருக்கலாம். எல்லோருக்கும் வெளிமாநிலம்/நாடுகளில் வேலை கிடைக்காது என்று தெரிந்திருந்தும் ஓர் ஆசை காரணமாக ஆங்கிலத்தைப் படித்துக்கொள்கின்றனர்.

2) இன்னும் தரமான போதுமான நூல்கள், அகராதிகள், நோக்கு நூல்கள், இதழ்கள் தோன்ற வேண்டுமானால் அறிவியல் துறையில் தமிழ் அதிகம் பயன்படுத்தப்பட வேண்டும். மொழியின் வளர்ச்சி அதன் பயன்பாட்டைப் பொருத்தே அமையும். 'கோவணாண்டிகள் ஊரில் அங்கவஸ்திரத்துக்கு எப்படிப் பெயர் இருக்கும்' என்பான் பாரதி.

3) சமூக மதிப்பு ஆங்கிலம் உயர்ந்தது, தமிழ் தாழ்ந்தது என்கிற மனப்பான்மை. இது இந்தியா சுதந்திரம் பெற்றாலும், இந்தியன்-தமிழன் சுதந்திரம் பெறவில்லை என்பதையே காட்டுகிறது. பாரதி இவ்வகையான தாழ்வு மனப்பான்மையைக் கடுமையாகக் கண்டிப்பான். இருந்தும் இந்த மனநிலை மாறவில்லை.

4) அரசின் பாராமுகம்: ஆணைகள் பிறப்பிப்பதுதான் அரசின் கடமை என அரசு நினைக்கிறதே தவிர அவற்றைச் செயல்படுத்த எண்ணவில்லை. தமிழ் மட்டுமே பயிற்றுமொழி என்ற நிலை இருந்தால், தமிழ்வழி அறிவியல் கல்வி, பிரெஞ்சு/ஆங்கிலம் / செர்மன் / ரஷ்யன் / போலந்து வழி அறிவியல் கல்வி போலச் சிறந்திருக்கும். ஆனால் மாநில அரசுகள் மாநில மொழிகளை அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்தின்றனவேயன்றி, சமூக நலனுக்கு இல்லை. மொழியை அரசியலாக்கிய பெருமை நமக்குத்தான் உண்டு. தமிழக அரசின் — குறிப்பாக 1967 தொடங்கி மெத்தனப் போக்கும் ஆங்கில ஆர்வமும் தமிழ்வழி அறிவியல் கல்விக்குத் தடையாக உள்ளன. அரசின் இந்த மெத்தனப் போக்கு மக்களையும் பாதித்துள்ளது. 'அரசு-மக்கள்-அரசு' என்ற சுற்றில் இது அமைகிறது. அரசு ஆணையிட்டால் ஏற்போம் என மக்களும், மக்கள் விரும்பினால் ஆணையிடுவோம் என அரசும் தட்டாமாலை சுற்றும்வரை பாரதியின் கனவான தமிழ்வழிக் கல்வி நனவாகப் போவதில்லை. அது நனவாக வேண்டுமானால் தமிழியக்கம் ஒன்று விடுதலை இயக்கம் போல வீறுகொண்டு எழ வேண்டும். அதற்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்,

# 13

## பகுத்தறிவியக்கம்

★

டாக்டர் தொ. பரமசிவன்

''வஞ்சனைப் பேய்கள் என்பார் — இந்த
மரத்தில் என்பார் குளத்தில் என்பார்''

இருபதாம் நூற்றாண்டின் தமிழின் மொழி, கலை, இலக்கிய வரலாறு பெருமளவிற்குப் பாரதி என்ற தனிமனிதனுக்குக் கடன் பட்டதாகும். அதுபோலவே தமிழ்நாட்டின் இருபதாம் நூற்றாண்டின் சமூக வரலாற்றின் கணிசமான பகுதி பெரியார் என்ற தனிமனிதனுக்கு உரியதாகும். இருவரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்களே. ஆயினும், பாரதிக்கு இரண்டாண்டு மூத்தவராகப் பிறந்து, பாரதி மறைவிற்குப் பின்னர் 52 ஆண்டுகள் வாழ்ந்து தொண்டு செய்யும் வாய்ப்பைப் பெரியாருக்கு இயற்கை வழங்கியது. 39 வயதில் பாரதி மறைந்துபோக அந்த வயதிற்குப் பினனரே பெரியார் தம் பொதுவாழ்க்கையைத் துவக்கினார். முறையான பள்ளிப்படிப்பும் தன் காலத்தில் வெளிவந்த உயர்ந்த நூல்களைப் படிக்கும் வாய்ப்பும் பாரதிக்கு இருந்தன. பெரியார் நூற்றுக்குநூறு அனுபவ அறிவும், சுயசிந்தனையும் சார்ந்து இயங்கியவர். பாரதியின் நண்பர்களில் சிலர் பின்னாளில் பெரியாருக்கு நெருங்கிய நண்பர்களாயினர். அவர்களுள் குறிப்பிடத் தகுநதவர்கள் திவான் பகதூர் குத்தி கேசவப்பிள்ளை, ஸ்ரீமான் சர்க்கரைச்செட்டியார், வ.உ.சி., பாரதிதாசன் ஆகியோர் ஆவர். பாரதி வாழ்ந்த காலத்திலேயே (1920) பெரியார் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது செல்வமும் செல்வாக்கும் அக்காலத்தில் தமிழ்நாடு காங்கிரசில் இருந்த பிளவுகளும் அதற்குக் காரணமாக இருந்தன. 1921 செப்டம்பரில் மறைந்த பாரதி, தமிழ்நாடு காங்கிரசு இயக்கத் தலைவராக இருந்த பெரியாரைப் பற்றி எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை.

---

* தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கலைக்கல்லூரி, மதுரை.

விடுதலைக்காகப் பாரதியாரும் பெரியாரும் தேர்ந்தெடுத்துக் கொண்ட களங்கள் வெவ்வேறு அடிப்படையில் இருந்தன. ஆனாலும் இந்த இருவரது முயற்சிகளுக்கும் விளைநிலமாகத் தமிழ்நாட்டுச் சமூக வாழ்வில் சில மரபுகள் இருந்தன. இந்த இருவருக்கும் 600 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தமிழ்நாட்டில் 'சித்தர் மரபு' என்னும் ஒரு கலக மரபு தோன்றி மறைந்திருந்தது. 1875-லேயே 'இந்துமதச் சீர்திருத்த பத்திரிகை' என்ற பெயரோடு ஒரு பத்திரிகை தோன்றியிருந்தது. ஒடுக்கப்பட்ட வகுப்பில் பிறந்த அயோத்திதாச பண்டிதர் என்பவர் 1885-இல் 'திராவிட பாண்டியன்' என்ற இதழைத் தொடங்கினார். 1891இல் பறையர் மகாசன சபையும், 1893-இல் 'பறையன்' தமிழ் இதழும் ரெட்டைமலை சீனிவாசனால் தொடங்கப்பட்டன. சுதேசமித்ரன் ஜி. சுப்பிரமணிய அய்யர் அக்காலத்திலேயே தன் விதவை மகளுக்கு விதவை மறுமணம் செய்து வைத்திருந்தார். இந்த மரபின் தொடர்ச்சியாகவே பாரதி, பெரியார் ஆகிய இருவரது சமூக விடுதலைக் கருத்துக்களை நாம் அணுகவேண்டும்.

'பெரியாரியம்' என்பது உருப்பெற்றது பாரதி மறைந்து பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் கழித்தே ஆகும். 1916இல் பிராமணர் அல்லாதார் அறிக்கை (Non-Brahmin Manifesto) 1917 இல் அன்னிபெசண்டின் ஹோம்ரூல் இயக்கத்திற்குப் பிராமணர் அல்லாதார் (குறிப்பாக வ.உ.சி) காட்டிவந்த எதிர்ப்பு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ கொள்கையில் இராஜாஜி, சீனிவாச ஐயங்கார், சத்தியமூர்த்தி ஆகியோர் பெரியாருடன் உடன்பட மறுத்தது, 1924 சேரன்மாதேவி குருகுலக் கிளர்ச்சி, 1927இல் தமிழ்நாட்டு வருகையின்போது காந்தியடிகள் வருணாசிரமக் கொள்கையை வெளிப்படையாக ஆதரித்துப் பேசியது, 1929இல் நடந்த நாத்திக மாநாடு, 1932இல் பெரியாரின் ஐரோப்பியச் சுற்றுப்பயணம், தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டான சிங்காரவேலருடன் பெரியாரின் தோழமை ஆகிய நிகழ்வுகளே பெரியாரியம் என்ற கருத்தியல் ஒன்று உருப்பெறக் காரணமாய் அமைந்தன. பாரதி புனிதமாகக் கருதிய பலவற்றை பெரியாரியம் நிராகரித்தது. தயானந்த சரஸ்வதி, இராஜாராம் மோகன்ராய் ஆகியோரது சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களில் பாரதிக்குப் பெருவிருப்பம் இருந்தது. குறிப்பாக தயானந்த சரஸ்வதியின் 'வேதப் பொற்காலத்துக்குத் திரும்புதல்' (Back to the Vedas) என்ற முழக்கம்

பாரதியை மிகவும் கவர்ந்தது. ஆனால் பெரியாரியமோ பாரதியின் புனிதங்களை ஒட்டுமொத்தமாக நிராகரித்தது. பெரியாரியத்தின் கடவுள் மறுப்புச் சிந்தனைக்குப் பாரதி ஒருபோதும் உடன்பட்டிருக்கமாட்டார். சமூக சமத்துவத்திற்குப் பாரதி கண்ட வழி — இழந்த பெருமையை மீட்டல், கனகலிங்கத்துக்குப் பூணூல் அணிவித்துப் பிராமணனாக்குதல், பிராமணனாக உயர்த்துதல், மனையாளைத் தெய்வமாக உயர்த்துதல், நந்தனைப் பார்ப்பனனாக்குதல் என்பதாகக் கனவுகளோடு அமைந்தது. ஆனால் பெரியாரியமோ, நடைமுறைகளையும் நிகழ்வுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு சமத்துவத்திற்காகச் சமூக அடுக்குகளை மோதிச் சிதைப்பதாக இருந்தது. ஒரு கவிஞனுக்கே உரிய கனவுகள், கற்பனைகள், அழகுணர்ச்சி, ஆவேசம் — இவையெல்லாம் பாரதியிடத்தில் அதிகமாகவே இருந்தன. ஆனால் மொழி, கலை, இலக்கியம் பற்றி உயர்ந்த எண்ணங்களோ மதிப்பீடுகளோ பெரியாரியத்திற்கு இல்லை.

பகுத்தறிவு என்பதைப் பாரதியும் பெரியாரும் கீழ்க்காணும் வகையிலேயே எடுத்துக்கொண்டனர்.

முன்னோருடையது என்பதனால் எதனையும் ஏற்றுக்கொள்ளாமல், சமூக சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு எதிரான எல்லாவற்றையும் மறுப்பதும் நீக்குவதும் பகுத்தறிவாகும். இந்த மறுப்பு மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் அமைய வேண்டும். செயலால் மறுப்பது என்பது மோதுதல், எதிர்த்தல் எனப் பலவகையான போராட்ட வகைகளை உள்ளடக்கியதாகும். சுருக்கமாகச் சொல்வதானால் அச்சத்திலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் மனிதனை விடுதலை செய்வதே பகுத்தறிவின் நோக்கமாகும்.

தாங்கள் வாழ்கின்ற சமூகத்தின் அனைத்து முரண்பாடுகளையும் அடையாளம் காணுகிற வாய்ப்பு இருவருக்கும் இருந்தது. அவற்றை எதிர்த்துப் போரிடுவதில் எதை முன்னிலைப்படுத்துவது என்பதில்தான் இருவருக்கும் கருத்து வேறுபாடு. அரசியல் விடுதலை இன்றிச் சமூக விடுதலை இல்லையென்பது பாரதியின் கருத்து. சமூக விடுதலையின்றி அரசியல் விடுதலை பயன்தராது என்பது பெரியாரியத்தின் மையமாகும். பின்வந்த பொதுவுடைமை இயக்கத்தினரும் பாரதியின் கருத்தையே பெரியாரியக்கத்தின் மீதான விமர்சனமாக முன்வைத்தனர்.

"இந்தப் 'பிராமணரல்லாதார் கிளர்ச்சி' காலகதியில் தானே மங்கி அழிந்துவிடுமென்று நிச்சயிப்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன. முதலாவது. இதில் உண்மையில்லை... 'பிராமண-ரல்லாதார்' என்ற வகுப்பே கிடையாது. அதுவே பொய். எனவே, இந்தக் கிளர்ச்சியின் மூலமே பொய்யாக இருப்பது கொண்டு இதனை உண்மையில்லாத கிளர்ச்சி என்கிறேன். உண்மையாகவே, இந்தியாவில் ஜாதி பேதங்களில்லாமல் சமத்துவக் கொள்கை வெற்றியடைய வேண்டுமென்றால், அதற்கு ஸ்வராஜ்ய ஸ்தா-பனமே சரியான உபாயம். ஸ்வராஜ்யம் கிடைத்தால் சட்டசபை-களில் எல்லா ஜாதி மேதாவிகளும் கலந்திருப்பார்களாதலால் அந்த சபைகளின் மூலமாக இந்தியாவில் முதலாவது ராஜரீக வாழ்வில் சமத்துவக் கொள்கையை நிறுத்திவிடலாம். பிறகு சமூக வாழ்விலும் அக்கொள்கை தானே பாவிவிடும்''. 'ஜாதிபேத விநோதங்கள்'. மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப. 404).

மறுபுறத்தில் பெரியாரோ, சமூக விடுதலைக்கான குரல்கள் காங்கிரசு இயக்கத்திற்குள் ஒடுக்கப்படுவதாகக் கருதினார். அது மேல்சாதியினரின் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு மற்ற-வர்களைப் புறந்தள்ளுவதாகக் குற்றம் சாட்டினார். இந்தக் குற்றச்சாட்டின் வேகம் ஒட்டுமொத்தமாகப் பாரதியை நிரா-கரிக்கும் அளவுக்குச் சென்றது.

"தோழர்கள் ஆரியா எங்கே? சக்கரை எங்கே? வரதராஜுலு எங்கே? கல்யாணசுந்தரம் எங்கே? தண்டபாணி எங்கே? பவானிசிங் எங்கே? தர்மலிங்கம் எங்கே? எல்லோரும் காங்கிரஸ் ஜாதிவிட்டு நீக்கப்பட்டாய்விட்டது. சிதம்பரம்பிள்ளை கதி என்ன ஆயிற்று? கள்ளு, சாராயம் குடித்துக்கொண்டு கஞ்சா அபினி அடித்துக் கொண்டு திரிந்த ஒரு சுப்பிரமணிய அய்யருக்குப் பாரதி பட்டம் கொடுத்து இன்று திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது...... அவரைவிட யோக்கியமாக நாட்டுக்கு உழைத்த மற்ற குடும்பம் பல இன்று சோத்துக்கு வழியில்லாமல் திண்டாடுகின்றன'' (குடிஅரசு. 6.6.1937).

பெரியாரியத்தின் அடிப்படை பற்றிப் பாரதியார் கொண்டி-ருந்த கருத்தும், பாரதியாரைப் பற்றிப் பெரியார் கொண்டிருந்த மதிப்பீடும் பிழையானவை என்று பின்வந்த காலத்து அரசியல், சமூக நிகழ்வுகள் நமக்குக் காட்டிவிட்டன.

பெரியாரியம் உருப்பெற்றதற்கான சமூக அவலங்களைக் காண்பதற்கு வேறு சான்றுகள் தேடத் தேவையில்லை. 'பாரத ஜனங்களின் தற்கால நிலைமை' என்னும் தலைப்பில் பாரதி எழுதிய கவிதை ஒன்றே போதும். இந்தக் கவிதையில் பாரதி காட்டும் மதிப்பீடுகளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். "இந்த மக்கள் நிலைகெட்டவர்கள். வாழ்க்கையில் எதற்கெடுத்தாலும் அஞ்சியஞ்சிச் சாகும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள். மரத்திலும் குளத்திலும் வாழும் பேய்கள் மட்டுமன்றி இன்னும் பல வஞ்சனைப் பேய்கள் இவர்களை ஆட்கொண்டுள்ளன. மக்கள் வரிப்பணத்தில் நடக்கும் அரசியலைக்கூட இவர்கள் பேயாகக் கருதி அஞ்சி ஒதுங்குகின்றனர். அதிலே இவர்களுக்கு ஈடுபாடு இல்லை சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தைகளையெல்லாம் இவர்கள் நம்புகின்றனர். தங்களுக்குக் கஞ்சியில்லாத காரணமும் இவர்களுக்குத் தெரியவில்லை. வாழ்க்கையில் எழுந்து நடக்கும் வலிமையும் இவர்களுக்கில்லை. இவர்கள் கண்ணற்ற குழந்தைகள். பிறரை நம்பி ஏமாறுகின்றனர். இந்த நாட்டில் மிருகங்களைப் போல வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்." இரக்க உணர்வு மிகுந்த இந்தக் கவிதையில் மக்களில் பெரும்பாலோர் சாத்திரங்களை நம்பிக் கெட்டுப்போவதனையும், அரசியல் ஈடுபாடு அற்றவர்களாக இருப்பதனையும் பாரதி வலியுறுத்திச் சொல்லுகிறார். இந்த இரண்டு தளைகளையும் அறுக்கும் விடுதலைச் சித்தாந்தமாகவே பெரியாரியம் பிறந்தது.

''தந்த பொருளைக் கொண்டே — ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை — இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார்''

என்ற கவிதை மக்கள் திரளின் பெரும்பாலோரான 'பிராமணரல்லாதாரை' மனத்தில் கொண்டு எழுதப்பட்டதெனலாம். ஏனென்றால் 1885-இல் இந்திய தேசியக் காங்கிரசின் தொடக்கத்திற்குச் சென்னையிலிருந்து சென்ற ஆறு பிரதிநிதிகளில் ஐந்து பேர் பிராமணர்களாகயிருந்தனர். அகில இந்தியக் காங்கிரசுக் குழுவுக்குச் சென்னைப் பிரதேசக் காங்கிரசிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பதினைந்து பேரில் பதினான்கு பேர் பிராமணர்களாக இருந்தனர் என்று வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. 1910க்கும் 1919க்குமிடையில் அரசு உயர்நிர்வாகக் குழுவில் இடம் பெற்-

றிருந்த ஒன்பது இந்திய அதிகாரிகளில் எட்டுப்பேர் பிராமணர்களாக இருந்தனர். 1912இல் உள்ளாட்சித் துறையிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் நெல்லை மாவட்டம் தவிர ஏனைய எல்லாத் தொகுதிகளிலிருந்தும் வந்தவர்கள் பிராமணர்கள் மட்டுமே. பெரும்பாலான மாவட்டக் காங்கிரசின் தலைவர்களும் பிராமணர்களே. காங்கிரசு மாநாடுகளைப் பற்றியும் காங்கிரசு இயக்கத்தைப் பற்றியும் பல கட்டுரைகள் எழுதிய பாரதிக்கு இவை தெரியாத உண்மைகளல்ல. எனவே, 'அரசியலில் ஈடுபாடு காட்டாது அதனைப் பேய் என்று அஞ்சி ஒதுங்கும்' மக்களாகப் பாரதி குறிப்பிடுவது பெரும்பான்மையான பிராமணரல்லாத மக்கள் திரளையே ஆகும். ஆனால், பாரதிக்குப் பின் அரசியல் நிகழ்வுகள் பாரதி கருதியது போல நிகழவில்லை. அதுவரை திலகர், பாரதி, வ.உ சி காங்கிரசாக இருந்த தமிழ்நாடு காங்கிரசு 1920களில் கிருஷ்ணசாமி ஐயங்கார், ராஜாஜி, சத்தியமூர்த்தி காங்கிரசாக மாறிவிட்டது என்கிறார் ஓர் ஆய்வாளர். இந்த நிலைமை விடுதலை பெற்ற இந்தியாவிலும் நீடித்தது. அரசியல் நிர்ணய சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 'அரசியல் சட்ட வரைவுக் குழு'வின் (Constitution Drafting Committee) எட்டு உறுப்பினர்களில் ஆறுபேர் பிராமணர்களாக இருந்தார்கள். ஏனைய இருவரில் ஒருவர் முஸ்லீம். மற்றொருவர் அம்பேத்கார்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது பெரியாரியத்தின் செம்பாதியான பகுதியாகும். 'அனைத்துச் சாதியார்க்கும் அரசியல் அதிகாரம்' என்பதே இதன் உண்மையான பொருள்.

1919இல் திருச்சியில் கூடிய காங்கிரசு மாநாட்டிலும், 1920 திருநெல்வேலி மாநாட்டிலும், மீண்டும் 1921இல் தஞ்சாவூர் மாநாட்டிலும், 1923இல் சேலம் மாநாட்டிலும், 1924இல் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராகத் திருவண்ணாமலை மாநாட்டிலும் பெரியார் தொடர்ந்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்து கொண்டேயிருந்தார். 1925இல் காஞ்சிபுரம் மாநாட்டிலும் தன் முயற்சியில் தோற்றுப்போய் காங்கிரசை விட்டு வெளியேறினார். 1921லும் 1922லும் சென்னை அரசாங்கம் வெளியிட்ட ஆணைகள் விரிவாக்கப்பட்டு 1928இல் அரசுப் பணிகளுக்கான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆணை சென்னை அரசாங்கத்தால் வெளியிடப்பெற்றது. 1950இல் 'புதிய அரசியல் சட்டப்படி இந்த ஆணை செல்லாது' என்று

நீதிமன்றம் அறிவிக்க பெரியார் மீண்டும் கிளர்ச்சியைத் தொடங்கினார். 1951இல் அரசியல் சட்ட முதல் திருத்தம் பிற்பட்ட சாதிகளின் வேலைவாய்ப்பு உரிமையைக் காப்பாற்றப் பிறந்தது.

மாற்றங்களை விரும்புகிற யாரும் மாற்றம் தேவைப்படும் அமைப்பின் முரண்பாடுகளைக் கணக்கெடுத்தல் வேண்டும். பிரிட்டிஷ் அரசியல் ஏகாதிபத்தியமே பாரதிக்குத் தலையாய முரண்பாடாகத் தோற்றமளித்தது. பெரியாருக்கோ அதனைவிடப் பல நூறாண்டுகள் மூத்த சமுதாய ஏகாதிபத்தியமே தலையாய முரண்பாடாகத் தோன்றியது. காங்கிரசைக் கையகப்படுத்திய பிராமணர்களல்லர் பிராமணியமே எதிர்க்கப்படவேண்டியது என்பதில் பெரியார் தெளிவு கொண்டிருந்தார் பல நூறு ஆண்டுகளாகப் பிராமணர்கள் சமூகத்தின் சடங்குத் தலைமையினை (ritual leadership) ஏற்று இருந்தனர். இந்தச் சடங்கியல் தலைமை 'வருணாசிரம தருமம்' என்னும் அடிக்கட்டுமானத்தின் மீது எழுப்பப்பட்டிருந்தது.

காங்கிரசு இயக்கத்தின் தலைமையேற்றிருந்த காந்தியடிகளோ 1921லேயே (அக். 6) 'யங் இந்தியா' பத்திரிகையில் வருணாசிரம தர்மத்தின் மீது நம்பிக்கை தெரிவித்து விளக்கம் தந்திருந்தார். 1925இல் சேரன்மாதேவி குருகுலக் கிளர்ச்சி அவரைப் பெரிதும் பாதித்திருந்தது. 1927இல் தமிழ்நாட்டிற்கு வந்த காந்தியடிகள் கடலூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வேதங்கள், புராணங்கள், உபநிடதங்கள், அவதாரங்கள், மறுபிறப்பு, பசுப் பாதுகாப்பு ஆகியவற்றில் தனக்கிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி வருணாசிரம தர்மத்தைப் பலமாக ஆதரித்துப் பேசினார். இந்தக் கட்டத்தில் சுயமரியாதை இயக்கத்தில் சிங்காரவேலுச் செட்டியார், எஸ். இராமனாதன், ப. ஜீவானந்தம் ஆகியோரின் தொடர்பும் தோழமையும் பெரியாருக்குக் கிடைத்தன. 1932இல் பெரியார் ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் சென்று வந்தார். குறிப்பாக சோவியத் ரஷ்யாவில் மூன்றுமாத காலம் தங்கி வந்தார். 1932இன் கடைசியில் நாத்திகவாதமும் பொதுவுடைமையும் சேர்ந்து பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைக்குப் புதிய பரிமாணம் தந்தன.

1932 அக்டோபர் முதல் 1933 முடியப் பெரியாரின் குடியரசு இதழில் வெளிவந்த விளம்பரங்களையும் கட்டுரைகளையும் படித்தால் அச்சங்களில் இருந்தும் ஆதிக்கங்களில் இருந்தும் விடுதலை செய்வதற்கான திட்டமிட்ட எழுத்தாணிகள் நடைபெற்றதைக் காணலாம். தோழர் சிங்காரவேலரின் 'கடவுளும்

பிரபஞ்சமும்' என்ற நூல் வெளியீடு, வாரந்தோறும் 'அரசும் மதமும்' என்ற லெனின் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு, 'நாஸ்-திகம்' என்ற ஒரு கட்டுரை. 'விஞ்ஞான முறையும் மூடநம்பிக்-கையும்' என்ற தலைப்பில் சிங்கார வேலரின் கட்டுரை. 1933இல் நடக்கவிருந்த கும்பகோணம் மகாமகம் பற்றிய எதிர்ப்புக் கட்டுரைகள், பெரியபுராணத்தை விமர்சனம் செய்து 'மெய்கண்டான்' என்பவர் எழுதிய கட்டுரைகள், காரல்மார்க்ஸ், பெர்னாட்ஷா, 1917 ரஷ்யப்புரட்சி ஆகிய தலைப்பில் கட்டுரை-கள், ''அன்பே சிவம் என்பது ஆத்திகர் கரடி'' என்ற பாரதி-தாசன் கட்டுரை. 'சுயநல ஆண்களின் ஆதிக்கம் அழிய வேண்டும்' என்ற தலைப்பில் திருமதி நானாவதி ஆற்றிய சொற்பொழிவு. 'புரோகித மறுப்புச் சங்கத்தாரின் திருமண விளம்பரங்கள்' என்று பகுத்தறிவுச் சிந்தனையின் சகல பரிமாணங்களும் உடையதாகக் குடியரசு இதழ் காட்சியளித்தது.

பெண் விடுதலை, பெண்ணுக்கு க்கல்வி, பெண்ணுக்குச் சம-உரிமை, விதவை மறுமணம், மணமின்றிப் பெண் தனித்து வாழு-தல். பெண்ணின் விருப்பம் மதிக்கப்படுதல் காதல் மணம், பெண்-ணுக்குச் சொத்தில் சமபங்கு. வேலை வாய்ப்பு என்று பெண் விடு-தலையின் சகல பரிமாணங்களைப் பற்றியும் 1907 ஆம் ஆண்டிற்கு முன்னரே, பெரியாருக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே பாரதி கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பெண்களுக்காகச் 'சக்கர வர்த்தினி' என்ற இதழ் ஒன்றை நடத்தி அதில் எழுதிய எழுத்துக்-களிலும் தொடர்ந்து செயற்பட்டார். பகுத்தறிவு, பெண்விடுதலை என்ற பெரியாரிய கருத்துநிலைகளுக்குப் பாரதி முன்னோடி. குறிப்பாகப், பெண்விடுதலைப் பற்றிய கருத்துக்களில் பெரியாரின் கட்டுரைகள் குறிப்பிடத்தகுந்தவை. 1942இல் வெளிவந்த 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூல் 10 கட்டுரைகளை உடையதாக இருந்தது. 63 ஆண்டுகளுக்கு முன்னால் பெண் விடுதலை பற்றிய விஞ்ஞானப்பூர்வமான கருத்துக்களை முறையான, பள்ளிக் கல்வி பெறாத பெரியார் முன்வைத்தது பகுத்தறிவுச் சிந்தனையின் வீச்சினைக் காட்டுவதாகும். கற்பு, வள்ளுவரும் கற்பும், காதல், கல்யாண விடுதலை, மறுமணம் தவறல்ல, விபச்சாரம், விதவை-கள் நிலைமை, சொத்துரிமை, கர்ப்பத்தடை, பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழியவேண்டும் எனப் பத்துத் தலைப்புகள் உடைய நூல்.

இவை மட்டுமல்ல. 1933 சனவரி 29ஆம் நாளிட்ட குடியரசு தலையங்கத் தலைப்பு ''இந்தியப் பெண்களுக்கு இடம்—நளபாக அடுப்பும் சப்ரமஞ்சக் கட்டிலும் பிரசவ ஆஸ்பத்திரியுமா?'' என்பதாகும். இன்று பெண்ணிய இயக்கங்கள் முன்வைக்கின்ற குரலைப் பல ஆண்டுகளுக்கு முன்னர் முதலில் பாரதியும் பின்னர் பெரியார் இயக்கமும் முன்வைத்தன. பகுத்தறிவுச் சிந்தனை பல துறைகளிலும் காலூன்றி நின்றாலும் ஆண்களை விடப் பெண்களிடத்தில் அதனைக் கொண்டுசேர்ப்பதில் பாரதியாரும் பெரியாரும் ஒரு குறிப்பிடத்தகுந்த வெற்றியைப் பெற்றிருக்கின்றனர். 1937 இல் சிறையில் இருந்த பெரியாருக்கு 'பெண்கள் மாநாடு' பெரியார் பட்டம் கொடுத்ததும், வரலாற்றில் முதல் முறையாக ஒரு பொதுக்காரணம் பற்றி (இந்தி எதிர்ப்புப் போர்) தமிழ்நாட்டுப் பெண்கள் பெருமளவில் சிறைக்குச் சென்றதும் பெரியாரியத்தின் சாதனைக்கான எடுத்துக்காட்டுகளாகும். பெண் விடுதலைக் குரல்கள் இன்று உரத்து ஒலிக்க வேண்டிய தேவை இருக்கிறது. பெரியார் மறைந்து 23 ஆண்டுகளில் தமிழ்நாட்டு அளவிலும் உலக அளவிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசியல், சமூக ஏகாதிபத்தியங்கள் மிக நுட்பமான தளத்தில் செயல்படுகின்றன. தகவல் தொடர்புச் சாதனங்களில் ஏற்பட்டுள்ள விரைவான விஞ்ஞான வளர்ச்சியை அவை கருவியாகப் பயன்படுத்துகின்றன. இதன் விளைவாக இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த நாடுகளின் மீது உலக ஏகாதிபத்தியங்கள் ஒரு பண்பாட்டுப் படையெடுப்பை நிகழ்த்துகின்றன. இதன் விளைவாக ஒருபுறம் மத அடிப்படை வாதமும், மற்றொருபுறம் நுகர்வுக் கலாச்சாரமும் மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. உலகத்தை ஒரே சந்தையாக ஆக்குதல் (Globalization) என்ற வாணிகக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உலகின் பெரிய வணிக நிறுவனங்கள் இதனைச் செய்து கொண்டிருக்கின்றன. சுதேசியப் பொருள் உற்பத்தியும் சுதேசியப் பண்பாடும் அழிக்கப்படுவது காந்தியடிகளுக்கோ, பெரியாருக்கோ, பாரதிக்கோ உடன்பாடான கருத்தன்று. களமும் காட்சிகளும் மாறியிருக்கின்றன. இப்பொழுது அனைவரும் கூட்டாக ஆதிக்கங்களை எதிர்க்க வேண்டிய வரலாற்றுத்தேவை ஒன்று உருவாகியிருக்கிறது. பாரதி, பெரியார் காலத்தைப் போலல்லாமல் அதனை எதிர்கொள்ளப் படித்தவர்கள் முன்வர வேண்டும்.

# 14

## நிறைவுரை

★

டாக்டர் கா செல்லப்பன்

ஒரு யுகசந்தியின் கவிதைப் பிரவாகமாகப் பெருக்கெடுத்த மகாகவி பாரதியின் குரல், யுகங்களையும் தாண்டி வாழும் தன்மை படைத்தது. ஒரு வகையில் பார்த்தால், வாழ்வின் கணங்கள், கவிதையில் யுகங்களாக வாழ்கின்றன. இன்னொரு வகையில் கவிஞரின் கணங்கள், மானுடத்தின் யுகங்களாக நிலைத்து விடு-கின்றன. எனவேதான் எங்கோ ஓரிடத்தில், பலபேர் பார்வைக்-கெட்டாத எட்டயபுரத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, 'நமக்குத் தொழில் கவிதை; நாட்டுக் குழைத்தல்' என்று வள-மில்லாத, ஆனால் உளம் சார்ந்த வாழ்க்கைப் பாதையினை ஏற்று ஒரு பிரம்மாண்டமான ஏகாதிபத்தியத்தை, சாதாரணமான, ஆனால் சக்திமிக்க சாகாத் தமிழ்ச் சொல்லால் எதிர்த்துப் போராடி வேகத்திரைகளினால் வேதப் பொருள் பாடி வந்து மேவும் பாண்டிக் கடலலையோடு தன் கவிதையலைகளைக் கலக்க விட்டு, பின் வரலாற்று வானில் நிரந்தரமான கவிதைச் சிறகடித்துப் பாடும் இறவாப் பறவையாகப் பாரதி விளங்குகிறார்.

நிகழ்வுக்கும் கனவுக்கும், நிதர்சனத்துக்கும் தரிசனத்துக்கும் எப்போதும் கவிஞன்தான் பாலமாக அமைகிறான். நிகழ்வு செத்து நினைவு பிறக்கிறது; நினைவு செத்துக் கனவு பிறக்கிறது; கனவு செத்துக் கவிதை பிறக்கிறது. எல்லாக் கவிதையும் பிராய்டின் கருத்துப்படி, கனவின் வெளிப்பாடே. பாரதியின் சொல்லிலே சொன்னால் பாவலர்க்குப் பட்டப் பகலில் தெரியும் நெட்டைக் கனவே. பாரதியின் பாடல்கள் பல்வேறு நிலையில் கனவுகளாக உள்ளன. அவரே, தன் கவிதையில் கனவினை அடிக்கடி குறிப்பிடு-

---

* ஆங்கிலப் பேராசிரியர் (ஓய்வு), பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

கிறார். 'குயிற்பாட்டு' ஒரு நீண்ட கனவு. அவருடைய சுய சரிதையில் வாழ்க்கையை' 'கனவிலோர் கனவு' எனக் கூறுகிறார். பிளாட்டோ, மற்றும் கீத்சின் தாக்கத்தாலோ என்னவோ, அவரது பாடலிலும் கனவும் உண்மையும் அடிக்கடி இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. ஆனால் பாரதியின் கவிதை, வெறும் கனவல்ல, தரிசனம் (Not a dream, But a vision); நிதர்சனம் தரிசனத்துக்கு உந்துதலாகிப் பிறகு அந்த நிதர்சனத்தையும் மாற்றுகிறது. உண்மைதான் கனவாக உருவெடுக்கிறது. பிறகு, கனவே உண்மையாகி விடுகிறது. பாரதியின் கவிதைக் கனவுகள் எல்லாமே உண்மையாகிவிட்டாலும் அவற்றில் ஒளிந்திருக்கும் உண்மைதான் நிகழ்வுக்கு வழிகாட்டி.

''எழு, விழி, பற'' என்று மனிதத்துவத்தின் மகத்தான ஆற்றலையும் அகன்ற, உயர்ந்த இலட்சியத்தையும் பேசிய பெரும் புலவன் பாரதி. மனிதனின் விதி மனிதனிடம்தான் உள்ளது. அவனால் எழ முடியும்; விழிக்க முடியும்; எல்லையற்ற இலட்சிய வானில் பறக்கவும் முடியும் என நம்பி, மனித எழுச்சிக்கு முதலிடம் தந்தார். மற்ற கலைஞர்கள் எல்லாம் இறைவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்கையில் அந்த மரபை மாற்றி, தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாம் பாரத தேசம் உய்வு பெற, பாரத மாதாவின் திருப்பள்ளி எழுச்சி பற்றிப் பாடினார். எனவேதான் பாவேந்தர், 'நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா; காடு கமழச் செய்த கற்பூரச் சொற்கோ; அறம் பாட வந்த அறிஞன்; தமிழர் திறம் பாட வந்த மறவன்' எனப் பாரதியைப் பற்றிப் பாடி மகிழ்ந்தார். தமிழ் மண்ணில் பூத்த முதல் முழுமையான தேசியப் பூச்சரங்கள், மகாகவி பாரதியின் பாடல்கள். அவை இந்திய மண்ணின், அதன் மக்களின் ஆத்மாவின் ஒட்டு மொத்தக் குரலாக, அவரது அடிமனக் கனவின் வெளிப்பாடாக ஒலித்தன. 'A poet is the most conscious point in time' என்பார் F.R. லீவிஸ் என்ற ஆங்கிலத் திறனாய்வாளர். தனது உள் ஒளியால் தனது மக்களின் ஆழ்மனக் கனவுகளை உணர்ந்து, ஆற்றல் மிக்க சொற்களால் அவற்றையும் அவர்தம் ஆற்றலையும் வெளிப்படுத்திய தரிசனக் கவி (Visionary Poet) ஆவார் பாரதி. அவருடைய சொற்களாலே சொன்னால் 'அவர் செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே, எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே

ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'. சொல்லைச் சுடரொளியாக்கிய பாரதியின் உள்ளத்தின் ஒளியை அவரது வாக்கின் உண்மையிலே, ஆற்றலிலே உணரலாம். பாரதி ஒரு சக்திக் கவிஞன் — பாரத சக்தியின் கவிஞன் — பாரத மக்களின் அடிமனங்களில் மண்டிக்கிடந்த சக்தியின் கவிஞன். சக்தியின் கூறுகளான காளியும் பராசக்தியும் அவரைப் பெரிதும் கவர்ந்த தெய்வங்கள்.

பெருமிதக் கவிஞனான பாரதியின் பாடல்களில் முதல் நிலையிலே தமிழ் மொழியின் ஆற்றலும் எழுச்சியும் பெரிதும் பேசப்படுகின்றன. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'. 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவரைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை' என்று பூரித்துச் செம்மாந்த குரலில் பாடினார். அதே சமயத்தில் புத்தம் புதிய கலைகள் மேற்கில் வளர்வதையும் உணர்ந்து ''சென்றிடுவீர் எட்டுத்திசையும்; கலைச் செல்வங்கள் யாவையும் இங்கு கொணர்ந்து சேர்த்திடுவீர்'' என்று ஆணையும் பிறப்பித்தார். இறவாத புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றுதல் வேண்டும் என விழைந்த அதே நேரத்தில், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்திடுதல் வேண்டும் என்றும் விசாலப் பார்வையுடன் தமிழின் விரிவாக்கத்துக்கு வழிவகுத்தார். அதே போல் தமிழ்த்திரு நாட்டின் பழமை பெருமையை, தமிழர் சிங்களம் புட்பகம் சாவகம் யாவிலும் சென்றேறி அங்கு தங்கள் தமிழ்க் கொடியைப் பறக்க விட்டதைப் பாடித் தமிழரின் வீர உணர்ச்சியைத் தட்டி எழுப்பினார்.

ஆனால், பாரதி தமிழ் மொழியைப் பற்றிப் பாடிய அளவுக்குத் தமிழ்நாட்டினைப் பற்றிப் பாடவில்லை. மொழிவழித் தமிழனாக உணர்ந்தாலும் பாரதியில் பாரத தேசம்தான் பெரிதும் பேசப்படுகிறது. 'மண்ணும் இமயமலை எங்கள் மலையே. மாநிலம் மீதிது போல் பிறிதில்லையே' என்று — இமயத்தால், கங்கையால், உபநிடதத்தால் காண்டீபத்தால் பாரதம் பெற்ற பழம் பெருமையை வாயார வாழ்த்தினார். இந்தப் பரந்து விரிந்த பாரதத்தின் மொத்தப் பண்பாட்டையும் சுவீகரித்துக் கொண்ட பாரதி, 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே. அவர் முந்தையர் ஆயிரமாண்டுகள் கூடி மகிழ்ந்ததும் இந்நாடே' என்று தன்னை இந்த மண்ணோடு, ஒரு நீண்ட பாரம்பரியச் சங்கிலியால் இறுகப்

பிணைத்துக் கொண்டார். மண்ணின் வழி தான் முந்தையரோடும், முந்தையர் வழி அவர் வாழ்ந்த இந்த மண்ணோடும் பந்தத்தையும் சொந்தத்தையும் ஏற்படுத்திக் கொண்டார். அந்தத் தாயை, 'வந்தே மாதரம்' 'வந்தே மாதரம்' என்று ஒரு புதிய தேசிய உணர்வோடு வாயார வாழ்த்தி வணங்கினார்.

பாரதியின் தேசியப் பாடல்களில் ஒரு பழம் பெரும் நாட்டின் அகவிழிப்பின் ஆனந்தக் கூத்தைக் கேட்கிறோம். ஒரு நாட்டின் உண்மையான சுதந்திரம் அது தன்னைத் தானே உணர்ந்து கொள்வதுதான் (It is the joyous self—discovery of a nation-an awakening to its own true identity). ஆனால், 'நாடு' என்பது வெறும் மலையும் கடலும் வயலும் காடும் மட்டுமல்ல; அது அங்கு வாழும் மனிதர்களால், அவர்களது ஒன்றுபட்ட உணர்வால், இலட்சியத்தால், பாரம்பரியத்தால், பண்பாட்டால் உருவாகுவது. எனவேதான், 'வெள்ளிப் பனி மலை மீதுலாவுவோம் மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவோம்' என்று இயற்கையை மனிதனுக்குட் படுத்திப் பேசுகிறார். என்ன கம்பீரமான கனவு! இமயத்தில் உலவு-வதாகச் சொல்லுகிறார். மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவ-தாகக் கனவு காண்கிறார். நம்முடைய துறைமுகங்களில் பிற-நாட்டு வாணிகர் வந்து மொய்ப்பதாகக் காட்டுகிறார். காகிதங்கள் செய்வோம்; ஆயுதங்கள் செய்வோம்' என்று அறிவையும் ஆற்ற-லையும் இரு கண்களாகப் பாவித்தார். அனைத்துக்கும் மேலாக இந்திய மண்ணில் வாழும் பல்வேறு இனத்தவரும் மொழியினரும் ஒருணர்வால் உந்தப்பட்டு, எல்லோரும் ஒரு குலமாக, ஒரு குடும்பமாக வாழ்வதைத் தன் தரிசனக் கவிதையில் கண்டு களிக்கிறார்.

வங்கத்தின் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்

என்கிறார்.

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

என்று பண்டமாற்றுப் போல், பண்பாட்டுச் சங்கமத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இங்கே, இதயங்களுக்கிடையே

இடைவெளி இல்லாததனால் காசி நகரத்திலே பேசுவது காஞ்சி-யிலே கேட்கிறது.

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன் நாட்டிளம் பெண்களுடன்
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகள் ஒட்டி வருவோம்

என்று கூறும்போது, இந்திய நாட்டின் மொழியின் இட பேதமற்ற ஒருமையை உணர முடிகிறது. ஆனால் இங்கே ஒருமை, வேறு-பாடுகளற்ற வெறுமையல்ல, வேறுபாடுகளை ஏற்று இணைந்த முழுமை. தாகூரின் சொற்களிலே The perfection of unity is not in uniformity but in harmony. மேலும் அது வெறும் தேசிய ஒருமைப்பாடு மட்டுமல்ல; மனித இனத்தின் ஆன்மீக ஒருமைப்-பாடு. இப்படிப்பட்ட கனவின் விரிவாக்கமாகத்தான்,

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்

என்று நாட்டுக்கும் நாட்டுக்குமிடையேயுள்ள சுவற்றினை நீக்கி, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயுள்ள இணைப்பினை ஏற்படுத்துகிறார். 'பாலம்', 'வீதி' என்ற சொற்கள், பாரதியின் அகன்று விரிந்த இலட்சியப் பார்வையில் எவ்வளவு பெரிய இடை-வெளிகூட மிக எளிதாக அடைத்துவிடக் கூடியதாகத் தோன்று-வதை உணர்த்துகின்றன. இலங்கையும் தென்னிந்தியாவும் ஒரு பிரம்மாண்ட உலக நகரத்தின் இரு தெருக்களாகக் காட்சியளிக்-கின்றன. பாரதியின் பார்வையில் அகலப் பாங்கில் மட்டுமன்றி, உயரவாக்கிலும் பேதங்களற்றுப் போய்விடுகின்றன.

சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்

என்று சொல்லிவிட்டு,

சந்தித் தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம் என்று கூறும்போது சந்திர மண்டலத்துக்கும் சந்தித் தெருவுக்குமிடையே வேறுபா டற்ற நிலையிலே பேசுகிறார். அது மட்டுமல்ல; வானையளக்கும் அறிவியல் அளவுக்கு சந்தித்தெருப் பெருக்கும் கலையைச் சாத்திர-மாக்கி உயர்த்துகிறார். பாரதியின் பாடல்களிலே கீழ்-மேல், ஆத்மா-உடல், ஆண்-பெண் என்ற முரண்பாடுகளற்ற binary oppositions ஐத் தாண்டிய நிலையினைக் காணலாம். சந்திர

மண்டல இயல்பு, சாத்திரப் பெருக்கம் ஆகியவற்றையும் உடல் உழைப்பையும் ஒன்றாகக் காண்கிறார். மனித உழைப்பின் மகத்துவத்தை இந்த அளவுக்கு எந்தக் கவிஞனும் உயர்த்தியதாகத் தெரியவில்லை.

பன்மையுள் ஒருமையாகப் புதிய பாரதத்தைக் கனவு கண்ட பாரதி சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அதன் மறுபகுதியாகக் காட்டுகிறார். 'எல்லோரும் ஓர் குலம்; ஓர் விலை; ஓர் நிறை' என்றும், 'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை இந்த நாட்டில்' என்றும் எக்காளமிடுகிறார். குழந்தை உலகத்தில் எந்த வேறுபாடும் துளிர்க்கக் கூடாது எனக் கருதி, ''ஜாதிகள் இல்லையடி பாப்பா'' என்று அழுத்தம் திருத்தமாக, ஜாதிகளே இல்லை எனக் கூறுகிறார். ''கஞ்சி குடிப்பதற்கில்லார்; ஒரு காரணமும் அறிவும் இல்லார்; அஞ்சி அஞ்சிச் சாவார்; அவர் அஞ்சாத பொருளில்லை'' என்று நெஞ்சு பொறுக்காமல் பாடிய பாரதி, வயிற்றுக்குச் சோறுண்டு இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம் என்று எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி இவ்வையத்தை இழுத்துச் செல்கிறார். அதனால்தான் எங்காவது ஒரு மூலையில் ஏழ்மையின் குரல் கேட்டாலும் எல்லோரும் கொதித்தெழ வேண்டும் எனக் கருதி, 'இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்; தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழிப்போம்' என்று சூளுரைக்கிறார். பாரதி அடிப்படையில் ஒரு தரிசனக் கவிதான்; புரட்சிக் கவியல்ல. (A visionary humanist, not a revolutionary humanist). அவர் காணுகின்ற கிருதயுகத்தில் உலகம்தான் உள்ளாற்றலால், ஆத்மீக விழிப்பால் முழுமையை அடைந்திருக்கும். அன்பு வழியையும் ஆத்மீக விழிப்பையும் பேணிய பாரதி, தேவைப்பட்டால் அழித்துப் படைப்பதற்கும் அழைப்பு விடுக்கிறார்.

பாதகம் செய்பவரைக் கண்டால் — நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா — அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா

என்று குழந்தையையே போரிடத் தூண்டுகிறார். எனவேதான் அக்டோபர் புரட்சியை வரவேற்று 'ஆகாவென எழுந்தது பார் யுகப் புரட்சி' என ஆனந்தக் கூத்தாடினார். அதற்கு உந்து சக்தியாக, மாகாளி பராசக்தியை உருவகிப்பதன் நோக்கம் — அவர்

போற்றிய காளி, வரலாற்றினை இயக்கும் சக்தி ''ஆக்கம் தானாவாள் அழிவு நிலையாவாள் போக்கு வரவெய்தும் புதுமையெல்லாம் தானாவாள் மாறி மாறிப் போம் வழக்கமே தானாவாள் ஆதிபராசக்தி அவள் நெஞ்சம் வன்மையுற என்று பாஞ்சாலி சபதத்திலும், வாழ்வினைப் புதுப்பிக்கும் ஆற்றலாகவே காளியை வருணிக்கிறார். திரு.வி. கவும் சிவகாமியை the principle of evolution ஆகவும் காளியை the principle of revolution ஆகவும் காண்கிறார். படைப்பாற்றலே, அநீதி மிகும் போது, காளியாகக் கனன்று, தீய சக்திகளைச் சருகாக்கி, எரித்துத் தூய்மை ஏற்படுத்துகிறது. 'அக்கினிக் குஞ்சும்' இப்படிப்பட்ட ஆற்றலின் வெளிப்பாடே. ஷெல்லியின் மேலைக் காற்றும், மரங்களை உலுக்கி வீழ்த்தி, வாழ்வில் புதிய வசந்தம் வருவதற்கு வழிவகுக்கிறது. அவருடைய தாக்கத்தினாலோ என்னவோ, ''காடெல்லாம் எரிந்து விறகான செய்தி போல'' என ரஷ்யப்புரட்சி பற்றிப் பாரதி பாடுகிறார். பாரதி பராசக்தியை மக்கள் சக்தியின், மாறி மாறிப் பின்வரும் வரலாற்றுச் சக்தியாகவே கண்டார். எனவேதான் சோவியத் புரட்சி தோற்றது போல் தோன்றினாலும், தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வினாலும், தருமம் மறுபடியும் வெல்லும். பாரதியின் சத்தியவாக்கு நனவாகும்; எல்லோர்க்கும் எல்லாமும் ஆன புதிய பொதுவுடைமை உலகு வரும் என்பதில் ஐயமில்லை.

பாரதி புரட்சியை ஆதரித்தது மனித சமத்துவத்துக்காகவே. அதேபோல் அவர் சகோதரத்துவத்தையும் போற்றுக்கிறார். அவர் காக்கையை சகோதரத்துவத்துக்கும் சமத்துவத்துக்கும் உருவகமாகவும், சிட்டுக்குருவியை விடுதலைக்கு உருவகமாகவும் படைத்துள்ளார். விடுதலை தான் முழுமையான நிலை. அப்போது, ஒவ்வொரு உயிரும் தன்னை உணர்கிறது; ஆனால், தன்னைத் தனித்துச் சோர்வதில்லை; எல்லாவுயிர்களிலும் கலந்த தன்னையே தானாக உணர்கிறது, விடுதலையும் சகோதரத்துவமும் வேறுபட்ட நிலைகளல்ல. எனவே தான்,

காக்கை குருவி எங்கள் ஜாதி நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்க நோக்கக் களியாட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை

என்று தன்னை மானுட சமுத்திரமாக மட்டுமல்லாமல், அண்ட சராசரங்கள் அனைத்திலும் இயங்கும் உயிர்களோடு ஒன்றுபட்ட நிலையிலே உணர்ந்து, அந்த எல்லையற்றதனை எல்லையற்ற

மகிழ்ச்சியோடு போற்றுகிறார். ''பாரடா உன்னுடன் பிறந்த மானுடப் பட்டாளம் எனப் பகர்வதும் இப்படிப்பட்ட விரிவினைத்-தான். ஆனால் பாரதியில், நாமன்றி வேறற்ற தன்மை, அத்வை-தத்தின் அடித்தளத்தில் எழுந்த சகோதரத்துவம். பாரதியில் வேதப் புதுமை பெற்று, அத்வைதம் ஒரு அகன்ற ஆத்மீகக் குடியரசுக்கு வழி வகுக்கிறது. By democratising the divine principle, Bharathi creates a vision of spiritual democracy based on Advaita.

பாரதியின் விடுதலைத் தத்துவத்திலும் ஆத்மீகமும் மனித நேயமும் இணைவதைக் காணலாம். பாரதி வேண்டிய விடுதலை பாரதத்துக்கு மட்டுமல்ல; அவர் வேண்டியது எல்லா நாடுகளுக்-கும் எல்லா உயிர்களுக்கும் விடுதலையை.

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்
மண்மீதுள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா''

என வேண்டுகிறார். 'முக்தி', 'விடுதலை' ஆகியவற்றை வாழ்-விலிருந்து விடுதலை என்று கருதாமல் வாழ்வினை நிறைவு நிலையாகக் கருதினார். விவேகானந்தர் கருத்துப்படி, ''ஆத்-மாவின் இயல்பு நிலை இறைமைதான். அது ஜடத்துக்கு (matter) அடிமைப்பட்டிருக்கிறது. அந்த அடிமை நிலையிலிருந்து விடு-தலை பெறும்போது முழுமை பெறுகிறது. அப்போது வருகின்ற நிலைதான் விடுதலை, முக்தி''. பாரதியும் ஆத்மீக விடுதலையின் ஒரு கூறாகவே அரசியல், சமூக விடுதலையைக் கருதினார். ஆனால், அதை வாழ்வின் கடமைகளிலிருந்தும் விடுபட்ட நிலை-யாகக் கருதவில்லை. பாரதியின் சிட்டுக்குருவியும், ''விடு விடு, தொழிலை விடாதே, உணவை விடாதே, பேட்டை விடாதே, கூட்டைவிடாதே, குஞ்சை விடாதே. உள்ளக் கட்டை அவிழ்த்து விடு. வீண் பேராசையை விடு; துன்பத்தை விடு'' என்று கூறுகிறது. பாரதி 'விடுதலையை', ஆசையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் விடுபட்ட: ஆனால் அன்பிலிருந்தும் கடமைகளிலிருந்தும் விடு-படாத நிலையாகக் கருதுகிறார்.

பாரதி சமூகத்தின் அனைவரது விடுதலைக்காகவும், தீயர், புலையர் முதலான எல்லோரது விடுதலைக்கும் பாடினாலும் அவர் பெண் விடுதலைக்கே முதலிடம் வழங்கினார். பாழ்பட்டுக் கிடந்த பாரத சமுதாயத்தில் பெண்கள் அடிமைகளுக்கு அடிமைகளாக இருப்பதைக் கண்டு, இதை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்புகிறார். 'சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் ஆளவும் பாரினில் இங்கு வந்தோம்' என்று புதுமைப் பெண்ணைப் படம்பிடித்துக் காட்டும் பாரதி 'பாஞ்சாலி சபதத்தில்' மகாபாரதத்தைப் பெண்ணியம் நோக்கில் மாற்றிப் படைக்கிறார். பாரதியாரைப் பாரதக் கதை பெரிதும் கவர்ந்திருந்தாலும், அதில் பஞ்சாலி அவைக்கு இழுத்து வரப்படுகின்ற பகுதியை மையமாக்கி பாஞ்சாலி சபதம் படைத்ததன் நோக்கம் இந்திய நாகரிகத்தின் ஒரு மிகப் பெரிய அவல அத்தியாயத்தைப் படம்பிடித்து, அதைத் தாங்குகின்றவளாக மட்டுமல்லாமல் அதைத் தாண்டுகின்ற ஆற்றலின் உருவகமாகப் பெண்மையைக் காட்டுவதே. ஷெல்லி, ஈஸ் கைலசின் அடிமைப்படுத்தப்பட்ட ப்ரோமித்தியஸ் என்ற நாடகத்தை விடுதலையடைந்த ப்ரோமித்தியஸ் (prometheus unbound) என்று கவிதை நாடகமாக மாற்றியதும் இந்த அடிப்படையிலும் ப்ரோமித்தியஸ் தன் விலங்குகளை உடைத்தெறிவது. ஏசியா என்ற பெண்தான் உந்து சக்தியாக இருக்கிறாள். ஷெல்லி தாசன் எனத் தன்னைக் கூறிக்கொண்ட பாரதி. பாண்டவர்களின் வீரம் கிளர்ந்தெழுந்து, 'தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடியும் வெல்லும்' என்று காட்டி உலகில் அறம் தழைக்க நடந்த பாரதப் போரின் மூலக்கனலாகப் பாஞ்சாலியைப் படைக்கிறார். அதுமட்டுமன்றி, பாரதத்தின் அடிமை வரலாறு பாஞ்சாலியின் அடிமை நிலையிலிருந்து ஆரம்பமாக அவர் கருதி இருக்கிறார். எனவேதான் பாரதத்தின் விடுதலையைப் பாட விரும்பிய பாரதி, அந்த விடுதலைப் போராட்டத்தின் முதற்குரலைப் பாஞ்சாலி எழுப்புவதாகப் படம் பிடிக்கிறார். இப்படிச் செய்யும்போது, பாரதி துரியோதனனையும் துச்சாதனனையும் மட்டும் குறை கூறவில்லை. பாஞ்சாலி அவைக்கு அழைக்கப்படும்போது, பழைய பதிவிரதா தர்மப்படி, பேசாமல் எழுந்து வராமல் தருமனுக்கும் தம்பியருக்கும் அவர்களை இழந்த பிறகு தன்னை அடகு வைக்க உரிமையில்லை என நம்புகிறாள்.

நாயகர் தாம் தம்மைத் தோற்பின் — என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை — புலைத்
தாயத்திலே விலைப்பட்ட பின் — என்ன
சாத்திரத்தால் என்னைத் தோற்றிட்டார்?

என வாதிடுகிறாள். ஆனால் 'தன்னை அடிமையென தருமன் நின்னையிழப்பதற்கு நீதியுண்டு' என்று ஒரு பெரியவர் கூறும் போது, இந்த மண்ணில் பெண்மைக்கு எழுதப்பட்ட அடிமைச் சாசனம், நீதியாக வேஷம் போட்டு நிற்பதைக் காண்கிறோம். அடிமைகளுக்கு அடிமைகளாகச் சந்தையில் விற்கப்படும் பொருளாகப் பெண்கள் மாறிய நிலையைக் காட்டிய பாரதி, இந்த நிலை மாறப் பெண் கொதித்தெழ வேண்டும் எனக் கருதியதால்தான், பாஞ்சாலியைச் சூளுரைக்கச் செய்கிறார். கிருதயுகத்தின் எழுச்சிக் குரலாகப் பெண்மையின் குரலைப் படைத்த பெருமை பாரதிக்கு உண்டு. பாஞ்சாலியைப் பாரத சக்தியாக அதன் புதிய ஆற்றலின் பழைய வடிவமாக, பழைய ஆற்றலின் புதிய குரலாக ஒருசேரப் படைக்கிறார். பாஞ்சாலியிலும் கன்னியும், காளியும் சங்கமமாகிறாள். பாஞ்சாலியில் சக்தியின் ஆற்றல் பெண்மையின் ஆற்றலாகப் படைக்கப்பட்டுள்ளது. பெண்ணைச் சக்தியின் வடிவமாகப் போற்றிய பாரதி, மனையாளையும் தெய்வமெனப் போற்றினார். 'பராசக்தியே அகண்ட சைதந்யம்; அகண்ட சௌந்தர்யம்' என்று குறிப்பிட்ட பாரதி, இளமையிலேதான் 'திருமகள், கலைமகள், காளி' ஆகிய பெண் தெய்வங்கள்பால் கொண்ட காதல் பற்றிப் பாடியுள்ளார். மெய்ப்பொருள் அழகாகவும் வளமாகவும் பரிணமிக்கும் போது திருமகளாகவும், ஒளியாகவும், அறிவுச் சுடராகவும் தோன்றும்போது கலைமகளாகவும், வலிமையாகக் காட்சியளிக்கும்போது காளியாகவும் இயங்குகிறது என்பதே பாரதி கண்ட காட்சி. இந்தப் பாடல்கள், பாரதியின் தனிப்பட்ட அறிவு, செல்வம், ஆற்றல்பாற் கொண்ட விழைவினை வெளிப்படுத்துகின்றன என்பதை விட, அவற்றை இந்தச் சமுதாயம் பெண்மை வடிவில் உருவகித்தைப் பாரதி பயன்படுத்திக் கொண்டு, அந்தச் சமுதாயக் கனவுகளுக்குப் புத்துயிரும் புதிய பொருளும் தருகிறார் என்பதே பொருந்தும். உளநூலார் கருத்துப்படி கனவு தனிமனிதனின் தொன்மம், தொன்மம், சமுதாயத் திணைகள் இந்த மூன்று காதற் பாடல்களிலும் கனவுத் தன்மையும் (dream quality), உடற்காதலுணர்வும், ஒருங்கே விஞ்சியிருப்பதைக் காணலாம். 'மங்கியதோர் நிலவினிலே கனவிலது கண்டேன்' என்ற பாடலிலும் கனவிலே

காட்சியளித்த அழகென்னும் தெய்வத்தைப் பற்றிப் பேசுகிறார். அழகு (vision) என்ற நிலையிலும் தோற்றத்தை மூன்று காதற்பாடல்களிலும் அவளைக் கன்னியாகவும் அழகியாகவும் பாடினாலும், முதல் இரண்டு பாடல்களிலே, முதலிரண்டு பாடல்களில், அந்த அளவோடு, காதலுணர்வோடு நின்றுவிட, காளி காதலில்

பின்னர் ஒரு இரவினிலே வரும்
பெண்மை யழகொன்று வந்ததுகாண் முன்பு
கன்னி வடிவமென்றே காளி
கண்டு சற்றேயருகிற் சென்று பார்க்கையில்
அன்னை வடிவமடா! இவள்
ஆதி பராசக்தியடா! இவள்
இன்னருள் வேண்டுமடா

என வணங்கும் போது, கன்னியை, காளியின் பிரதியாகக் கண்டு காதலைத் தாண்டி, காளியின் 'அருளை' வேண்டுகிறார். பாரதியின் அன்னை மறைவுக்குப் பிள்ளைப் பருவத்தில் கன்னியொருத்தியைக் காதலித்து அதில் அடைந்த தோல்விக்கும் இந்தக் கற்பனைக்கும் தொடர்பு உண்டு. கனகசபாபதி போன்றவர்கள் 'பாரதியின் சக்தி வழிபாட்டினை சுயசரித நிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்துவது பொருத்தமில்லை எனக் கருதுகிறார்கள். முழுக்க முழுக்க அவரது இளமை நிகழ்ச்சிகள்தான் அவரது பிரும்மாண்டமான சக்தி தத்துவத்துக்குக் காரணம் என்று கூறாவிட்டாலும், அதை ஒரு தளமாகக் கருதுவதில் தவறில்லை. அந்த சக்தியைக் கன்னியாகவும் காளியாகவும் கண்டபோது உமையை உலகத் தாயாகவும், அதே சமயத்தில் கன்னியாகவும் கருதும் இந்திய மரபும், கண்ணகியை இளநங்கையாகவும் கொற்றவையின் சாயலாகவும் கோவலன் கண்டதாகக் கூறும் தமிழ் மரபினையும் காண்கிறோம். தாந்தே பியட்ர்சில் ஒரு தெய்வீகத் தன்மையைக் கண்ட பாரதியும், கன்னியிலே காளியினைக் கண்டார். இரண்டும் படைப்பாற்றலின் இரு கூறுகளே. காளி காதலில், இவற்றைப் பிரித்துப் பேசுவது போல், காணி நிலம் என்ற பாடலிலும் பராசக்தியை 'அம்மா' என்றும், காவல் தெய்வமாகவும் கூறி, பத்தினிப் பெண்ணின் கூட்டுக் களியினிலே, அவள் கவிதை கொண்டு தருவதாகவும் பேசுகிறார். இங்கும் உலகப் பேராற்றல் காதலாகவும் கருணையாகவும் வடிவெடுக்கின்றன. உலகப் பேராற்றலின் உந்துதலால், அதன் வாய்க்காலாய் கவி

வார்க்கும் கவிஞருக்கு, காளியின் அம்மாவின் காவலும் தேவைப்படுகிறது, கன்னியின் காதலும் தேவைப்படுகிறது. கன்னியினை அந்தச் சூழலின் இயற்கை அழகோடும், காதலோடும் இணைத்தால் காளியின் படைப்பாற்றலோடும் இணைக்கலாம். புலனின்பமும் படைப்பாற்றலும் இணைந்தால் கவிதை மலரும், வாழ்வு வளரும் என்ற நம்பிக்கையினை இந்த வரிகள் காட்டுகின்றன. அனைத்துக்கும் மேலாக நாம் வலியுறுத்த விரும்புவது பாரதி பராசக்தியை மனித உறவுகளின், எண்ணங்களின் ஆசைகளின் மூலப் படிவமாகப் பார்த்தார் என்பதுவே. ஓர் ஆண் கவிஞன், அந்த ஆற்றலையும், அழகையும், அருளையும் பெண்மையாக உருவகித்து, அதன் காதலையும், கருணையையும் வேண்டாக் காதலாகிக் கசிந்து பாடுகிறார் என்பதுவே. கவிஞனின் படைப்பாற்றலில் உலகத் தாயின் கருணையும் கன்னியின் கூட்டுக்களியும் இணைகிறதாகக் கொள்ளலாம். ஆனால் உலகத் தாயை, தன் சொந்தத் தாயை போலவும் கவிதையினை இன்ப ஊற்றாகத் தரும் கன்னிமைத் தன்மையைக் களியூட்டும் மானுடப் பெண்ணாகவும் வருணித்த போதுதான் கவிஞனின் மூலப் படிவத்தின் மனித அர்த்தத்தை முழுமையாக உணர முடியும்.

பாரதியின் கண்ணன் பாட்டும் இந்தத் தெய்வீக மானுடக் காதல் தத்துவக் கலை வடிவமே. எல்லா உறவுகளும் நீ - தந்தையும் நீ, தாயும் நீ என்று இறைவன் உறவினை எல்லா உறவுக்கும் முதற்படிவ உறவாகக் காண்பது இந்திய மரபு. ஆனால் இவை ஆை ›‹த்திலும் தலையாவது நாயகன் நாயகி பாவத்தில் இறைவனுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள உறவைப் பேசுவது என்பார் மகாதேவன். அதையொட்டி, ''கண்ணனைத் தோழன், தாய், தந்தை, சற்குரு, சேவகன், சீடன், குழந்தை, காதலன், காதலி முதலான உறவுகளுக்குள் எல்லாம் கண்டு அவற்றுள் நின்று அவன் தம்முடன் தொடர்பு கொண்டு நிகழ்த்துகின்ற திருவிளையாடல்களை எல்லாம் சித்திரித்துக் காட்டுவனவே பாரதியின் கண்ணன் பாடல்கள்'' என்கிறார் விஜயபாரதி. அப்படிச் சொல்லும்போது அவர் பரமாத்மாவை மனித உறவுகளாகப் பாவித்துப் பாடாமல், அவ்வுறவுகளில் பரமாத்மாவைக் கண்டு பாடினார் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. மேலும் ''உலகத்தின் ... வருகை என்ற விளக்கத்தின் மூலம் கண்ணன் பாட்டின் உடற் காதல் உணர்வுக்கு விளக்கம் தருகிறார். டாக்டர் சச்சிதானந்தம்,

ஆண்டாளின் காதல் பாடலை விட இங்கே பாடலுணர்வு குறை- வாக இருப்பதாகக் குறிப்பிடுகிறார். பாரதி கொஞ்சம் சிருங்கார ரசத்தை மிகுதியாகப் பாடிவிட்டார் என்று குறைப்பட்டவர்களுக்குப் பதிலாக அவர் கூறியிருந்தாலும் பாரதியின் பாடலில் மனித உறவுகளுக்குத்தான் இறை உணர்வைப் பார்க்கிறார்; அதிலும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்துணருமாதல் வழியாகத்தான் அதைக் காட்டுகிறார் என ஏற்றுக் கொள்வதுதான் மேல் எனத் தோன்றுகிறது.

மேலும் 'கண்ணம்மா' என்ற தலைப்பில் காணப்படுகின்ற 'நின்னையே ரதி என்று நினைக்கிறேனடி' என்னும் பாடல் முன்பு பாரதியால் 'செல்லம்மா' என்று தம் மனைவியின் பெயரை அமைத்துப் பாடப்பட்டதாகும். விஜயபாரதி 'கண்ணம்மா' என்னும் தலைப்பில் அமைந்த மூன்று தோத்திரப் பாடல்களிலும் தம் மனைவியையே பாடியிருக்கிறார்; மனைவி என்னும் உறவில், உள்ளே நிறைந்திருக்கின்ற கண்ணனே தம்பால் காதல் செலுத்து- கிறான் என்று பாரதி உணர்ந்த அனுபவத்தையே பாடியிருக்- கிறார் என்கிறார். பாரதி கண்ணனை உணர்ந்ததால் காதலை உணர்ந்தார் என்பதைவிடக் காதலிலே கண்ணனைக் கண்டார் எனக் கூறுவது பொருந்தும். பாரதியின் எல்லா உறவுகளுக்கும் அடிப்படையான உறவாகக் காதல் காட்டப்பட்டுள்ளது. எனவே கண்ணன் வழி, தெய்வீகக் காதல் மனிதனைத் தேடி நம் தெரு- வோரத்துக்கே எப்படி மனிதன் இறைவனைத் தேடியலைகிறானோ அப்படி இறைமையும் மனிதனிலேதான் முழுமை பெருகிறது என்று தாகூர் சொல்வார். பாரதியிலே அது அண்ட சராசரங்களை- யும் விட்டு விட்டு மனிதக் காதலைத் தேடி இந்த மண்ணுக்கே வருகிறது. எல்லா மனித உணர்வுகளையும் விரும்பி அனுபவிக்- கிறது. கண்ணன் மனிதனுக்குச் சேவகனாய் தொண்டு செய்யக் கால்கடுக்க நிற்பதற்குக் காரணம் காலல்ல, நெஞ்சில் உள்ள காதல்: "நேற்று முன்னாளில் வந்த உறவன்றடி நெடும் பண்டைக் காலமுதல் சேர்த்து வந்ததாம்?" என்று அவர் பேசும் காலம் கடந்த காதல் பரமாத்மா - ஆத்மா காதல், மனிதரோடு மனிதரோடு ......

கன்னி வயதினிலுன்னைக் கண்டதில்லையோ? கன்னங்கன்றிச் சிவக்க முத்தமிட்டதில்லையோ! அன்னியமாக நம் முன் எண்ணு- வதற்கில்லை. இரண்டு ஆவியும் ஒன்றாகும் எனக் கொண்ட- தில்லையோ; என்னைப் புறமெய்யும் கருதுவதோ? கண்கள்

இரண்டினில் ஒன்றையொன்று கண்டு வெட்குமோ? இந்த வரிகளிலும் மனிதக் காதலின் தன்மையினை, முரட்டுத்தனத்தை, முழுமையாகக் காணமுடிகிறது. இதன் மூலம் பாரதி இறைமையை மனிதக் காதலுக்கு முழுக்க முழுக்க ஆட்படுத்துகிறார். எனவேதான் ''பாலும் கசந்ததடி, படுக்கை நொந்ததடி, கோலக் கிளி மொழியும் செவியில் குத்தலெடுத்ததடி என் பேச்சு மொழியிலே'' என்று பாடுகிறார். பாரதி பாடல்களில் கண்ணன் ஆணாகவும் பெணணாகவும் பேசப்பட்டாலும் இறைமையில் பெண்மையைக் காண்பது அல்லது பெண்மையில் இறைமையாகப் பார்ப்பதுதான் அவற்றில் மிகுந்திருக்கிறது. Eric Fromm என்பவர் கருத்துப்படி உலக மதங்கள் தாய்மையை மையமாகக் கொண்ட நிலையிலிருந்து தந்தையை மையமாகக் கொண்ட நிலைக்கு மாறியுள்ளன. ஆனால் தாயனபு வேட்கை மனித மனத்திலிருந்து முழுக்க நீக்கப்படாத முடியாத நிலையில் பெண் தெய்வங்கள் ஏதாவது ஒரு வகையில் இருக்கத்தான் செய்யும். இந்திய மரபில் அதிலும் குறிப்பாகத் தமிழ் மரபில் இறைமையின் தாய்மைப் பண்புதான் பெரிதும் வலியுறுததப்படுகிறது. பாரதியிலே இறைமை பெண்மையாகவே பெரிதும் பேசப்படுகிறது. அதைக் காதலாகவே போற்றுகிறார். மனித நாகரிக வளர்ச்சியில் இறைமை மனித முழுமையின் உருவகமாகவே வளர்கிறது. God is man made perfect என்ற இகபாலின் கருத்து, பாரதியின் கடவுள்-காதற் கொள்கைக்கு விளக்கமாக அமைகிறது. பாரதியின் குயில்பாட்டிலும் இந்தக் காதல தத்துவமதான் வலியுறுததப்படுகிறது. இங்கும வேதாந்தப் பாாவையிருப்பினும் அந்த அடிப்படையில், மனிதக் காதலின் மரணததைத் தாண்டிய தன்மையைத்தான் அது வலியுறுத்துகிறது. ''காதல், காதல், காதல், காதல் போயிற் சாதல் சாதல் சாதல் 'காதலை வேணடிக் கரைகின்றேன். இன்றேல் காதலை வேண்டித் தவிக்கிறேன!'' எனக் குறிப்பிடும்போது காதலால் மரணம் போல்அது ஆதமாவின நிரந்தரத்துவத்தின் எடுத்துக்காட்டு என்பது தான வலியுறுத்தப்படுகிறது. பாரதி வலியுறுத்துவது immortality of love. அனபின், காதலின் சாவற்ற தனமை. குயில், மறுபடியும் அந்தக் காதல் நிறைவுக்காகத்தான பிறக்கிறது. இங்கும் இறைமை, பெண்மை உருவெடுத்து மனிதக் காதலைத் தேடியலைந்து இறுதியில் 'ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின் தேசமடா! பெண்மைதான் தெய்வீகக் காட்சியடா! என்று பாரதி கூறுவதும் இந்த அடிப்படையில்தான். ''காதல் செய்யும்

மனைவியே சக்தி தானடா; கடவுள் நிலை அவளால் எய்த வேண்டும்'' என்ற வரிகளில் பெண்மையால், காதலால் இங்கு அமரராகும் தன்மையினைக் காட்டுகிறார். குயில்பாட்டிலும், கண்ணன் பாட்டிலும் ஜீவாத்மா பெண், பரமாத்மா ஆண் என்ற மரபினை உடைத்து, பரமாத்மாவையே பெண்ணாகப் படைக்கிறார்.

பாரதியின் குயில், ஜீவாத்மா போலும் தோன்றுகிறது; பரமாத்மா போலும் தோன்றுகிறது. டாக்டர் தெ. பொ. மீ. கருத்துப்படி, குயில் பரமாத்மாவின் காதலைக் காட்டுகிறது. வேறு சிலர் கருத்துப்படி, அது ஜீவாத்மாவின் காதலைக் காட்டுகிறது. ஜீவாத்மா-பரமாத்மா என்ற பேதத்தைக் கடந்த நிலையில், காதலைப் பஞ்சங்களில் ஊடு ஒலிக்கும் நிரந்தரக் கீதமாகவும் அதே சமயத்தில் மனிதத்தில், மனிதக் காதலில் அது முழுமை பெறுவதாகவும் படம்பிடித்துக் காட்டுகிறார் என்பதே பொருந்தும். ஆரீனால்ட் கருத்துப்படி, அன்புக்குச் சாவிலிருந்து நம்மை விடுவிக்கச் சக்தியில்லாமலிருக்கலாம்; ஆனால் வாழ்வுக்கு அதுதான் அர்த்தத்தைத் தருகிறது. பாரதியின் கருத்துப்படி, காதல் இறவாமையின் இறவாத ஆத்மாவின் வெளிப்பாடு. அந்த இறவாமையின் கீதம் மனிதக் காதலில்தான் முழுமை பெறுகிறது. பரமாத்மாவே ஜீவாத்மாவின் காதலைத் தேடி அலைகிறது — அல்லது பரமாத்மா ஜீவாத்மாவாகித் தன் காதலை அனுபவிக்க முடிகிறது என்றும் கூறலாம். எனவே கண்ணனும், மனிதக் காதலுக்குட்பட்டு, மனிதனுக்குச் சேவை செய்ய, கால் கடுக்க நிற்கிறான்.

குயிலைத் தமிழ் என்றும் கற்பனை என்றும் கொள்ளவும் இடமிருக்கிறது. புலன் உணர்வுக்களைத் தாண்டி பிறகு அது கவிஞனின் படைப்புக் கலையாக உயர்கிறது; அப்போது அது காதலின் அமரத்துவத்தையும் உணர்கிறது. கவிதையும் காதலும் அமரத்துவத்தின் வெளிப்பாடுகள்.

பாரதியின் காணி நிலத்திலும், இதே போல் கவிஞனின் படைப்பாற்றலுக்கும் காதலுக்கும் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கலைஞன் கேட்ட காணி நிலமே, கவிதையின் கருப்பொருள்தான்; அதில் எழும் மாளிகை கற்பனை; அங்கு கேட்கும் குயிலோசையும் மற்ற இயற்கையின்பங்களும் கவிதையின் கூறுகளே. கேணி நீரைக் கவிஞனின் ஆழ்மன உணர்வுகளாகக் கொண்டால், தென்னையின் நீரை, கவிஞனின் படைப்பாற்றலால்

மாறி வந்த தூய இலக்கிய உணர்வாகக் கொள்ளலாம். கோல்ரிட்ஜின், குப்லகான் என்ற பாடலை ஒட்டி இப்பாடல் பாடப்பட்டுள்ளது போல் தோன்றுகிறது. கோல்ரிட்ஜின் பாடலில் இறுதியில் A Damsel with a dulcinant ஒரு வினையுடன் கூடிய இன் கவிஞன் படைப்பு வெளிக்காட்டுவதாகக் கூறப்பட்டுள்ளது; பாரதியில் கூடிக் கலந்திட ஒரு பத்தினிப் பெண் வேண்டும். எங்கள் கூட்டுக் கவியினிலே கவிதை கொண்டு தர வேண்டும் என்று பராசக்தியை வேண்டுகிறான். அதே சமயத்தில் 'காட்டு வெளியினில் அம்மா நின்றன் காவலுற வேண்டும்' என்று கூறும்போது, பிரபஞ்சத்தின் படைப்பாற்றலை ஒரு கன்னியின் தலைவியாக உணர்ந்து, அந்தப் பேராற்றலின் துணையால் தான் கவிதை மழை பொழிய வேண்டும் எனத் துடிக்கிறான். பராசக்தியைத் தன் காதலுக்கு வேலியாகக் காவல் காக்கக் கட்டளையிடுகிறான். ஆனால், உலகத்தைப் பரிபாலிக்கும் பராசக்தி, அந்த வேலையை விட்டு விட்டு அவனுக்குக் காவலிருக்கத் தயங்கியதாலோ என்னவோ, 'நீ பயப்படாதே அம்மா, நாம் இருவரும் பணிமாற்றம் செய்து கொள்வோம். Let us exchange our roles. 'நீ என்னைப் பாதுகாத்தால், என் கவிதையால் நான் உலகத்தைப் பாதுகாப்பபேன்' என்கின்ற பொருளில், 'எந்தன் பாட்டுத் திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்று தன்னையே உலக சக்தியாகப் பாரதி உயர்த்திக் கொள்கிறான். Be thou me, Make me the lyre என்று மேலைக் காற்று தன்னை அதன் வீணையாக்கி, தன் பாடல் வழி உலகுக்கு வசந்தத்தை உருவாக்கும் என்ற ஷெல்லியின் தாக்கமும் இங்கு தெரிகிறது. ஆனால், எந்த மேலை நாட்டுக் கலைஞன் இந்த அளவுக்குத் தன்னையே பிரம்மமாக உலகத்தைப் பரிபாலிக்கும் பராசக்தியாக, ஏன் அந்த பராசக்தியே தேடியலையும் படைப்பாற்றலாகத் தன் கவிதையாற்றலைச் சொன்னதில்லை. எப்படி மனிதனுக்கு இறைவன் தேவைப்படுகிறானோ அப்படி இறைவனுக்கும் மனிதன் தேவைப்படுகிறான். இறைமையில் மனிதம் முழுமை பெறுகிறது; ஆனால் இறைமையே மனிதனில்தான் விளக்கம் அடைகிறது.

பொய்க்கும் கலியை வென்று, கிருதயுகத்தை நிறுத்தத் துடித்த மகாகவி பாரதியின் கனவுகள் பல இன்றும் நிகழ்வுகளாக மாறவில்லை என்பது உண்மையே. இந்திய விடுதலை, மானுட விடுதலை, பெண் விடுதலை ஆகிய கனவுகள் ஓரளவேதான் நன-

வாகியுள்ளன. ஒரு வகையில் பார்த்தால், பெருங்கனவுகள் எப்போதுமே நிறைவேறாத இலட்சியங்களாகி, புதுப்புதுப் புது அர்த்தங்களோடு வாழ்க்கையோடு சேர்ந்து அவையும் வளர்கின்றன. இன்னொரு வகையில் பார்த்தால், அவை ஒவ்வொரு கணத்திலும் நிறைவு பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. எனவேதான் எல்லையற்ற முழுமையை நாம் தேடிப் பெற முடியாது. ஏனென்றால், ஒவ்வொரு கணமும் ஒரு வகையில் முழுமை தான். முழுமை, உறைந்த சொர்க்கமல்ல, ஒரு தொடர்ந்த நிகழ்வு. எனவே, பாரதி கந்தர்வ உலகத்தை விட்டு மறுபடியும் மண்ணுக்குத் திரும்பி விடுகிறான். மண்ணில் தெரிகின்ற வானத்தை, கண்ணில் தெரிகின்ற சொர்க்கத்தை, நிதர்சனத்தில் மின்னுகின்ற தரிசனத்தைச் சொல்லில் மிளிரும் சுடரொளியாகத் தருவதுதான் பாரதியின் தரிசனக் கவிதை.